
**பதினெண்கீழக்கணக்கு**

36) திருக்குறள் ஏன் "உலகப் பொதுமறை" என்று வழங்கப் பெறுகிறது?

**உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டுள்ளதால் இவ்வாறு வழங்கப் பெறுகிறது.**

37) திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது?

**நூற்றேழு மொழிகளில் (107)**

38) திருக்குறளின் வேறு பெயர்கள் என்ன?

**முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என்பன.**

39) சொற்பொருள்:-

1. **புரை - குற்றம்**
2. **பயக்கும் - தரும்**
3. **சுடும் - வருத்தும்**
4. **அன்ன - அவை போல் வன**
5. **எய்யாமை - வருந்தாமல்**
6. **அகம் - உள்ளம்**
7. **அமையும் - உண்டாகும்**

40) திருக்குறள் நூலின் பயன் யாது?

**திருக்குறள் கற்பதனால் மனித வாழ்க்கை செம்மையுறும். பண்புகள் வளரும். உலகெலாம் ஒன்றெனும் உயர்குணம் தோன்றும், மனிதர்களிடையே வேறுபாடுகள் மறையும், எல்லா உயிரிடத்தும் அன்பு தழைக்கும்.**

41) உடலை நீர் தூய்மை செய்யும்: -------------- உள்ளத் தூய்மையை வெளிப்படுத்தும்.

**வாய்மை**

42) வாய்மை என்றால் என்ன?

**மற்றவர்களுக்குத் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்.**

43) பிரித்து எழுதுக:-

1. யாதெனின் - யாது + எனின்
2. பொய்யாதொழுகின் - பொய்யாது + ஒழுகின்

44) பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க

**1: இயற்கை**

குற்றாலத்தில் உள்ள இயற்கைக் காட்சிகள் உள்ளத்தைக் கவர்கின்றன.

**2: பெண்மை**

பாரதியார் பெண்மையைப் போற்றிப் பாடியுள்ளார்

**3: வாய்மை**

வாய்மையே வெல்லும் என்ற தொடர் தமிழக அரசின் சின்னத்தில் உள்ளது.

**4. உள்ளம்**

குழந்தையின் உள்ளம் கள்ளம் புகா இடமாகும்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## செம்மொழித் தமிழ்

45) உலகத்தில் எத்தனைக்கு மேற்பட்ட மொழிகள் உள்ளன?
**ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன.**

46) வள்ளலார் எந்த மொழியை எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்து உள்ளது என்று கூறுகிறார்?
**தென்மொழியாகிய தமிழ் ஒன்றே**

47) அறிஞர்கள் எதனை உலக மொழிகளில் சிறந்தது என்று குறிப்பிடுகிறார்கள்?
**தமிழ் மொழியே**

48) ----------------- பொருந்திய மொழிகள் செம்மொழிகள் எனப்படும்.
**திருந்திய செவ்வியல்புகள்**

49) மொழியியல் அறிஞர் ச.அகத்திய லிங்கம் எவற்றை எல்லாம் செம்மொழிகள் எனப்பட்டியலிடுகிறார்?
**கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஈப்ரு**

50) இன்று பேச்சு வழக்கில் இல்லாத மொழிகள் எவை?
**கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம்**

51) உலகில் இன்று வழங்கும் மொழிகள் தோன்றுவதற்கு முன்பாகவே தமிழ்மொழி ---------------- வளங்களைக் கொண்டதாக விளங்கியது?
**எண்ணற்ற இலக்கண இலக்கிய வளங்களைக் கொண்டதாக விளங்கியது.**

52) தமிழைச் செம்மொழி என நிலைநாட்டு வதற்கு உரிய சான்றுகளாக எவை திகழ்கின்றன?
**தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் அகப்பொருள் ஆகிய செவ்வியல் இலக்கியங்கள் ஆகும்.**

53) பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றான -- ------------------ இணையான வேறு நூல் உலகில் இல்லை.
**திருக்குறளுக்கு**

54) தமிழ்மொழி அழகான சித்திர வேலைப் பாடமைந்த வெள்ளித்தட்டு: திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்: தமிழ் என்னை ஈர்த்தது: குறளோ என்னை இழுத்தது என்று கூறியவர் யார்?
**டாக்டர் கிரௌல்**

55) உலகின் மிகப்பழமையான நிலப்பகுதி ----------------- ஆகும்.
**குமரிக்கண்டம்**

56) குமரிக்கண்டம் பற்றிய குறிப்பு யாது
**இந்நிலப்பகுதி கடல்கோளால் மூழ்கிவிட்டது. அந்த தொன்னிலத் தில் தான் தமிழ் தோன்றியதெனத் தண்டியலங்கார மேற்கோள் செய்யுள் கூறுகிறது.**

57) உலக முதன் மொழியாய்த் தோன்றியும், இன்றும் இளமை மாறாமல் கன்னித்தமிழாய் ______ இருந்து வருகின்றது.
**தமிழ் மொழி**

58) பெற்றோரைக் குறிக்கும் -------- என்றும் சொல் நாஞ்சில் நாட்டில் இன்றும் உள்ளது.
**அம்மை, அப்பன்**

59) ------------ இல்லாத உலகப் பெருமொழி யாதொன்றும் இல்லை
**தமிழ்ச் சொல்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

60) கால்டுவெல் தமிழ் மொழியை எவ்வாறு கூறுகிறார்?

**“தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமன்றித் தழைத்தோங்கவும் செய்யும்” என்று கூறினார்.**

61) மொழிக்கு ——— வரம்பும், சொற்களுக்குத் ------------ வடிவும் இன்றியமையாதது.

**இலக்கண, திருந்திய**

62) தமிழில் உள்ளது போல், வேறு எம்மொழியிலும் காண இயலாது. ஆதலால் தமிழ் ------------ எனப்பட்டது.

**செந்தமிழ்**

63) தொல்காப்பிய நூற்பா என்பது என்ன?

**எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே**

64) தமிழில் ------------ பெயர்கள் மிகவும் குறைவு.

**இடுகுறிப்**

65) தமிழ் மற்றும் வடமொழியில் எத்தனை எண்கள் உள்ளன? அவை யாவை?

தமிழில் இரண்டு வகை எண் உண்டு. அவை:-

**ஒருமை,பன்மை**

66) வட மொழியில் மூவகை எண் உள்ளன. அவை:

**ஒருமை, இருமை, பன்மை**

67) தமிழில் எதற்குப் பால்வேறுபாடு உண்டு? எதற்குப் பால்வேறுபாடு இல்லை?

**உயிர்களுக்குப் பால்வேறுபாடு உண்டு. பொருள்களுக்குப் பால்வேறுபாடு இல்லை**

68) தமிழ் மொழியில் உள்ள ------------பிற பிறமொழிகளில் இல்லை.

**பகுப்பு முறை**

69) எல்லா மொழிகளும் எதற்கு இலக்கணம் கூறும்?

**எழுத்துக்கும், சொல்லுக்கும்**

70) வாழ்வியலுக்கான இலக்கணமாக எதைத் தமிழ் மொழி கூறுகிறது?

**பொருளிலக்கணத்தை**

71) பொருளிலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**இரண்டு வகைப்படும். அவை:**

**1. அகம் 2. புறம்**

72) -------------- செய்யுள் வகைகள் வேறு எம்மொழியிலும் இல்லை.

**கலிப்பா**

73) புலவர்கள் செய்யுளுக்குச் சிறப்புச் சேர்க்க --------------, ---------, முதலிய நூற்றுக் கணக்கான அணிகளைப் பயன்படுத்தினர்.

**உவமை, உருவகம்**

## ஊரும் பேரும் (துணைப்பாடம்)

74) தமிழ் மக்கள் தம் குடியிருப்புப் பகுதிகளை ----------- என்ற பெயரால் குறித்தனர்.

**ஊர்**

75) பாபிலோன் அருகே ------------ என்னும் பெயரில் ஒரு நகரும், ---------- என்னும்

**ஊரும் உள்ளதாம் ஊர், ஊர்நம்மு**

76) மக்கள் நாளடைவில் பல்வேறு ஊர்கள் உருவாக நிலவகைக்கேற்ப எவ்வாறு பெயரிட்டனர்?

**மலையூர், காட்டூர், மருதூர், கடலூர் என மக்கள் பெயரிட்டனர்.**



Arivukkadal Pathippagam 9842649140

join telegram@tamizhanexammaterials1

@tamizhanexammaterials1

| |
|---|
| **கான்பூர், கோலாலம்பூர், சிங்கப்பூர், மணிப்பூர், ஜனக்பூர், ஜெய்ப்பூர், ஜோத்பூர்** |

77) மலையின் அருகே உள்ள ஊர்களுக்கு எவ்வாறு மக்கள் பெயரிட்டனர்?
**ஆனைமலை, சிறுமலை, திருவண்ணா மலை, நாகமலை, வள்ளிமலை, விராலிமலை எனப் பெயரிட்டனர்.**

78) ஓங்கியுயர்ந்த நிலப்பகுதியை ---------- எனக் கூறினர்?
**மலை**

79) மலையின் உயரத்தில் குறைந்ததனைக் ______ எனக் கூறினர்.
**குன்று**

80) குன்றிலும் உயரத்தில் குறைந்ததனைக் --------- எனவும், --------------- எனவும் பெயரிட்டு அழைத்தனர்?
**கரடு, பாறை**

81) குன்றை அடுத்துள்ள ஊர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
**குன்றூர், குன்றத்தூர், குன்றக்குடி என அழைக்கப்பட்டன.**

82) பாறைகள் என்று கூறும் ஊர்ப் பெயர்கள் யாவை?
**குட்டப்பாறை, சிப்பிப்பாறை, பூம்பாறை, மட்டப்பாறை, மணப்பாறை, வால்பாறை ஆகியவை.**

83) வடசொல்லில், மலையை ------------ என்று கூறுவர்?
**கிரி**

84) மலையையொட்டி எழுந்த ஊர்ப் பெயர்கள் யாவை?
**கிருஷ்ணகிரி, கோத்தகிரி, சிவகிரி, நீலகிரி என்பன ஆகும்.**

85) குறிஞ்சி நிலமக்கள் மலையிலிருந்து பிற இடங்களுக்குச் சென்று தங்கிய போதும் தங்கள் நிலப்பெயரை மறவாது எவ்வாறு பெயர் வைத்துக் கொண்டனர்.
**ஆழ்வார்குறிச்சி, கல்லிடைக்குறிச்சி, குறிச்சி, கள்ளக்குறிச்சி, மொடக் குறிச்சி என்று பெயர் வைத்தனர்.**

86) மரங்கள் பெயரில் உருவான ஊர்கள்:- அத்தி (ஆர்) மரங்கள் சூழ்ந்த ஊர் - ------------ என அழைத்தனர்.
**ஆர்க்காடு**

87) ஆல மரங்கள் நிறைந்த ஊர் ------------- என அழைத்தனர்.
**ஆலங்காடு**

88) களாச் செடிகள் நிறைந்த பகுதியை எவ்வாறு அழைத்தனர்?
**களாக்காடு**

89) மாமரங்கள் செழித்திருந்த இடத்தை ------------------ என அழைத்தனர்.
**மாங்காடு**

90) பனைமரங்கள் நிறைந்திருந்த ஊர் ------------------ எனப் பெயர்பெற்றது.
**பனையபுரம்**

91) பட்டி, பாடி என்ற இப்பெயர் ஊர்களுக்கு எவ்வாறு வந்தன?
**காட்டின் நடுவில் வாழ்ந்த மக்கள் அங்குத் திரியும் விலங்குகளால் தமக்கும், தம் கால்நடைகளுக்கும் ஊறு நேராவண்ணம் வேலி கட்டிப் பாதுகாத்தனர். அவ்வூர்கள் பட்டி, பாடி என்றழைக்கப் பெற்றன.**

| |
|---|
| **ஆடு மாடுகள் அடைக்கப்படும் இடம் பட்டி எனப்படும்.** |



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

92) தமிழ்நாட்டில் உள்ள சில பட்டிகள் ஊர்களைக் கூறுக?
**ஆட்டையாம்பட்டி, காளிப்பட்டி, கோவில்பட்டி, சிறுகூடல்பட்டி, சின்ன கொல்லப்பட்டி, பெரிய கொல்லப்பட்டி முதலிய நூற்றுக் கணக்கான பட்டிகள் தமிழ்நாட்டில் உள்ளன.**

93) நிலவளமும், நீர்வளமும் பயிர்வளமும் செறிந்த மருதநிலக் குடியிருப்பும் --------------- என வழங்கப்பட்டது.
**ஊர்**

94) ஆறுகள் பாயும் இடங்களில் ----------- என வழங்கும் ஊர்கள் தவறாமல் இடம் பெற்றிருக்கும்.
**ஆற்றூர்**

95) ஆற்றூர் காலப்போக்கில் பேச்சு வழக்கில் ---------------- என மருவி வழங்குகிறது.
**ஆத்தூர்**

96) கடம்பமரம் சூழ்ந்த பகுதியை எவ்வாறு அழைத்தனர்.
**கடம்பூர், கடம்பத்தூர்**

97) தென்னை சூழ்ந்த பகுதியை எவ்வாறு கூறினர்?
**தெங்கூர்**

98) புளியமரங்கள் அடர்ந்த பகுதியை எவ்வாறு பெயரிட்டு அழைத்தனர்?
**புளியங்குடி, புளியஞ்சோலை, புளியம்பட்டி என அழைத்தனர்.**

99) குளம், ஏரி, ஊருணி முதலிய நீர் நிலை களை உருவாக்கி அவற்றோடு ஊர்ப் பெயர்களை எவ்வாறு இணைத்தனர்?
**சீவலப்பேரி, புளியங்குளம், பேராவூரணி, மாங்குளம், வேப்பேரி என்பன இவ்வாறு தோன்றிய ஊர்ப் பெயர்கள்.**

100) பழங்காலத்தில் கடற்கரையில் உருவான பேரூர்கள் --------------- என அழைக்கப்பட்டன.
**பட்டினம்**

101) சிற்றூர்கள் -------------- எனவும் பெயர் பெற்றிருந்தன.
**பாக்கம்**

102) பரதவர் வாழ்ந்த ஊர்கள் எவ்வாறு பெயர் பெற்றிருக்கின்றன.
**கீழக்கரை, கோடியக்கரை, நீலாங்கரை**

103) மீனவர் வாழுமிடங்களின் பெயர்கள் ------------ என்னும் பெயரைச் சேர்த்துப் பல்கிப் பெருகி வருகின்றன.
**குப்பம்**

104) பெருவேந்தரும் குறுநில மன்னரும் எதை அமைத்து மக்களைக் காத்தனர்?
**அரண்கள்**

105) அரண்களுள் -------------- ஒன்று ஆகும்.
**கோட்டையும்**

106) கோட்டை சூழவிருந்த ஊர்கள் எவ்வாறு வழங்கலாயின?
**கந்தர்வக்கோட்டை, கோட்டை, தேவக் கோட்டை, நாட்டரசன் கோட்டை, நிலக்கோட்டை, பட்டுக் கோட்டை, புதுக்கோட்டை என வழங்கலாயின.**

107) நாற்றிசைப் பெயர்களும் ஊர்களுடன் குறிப்பிடுக?
**கிழக்கே எழுந்த ஊர்ப்பகுதியைக் கீழூர் எனவும், மேற்கே அமைந்த ஊர்ப்பகுதியை மேலூர் எனவும், தெற்கே உள்ளது தென்பழஞ்சியா கவும், வடக்கே உள்ளது வடபழஞ்சி யாகவும் பெயர் பெற்றன.**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

108) நாயக்க மன்னர்கள் தமிழகத்தை எத்தனை பாளையங்களாகப் பிரித்தனர்?
**72 பாளையங்களாகப் பிரித்தனர்.**

109) நாயக்க மன்னர்கள் ஊர்ப் பெயர்களுடன் பாளையத்தைச் சேர்த்து எவ்வாறு வழங்கினார்கள்?
**ஆரப்பாளையம், இராசபாளையம், கணக்கம்பாளையம், குமாரபாளையம், கோபிச்செட்டிப்பாளையம், கோரிப்பாளையம், மேட்டுப்பாளையம் எனப் பலவாகும்.**

110) கல்வெட்டுகளில் காணப்படும் --------- மருதையாகி இன்று ----------- யாக மாறியுள்ளது.
**மதிரை**

111) ----------- என்னும் பெயர் கோயமுத்தூர் ஆகி, இன்று கோவையாக மருவியுள்ளது.
**கோவன்புத்தூர்**

## இலக்கணம்
## சார்பெழுத்துகளின் வகைகள்

112) எவற்றை முதலெழுத்துகள் என்கிறோம்?
**உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனித்து இயங்கி முதன்மை பெற்று விளங்குவதால் அவற்றை முதலெழுத்துகள் என்கிறோம்.**

113) முதலெழுத்துகளைச் சார்ந்துவரும் எழுத்துகளைச் -------------- என்கிறோம்.
**சார்பெழுத்துகள்**

114) சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
**10 வகைப்படும். அவை:**
1. உயிர்மெய், 2. ஆய்தம், 3. உயிரளபெடை, 4. ஒற்றளபெடை, 5. குற்றியலிகரம், 6. குற்றியலுகரம், 7. ஐகாரக்குறுக்கம், 8. ஔகாரக்குறுக்கம், 9. மகரக் குறுக்கம், 10. ஆய்தக்குறுக்கம் ஆகியவை ஆகும்.

115) ஆய்தம் ------------ எழுத்து வகையைச் சார்ந்தது.
**சார்பெழுத்து**

116) முதலெழுத்துகளின் எண்ணிக்கை ——
**30**

117) வல்லின மெய்யெழுத்துகள் எவை?
**க், ச், த், ப்**

118) அ,இ,உ என்பன என்ன எழுத்துகள்?
**சுட்டெழுத்துகள்**

119) எதனை வல்லொற்று மிகுதல் என்பர்?
**எழுத்துகளின் முன் வல்லின எழுத்துகளை முதலாக உடைய சொல் வந்து சேர்ந்தால் இடையில் அவ்வெழுத்தின் மெய்யெழுத்துத் தோன்றும். இதனை வல்லொற்று மிகுதல் என்பர்.**

120) ------------ என்னும் சுட்டெழுத்தானது தற்பொழுது வழக்கத்தில் இல்லை.
**உ**

121) “எ” என்னும் வினா எழுத்துக்குமுன் வல்லின எழுத்தை முதலாக உடைய சொற்கள் வந்தாலும் -------- மிகும்.
**வல்லினம்**
(எ.கா) எ + குடம் = எக்குடம், எ + சட்டை = எச்சட்டை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## தமிழ் எண்களை அறிவோம்

### எண்கள்

- ௧ = 1
- ௨ = 2
- ௩ = 3
- ௪ = 4
- ௫ = 5
- ௬ = 6
- ௭ = 7
- ௮ = 8
- ௯ = 9
- ௰ = 10

- ௰௧ = 11
- ௰௨ = 12
- ௰௩ = 13
- ௰௪ = 14
- - 2 -
- ௰௫ = 15
- ௰௬ = 16
- ௰௭ = 17
- ௰௮ = 18
- ௰௯ = 19
- ௨௰ = 20

- ௱ = 100
- ௨௱ = 200
- ௩௱ = 300
- ௱௫௰௬ = 156
- ௲ = 1000
- ௲௧ = 1001
- ௲௪௰ = 1040
- ௮௲ = 8000
- ௰௲ = 10,000
- ௭௰௲ = 70,000
- ௯௰௲ = 90,000
- ௱௲ = 100,000 (லட்சம்)

- ௮௱௲ = 800,000
- ௰௱௲ = 1,000,000 (10 லட்சம்)
- ௯௰௱௲ = 9,000,000
- ௱௱௲ = 10,000,000 (கோடி)
- ௰௱௱௲ = 100,000,000 (10 கோடி)
- ௱௱௱௲ = 1,000,000,000 (100 கோடி)
- ௲௱௱௲ = 10,000,000,000 (1000 கோடி)
- ௰௲௱௱௲ = 100,000,000,000 (பத்தாயிரங்கோடி)
- ௱௲௱௱௲ = 1,000,000,000,000 (லட்சம் கோடி)
- ௱௱௲௱௱௲ = 100,000,000,000,000 (கோடானு கோடி)

**எளிதாக ஞாபகம் வைத்துக் கொள்ள சிறிய யோசனை**

*கடலை உருண்டை ஙங்னனம் சுவைத்து ருசித்து சாப்பிட்டான் என்று அவன் கூறினான்.*

122) பின்வரும் சொற்களை முதலெழுத்தைக் கொண்டு அகரவரிசையில் அமைக்க.
ஏணி, ஈசல், எலி, ஒன்று, ஔவை, ஊட்டி, அண்ணன், இல்லம், ஆடு, ஓடம், ஐந்து, உடை.

**விடை:**

**அண்ணன், ஆடு, இல்லம், ஈசல், உடை, ஊட்டி, எலி, ஏணி, ஐந்து, ஒன்று, ஓடம், ஔவை.**

123) இந்திய விடுதலைக்குத் தென்னகத்திலிருந்து அந்நியரை எதிர்த்த சிறந்த வீரன் யார்?

**புலித்தேவன்**

## இயல் இரண்டு
## செய்யுள் - புறநானூறு

124) நெல்லும் உயிரன்றே: நீரும் உயிரன்றே: என தொடங்கும் புறநானூறு பாடலைப் பாடியவர் யார்?

**மோசிகீரனார்**

125) மோசிகீரனார் வாழ்ந்த ஊர் எது?

**தென்பாண்டி நாட்டிலுள்ள மோசி**

126) -------------- என்பது குடிப்பெயராகக் குறிப்பிடப்படுகிறது.

**கீரன்**

127) அரசுக்குரிய முரசுக் கட்டிலில் உறங்கிய போது எந்த மன்னரால் கவரிவீசப் பெற்ற பெருமைக்குரியவர்?

**சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை**

128) சொற் பொருள்:-

1. **அறிகை - அறிதல் வேண்டும்**
2. **தானை - படை**
3. **கடனே - கடமை**
4. **மலர்தலை உலகம் - பரந்த இடமகன்ற உலகம்**

129) புறநானூறு ---------- நூல்களுள் ஒன்று.

**எட்டுத் தொகை**

130) புறநானூறு ------------- பாடல்களின் தொகுப்பு.

**புறம்பற்றிய நானூறு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

131) மோசிகீரனார் பாடிய பாடல்கள் வேறு எந்த நூல்களில் உள்ளது?

**அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றுள் உள்ளன.**

132) பண்டைய தமிழக மன்னர்களின் அற உணர்வு, வீரம், கொடை, ஆட்சிச் சிறப்பு, கல்விப் பெருமை முதலிய வற்றை எவற்றின் மூலம் அறியலாம்

**புறநானூற்றுப் பாடல்கள் மூலம்**

133) புறநானூறு பாடல்கள் மூலம் புலவர்களின் -------------, மக்களுடைய -------, -------, முதலியவற்றையும் அறியலாம்.

**பெருமிதம், மக்களுடைய நாகரிகம், பண்பாடு**

134) அரசனைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?

**கோ, மன்னன், வேந்தன்.**

135) பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்கவும்:-

1. நெல்

தஞ்சை, தமிழகத்தின் நெல் களஞ்சி யமாய்த் திகழ்கிறது.

2. உயிர்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் நீத்தார்.

3. நீர்

கடல் நீர் மேகமாகி மழையாய்ப் பெய்கிறது.

4. வேந்தன்.

வேந்தன் நடுநிலை தவறாது ஆட்சி செய்ய வேண்டும்.

## முதுமொழிக்காஞ்சி

136) சிறந்ததெனக் கூறப்படும் பத்துப் பொருளைத் தன்னகத்தே கொண்டிருப்பது ------------------- ஆகும்.

**சிறந்த பத்து**

137) “முதுமொழிக்காஞ்சி” என்ற நூலை இயற்றியவர் யார்?

**மதுரைக் கூடலூர்கிழார்**

138) சொற்பொருள்:-

1. **ஆர்கலி - நிறைந்த ஓசையுடைய கடல்**
2. **காதல் - அன்பு, விருப்பம்**
3. **மேதை - அறிவு நுட்பம்**
4. **வண்மை - ஈகை, கொடை**
5. **பிணி - நோய்**
6. **மெய் - உடம்பு**
7. **நாணம் - செய்யக் கூடாததனைச் செய்ய அச்சப்படுதல்**
8. **சிறந்தன்று - சிறந்தது**
9. **வழிபடுதல் - போற்றி வணங்குதல்**
10. **தற்செய்கை - தன்னைச் செல்வம் முதலியவற்றில் மேம்படுத்திக் கொள்ளல்.**

139) **ஆசிரியர் குறிப்பு:-**

பெயர் : மதுரைக் கூடலூர் கிழார்

பிறந்த ஊர் : கூடலூர்

சிறப்பு : இவர்தம் பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரை யாசிரியர்கள் மேற்கோள்களாகக் கையாண்டுள்ளார்கள்.

காலம் : சங்க காலத்திற்குப்பின் வாழ்ந்தவர்.

140) முதுமொழிக்காஞ்சி என்பது ----------- துறைகளுள் ஒன்று.

**காஞ்சித்திணையின்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

141) முதுமொழிக்காஞ்சி ----------- எனவும் வழங்கப்படுகிறது.

**அறவுரைக் கோவை**

142) முதுமொழிக்காஞ்சியில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

10

143) முதுமொழிக்காஞ்சி ------- பாடல்களால் ஆனது.

**நூறு**

144) இளமையைக் காட்டிலும் ------------- சிறந்தது.

**நோயற்ற வாழ்வே**

145) கற்றலைவிடவும் சிறந்தது ________

**ஒழுக்கமுடைமை**

146) பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க

1. **மக்கள்:**

மக்கள் அனைவரும் கல்வி பெற்றவராய் இருக்க வேண்டும்.

2. **ஒழுக்கம்:**

ஒழுக்கம் உயிரினும் மேலானது.

3. **வழிபடுதல்:**

இறைவனை மனம், மொழி, மெய், ஆகியவற்றால் வழிபடுதல் வேண்டும்.

## மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் (உரைநடை)

147) யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்தவர் யார்?

**உ.வே.சாமிநாதர்**

148) பின்னாளில் உ.வே.சாமிநாதர் அனைவராலும் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

**தமிழ்த் தாத்தா**

149) உ.வே. சாமிநாதர் அவர்களின் ஆசிரியர் பெயர் என்ன?

**மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்**

150) மீனாட்சி சுந்தரனார் எப்போது பிறந்தார்?

**1815 ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் ஆறாம் நாளன்று பிறந்தார்.**

151) மீனாட்சி சுந்தரனார் பிறந்த ஊர் எது?

**திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எண்ணெய்க் கிராமத்தில் பிறந்தார்.**

152) மீனாட்சிசுந்தரனாரின் பெற்றோர் பெயர் என்ன?

**சிதம்பரம் -- அன்னத்தாச்சியார்**

153) மீனாட்சி சுந்தரனார் இளமையில் யாரிடம் தமிழ் கற்றார்?

**தமது தந்தையாரிடம்**

154) மீனாட்சி சுந்தரனார் சிறுவயதிலேயே ------------ இயற்றும் ஆற்றல் கைவரப் பெற்றார்.

**செய்யுள்**

155) மீனாட்சி சுந்தரனார் திருமணம் செய்துகொண்டு குடும்பத்துடன் எந்த ஊரில் வாழ்ந்து வந்தார்?

**திரிசிரபுரத்தில் (திருச்சிராப்பள்ளி)**

156) மீனாட்சி சுந்தரனார் திரிசிரபுரத்தில் வாழ்ந்ததால் அவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

**திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரனார்**

157) மீனாட்சி சுந்தரனார் தமிழில் எந்த நூல்களில் ஆர்வம் கொண்டிருந்தார்?

**சைவ சமய நூல்கள்**

158) மீனாட்சி சுந்தரனாரின் குறிப்பிடத்தக்க மாணவர்கள் யார்?

**குலாம்காதர் நாவலர், சவரிராயலு, தியாகராசர், சாமிநாதர் ஆகியோர் ஆவர்.**



join telegram@tamizhanexammaterials1

@tamizhanexammaterials1

159) மீனாட்சிசுந்தரனார் எந்த ஊரில் வாழ்ந்த போது உ.வே. சாமிநாதருக்கு ஆசிரியராக இருந்தார்?

**திருவாவடுதுறையில்**

160) மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் எத்தனைக்கு மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்?

**எண்பதுக்கும் மேற்பட்ட நூல்கள்**

161) மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் பல்வேறு கோவில்களுக்கு நடைப் பயணம் மேற்கொண்டு அக்கோவில் களைப் பற்றி ----பல இயற்றியுள்ளார்.

**தலபுராணங்கள்**

162) கும்பகோணத்திலுள்ள சுண்ணாம்புக் கரான் தெருவை எவ்வாறு வழங்குவர்?

**நீற்றுக்காரத் தெரு**

163) நீற்றுக்காரத் தெருவை இப்படியும் அழைக்கலாம் என்று மீனாட்சி சுந்தரனார் கூறினார்?

**மூன்றாவது தெரு**

164) மூன்றாவது என்பது எதைக் குறிக்கும் ஒரு சொல்?

**சுண்ணாம்பு**

165) நோய்க்கு எது மருந்து என்று மீனாட்சி சுந்தரனார் கூறுகிறார்?

**இலக்கியம்**

166) மீனாட்சிசுந்தரனார் மறைந்த ஆண்டு எது?

01.02.1876

167) "நாளை என் தாய்மொழி சாகுமானால்" இன்றே நான் இறந்து விடுவேன் என்று கூறிய கவிஞன் யார்?

**ருஷ்யக் கவிஞன் ரசூல் கம்சதேவ்**

168) "தொப்புள் கொடி உறவுகள்" எனத் தொடங்கும் பாடல் எந்த நூலிருந்து எடுத்தாளப்பட்டது.

**சொல்லத் துடிக்குது மனசு**

## கோவூர் கிழார் (துணைப்பாடம்)

169) கோவூர்கிழார் எங்கு பிறந்தார்?

**உறையூருக்கு அருகிலுள்ள கோவூரில் பிறந்தார்**

170) நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவ மாலை ஆகியவற்றில் கோவூர்கிழாரின் ------------ பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**பதினெட்டுப் பாடல்கள்**

171) கோவூர்கிழாரை அவைக்களத் தலைவர் ஆக்கிக் கொண்ட மன்னன் யார்?

**நலங்கிள்ளி**

172) நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் இருந்த பகையை நீக்கியவர் யார்?

**கோவூர்கிழார்**

173) பனம்பூ மாலையணிந்த மன்னன் யார்?

**சேரன்**

174) வேப்பம்பூ மாலையணிந்த மன்னன் யார்?

**பாண்டியன்**

175) ஆத்திபூ மாலை யாருக்கு உடையது?

**சோழருக்குரியது**

176) கடையேழு வள்ளல்களுள் ஒருவர் யார்?

**மலையமான் திருமுடிக்காரி**

177) எந்தப் புலவரைக் கோவூர்கிழார் நெடுங்கிள்ளி சிறையில் இருந்து விடுவித்தார்?

**இளந்தத்தனார்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

178) விரைந்து தொழில் கேட்கும் எனத் தொடங்கும் திருக்குறள் எத்தனையாவது குறளில் அமைந்துள்ளது?

**648**

## உயிர்மெய், ஆய்தம்

179) க,கா,கி ஆகியவை எந்த எழுத்துகள்?

**உயிர்மெய் எழுத்துகள்**

180) எந்தெந்த எழுத்துகள் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துத் தோன்றும்?

**உயிரெழுத்தும், மெய்யெழுத்தும்**

181) உயிர்மெய் எழுத்து உயிரையும் மெய்யையும் சார்ந்திருப்பதால் --------------- என்கிறோம்.

**சார்பெழுத்து**

182) ∴ என்றால் என்ன?

**அ∴கேனம்**

**அ∴கேனத்தில் ∴ எனும் இவ்வெழுத்து மூன்று புள்ளிகளைப் பெற்றுள்ளதால் இதனை எவ்வாறு குறிப்பிடுவார்கள்.**

**முப்புள்ளி, முப்பாற் புள்ளி**

183) ∴ எனும் எழுத்து உயிரோடும் மெய்யோடும் சேராமல் தனித்தே இருப்பதால் இதனை எவ்வாறு கூறுவர்?

**தனி நிலை**

184) தற்காப்பு ஆயுதத்தில் (கேடயம்) காணப்படும் மூன்று குமிழ்ப் புள்ளிகள் போன்று இருப்பதால் ∴ எனும் எழுத்தை ----------- எனவும் கூறுவர்.

**ஆய்தம்**

185) ---------- கரைத்தால் கல்லும் கரையும்.

**கரைப்பார்**

186) உயிர்மெய் எழுத்துகள் ------------- வகையில் அடங்கும்.

**சார்பெழுத்து**

187) அன்பு, அடக்கம் எ∴கு - இச்சொற்களிலுள்ள சார்பெழுத்துகளின் அடியில் கோடிடுக:-

**அன்பு**

188) போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பாக அரசன், தன் அரண்மனையில் வீரர்களுக்கு அளிக்கும் பெருவிருந்தின் பெயர் என்ன?

**பெருஞ்சோறு அளித்தல்**

### வல்லினம் மிகும் இடங்கள்

189) ----------- முன் க்,ச்,த்,ப் மெய்யெழுத்துகளின் வருக்க எழுத்துச் சொற்கள் (வினைச் சொற்கள்) வருமாயின் உரிய வல்லெழுத்துகள் தோன்றும்.

**ஆகர ஈற்று வினையெச்சங்களுக்கு**

(எ.டு)

ஓட + காத்திருக்கிறான் = ஓடக் காத்திருக்கிறான்

பாட + கேட்டேன் = பாடக் கேட்டேன்

190) ஈற்று வினையெச்சச் சொற்களின் பின் வல்லின உயிர்மெய் எழுத்துச் சொற்கள் ( வினைச்சொற்கள்) வந்தால் --------- மிகும்.

**வல்லொற்று**

(எ.கா)

நாடி + சென்றான் = நாடிச் சென்றான்

பேசி + பழகினான் = பேசிப் பழகினான்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## இயல் மூன்று
## செய்யுள் - தனிப்பாடல்
## இரட்டுற மொழிதல்

191) இரட்டுறமொழிதல் என்ற பாடலைப் பாடியவர் யார்?
**காளமேகப் புலவர்**

192) சொற்பொருள்:-
1. சுழி – உடல் மீது உள்ள சுழி, நீர்ச்சுழி
2. துண்ணலர் – பகைவர், அழகிய மலர்
3. பரிவாய் – அன்பாய்
4. சாடும் – தாக்கும், இழுக்கும்
5. ஆடுபரி - ஆடுகின்ற குதிரை

193) காள மேகப்புலவர் எங்குப் பிறந்தார்?
**கும்பகோணத்திற்கு அருகில் நந்திக்கிராமம் எனவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம் எனவும் கூறுவர்**

194) காளமேகப்புலவரின் இயற்பெயர் என்ன?
**வரதன்**

195) எந்தக் கோவில் மடைப்பள்ளியில் காளமேகப் புலவர் பணிபுரிந்தார்?
**திருவரங்கக் கோவில்**

196) வைணவ சமயத்தில் இருந்து எந்த சமயத்திற்குக் காளமேகப்புலவர் மாறினார்?
**சைவ சமயத்திற்கு**

197) காளமேகப்புலவர் எதைப் போன்று கவிதை பொழியும் ஆற்றல் பெற்றிருந்தார்?
**கார்மேகம் போல்**

## கல்விக்கு எல்லை இல்லை

198) கற்றதுகைம் மண்ணளவு கல்லாது உலகளவென்(று) கூறியவர் யார்?
**ஔவையார்**

199) சொற்பொருள்:-
1. கைம்மண்ணளவு - ஒரு சாண் எனவும் பொருள் கொள்ளுவர்
2. மெத்த - மிகுதியாக
3. பந்தயம் - போட்டி
4. புலவீர் - புலவர்களே
5. கலைமடந்தை - கலைமகள்

200) கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் முதலிய புலவர்கள் யாருடைய காலத்தில் வாழ்ந்தார்கள்?
**ஔவையார்**

201) புலவர் பலர், பல்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப் போது பாடிய பாடல்களின் தொகுப்பே ---------- எனப்படும்.
**தனிப்பாடல் திரட்டு**

## உரைநடை
## கணிதமேதை இராமானுஜம்

202) கணிதமேதை எனப் போற்றப்படும் இராமானுஜம் எங்கு வாழ்ந்து வந்தார்?
**ஈரோட்டில்**

203) இராமானுஜத்தின் பெற்றோர் யார்?
**சீனவாசன் --- கோமளம்**

204) கணிதமேதை இராமானுஜம் பிறந்த ஆண்டு எது?
**22.12.1887**

205) இராமானுஜம் எத்தனை ஆண்டுவரை பேசும் திறன் அற்றவராக இருந்தார்?
**3 ஆண்டுகள்**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

206) காஞ்சிபுரத்தில் உள்ள எந்தப் பள்ளியில் இராமானுஜம் படித்தார்?
**திண்ணைப் பள்ளியில்**

207) இராமானுஜம் தமது சிறுவயது முதலே ------------ பாடத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.
**கணிதப்பாடத்தில்**

208) எதற்கு மதிப்பு உண்டு என இராமானுஜம் தனது ஆசிரியரிடம் கூறினார்?
**சுழியத்திற்கு (0)**

209) ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமானுஜன் குறைந்தபட்சம் ஒரு ஐகோபி என்று கூறியவர் யார்?
**லிட்டில் வுட்டு**

210) ஆய்வர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
**சுவிட்சர்லாந்தைச்**

211) ஆய்வர் ------------- ஆம் நூற்றாண்டின் இணையற்ற கணிதமேதை ஆவார்?
**18**

212) ஜாகோபி எந்த நாட்டில் வாழ்ந்தார்?
**ஜெர்மனியில்**

213) ஜாகோபி எந்த நூற்றாண்டின் கணிதமேதை
**19 ஆம்**

214) கணிதத் திறமையால் விஞ்ஞான உலகினைப் பிரமிக்கச் செய்து வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பெற்ற பிறவிக் கணித மேதை என்று கூறியவர் யார்?
**இந்திரா காந்தி**

215) 1880 ஆம் ஆண்டு இலண்டனிலிருந்த ------- என்பவர் பதினைந்தாம் வயதிலேயே யார் கணிதத்தில் சிறந்து விளங்கினார்?
**கார்**

216) இராமானுஜம் தனது தந்தை சீனவாசனின் முயற்சியால் சென்னைத் துறைமுகத்தில் எப்பணியில் சேர்ந்தார்?
**எழுத்தர்**

217) இராமானுஜம் தான் கண்டுபிடித்த தேற்றங்களையும் எடுகோள்களையும் கேள்விகளாகத் தொகுத்து எந்த பத்திரிகைக்கு அனுப்பினார்?
**இந்தியக் கணிதக் கழகப் பத்திரிகை**

218) தனது கண்டுபிடிப்புகளை இந்தியக் கணிதக் கழகப் பத்திரிகைக்கு இராமானுஜம் யார் மூலம் அனுப்பினார்?
**∴ பிரான்சிஸ் ஸ்பிரிங்**

219) ----------- எனும் தலைப்பில் வெளியான இராமானுஜத்தின் கட்டுரை கணித வல்லுநர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.
**பெர்னெளலிஸ் எண்கள்**

220) இராமானுஜம் எந்தப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார்?
**சென்னைப் பல்கலைக்கழகத்தில்**

221) இராமானுஜம் தனது கண்டுபிடிப்புகள் ஆராய்ச்சிகள் ஆகியவற்றை விவரமாக எழுதி இங்கிலாந்திலுள்ள எந்தப் பல்கலைக்கழகப் பேராசிரியர் --------- என்பவருக்கு கடிதமாக அனுப்பினார்.
**கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹார்டி**

222) இலண்டன் கேம்பிரிட்ஸ் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரின் பெயர் என்ன?
**திரினிட்டி கல்லூரி**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

223) திரினிட்டி கல்லூரியின் பேராசிரியர் யார் சென்னைப் பல்கலைக்கழகத் திற்குச் சொற்பொழிவாற்ற வந்தார்?

**ஈ.எச். நெவில்**

224) இராமானுஜம் எந்த ஆண்டு இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்?

**1914 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் நாள்**

225) திரினிட்டி கல்லூரியில் ஆராய்ச்சி மாணவராக எந்த ஆண்டு இராமானுஜம் சேர்ந்தார்?

**18.04.1914**

226) கிங்ஸ் கல்லூரியின் கணிதப் பேராசிரியர் யார்?

**ஆர்தர் பெர்சி**

227) இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டு அவருக்குப் பெருமை சேர்ந்தவர் யார்?

**ஹார்டி**

228) ஹார்டி ------------- என்னும் தலைப்பில் இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டார்?

**ரோசர்ஸ் இராமானுஜன் கண்டுபிடிப்புகள்**

229) இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் உறுப்பினராக இராமானுஜம் எந்த ஆண்டு சேர்க்கப்பட்டார்?

**1918**

230) இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் இராமானுஜத்திற்கு ------------- பட்டம் வழங்கியது.

**எ.ஃ.ப்.ஆர்.எஸ்**

231) எ.ஃ.ப்.ஆர்.எஸ் பட்டம் பெற்ற இராமானுஜத்தை எந்தக் கல்லூரி பாராட்டிச் சிறப்பித்தது?

**திரினிட்டி கல்லூரி**

232) திரினிட்டி கல்லூரியின் கல்விக் குழுவின் சிறப்பு உறுப்பினராகவும் இராமானுஜத்தைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் எத்தனை பவுண்டுத் தொகையை ஆறு ஆண்டுகளுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்தது?

233) யாருடைய பரிந்துரையின் பேரில் சென்னைப் பல்கலைக் கழகமும் 250 பவுண்டுத் தொகையை ஐந்து ஆண்டுக்கும் கொடுக்க முன்வந்தது.

**ஹார்டியின்**

234) இராமானுஜம் --------------- பவுண்டைத் தம் பெற்றோருக்கும் ---------- பவுண்டை ஏழை எளிய மாணவர்களுக்கும் வழங்கி வருமாறு கடிதம் எழுதினார்.

**50 பவுண்டைத் தம் பெற்றோருக்கும் 200 பவுண்டை ஏழை எளிய மாணவர்களுக்கும்**

235) இராமானுஜத்தைப் பார்க்க வந்த ஹார்டி ---------- என்ற எண் கொண்ட வாடகை மகிழுந்தில் வந்தேன் எனக் கூறினார்?

**1729**

236) இந்தியாவிற்கு இராமானுஜம் எப்போது திரும்பி வந்தார்?

**1919 மார்ச் 27**

237) இராமானுஜம் மறைந்த ஆண்டு எது?

**1920 ஏப்ரல் 26**

238) இராமானுஜம் சாதாரண மனிதரல்லர் அவர் இறைவன் தந்த பரிசு என்று கூறியவர் யார்?

**பேரா ஈ.டி பெல்**

239) இராமானுஜன் முதல்தரமான கணித மேதை என்று கூறியவர் யார்?

**பேராசிரியர் சூலியன் கக்சுலி**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

240) 1962 திசம்பர் 22 ஆம் நாளன்று இராமானுஜத்தின் -------------- ஆவது பிறந்த நாள் ஆகும்.

75

241) இராமானுஜத்தின் 75 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நடுவணரசு பதினைந்து காசு அஞ்சல்தலை ---------------- இலட்சம் வெளியிட்டது.

**இருபத்தைந்து**

242) பேராசிரியர் இராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழு எந்த ஆண்டு சென்னையில் அமைக்கப்பட்டது.

1971

243) சென்னையில் 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் நாள் அன்றைய முதலமைச்சரால் -------------- நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது.

**இராமானுஜம் கணித அறிவியல்**

244) சென்னைத் துறைமுகம் சார்பில் புதிதாக வாங்கிய குடிநீர்க்கப்பலுக்கு, -------------- எனப் பெயர் சூட்டப்பட்டது.

**சீனிவாச இராமானுஜம்**

245) ரிச்சர்ட்டும் ஆஸ்கேயும் இணைந்து ----------- ஆண்டில் இராமானுஜத்தின் மார்பளவு வெண்கலச் சிலையை இந்தியாவிற்குக் கொண்டு வந்து வழங்கினர்?

1984 ஆம்

246) கணிதக் குறிப்புகள் அடங்கிய எத்தனை குறிப்பேடுகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் இராமானுஜம் விட்டுச் சென்றுள்ளார்.

3

247) இராமானுஜத்தின் குறிப்பேடுகளில் ------------ முதல் ---------------- தேற்றங்கள் இருந்தன.

3000 முதல் 4000

248) 1957 ஆம் ஆண்டு ----------- அடிப்படை ஆராய்ச்சி நிலையம் இராமானுஜத்தின் தேற்றங்களை ஒளிப்படம் எடுத்து நூலாக வெளியிட்டுள்ளது.

டாடா

## நன்றிப்பரிசு (துணைப்பாடம்)

249) பசி ----------- அறியாது.

ருசி

250) மருது பாண்டிக்குச் சாப்பிட கிழவி என்ன கொடுத்தாள்?

**பழைய சோறு**

251) பழைய சோற்றுக்காகக் கிழவிக்கு மருதுபாண்டி என்ன பரிசு வழங்கினார்?

**அவள் வசித்த ஊர்**

252) கிழவிக்குப் பரிசாகக் கிடைத்த அந்த ஊரின் பெயர் என்ன?

**பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல்**

253) பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல் என்னும் ஊர் எந்த மாவட்டத்தில் உள்ளது?

**சிவகங்கை**

## நால்வகைச் சொற்கள் இலக்கணம்

254) பெயரைக் குறித்து வந்தால் ---------- என்று பெயர்.

**பெயர்ச் சொற்கள்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

255) ஒருபொருளின் செயலை (இயக்கத்தைக்) குறிப்பதால் இச்சொல் ---------------- ஆகும்.

**வினைச்சொல்**

256) தம்பி + உம் இதிலுள்ள 'உம்' என்பது இணைப்புச் சொல்லாக வருகிறது. இதனை --------- என்பர்.

**இடைச்சொல்**

257) இடைச்சொல் எதனைச் சார்ந்து வரும்?

**பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள்**

258) பலவகைப்பட்ட பண்புகளைக் கொண்டு பெயர்ச் சொற்கள், வினைச் சொற்களை விட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன -------- ஆகும்.

**உரிச்சொற்கள்**

259) பொருத்துக:-

1. பெயர்ச்சொல் --- அ. வந்தான்
2. வினைச்சொல் – ஆ. ஐந்தும் ஆறும்
3. இடைச்சொல் -- இ. தவச்சிறிது
4. உரிச்சொல் -- ஈ. வேலன்

விடை:-

**1-ஈ, 2-அ, 3-ஆ, 4-இ**

260) **வல்லினம் மிகும் இடங்கள்:**

எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களில் பின் மட்டும் வல்லின வருக்கச் சொற்கள் வந்தால் --------- மிகும்.

**வல்லொற்று**

(எ.கா)

| | | | | |
|---|---|---|---|---|
| எட்டு | + | கால் | = | எட்டுக்கால் |
| பத்து | + | பேர் | = | பத்துப்பேர் |
| பத்து | + | சட்டை | = | பத்துச்சட்டை |
| பத்து | + | தோப்பு | = | பத்துத்தோப்பு |
| எட்டு | + | கூடை | = | எட்டுக்கூடை |
| எட்டு | + | தேர் | = | எட்டுத்தேர் |

261) பாடாத, கேளாத, ஆடாத, செய்யாத, சொல்லாத என்பன எதிர்மறைப் பொருளில் வருவதால் -------------- ஆகும்.

**எதிர்மறைப் பெயரெச்சங்கள்**

262) சொற்களிலுள்ள ஈற்றெழுத்தானது கெட்டுப் பாடா, கேளா, ஆடா, செய்யா, சொல்லா என்று வருவதனை -------- பெயரெச்சம் என்பர்.

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.**

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் மிகும் வல்லினம்

(எ.கா)

பாடா + குயில் = பாடாக்குயில்

கேளா + செவி = கேளாச்செவி

263) வல்லினம் மிகா இடங்கள்:-

வினைச் சொற்கள் பெயரைக் கொண்டு முற்றுப் பெறும். இச்சொற்களைப் --- ----------- என்பர்.

**பெயரெச்சம்**

(எ.கா)

வந்த + குழந்தை = வந்த குழந்தை

உடைந்த + பலகை = உடைந்த பலகை

| | | | | |
|---|---|---|---|---|
| செய்த | + | தச்சன் | = | செய்த தச்சன் |
| பாடிய | + | கவிதை | = | பாடிய கவிதை |
| காத்த | + | சிறுமி | = | காத்த சிறுமி |
| வெடித்த | + | பஞ்சு | = | வெடித்த பஞ்சு |

264) பெயரச்சச் சொற்கள்முன் ——— மிகாது.

**வல்லொற்று**

265) சுவர் இருந்தால் தானே ------------- வரைய முடியும்.

**சித்திரம்**



Arivukkadal Pathippagam 9842649140

join telegram@tamizhanexammaterials1

@tamizhanexammaterials1

## இயல் நான்கு
## செய்யுள் - திரிகடுகம்

266) திரிகடுகம் என்ற நூலை இயற்றியவர் யார்?
**நல்லாதனார்**

267) **சொற்பொருள்:-**
1. உண்பொழுது - உண்ணும்பொழுது
2. பெறினும் -- பெற்றாலும்
3. பால்பற்றி - ஒருபக்கச் சார்பு
4. தோல்வற்றி - தோல் சுருங்கி
5. சாயினும் -- அழியினும்
6. சான்றாண்மை - அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல்
7. குன்றாமை - குறையாது இருந்தல்
8. தூ உயம் -- தூய்மை உடையோர் அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை

268) **சொற்பொருள்:-**
1. ஈயும் - அளிக்கும்
2. நில்லாமை - நிலையாமை
3. நெறி - வழி
4. தூய்மை - தூய தன்மை
5. மாந்தர் -- மக்கள்

## புதரில் விதைத்த விதை

269) சொற்பொருள்:-
1. நிறை ஒழுக்கம் – மேலான ஒழுக்கம்
2. தேற்றாதான் – கடைப்பிடிக்காதவன்
3. வனப்பு -- அழகு
4. தூறு -- புதர்
5. வித்து - விதை

270) நல்லாதனார் எந்த ஊரில் பிறந்தார்?
**திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருத்து என்னும் ஊர்**

271) செரு அடுதோள் நல்லாதன் என பாயிரம் குறிப்பிடுவது யார்?
**நல்லாதனார்**

272) திரிகடுகம் ——— நூல்களுள் ஒன்று
**பதினெண்கீழ்க்கணக்கு**

273) திரிகடுகம் எத்தனை வெண்பாக்களை உடையது?
**நூறு**

274) திரிகடுகப் பாடலிலும் இடம் பெற்றுள்ள மூன்று அறக்கருத்துகள் கற்பாரின் மனத்திலுள்ள ------ நோயைப் போக்குகிறது?
**அறியாமை**

275) **உரிய விடையைத் தேர்வு செய்க:-**
அ) பால்பற்றிச் சொல்லா விடுதலும் -- இவ்வடியில் பால்பற்றி என்பதன் பொருள்.
**ஒருபக்கச் சார்புபற்றி**
ஆ) "நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும்" இவ்வடியில் வழி என்னும் பொருள் தரும் சொல்
**நெறி**
இ) வனப்பு என்னும் சொல்லின் பொருள்
**அழகு**

## காந்தியடிகள் கடிதம்
## உரைநடை

276) காந்தியடிகள் ------------ மாநிலத்தில் ஆற்றிய உரையைக் குழந்தைகளுக்கும் கூறினார்.
**குஜராத்**

277) ஒருமொழியின் தன்மை --------- தன்மையைப் பொருத்தே அமையும்.
**மக்களின்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

278) வேலை தெரியாத தொழிலாளி தன் கருவியின் மீது --------- கொண்டானாம்.

**சீற்றம்**

279) 1917 ஆம் ஆண்டு ---------- நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்திடிகள் நிகழ்த்திய தலைமை உரை, மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் கடித வடிவில் அமைக்கப்பட்டுள்ளது?

**புரோச்**

## உரியது (துணைப்பாடம்)

280) முனிவர் அதிகமாக யாரை வெறுப்பவர்?

**பொய் சொல்வாரை**

281) முனிவர் பொய் சொல்வார் மனையில் ---------------- மாட்டார்?

**உணவு உண்ண**

282) பெரியவரின் ----------- நற்குணங்களைக் கண்டு முனிவர் முகம் மலர்ந்து.

**அன்பு, அடக்கம், பணிவு**

283) மக்கள் முனிவரிடம் அந்தப் பெரியவருக்கு எத்தனை மகன்கள் உண்டு என்று கூறினார்?

**நான்கு**

284) பெரியவரின் நான்கு மகன்களின் பெயர்கள் என்ன?

**நடராஜா, வேல்சாமி, சிவசாமி, கந்தசாமி**

285) கந்தசாமி ஓடிவந்து தந்தையையும் முனிவரையும் தொழுது சாமிக்கு என்ன கொண்டு வரட்டும் எனக் கேட்டான்?

**பால், பழம்**

286) -------- செய்த பணம் எனக்கு உரியது.

**தருமம்.**

287) என் கருத்தை ஏற்று நடக்கின்றவனே --------- மகன்.

**எனக்கு உரிய**

288) ------------- செய்த நேரமே எனக்கு உரியது என்று பெரியவர் கூறினார்.

**இறைத்தொண்டு**

289) தொன்மை மிக்க உலக மொழிகள் எனத் தொடங்கும் பாடலை எழுதியவர் யார்?

**தேவநேயப் பாவாணர்**

## இடுகுறிப் பெயரும் காரணப் பெயரும்

290) ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்ட பெயரே ------- ஆகும்.

**இடுகுறிப்பெயர்**

291) காரணம் கருதி இடப்பட்ட பெயர்கள் ------------ எனப்படும்.

**காரணப்பெயர்கள்**

(எ.கா) பறவை, வளையல், செங்கல்

292) தமிழில் ----------- மிகுதியாக உள்ளன.

**காரணப்பெயர்களே**

293) பிறமொழிகளில் -------------- மிகுதியாக உள்ளன.

**இடுகுறிப்பெயர்களே**

294) மலை, காடு, மாடு இவையெல்லாம் ------------ பெயர்கள் ஆகும்.

**இடுகுறிப்**

295) அனைத்துக்கும் பொதுவாக வரும் இடுகுறிப்பெயர்களை -------- எனக் கூறுவர்.

**இடுகுறிப் பொதுப்பெயர்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

296) “தென்னை” என்னும் சொல் ஒரு காரணமும், இன்றி இடுகுறிப் பெயராய் நின்று, ஒரு பொருளுக்கே (தென்னை மரம்) சிறப்பாய் வருவதால் ------------- பெயராயிற்று.

**இடுகுறிச் சிறப்புப்**

297) காகம், குயில், புறா, கிளி ஆகிய அனைத்தையும் பறவை என்னும் பொதுச்சொல்லால் அழைக்கிறோம். அதனால், இதனைக் ------------------ என்கிறோம்.

**காரணப் பொதுப் பெயர்**

298) வளையல்போலவே சிலபொருள் வளைந்து வட்டமாக இருக்கும். இருப்பினும் அவையெல்லாம் வளையல் என அழைக்கப்படுவது இல்லை. இருப்பினும் இச்சொல் கையில் அணியும் வளையலை மட்டுமே குறிப்பதால் -------------- ஆயிற்று.

**காரணச் சிறப்புப் பெயர்**

299) உரிய விடையைத் தேர்வு செய்து எழுதுக:-

1. பெட்டி என்பது --------------- ஆகும்.

**இடுகுறிப்பெயர்**

2. சித்திரை மாதத்தில் பிறந்ததால் -------------- என அழைக்கப்பட்டான்.

**சித்திரையான்**

3. காரணப் பொதுப் பெயர் ------------- ஆகும்.

**அணி**

300) **பொருத்துக:-**

1. இடுகுறிப் பொதுப்பெயர் -- அ. மரங்கொத்தி
2. இடுகுறிச் சிறப்புப் பெயர் — ஆ. பறவை
3. காரணப் பொதுப் பெயர் ---இ. காடு
4. காரணச் சிறப்புப் பெயர் -- ஈ.பனை

விடை:

**1.இ, 2.ஈ, 3.ஆ, 4.அ**

301) சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் —— என மழையைப் போற்றி வணங்கித் தம் காப்பியத்தை தொடங்கினார்.

**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**

302) —— என்பன போன்ற முதுமொழிகளும் சிறப்புகளை நமக்கு உணர்த்துகின்றன.

**மாரியல்லது காரியம் இல்லை.**

303) ஒரு சொற்றொடரிலுள்ள எழுவாய் அதன் பயனிலையோடு ————— இடங்களில் பொருத்தமாக அமைய வேண்டும்.

**திணை, பால், எண்**

(எ.கா)

**<u>திணைப் பொருத்தம்:</u>**

கோலமயில் ஒயிலாக ஆடியது.

(கோலமயில் -- அஃறிணை எழுவாய்: ஆடியது - அஃறிணைப் பயனிலை)

**<u>பால் பொருத்தம்:</u>**

வண்டுகள் தேன் குடித்தன

(வண்டுகள் -- பலவின்பால் எழுவாய் குடித்தன - பலவின்பால் பயனிலை)

**<u>எண்பொருத்தம்:</u>**

விண்கலங்கள் விண்ணில் பறந்தன

(விண்கலங்கள் -- எழுவாய்ப் பன்மை பறந்தன - பன்மைப் பயனிலை)

**<u>இடப் பொருத்தம்:</u>**

அவன் பாடம் படித்தான்

(அவன் -- படர்க்கை எழுவாய், படித்தான் -- படர்க்கைப் பயனிலை)



join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

**சிறப்புப் பொருத்தம்:-**

பாவேந்தர், பாரதியைப் புகழ்ந்து பாடினார். பாவேந்தர் என்னும் பெயர் பாரதிதாசனையே குறிக்கும் என்பதனால், அது சிறப்புப் பெயராயிற்று. சிறப்புப் பொருத்தம் உயர்வுமட்டுமல்லாது இழிவு கருதியும் வரும்.

(எ.கா)

முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா.

## இயல் ஐந்து - செய்யுள் திருவாரூர் நான்மணிமாலை

304) திருவாரூர் நான்மணிமாலை என்னும் நூலையை இயற்றியவர் யார்?

**குமரகுருபரர்**

305) சொற்பொருள்:-

1. என்பணிந்த (என்பு + அணிந்த) - எலும்பை மாலையாக அணிந்த
2. தென்கமலை - தெற்கில் உள்ள திருவாரூர்
3. பூங்கோயில் – திருவாரூர்க்கோயிலின் பெயர்
4. புண்ணியனார் - இறைவர்
5. மண் சுமந்தார் -- வந்திக்காக இறைவன் மண்சுமந்தார்.
6. உருகுவார் -- வருந்துவார்

306) குமரகுருபாரின் பெற்றோர் பெயர் என்ன?

**சண்முகசிகாமணிக் கவிராயர் -- சிவகாமசுந்தரி அம்மையார்.**

307) குமரகுருபரர் பிறந்த ஊர் எது?

**திருவைகுண்டம்**

308) நீதிநெறி விளக்கம் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், கந்தர்கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம் ஆகிய நூல்களை இயற்றியவர் யார்?

**குமரகுருபரர்**

309) குமரகுருபரர் வாழ்ந்த காலம் எது?

**கி.பி பதினாறாம் நூற்றாண்டு**

310) திருவாரூர் நான்மணிமாலை பிரித்து எழுதுக?

**திருவாரூர் + நான்கு + மணிமாலை**

311) ------ எழுந்தருளியுள்ள தியாகராசர்மீது பாடப்பெற்ற நான்மணிமாலை எனப் பொருள்படும்

**திருவாரூரில்**

312) நான்மணிமாலை என்பது தமிழில் வழங்கும் --------------- சிற்றிலக்கியங் களுள் ஒன்று

**தொண்ணூற்றாறு**

313) நால்வகையான பாடல்களால் எதனால் ஆன நாற்பது செய்யுள்களைக் கொண்டது.

**வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா.**

314) திருவாரூர் தியாகராசப் பெருமானைப் பற்றிய பெருமைகளை எந்த நூலின் மூலம் அறிந்து இன்புறலாம்.

**திருவாரூர் நான்மணிமாலை**

315) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. என்பணிந்த தென்கமலை -- இவ்வடியில் தென்கமலை உணர்த்தும் பொருள் --------

**தெற்கில் உள்ள திருவாரூர்**

2. மண்சுமந்தார் எனக் குறிப்பிடப்படு பவர் ---------



join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

**சிவபெருமான்**

3. ------------- என்னும் பெயருடைய கிழவிக்காக மண் சுமந்து பாண்டியனிடம் இறைவன் (சிவபெருமான்) அடிப்பட்டார்.

**வந்தி**

316) **பிரித்து எழுதுக:-**

அ. பூங்கோவில் -- பூ + கோவில்

ஆ, புடைத்தெண்ணர் – புடைத்து + எண்ணர்

இ. என்றுருகுவார் - என்று + உருகுவார்

ஈ) என்பணிந்த - என்பு + அணிந்த

317) **பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக:-**

1. **பணிவு:** பெரியோரிடம் நாம் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

2. **கோவில்:** தஞ்சைப் பெரிய கோவில் இராசராசனால் கட்டப்பட்டது.

3. **அன்பு:** பரிசு பெற்ற மகனைத் தாய் அன்புடன் அணைந்துக் கொண்டாள்.

4. **மண்:** குயவன் களிமண் கொண்ட மட்பாண்டம் செய்தான்

## மெய்ப்பொருள் கல்வி

318) மெய்ப்பொருள் கல்வி என்னும் நூலை இயற்றியவர் யார்?

**வாணிதாசன்**

319) சொற்பொருள்:-

1. பதுமை - உருவம்

2. மெய்ப்பொருள் - நிலையான பொருள்

3. கணக்காயர் - ஆசிரியர்.

320) வாணிதாசன் என்பவரின் இயற்பெயர் என்ன?

**எத்திராசலு (எ) அரங்கசாமி**

321) வாணிதாசன் பிறந்த ஊர் எது?

**புதுவையை அடுத்த வில்லியனூர்**

322) வாணிதாசனின் பெற்றோர் யார்?

**அரங்க திருக்காமு - துளசியம்மாள்**

323) வாணிதாசன் --------, ------------ என்னும் பட்டங்கள் பெற்றுள்ளார்.

**கவிஞரேறு, பாவலர்மணி**

324) தமிழகத்தின் ---------- என வாணி தாசனைத் தமிழுலகம் புகழ்கிறது.

**வேர்ட்ஸ் வொர்த்**

325) ---------,---------- முதலிய மொழிகளில் இவர் பாடல்கள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

**உருசியம், ஆங்கிலம்**

326) வாணிதாசன் வாழ்ந்த காலக்கட்டம் எது?

**22.07.1915 முதல் 07.08.1974 வரை**

327) மெய்ப்பொருள் கல்வி என்னும் பாடல் கவிஞர் வாணிதாசன் தமிழ் உலகிற்குப் புனைந்து அளித்துள்ள -------------- என்னும் பாடல் தொகுப்பிலிருந்து பாடப்பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

**குழந்தை இலக்கியம்**

328) **உரிய விடையைத் தேர்வு செய்க:-**

அ.தங்கப் பதுமையாம் தோழர்களோடு - இவ்வடியில் பதுமை என்னும் சொல் உணர்த்தும் பொருள்.

**உருவம்**

329) **பிரித்து எழுதுக:-**

1. அழுக்கில்லா - அழுக்கு + இல்லா

2. அணிவதாலல்லவோ - அணிவதால் + அல்லவோ

3. செவ்விதழ் -- செம்மை + இதழ்

4. அறிவுண்டாம் – அறிவு + உண்டாம்

5. உடற்குண்டாம் - உடற்கு + உண்டாம்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

330) பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக:-

1. **பள்ளி:** எம் பள்ளியில் ஆயிரம் மாணவர்கள் பயில்கின்றனர்.

2. **பதுமை:** பாடம் கேட்கும் மாணவர் ஓவியத்தில் உள்ள பதுமைபோல் அசைவின்றி அமர்ந்து பாடத்தைக் கேட்க வேண்டும்.

3. **தோழர்:** ஒருவருக்குத் துன்பம் ஏற்படும்பொழுது அதைத் தீர்ப்பவரே சிறந்த தோழர் ஆவார்.

4. **கல்வி:** கல்வி கற்றவர்களை எல்லாரும் போற்றுவர்.

## தூங்கா நகர்

331) தமிழகத்திலுள்ள "தூங்கா நகர்" எது?

**மதுரை**

332) ஆண்டின் எல்லா நாளிலும் விழாக்கள் கொண்டாடிய படி இருப்பதால் ---------------- என்னும் பெருமை பெற்ற நகர் மதுரை.

**திருவிழா நகர்**

333) நாற்றிசையிலும் கலையழகு பொருத்திய மாபெருங் கோபுரங்களோடு எட்டுச் சிறிய கோபுரங்களையும் கொண்டு எழில்மிகு சிற்பக்கலைக் கூடமாக விளக்கும் ஊர் எது?

**கோவில் மாநகர் (மதுரை)**

334) பழம் பெரும் தமிழர்தம் நாகரிகத் தொட்டிலாகத் திகழ்ந்த மதுரை ----------- எனப் புகழ்ப்பெற்ற நகர் ஆகும்.

**தென்னிந்தியாவின் ஏதென்ஸ்**

335) பாண்டி நாட்டின் பழைமையான தலைநகரமாக விளங்கியது எது?

**மதுரை**

336) மதுரை என்னும் சொல்லுக்கு ------ என்பது பொருள்.

**இனிமை**

337) ------------- எனப் புறநானூறு போற்றியது

**தமிழ்கெழு கூடல்**

338) நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் ஓங்குசீர் மதுரை, மதுரை மூதூர் மாநகர் தென் தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை, மாண்புடை மரபின் மதுரை, வானவர் உறையும் மதுரை, பதியெழுவறியாய் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர் எனப் பற்பல அடை மொழிகளால் மதுரைக்குப் புகழ்மாலை சூட்டி மகிழ்ந்தவர் யார்?

**இளங்கோவடிகள்**

339) சேர நாடு வேழமுடைத்து, சோழநாடு சோறுடைத்து, பாண்டியநாடு முத்துடைத்து, தொண்டைநாடு ----------- உடைத்து என்பன தமிழகத்தின் சிறப்பை உணர்த்தும்.

**சான்றோர்.**

340) மதுரைக்குக் ------ எனவும் ------ எனவும் வேறு பெயர்கள் உள்ளன.

**கூடல், ஆலவாய்**

341) ---------- ,-----------,---------,-------- ஆகிய நான்கு திருக்கோவில்கள் சேர்ந்தமைந் ததால் நான்மாடக் கூடல் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

**திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்**

342) எந்த நான்கு திருக்கோவில்கள் மதுரைக்குக் காவலாக அமைந்துள்ளது?

**கன்னிகோவில், கரியமால் கோவில், காளிகோவில், ஆலவாய்க் கோவில் ஆகியவை ஆகும்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

343) வருணன் மதுரையை அழிக்க எத்தனை மேகங்களை அனுப்பினான்?
ஏழு

344) இறைவனிடம் பாண்டியன் முறையிட இறைவன் ----------- மேகங்களை மதுரையைக் காக்க அனுப்பினார்.
நான்கு

345) நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்தமையால் நான்மாடக்கூடல் என்னம் பெயர் ஏற்பட்டதாகக் கூறியது யார்?
பரஞ்சோதியார்

346) சங்கம் வைத்துச் செந்தமிழை வளர்க்க, புலவர் எல்லாரும் கூடியதால் --------- என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் அறிஞர் கூறுவர்?
கூடல்

347) மதுரையில் எழுந்தருளிய ஈசன் ஆலமர நிழலில் வீற்றிருந்ததால் ------------- என்னும் பெயர் எற்பட்டதாகவும் கூறுவர்.
ஆலவாய்

348) மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் ------ என வழங்கிய இடம் காலபோக்கில் மதுரை என்றாகியதாம்.
மருதை

349) கல்வெட்டில் --------- என்ற பெயர் காணப்படுகிறது.
மதிரை

*குறிப்பு:-*

சங்கப்புலவர்களுள் கணக்காயனார் மகனார் நக்கீரனார், குமரனார், நல்லந்துவனார், மருதனிள நாகனார், இளந்திருமாறன், சீத்தலைச் சாத்தனார், பெருங்கொல்லனார், கண்ணகனார், கதங்கண்ணாகனார், சேந்தம்பூதனார் முதலியோர் அன்றைய மதுரையில் வாழ்ந்தோராவர்.

350) மதுரையில் ஆடைகள் விற்கும் கடைப்பகுதிக்குப் பெயர் என்ன?
அறுவை வீதி

351) மதுரை வீதிகளின் பெயர்:-

| | | |
|---|---|---|
| 1. கூலவீதி | - | தானியக்கடை |
| 2. பொன்வீதி | - | பொற்கடைகள் |
| 3. மன்னவர் வீதி | - | மன்னர்வாழும் பகுதி |
| 4. மறையவர் வீதி | - | அந்தணர் வீதி |

352) அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராகத் திகழ்ந்தவர் யார்?
மாணிக்கவாசகர்

353) கூன்பாண்டியன் காலத்தில் மதுரையில் மங்கையர்க்கரசி, குலச்சிறையார் உதவியுடன் சைவத்தைக் காத்தவர் யார்?
திருஞானசம்பந்தர்

354) திருமலை நாயக்கர் எதைத் தலை நகராகக் கொண்டு ஆண்டார்.?
மதுரையை

355) கோடை விடுதியான தமுக்கமும், குளிர்பூந்தடாகமாகிய பெரிய தெப்பக் குளமும், கலை நயத்தில் தாஜ்மகாலை யொத்த -------- அமைத்து மதுரையை அழகுபடுத்தினார்.
திருமலை நாக்கர் மகாலையும்

356) மதுரையைத் திருமலை நாயக்கர் ------ நகரமாக விளக்கமுறச் செய்தார்.
விழா மல்கு



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

357) -------------- அமைத்த சத்திரங்களும் சாலைகளும் மதுரைக்குப் பெருமை சேர்ப்பனவாக இன்றும் திகழ்கின்றன.

**இராணி மங்கம்மாள்**

358) பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம் தருமிக்கு இறைவன் ---------- பாடல் தந்ததை பற்றிக் கூறுகிறது?

**தண்டமிழ்ப்**

359) மதுரையைச் சுற்றியுள்ள மலைகளில் வாழ்ந்த சமண முனிவர்களால் ---------- இயற்றப் பெற்றது.

**நாலடியார்**

360) மீனாட்சியம்மையே சிறுமியாக வந்து முத்துமணி மாலையை யாருக்குப் பரிசளித்தது?

**குமரகுருபரருக்கு**

361) சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம் ---- என்னும் பெயருடன் இன்றும் அப்பகுதி மக்களிடம் வழங்கப்படுகிறத.

**கோவலன் பொட்டல்**

362) பழங்கால மதிலின் எஞ்சிய ஒரு சிறுபகுதி -------- வீதியில் மாநகராட்சித் தென்மண்டல அலுவலமாக இயங்கி வருகிறது.

**மேலவெளி**

363) கீழவாசல் மேலவாசல் தெற்குவாசல் வடக்குவாசல் என வழங்கப்படும் இடங்கள்---------- மதில் வாயில்கள் இருந்த இடங்காளக அறியப்படுகின்றன.

**கோட்டையின்**

364) கையிற் சிலம்புடன் உட்கார்ந்திருக்கும் உருவச்சிலை அமைந்த கோவில் --- ------ கோவிலாக இன்றும் மக்களால் வழிபடப்படுகிறது.

**செல்லத்தம்மன்**

365) மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் பழைமையானது எது?

**கிழக்குக் கோபுரம்**

366) மீனாட்சியம்மன் கோவிலின் உயரமான கோபுரம் எது?

**தெற்குக் கோபுரம்**

*குறிப்பு:-*

தெற்குக் கோபுரம் 160.9 அடி உயரமும், 1511 சுதை உருவங்களும் உடையது.

367) கி.பி இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரம் மதுரை ---------- எனக் குறிப்பிடுகிறது.

**மூதூர்**

368) மரம் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது எது?

**நாயக்கர் மகால்**

*குறிப்பு:-*

நாயக்கர் மகாலில் உள்ள ஒவ்வொரு தூணும் 82 அடி உயரமும் 19 சுற்றளவும் கொண்டது.

369) பாண்டிய நாடு எதற்குப் பெயர் பெற்றது.

**முத்து**

370) சோழநாடு எதற்குப் பெயர் பெற்றது?

**சோறு**

371) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை இயற்றியவர் யார்?

**குமரகுருபரர்**

372) நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றிவித்தவர் யார்?

**பாண்டித்துரையார்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## அறிவு நுட்பம் (துணைப் பாடம்) அறுவகைப் பெயர்ச்சொற்கள்

373) ஆடல், பாடல், வட்டம், அழகு ஆகியனவும் ---------- ஆகும்.

**பெயர்ச்சொற்கள்**

374) பெயர்ச்சொற்களை இலக்கண நூலார் எத்தனை வகைப்படுத்துவர்? அவை யாவை?

**ஆறு வகைப்படும்**

அவை:

1. பொருட் பெயர், ----------------
2. இடப் பெயர், ----------------
3. காலப் பெயர், ----------------
4. சினைப் பெயர், ----------------
5. குணப் பெயர், ----------------
6. தொழிற் பெயர், ----------------

375) பொருளைக் குறிக்கும் பெயர் --------- ஆகும்.

**பொருட் பெயர்**

376) பொருட் பெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பொருட்பெயர் இருவகைப்படும்**

அவை:-

உயிருள்ள பொருள், உயிரற்ற பொருள்

377) குமரன், மலர்க்கொடி, தென்னை, செம்பருத்தி, வெள்ளாடு, ஓணான் முதலியன எவ்வகைப் பொருள் ஆகும்.

**உயிருள்ள பொருள்கள்**

378) நாற்காலி, அடுப்பு, தட்டு, எண்ணெய், மண், நீர், காற்று முதலியன எவ்வகைப் பொருள் ஆகும்.

**உயிரற்ற பொருள்கள்**

379) வீடு, தெரு, பள்ளி, கோவில், மக்கள் வாழிடம், தோட்டம் என இடங்களைக் குறிப்பினவெல்லாம் ------- பெயர்கள் ஆகும்.

**இடப் பெயர்கள்**

380) நொடி, விநாடி, மணி, பொழுது, கிழமை, வாரம், திங்கள், ஆண்டு என எல்லாமே ------ ஆகும்.

**காலப் பெயர்கள்**

381) சினை என்பது ஒன்றின் ——— குறிப்பது ஆகும்.

**உறுப்பைக்**

382) மனித உறுப்புகள், விலங்கு உறுப்புகள், தாவரப் பகுதிகள், பொருள்களில் பகுதிகள் முழுமையான ஒன்றின் பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள் ---------- எனப்படும்.

**சினைப் பெயர்கள்**

383) குணப் பெயரைப் --------- எனவும் கூறுவர்.

**பண்புப் பெயர்**

384) படித்தல், கற்பித்தல் --------- எனப்படும்.

**தொழில் பெயர்கள்**

| பெயர் வகை | - | பெயர் |
|---|---|---|
| 1. பொருட் பெயர் | - | கண்ணன், நாற்காலி |
| 2. இடப் பெயர் | -- | வேலூர், நாமக்கல் |
| 3. காலப் பெயர் | -- | தைத்திங்கள், நண்பகல் |
| 4. சினைப்பெயர் | - | முகம், கை |
| 5. குணப் பெயர் | -- | வட்டம், அழகு |
| 6. தொழிற் பெயர் | - | ஆடல், பாடல் |

385) உரிய விடையைத் தேர்வு செய்க:-

1. மதுரை என்பது ---------- பெயர்.

அ) காலப் பெயர், ஆ) குணப் பெயர், இ) இடப் பெயர்

**விடை: இடப்பெயர்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

2. பூங்கொடி பூப் பறிக்கிறாள் . இத்தொடரிலுள்ள பூ என்பது --------- பெயர்.

அ) பொருட்பெயர், ஆ) சினைப்பெயர், இ) தொழிற்பெயர்

**விடை: சினைப்பெயர்**

3. சதுரம் இது --------- பெயர்

அ) பொருட்பெயர் ஆ) காலப்பெயர் இ) குணப்பெயர்

**விடை: குணப்பெயர்**

386) கோடிட்ட இடங்களில் ஏற்ற பெயர்ச் சொற்களை எழுதுக:-

1. ---------- பூசை நடக்கிறது.
2. ----------- அசைகிறது.
3. ---------- பள்ளிக்கு விடுமுறை.
4. ---------- உடைந்து விட்டது.
5. ---------- மூன்று கோணங்களை உடையது.
6. --------- வல்லவன் இராமன்.

**விடை: 1. கோவிலில், 2. கொடி, 3. நாளை, 4. பானை, 5. முக்கோணம், 6. வில்வித்தையில்.**

387) கவியரசு கண்ணதாசன் எங்கு எப்போது பிறந்தார்?

**சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927**

388) கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?

**முத்தையா**

389) காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கிநாதன், கமகப்பிரியா எனப் பல புனைப்பெயர்கள் யாருக்கு உண்டு?

**கண்ணதாசன்**

390) கவியரசு கண்ணதாசன் ---------- மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார்.

**ஐயாயிரத்திற்கும்**

391) கண்ணதாசன் மறைந்த ஆண்டு எது?

**1981**

392) நாம் செய்திகளையும் கருத்துகளையும் பிறரிடம் கூறும்பொழுது சுவைபடக் கூறுவதற்காக ஒரே பொருள்தரும் இருசொற்களைப் பயன்படுத்துவது ---------- எனப்படும்.

**நேர் இணைச் சொற்கள்**

(எ.கா)

1. காவேரி <u>கண்ணுங்கருத்துமாகப்</u> படிப்பாள்.
2. வளவனின் தந்தை <u>பேரும்புகழும்</u> மிக்கவர்.

393) எதிரான கருத்தைக் கூறும்பொழுது எதிர்ப்பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துதல் ---------- எனப்படும்.

**எதிர் இணைச் சொற்கள்**

(எ.கா)

1. கோபாலன் <u>உயர்வுதாழ்வின்றி</u> அனைவரிடமும் பழகும் பண்பாளர்.
2. மலர்க்கொடியின் தந்தை <u>அல்லும் பகலும்</u> அயராது உழைத்தவர்.

394) உரிய இணைச்சொற்களை எடுத்துக் கோடிட்ட இடங்களில் நிரப்புக: (இரவுபகல், ஏற்றத்தாழ்வு, கற்றோரும் மற்றோரும், அடித்துப்பிடித்து, பத்திபத்தியாக)

1. அண்ணல் அம்பேத்கர் சமுதாயத்தில் காணப்படும் ------------- களைக் களையப் பாடுபட்டார்.

**ஏற்றத்தாழ்வு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

2. கட்டுரை எழுதும் போது ------------ எழுத வேண்டும்.

**பத்திபத்தியாக**

52. ஆறுமுக நாவலரின் அச்சுக்கூடத்தில் எந்தெந்தத் தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார்?
**பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், திருக்குறள்.**

53. ஆறுமுக நாவலரின் அச்சுக் கூடத்தில் எந்தெந்தத் தமிழ் இலக்கண நூல்களைப் பதிப்பித்தார்?
**இலக்கண வினா-விடை, இலக்கணச் சுருக்கம், நன்னூல் விருத்தியுரை, நன்னூல் காண்டிகையுரை, இலக்கணக் கொத்து, இலக்கணச் சூறாவளி**

54. குறிப்பு
தமிழறிஞர் சி.வை.தாமோதரனார், ஆறுமுக நாவலரைப் பின்வருமாறு புகழ்ந்து உரைக்கின்றார்
"நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

சொல்லுதமி ழெங்கே கருதியெங்கே- எல்லவரும்
எத்துபுரா ணாகமங்கள் எங்கேபிர சங்கமெங்கும்
அத்தனறி வெங்கே அறை” எனப் புகழ்ந்தார்

55. புதுக்கவிதைக்கு வித்திட்டவர் யார்?
**பாரதியார்**

56. சமுதாயப்புரட்சிக்கு வித்திட்டவர் யார்?
**பாரதிதாசனார்**

57. பொதுவுடமைக்கு வித்திட்டவர் யார்?
**திருவி.கலியாணசுந்தரனார்**

58. தனித்தமிழுக்கு வித்திட்டவர் யார்?
**மறைமலையடிகள்**

59. பேச்சுக்கலைக்கு, சிறுகதைக்கு வித்திட்ட கவிஞர் யார்?
**அறிஞர் அண்ணாதுரை**
**புதுமைப்பித்தன்**

## ஜி.யு.போப்

60. ஜி.யு.போப் என்றழைக்கப்பட்டவர் யார்?
**ஜியார்ஜ் யுக்ளோ போப்**

61. ஜி.யு.போப் எந்த ஆண்டில் பிறந்தார்?
**கி.பி. 1820 ஆம் ஆண்டு**

62. ஜி.யு.போப் எந்த நாட்டில் பிறந்தார்?
**பிரான்சு நாட்டின் எட்வர்டு தீவில் பிறந்தார்**

63. ஜி. யு.போப்பின் பெற்றோர் யார்?
**ஜான் போப்புக்கும், கெதரின் யுளாபுக்கும் மகனாகப் பிறந்தார்.**

64. ஜான் போப்பும், கெதரின் யுளாப்பும் தன் மகனுக்கு ________ஐ ஊட்டி வளர்த்தனர்.
**கல்வி, சமயம், நல்லொழுக்கம்**

65. ஜி.யு.போப்பின் தமையனார் பெயர் என்ன?
**ஹென்றி**

66. ஜி.யு.போப்பின் தமையனார் “ஹென்றி” என்பவர் தமிழகத்தில் ________ ஐப் பரப்பும் சமய குருவாகப் பணியாற்றி வந்தார்.
**கிறித்துவமதத்தை**

67. ஜி.யு.போப் அவருடைய எத்தனையாவது வயதில் தமிழகத்தில் சமயப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டார்?
**19-ஆவது வயதில்**

68. ஜி.யு.போப் பாய்மரக் கப்பலில் சென்னை வந்துசேர எத்தனை திங்களாயின?
**எட்டுத்திங்களாயின**

69. தமிழ்மொழியால் ஈர்க்கப்பட்டுத் தமிழாய் மலர்ந்து, மணம் பரப்பி, என்றும் தமிழுலகில் அழியாப்புகழ் பெற்றவர் யார்?
**சான்றோர் தவத்திரு ஜி.யு.போப்**

70. ஜி.யு.போப் ________ பகுதியில் சமயப் பணி ஆற்றினார்.
**சென்னைச் சாந்தோம் பகுதியில்**

71. ஜி.யு.போப் சமயப்பணி ஆற்றியப் பகுதிகளில் எங்குப் பள்ளிகளை நிறுவினார்?
**திருநெல்வேலி மாவட்டம் (சாயர்புரத்தில்)**

72. சமயக்கல்லூரியில் தமிழ் இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்கள் முதலிய வற்றையும் ----------, ----------, முதலிய மொழிகளையும் கற்றுத்தர ஜி.யு.போப் ஏற்பாடு செய்தார்.
**கிரேக்கம், இலத்தீன், எபிரேயம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

73. ஜி.யு.போப் --------------, ஆகியவற்றைக் கற்பிக்கும் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றினார்.
**கணிதம், அறிவாய்வு (தருக்கம்), மெய்யறிவு (தத்துவம்)**

74. திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்தில் _______ முதல் _______ ஆம் ஆண்டு வரை கல்விப் பணியும் சமயப் பணியும் ஆற்றினார்.
**1842 முதல் 1849**

75. 1849 ஆம் ஆண்டில் _______ நாட்டிற்குச் சென்றார்.
**இங்கிலாந்து**

76. ஜி.யு.போப் எத்தனையாவது வயதில் எந்த ஆண்டில் திருமணம் செய்து கொண்டார்?
**வயது 30, 1850 ஆம் ஆண்டில்**

77. ஜி.யு.போப் தஞ்சையில் பணியாற்றிய எட்டாண்டுக் காலத்தில் _______ முதலான சங்க நூல்களையும் _______ முதலான இலக்கணங்களையும் பயின்றார்.
**புறநானூறு, நன்னூல்**

78. ஜி.யு.போப் எந்த ஏடுகளில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார்.
**இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு**

79. ஜி.யு.போப் கி.பி.1850- ஆம் ஆண்டிற்குப் பிறகு எங்குச் சமயப் பணியாற்றத் தொடங்கினார்?
**தஞ்சாவூர்**

80. ஜி.யு.போப் அவர்கள் ஆராய்ச்சி செய்த இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு போன்ற தமிழ்மொழி பற்றிய ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகளில் -------, -------, இடம்பெற்றிருந்தன
**புறநானூற்றுப் பாடல்களும், புறப்பொருள் வெண்பாமாலைத் திணை விளக்கங்களும், தமிழ்ப் புலவர் வரலாறும்.**

81. ஜி.யு.போப் உயர்ந்த பண்பாட்டுக்குரிய பொறுமை, சினமின்மை நட்பு முதலானவற்றை விளக்கும் அறுநூறு செய்யுள்களை நீதிநூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் _______ என்னும் நூலாகத் தொகுத்தார்.
**தமிழ்ச்செய்யுட் கலம்பகம்**

82. மேலைநாட்டார் தமிழை எளிதில் கற்றுக் கொள்ளும் வகையில் _______ ஒன்றையும், போப் வெளியிட்டார்.
**தமிழ்- ஆங்கில அகராதி**
**ஆங்கிலம்- தமிழ் அகராதி**

83. உதக மண்டலத்திற்குச் சென்ற ஜி.யு.போப் எந்த ஆண்டில் பள்ளி ஒன்றைத் தொடங்கி ஆசிரியராகவும் பணியாற்றினார்?
**1858 ஆம் ஆண்டில்**

84. தாயகத்திற்குச் சென்ற போப் எத்தனை வருடம் இங்கிலாந்துப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
**23 வருடம் (1885 முதல் 1908 வரை)**

85. இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில், _______, _______ கற்பிக்கும் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
**தமிழ், தெலுங்கு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

86. ஜி.யு.போப் திருக்குறளை எத்தனை ஆண்டு படித்துச் சுவைத்தார்?
**நாற்பதாண்டுகள்**

87. திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த போப், அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எந்த ஆண்டில் வெளியிட்டார்?
**1886 ஆம் ஆண்டு**

88. ஜி.யு.போப் தமது எண்பத்தாறாம் அகவையில் 1900-ஆம் ஆண்டு _______ ஆங்கில மொழிபெயர்ப்பினை வெளியிட்டார்?
**திருவாசகத்தின்**

89. ஜி.யு.போப் அவரின் இறுதிக்காலத்தில் _______ முதலிய நூல்களையும் பதிப்பித்தார்?
**புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன்.**

90. தமிழின் பெருமையைத் தரணி முழுவதும் பரப்பிய போப் அவர்கள் _______ஆம் ஆண்டு_______ஆம் நாள் தம் இன்னுயிரை நீத்தார்.
**1908 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11**

91. ஆங்கில மொழியினை அன்னை மொழியாகக் கொண்ட போப் அவர்கள் _______ என்று தம்மை அறிவித்துக் கொண்டார்?
**தமிழ் மாணவன்**

92. ஜி.யுபோப் அவர் தம் கல்லறையில் என்ன எழுத வேண்டுமென்று தமது இறுதிமுறியில் எழுதி வைத்தார்?
**“இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்”**

## குற்றியலுகரம்

93. குற்றியலுகரம் பிரித்து எழுதுக?
**குறுமை + இயல் + உகரம்**

94. “குறுமை” என்றால் _______என்று பொருள்
**குறுகிய**

95. “இயல்” என்றால் _______ என்று பொருள்.
**ஓசை**

96. “உகரம்” என்றால் _______ என்னும் எழுத்து ஆகும்
**உ**

97. குறில் எழுத்துக்கு எத்தனை மாத்திரை கால அளவில் ஒலிக்க வேண்டும்?
**ஒரு மாத்திரை**

98. “நெடில்” எழுத்துக்கு எத்தனை மாத்திரை கால அளவில் ஒலிக்க வேண்டும்?
**இரண்டு மாத்திரை**

99. “மெய்” எழுத்துகள் எத்தனை மாத்திரை கால அளவில் ஒலிக்க வேண்டும்?
**அரை மாத்திரை**

100. உகரம் குறிலானால் எத்தனை மாத்திரைக் கால அளவே ஒலிக்க வேண்டும்?
**ஒரு மாத்திரை**

101. கு,சு,டு,து,பு,று ஆகிய ஆறு வல்லின மெய் எழுத்துகளைச் சேர்த்து வரும் போது உகரம் எத்தனை மாத்திரை யாகக் குறைந்து ஒலிக்கும்?
**அரை மாத்திரை**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

102. கு,சு,டு,து,பு,று என்பன வல்லின மெய்களின் மேல் _______ ஊர்ந்து வரும் எழுத்துகள் ஆகும்?
உகரம்

103. குற்றியலுகரம் எத்தனை மாத்திரை அளவில் ஒலிக்கும்?
அரை மாத்திரை

104. கு,சு,டு,து,பு,று என்னும் ஆறு வல்லின எழுத்துகள் தனிநெடிலைச் சார்ந்து வரும்போது, பல எழுத்துக்களைச் சார்ந்து சொல்லின் இறுதியில் வரும் போது அவை எத்தனை மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்?
ஒரு மாத்திரை அளவில்

105. எ∴கு, க∴சு, அ∴து இந்தச் சொற்களில் இருந்து கு,சு,து என்னும் வல்லின மெய்கள் மேல் ஊர்ந்த உகரமானது ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வந்துள்ளதால் இவை _______ ஆகும்.
ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

106. சுக்கு, கச்சு, பட்டு இச்சொற்களில் கு,சு.டு ஆகிய எழுத்துகளுக்கு முன், வல்லின மெய்யெழுத்துகள் வந்தால் அவை _______ ஆகும்.
வல்லினத் தொடர்க் குற்றியலுகரம்

107. சங்கு, மஞ்சு, நண்டு, சந்து இச்சொற்கள் _______ குற்றியலுகரம் ஆகும்.
மென்றொடர்க் குற்றியலுகரம்

108. கொய்து, சார்பு, மூழ்கு இச்சொற்கள் _______ எவ்வகைக் குற்றியலுகரம் ஆகும்.
**இடைத்தொடர்க் குற்றியலுகரம்**

109. உயிர்நெடில், உயிர்மெய் _______ நெட்டெழுத்து களை அடுத்து வரும் உகரமேறிய வல்லின எழுத்துகள் எவ்வகைக் குற்றியலுகரம் எனப்படும்?
**நெடில் தொடர்க் குற்றியலுகரம்**

110. கு,சு,டு,து,பு,று ஆகிய எழுத்துகளுக்கு முன் இரண்டு முதலாகப் பல எழுத்துகளைப் பெற்று, ஈற்றயல் எழுத்து (அரசு, பாலாறு) உயிர்மெய்க் குறிலாகவோ, நெடிலாகவோ இருந்தால் அவை _______எனப்படும்
**உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

111. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்?
**ஆறு**

112. நெடில்தொடர்க் குற்றியலுகரம் எத்தனை எழுத்துக்களைப் பெற்று வரும்?
**இரண்டு**

113. நெடில் தொடர்க் குற்றியலுகரத்தைத் தவிர ஏனைய ஐவகைக் குற்றியலுகரச் சொற்கள் எத்தனை எழுத்துக்களைப் பெற்று வரும்?
**இரண்டுக்கு மேற்பட்ட**

## குற்றியலிகரம்

114. குற்றியலிகரம் பிரித்து எழுதுக?
**குறுமை + இயல் + இகரம்**

115. இகரம் என்றால் _______ என்னும் எழுத்தாகும். **இ**

116. குற்றியலிகரத்தில் வரும் இகரம், தன் மாத்திரையிலிருந்து _______ மாத்திரை அளவு குறைந்து ஒலிக்கும்.
**ஒரு மாத்திரையிலிருந்து அரை மாத்திரை அளவு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

117. நிலைமொழி குற்றியலுகரமாக இருந்து, வருமொழி யகரம் வரின், நிலைமொழி உகரம், இகரமாகத் திரிந்து தன் மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பது _______ எனப்படும்.

**குற்றியலிகரம்**

118. "கேண்மியா, சென்மியா" ஆகியவற்றில் வரும் "மியா" என்னும் அசைச் சொல்லில் உள்ள _______ தன் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும்.

**இகரம்**

119. இகரம் தன் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் நன்னூலை எழுதுக?

**யகரம் வரக் குறள் உத்திரி இகரமும் அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய. - நன்னூல் 93**

## முற்றியலுகரம்

120. தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் _______ எனப்படும்.

**முற்றியலுகரம்**

121. தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் உகரம் _______ எனப்படும்?

**வல்லின உகரம்**

122. காணு, உண்ணு, உருமு இவற்றின் ஈற்றிலுள்ள மெல்லின (ணு, மு) உகரங்கள் யாவை?

**முற்றியலுகரங்கள்**

123. எழு, தள்ளு, கதவு இவற்றின் ஈற்றிலுள்ள உகரங்கள் (ழு,ளு,வு) முற்றியலுகரங்கள் ஆகும்.

**இடையின உகரங்கள்**

*குறிப்பு*

எழு, தள்ளு, கதவு இவற்றின் ஈற்றிலுள்ள இடையின உகரங்கள் (ழு,ளு,வு) முற்றியலுகரங்கள் ஆகும். இவ்வாறு தனிக்குறிலை அடுத்துச் சொல்லின் இறுதியில் வரும் வல்லின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரமும், பொதுவாகச் சொற்களின் இறுதியில் மெல்லின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரமும்,இடையின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரமும் ஆகிய மூன்றும் முற்றியலுகரம் எனப்படும்.

124. "குறிஞ்சிக்கலி கபிலரால் இயற்றப் பட்டது" இவ் வாக்கியம் எவ்வினையைக் குறிக்கிறது?

**செயப்பாட்டு வினை**

125. "முயற்சி திருவினையாக்கும் என்பது ஆன்றோர் மொழி" இவ்வாக்கியத்தில் எத்தொடர் வந்துள்ளது?

**செய்தித் தொடர்**

126. "என்னே, அருவியின் அழகு!" இவ் வாக்கியத்தில் எத்தொடர் வந்துள்ளது?

**உணர்ச்சித் தொடர்**

127. பாடம் படித்தாயா? இவ்வாக்கியத்தில் எத்தொடர் வந்துள்ளது?

**வினாத்தொடர்**

128. "கண்ணன் பாடம் படித்தான்" இவ் வாக்கியம் எத்தொடரைக் குறிக்கிறது?

**உடன்பாட்டுத்தொடர் (செய்தி)**

129. "இராமன் பாடம் படித்திலன்" இவ் வாக்கியம் எத்தொடரைக் குறிக்கிறது?

**எதிர்மறைத்தொடர் (செய்தி)**



join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

130. “நினைவாற்றலை வளர்த்துக்கொள்” இவ்வாக்கியத்தில் எத்தொடர் வந்துள்ளது?

**கட்டளைத்தொடர்**



## நான் விரும்பும் கவிஞர்

131. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எந்த ஆண்டு பிறந்தார்?

**29.04.1891 ஆம் ஆண்டு**

132. பாரதிதாசனின் தந்தை பெயர் என்ன?

**கனகசபை**

133. பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?

**சுப்புரத்தினம்**

134. யார் மேல் கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார்?

**பாரதியார்**

135. பாரதிதாசன் எழுதிய பிறநூல்கள் எவை?

**இசையமுது, குடும்ப விளக்கு, மணிமேகலைவெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம், படித்த பெண்கள், இளைஞர் இலக்கியம், குறிஞ்சித் திட்டு போன்றவை.**

## இயல் 2
## செய்யுள் பகுதி
## இனியவை நாற்பது

136. “குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே” எனத் தொடங்கும் இனியவை நாற்பது பாடலை எழுதியவர் யார்?

**பூதஞ்சேந்தனார்**

137. “பூதஞ்சேந்தனார்” அவர்கள் எவ்வூரில் பிறந்தார்?

**மதுரை**

138. பூதஞ்சேந்தனார் பிறந்த காலம் எது?

**கி.பி. இரண்டாம் நூற்றாண்டு**

139. இனியவை நாற்பது _____ நூல்களுள் ஒன்று

**பதினெண்கீழ்க்கணக்கு**

140. இனியவை நாற்பது பாடல்கள் எத்தனை பாடல்களில் தொகுத்துரைத்துள்ளது?

**நாற்பது**

141. _____ கருத்துகளை நாற்பது பாடல்களில் தொகுத்துரைப்பதால் “இனியவை நாற்பது” எனப் பெயர் பெற்றது.

**நன்மை தரும் இனிய**

142. இனியவை நாற்பது நூலின் ஒவ்வொரு பாடலும் எத்தனை நற்கருத்துகளை இனிமையாகக் கூறியுள்ளது?

**மூன்று அல்லது நான்கு**

143. _____ஆம் பாடல்கள் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

12, 20

144. குழந்தை _____இன்றி வாழ்தல் இனியது என பூதஞ்சேந்தனார் கூறியுள்ளார்.

**நோய்**

145. சொற்பொருள்

1. குழவி - குழந்தை
2. பிணி - நோய்
3. மயரி - மயக்கம்
4. கழறும் - பேசும்
5. சலவர் - வஞ்சகர்
6. மன்னுயிர் - நிலை பெற்ற உயிர்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## தமிழ்ப்பசி

146. பொன்னின் குவையெனக்கு வேண்டிய தில்லை- என்ற பாடலை எழுதியவர் யார்?
**க.சச்சிதானந்தன்**
147. "தமிழ்ப்பசி" எனும் பாடலின் ஆசிரியர் யார்?
**க.சச்சிதானந்தன்**
148. க.சச்சிதானந்தரின் பணிகள் யாவை?
**ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.**
149. க. சச்சிதானந்தன் புலமை யாது?
**தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார்.**
150. க.சச்சிதானந்தன் படைப்புகள் யாவை?
**ஆனந்தத்தேன் (கவிதைத்தொகுதி) 1954); அன்னபூரணி (புதினம்); யாழ்ப்பாணக்காவியம்.**
151. "என்றும் இளமை குறையாத தமிழும்; தமிழுக்கு உயிராக விளங்கும் கம்பன் கவிதைகளும் வேண்டும் எனக் கூறியவர் யார்?
**க.சச்சிதானந்தன்**
152. சொற்பொருள்
   1. குவை - **குவியல்**
   2. மாரன் - **மன்மதன்**
153. க.சச்சிதானந்தரின் சிறப்பு:
**மகாவித்துவான் நவநீத கிருட்டின பாரதியாரின் மாணவர், இவர்தம் பாடல்களில் கம்பனின் மிடுக்கையும் பாரதியின் சினப்போக்கையும் ஒருமித்துக் காணலாம்.**

## அகரமுதலி வரலாறு

154. அகராதி என்னும் சொல் எந்த இருச்சொற்களின் சேர்க்கை ஆகும்?
**அகரம், ஆதி**
155. ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற் களையும் அகரவரிசையில் அமையும் படி ஒரு சேரத் தொகுத்து விளக்கும் நூலை ______ என்பர்.
**அகராதி**
156. அகராதித் தற்போதைய வழக்கில் என்னவென்று அழைக்கிறார்கள்?
**அகரமுதலி**
157. தமிழ் அகரமுதலி வரலாற்றில், செம்பாதி இடத்தைப் பெறும் எந்நூல்கள் நிகண்டுகள் ஆகும்?
**சொற்பொருள் துறை நூல்கள்**
158. "நிகண்டுகளில்" பழைமையானது_____
**சேந்தன் திவாகரம்**
159. "சேந்தன் திவாகரம்" - நூலின் ஆசிரியர் யார்?
**திவாகரர்**
160. நிகண்டுகளைத் தொடர்ந்து எத்தனை நிகண்டுகள் தோன்றியுள்ளன?
**இருபத்தைந்து நிகண்டுகள்**
161. "சூடாமணி நிகண்டு" என்ற நூலின் ஆசிரியர் யார்?
**மண்டல புருடர்**
162. இருபத்தைந்து நிகண்டுகளில் சிறப்புமிக்க நிகண்டு எது?
**மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு**
163. திருமூலரின் திருமந்திரத்தில் எச்சொல் முதன் முதலாக இடம் பெற்றது?
**அகராதி**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

164. அகராதி என்னும் சொல் நிகண்டுகளுள் ஒன்றான______ இல் அடைமொழியாக அமைந்துள்ளது?

**அகராதி நிகண்டுச் சொல்**

165. அகர முதலிகள் தோன்றுவதற்கு ஒரு திருப்பு முனையாக அமைந்த நூல் எது?

**அகராதி நிகண்டு**

166. அகரமுதலி நூலில் சொற்களின் எந்த எழுத்துகள் மட்டுமே அகரவரிசையில் வரும்?

**முதலெழுத்துகள்**

167. வீரமாமுனிவர் தொகுத்த______தமிழில் தோன்றிய______ஆகும்.

**சதுரகராதிய, முதல் அகரமுதலி**

168. "சதுர்" என்பதற்குப் பொருள் என்ன?

**நான்கு**

169. "சதுர்" என்னும் நூலின் எத்தனை வகையில் தனித்தனியாகப் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது?

**பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு**

170. போர்ச்சுகீசிய- இலத்தீன் தமிழ் அகராதியை உருவாக்கியவர் யார்?

**வீரமாமுனிவர்**

171. தமிழ்-இலத்தீன் அகராதி, இலத்தீன்-தமிழ் அகராதி, தமிழ்-பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு-தமிழ் அகராதி, போர்ச்சுகீசிய- இலத்தீன் தமிழ் அகராதி ஆகிய அகர முதலிகளை உருவாக்கியவர் யார்?

**வீரமாமுனிவர்**

172. தமிழ்- தமிழ் அகராதி ஒன்றை வெளியிட்டவர் யார்?

**லெவி ஸ்பால்டிஸ்**

173. "தமிழ்ச் சொல்லகராதி" என்ற நூல் யாரால் வெளியிடப்பட்டது?

**யாழ்ப்பாணம் கதிரைவேலனார்.**

173. தமிழ்ச் சொல்லகராதிக்கு மற்றொரு பெயர் என்ன?

**சங்க அகராதி**

174. தமிழ்ப் பேரகராதி என்னும் ஒன்றை வெளியிட்டவர் யார்?

**குப்புசாமி**

175. சங்க அகராதியில் சொல்லின் மூலம் எந்த மரபைப் பின்பற்றப்பட்டுள்ளது?

**தருதல், மேற்கோள் அமைத்தல்**

176. படங்களுடன் கூடிய ஓர் அகர முதலியை வெளியிட்டவர் யார்?

**இராமநாதன்**

177. அகரமுதலி இருபதாம் நூற்றாண்டுத் ______ எனும் பெயருடன் வெளிவந்தது?

**தமிழ் அகராதி**

178. தமிழ் ஆங்கிலப் பேரகராதியைத் தொகுத்தவர் யார்?

**வின்சுலோ**

179. பவானந்தத்தின் தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி எந்த ஆண்டில் வெளிவந்தன?

**1925 ஆம் ஆண்டு**

180. 1937- ஆம் ஆண்டில் ______ எனும் அகராதி வெளிவந்தன?

**மதுரைத் தமிழ்ப் பேரகராதி**

181. தமிழ்- தமிழ் அகரமுதலியை தொகுத்தவர் யார்?

**மு.சண்முகம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

182. மு.சண்முகம் என்பவரால் தொகுக்கப் பட்ட தமிழ்- தமிழ் அகரமுதலி எந்த ஆண்டில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிட்டது?
**1985 ஆம் ஆண்டு**

183. இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த மிகப்பெரிய அகரமுதலி யாது?
**சென்னைப்பல்கலைக்கழக அகராதி**

184. சென்னைப்பல்கலைக்கழக அகராதி என்னும் பெயரில் ______ வெளியிடப்பட்டுள்ளன.
**தமிழ் லெக்சிகன்**

185. "தமிழ் லெக்சிகன்" என்னும் இவ்வகர முதலி எத்தனை தொகுதிகளாக வெளியிடப்பட்டன?
**ஆறு தொகுதி**

186. எந்த ஆண்டு தேவநேயப்பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலியின் முதல் தொகுதி வெளி வந்தது?
**1985 ஆம் ஆண்டு**

187. எந்த ஆண்டு தேவநேயப்பாவாணரின் செந்தமிழ்ச் சொற்ப்பியல் பேரகர முதலியின் இரண்டாம் தொகுதி வெளி வந்தது?
**1993 ஆம் ஆண்டு**

188. முழுமையாகக் கணினி உதவியுடன் உருவாக்கப்பட்டு வெளிவந்த முதல் தமிழ் அகரமுதலி எது?
**கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி**

189. எச்சிந்தனையின் விளைவாகக் கலைக் களஞ்சியம் தோன்றியது?
**இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள பெயர்கள், கதைகள் வரலாறுகள், பழக்க வழக்கங்கள்**

190. தமிழ்க் கலைக்களஞ்சியங்களின் முன்னோடி எது?
**அபிதான கோசம்**

191. எச்செய்திகளைக் கொண்டு இலக்கியக் களஞ்சியமாகத் திகழ்கின்றது?
**இலக்கியப்புராண இதிகாசச் செய்தி**

192. இலக்கியப்புராண இதிகாசச் செய்திகள் எந்த ஆண்டில் வெளியானது?
**1902 ஆம் ஆண்டு**

193. "அபிதான சிந்தாமணி" நூலைத் தொகுத்து வெளியிட்டவர் யார்?
**சிங்கார வேலனார்**

194. "அபிதான சிந்தாமணி" நூல் எந்த ஆண்டில் வெளியிடப்பட்டது?
**1934 ஆம் ஆண்டு**

195. தமிழ் வளர்ச்சிக் கழகம் முறையான ஐத் தொகுத்து வெளியிட்டுள்ளது?
**முதல் கலைக்களஞ்சியத்தை**

196. முதல் கலைக்களஞ்சியத்தை எத்தனை தொகுதிகளாக வெளியிட்டனர்?
**பத்துத் தொகுதி**

197. தமிழ் வளர்ச்சிக் கழகம் எத்தனை வகையான கலைக்களஞ்சியங்களை வெளியிட்டுள்ளது?
**மூன்று (1.குழந்தைகள் கலைக் களஞ்சியம், 2. நாடகக் கலைக் களஞ்சியம், 3. இசுலாமிய கலைக் களஞ்சியம்**

198. எந்த நிறுவனத்தின் முயற்சியால் பொதுஅறிவு, உளவியல், புவியியல், புள்ளியியல், வரலாறு, வானவியல், துறைகளுக்கும் கலைச்சொல் அகர முதலிகள் தொகுக்கப்பட்டன? எந்த ஆண்டில் தொகுக்கப்பட்டன?
**கலைக்கதிர் (1960 ஆம் ஆண்டு)**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

199. அறிவியல் சார்ந்த துறைவாரியான கலைச்சொல் அகரமுதலியை யார் தொகுத்து வெளியிட்டனர்?
**மணவை முஸ்தபா**

200. அறிவியல் கலைச்சொல் களஞ்சியம் எந்த ஆண்டில் வெளியிடப்பட்டது?
**1991 ஆம் ஆண்டு**

201. அறிவியல் கலைச்சொல் களஞ்சியத்தை தமிழ்க் கலைச் சொல்லுடன் விளக்க ______ தரப்பட்டுள்ளன.
**சொற்பொருள்கள்**

202. இன்றைய மக்களும் பண்டைய இலக்கிய இலக்கணங்களின் சொல்வளம் பொருளாழம் போன்றவற்றைத் தெள்ளி தின் அறிந்து சுவைத்து மகிழத் துணை செய்வது எது?
**அகரமுதலி**

203. காலந்தோறும் ஏற்படும் சொற்பொருள் மாற்றங்களை அகரமுதலிகள் பதிவு செய்வதன் மூலம் உதவுகின்றன?
**சீர்மையான மொழி வளர்ச்சி**

204. குறிப்பு

அகர முதலி ஒன்றை
நாளும் படித்து வருவாய்
நிகரி லாத சொற்கள்
நினைவில் நன்கு பெறுவாய்
\- பாரதிதாசன்

## இலக்கிய வகைச் சொற்கள்

205. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல் இவை எந்த வகைக்குள் அடங்கும்?
**இலக்கண வகை**

206. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்?
**நான்கு**

207. நான்கு இலக்கிய வகைச் சொற்களை எழுதுக?
**இயற்சொல், திரிச்சொல், திசைச் சொல், வடசொல்**

208. எல்லாருக்கும் பொருள் விளங்கும் வகையில் இயல்பாய் அமைந்த தமிழ்ச்சொல் ______ எனப்படும்?
**இயற்சொல்**

209. இயற்சொல் எத்தனை வகைப்படும்?
**இரண்டு**

210. இரு வகையான இயற்சொற்கள் என்னென்ன?
**1. பெயர் இயற்சொற்கள்**
**2. வினை இயற்சொற்கள்**

211. கற்றவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியனவாய் இருக்கும் சொல் எது?
**திரிசொல்**

212. திரிசொல் எத்தனை வகைப்படும்?
**இரண்டு**

213. இருவகையான திரிசொல்கள் என்னென்ன?
**பெயர்த் திரிசொல், வினைத் திரிசொல்**

214. தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள பிறபகுதி களிலிருந்து தமிழில் வழங்கும் சொற்கள் ______ ஆகும்.
**திசைச்சொற்கள்**

215. திசைச்சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள்

| | திசைச்சொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| 1. | பண்டிகை | - | திருவிழா |
| 2. | வெள்ளம் | - | நீர்ப்பெருக்கு |
| 3. | வியாபாரம் | - | வணிகம் |
| 4. | ஜமக்காளம் | - | விரிப்பு |
| 5. | வேடிக்கை | - | காட்சி |



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

216. வடமொழிச் சொற்கள் திரிந்தும் திரியாமலும் தமிழ் மொழியில் வந்து வழங்குமானால் அவை ______ எனப்படும்.

**வடசொல்**

217. வடசொற்களுக்குத் தமிழ்ச்சொற்கள்:

| | **வடசொல்** | | **தமிழ்ச்சொல்** |
|---|---|---|---|
| 1. | கமலம் | - | தாமரை |
| 2. | விஷம்(விடம்) | - | நஞ்சு |
| 3. | புஷ்பம் (புட்பம்) | - | மலர் |

218. பொருத்துக

1. நிலம், நாய் - வினைத்திரிசொல்
2. வந்தது, படித்தான் - பெயர் இயற்சொல்
3. களிறு, புரவி - வினை இயற்சொல்
4. வினவினான், நோக்கினான் - பெயர்த்திரிசொல்

விடை:

1. **பெயர் இயற்சொல்**
2. **வினைத் திரிசொல்**
3. **பெயர்த்திரிசொல்**
4. **வினை இயற்சொல்**

219. “அமர்” என்பதன் பொருள்

**போர்**

220. தொண்ணூற்றாறு பிரிக்கும் முறை

**தொண்ணூறு ஆறு**

221. காற்று, நிலவு, ஞாயிறு, பலகை இவை எளிதில் பொருள் விளங்கும் சொற்கள் என்பதால் இவை ______ ஆகும்.

**பெயர்ச் சொற்கள்**

222. நேர்கூற்று, அயர்கூற்றுத் தொடர்கள் வேல்விழி நன்றாகப் படித்துத் தேர்வில் முதன்மை பெறு என்று ஆசிரியர் அறிவுரை கூறினார். (நேர்கூற்று)

நன்றாகப் படித்துத் தேர்வில் முதன்மை பெறுமாறு ஆசிரியர் வேல் விழிக்குக் கூறினார். (அயற்கூற்று)

223. நேர்கூற்றை அயற்கூற்றாக மாற்றும் போது மாறும் சொற்கள்

| **நேர்கூற்று** | | **அயற்கூற்று** |
|---|---|---|
| இன்று | - | அன்று |
| நேற்று | - | முன்னாள் |
| இது | - | அது |
| இதனால் | - | அதனால் |
| நாம், நாங்கள் | - | தாம், தாங்கள் |
| நீங்கள் | - | அவர்கள் |
| நாளை | - | மறுநாள் |
| இப்பொழுது | - | அப்பொழுது |
| இவை | - | அவை |
| நான் | - | தான் |
| நீ | - | அவன், அவள் |

## இயல் மூன்று
## செய்யுள் பகுதி
## திருவள்ளுவமாலை

224. திருவள்ளுவமாலை பாடலை இயற்றியவர் யார்?

**கபிலர்**

225. கபிலர் பிறந்த காலம் எது?

**கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவரென்றும், சங்கக்காலத்திற்குப் பின் வாழ்ந்தவரென்றும் குறிப்பர்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

226. திருக்குறளின் சிறப்பினை உணர்த்த எந்நூல் எழுந்தது?

**திருவள்ளுவமாலை என்னும் தனிநூல்**

227. திருவள்ளுவமாலை நூலில் எத்தனை பாடல்கள் உள்ளன?

**ஐம்பத்தைந்து**

228. திருவள்ளுவமாலை பாடலை எத்தனை புலவர்கள் பாடியுள்ளார்கள்?

**ஐம்பத்து மூன்று**

229. திருவள்ளுவமாலை ______ அணுகு முறையைச் சார்ந்தது?

**அறிவியல்**

230. குறிப்பு

உவமை

சிறுபுல்லின் தலையில் தினையளவினும் சிறுபனிநீர் நெடிதுயர்ந்த பனை மரத்தின் உருவத்தைத் தன்னுள் தெளிவாகக் காட்டும்.

உவமிக்கப்படும் பொருள்

வள்ளுவரின் குறள்வெண்பாக்கள் அரும்பெரும் கருத்துகளைத் தம்மகத்தே அடக்கிக் காட்டும்

231. ஒளியைத் கோட்டம் அடையச் செய்வதனால் தொலைவிலுள்ள பொருளின் உருவத்தை அண்மையில் தோன்றும் படி செய்யலாம் என்று யார் கூறினார்?

**கலீலியோ கலிலி**

232. சொற்பொருள்

1. **வள்ளை - நெல்குத்தும் போது பெண்களால் பாடப்படும் ஒருவகைப் பாட்டு**

2. **அளகு - கோழி**

## நளவெண்பா

233. நளவெண்பாவின் ஆசிரியர் யார்

**புகழேந்திப்புலவர்**

234. புகழேந்திப்புலவர் பிறந்த ஊர் எது?

**தொண்டைநாட்டின் பொன்விளைந்த களத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெருங்களத்தூர்)**

235. புகழேந்திப்புலவரின் சிறப்பு யாது?

**வரகுண பாண்டியனின் அவைப்புலவர்**

236. புகழேந்திப்புலவரை ஆதரித்த வள்ளல் யார்?

**சந்திரன் சுவர்க்கி**

237. புகழேந்திப்புலவரின் காலம் என்ன?

**கி.பி. 12 ஆம் நூற்றாண்டு**

238. புகழேந்திப்புலவர் காலத்தில் வாழ்ந்த இரு புலவர்கள் யார்?

**கம்பர், ஒட்டக்கூத்தர்**

239. வெண்பா யாப்பில் காப்பியப் பொருளைத் தொடர்நிலைச் செய்யுள்களாய்ப் பாடிய சிறப்பினால் இவர் எனப் போற்றப்படுகிறார்?

**வெண்பாவிற் புகழேந்தி**

240. நளவெண்பா என்பது ______ கூறும் நூலென விரிந்து பொருள் தரும்.

**நளனது வரலாற்றை வெண்பாக்களால்**

241. “நளவெண்பா” எத்தனை காண்டங்களைக் கொண்டது?

**மூன்று**

242. நளவெண்பாவில் காண்டங்களைக் கூறுக?

**சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

243. நளவெண்பாவின் எத்தனை வெண்பாக்களை கொண்டுள்ளது?
**நானூற்று முப்பத்தொரு வெண்பாக்கள்**

244. நிடதநாட்டு மன்னன் நளன், விதர்ப்ப நாட்டு மன்னன் மகள் தமயந்தி ஆகிய இருவரும் எந்தப் பறவைகள் உதவியின் ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்து அன்பு கொண்டனர்?
**அன்னப்பறவை**

245. <u>சொற்பொருள்</u>
1. ஆழி - கடல்
2. வடி அம்பு - வடிக்கப்பட்ட அம்பு
3. விசும்பு - வானம்
4. சொற்றான் - வென்றான்
5. அரவு - பாம்பு
6. பிள்ளைக்குருகு - நாரைக்குஞ்சு
7. வள்ளை - ஒருவகை நீர்க்கொடி
8. கடா - எருமை
9. வெளவி - கவ்வி
10. சங்கின் பிள்ளை - சங்குக்குஞ்சுகள்
11. கொடி - பவளக்கொடி
12. கோடு - கொம்பு
13. கழி - உப்பங்கழி
14. திரை - அலை
15. மேதி - எருமை
16. கள் - தேன்
17. புள் - அன்னம்
18. சேடி - தோழி
19. ஈரிருவர் - நால்வர்
20. ஊசலாடுற்றாள் - மனம் தடுமாறினாள்
21. செம்மை சேர் - புகழ்மிகு
22. கடிமாலை - மணமாலை
23. சூழ்விதி - நல்வினை
24. தார் - மாலை
25. காசினி - நிலம்
26. நன்னுதல் - நல்ல நெற்றி
27. வெள்கி - நாணி
28. களிகூர - மகிழ்ச்சி பொங்க
29. வயவேந்து - வலிமைமிகு அரசன் (நளன்)
30. ஒண்தாரை - ஒளிமிக்க மலர்மாலை
31. மல்லல் - வளம்
32. மடநாடு - இளையபசு
33. மழவிடை - இளங்காளை
34. செம்மாந்து - பெருமிதத்துடன்
35. மறுகு - அரசவீதி

## உலகம் உள்ளங்கையில்

246. கணினியை முதன் முதலில் கண்டறிந்தவர் யார்?
**சார்லஸ் பாப்பேஜ்**

247. சார்லஜ் பாப்பேஜ் எந்த ஆண்டில் எந்நாட்டில் பிறந்தார்?
**கி.பி. 1833 ஆம் ஆண்டு, இங்கிலாந்து நாட்டில்**

248. கணினி உருவாக எது முதல் படிவமாக அமைந்தது?
**மணிச்சட்டம்**

249. சிலநொடிகளில் மில்லியன் கணக்கு களைச் செய்து காட்டும் கணினியை எந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது?
**இருபதாம் நூற்றாண்டு**

250. கணக்கிடும் கருவியைக் கண்டறிந்தவர் யார்?
**பிளேஸ் பாஸ்கல்**

251. பிளேஸ்பாஸ்கல் என்னும் அறிஞர் எந்நகரைச் சேர்ந்தவர்?
**பாரிசு நகரை**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

252. முதல் செயல்திட்ட வரைவாளர் எனப்போற்றப்பட்டவர் யார்?
**ஆங்கிலக் கவிஞர் பைரனின் மகள் "லேடி லவ்லேஸ்"**

253. ஹார்வார்டு பல்கலைக்கழகக் கணிதப் பேராசிரியர் "ஹோவார்டு ஜக்கன்" என்பாரை ______ துணையுடன் எண்ணிலக்கக் கணினியைக் கண்டறியத் தூண்டியது?
**ஐ. பி.எம். பொறியாளர்**

254. கணிதப் பேராசிரியர் ஹோவார்டு ஜக்கன் கண்டறிந்த எண்ணிலக்கக் கணினியின் பெயர் என்ன?
**ஹார்வார்டு மார்க் -1**

255. தற்போது அமெரிக்காவும் ஜப்பானும் எந்தக் கணினியை உருவாக்கப் போட்டியிடுகிறார்கள்?
**மீத்திறன் கணினி**

256. கணினியின் வகைகள் யாவை?
1. **பல்லூடக வசதிகொண்ட கணினி**
2. **மடிக்கணினி**
3. **கையடக்கக் கணினி**

257. "இணையம்" என்னும் வடிவத்திற்கு வித்திட்டவர் யார்?
**ஜான் டாஸ்டல் என்னும் அமெரிக்கராவார்**

258. எதன் வாயிலாக இலக்கியம், அறிவியல், வானியல் வரலாறு, புவியியல், கணிதம், திரைப்படம் என எண்ணற்ற துறைகளின் செய்திகளை அறிய முடியும்?
**இணையம்**

259. எந்த ஆண்டில் ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்குச் செய்தியை மாற்ற மின்காந்த நாடாவைப் பயன்படுத்தினர்?
**1960 ஆம் ஆண்டு**

260. ஒரு கட்டத்திற்குள் இருக்கும் கணினிகளை எல்லாம் கம்பிச் சுருளுடன் இணைக்க _____ என்னும் சிறுபலகையைப் பொருத்தி பயன்படுத்தினார்கள்?
**ஈதர்நெட் அட்டை**

261. ஈதர்நெட் அட்டை என்னும் இணைப்பு ______ எனப்பட்டது.
**குறும்பரப்பு வலைப்பின்னல்**

262. ஒரு வட்டாரத்துக்குள் உள்ள கணினிகளை இணைப்பதற்கு எந்த வலைப்பின்னல்கள் பயன்படுகிறது?
**அகன்ற பரப்பு வலைப்பின்னல்**

263. சுவிட்சர்லாந்து நாட்டைச் சார்ந்த ______ என்னும் இயற்பியல் வல்லுநர், 1989 ஆம் ஆண்டு உலகளாவிய வலைப்பின்னல் எனப் பெயரிட்டார்.
**பிம்பெர்னர் லீ**

264. உலகளாவிய வலைப்பின்னலை ______ எனவும் அழைக்கிறார்கள்.
**வையக விரிவு வலை**

265. இணையத்தளச் சேவையைப் பயன் படுத்தத் தேவையான பொருள்கள் யாவை
**1. கணினி 2. தொலைபேசி 3.இணையச் சேவை 4.மாற்றி 5.தொடர்பு மென்பொருள்**

266. தொலைபேசி வழியாகக் கணினியையும் மாற்றியையும் இணைத்துப் பயன்படுத்தும் முறையே சேவையாகும்.
**தொலைபேசி இணைப்புச்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

267. எதன் செயல்படுவதைக் கொண்டு இணைய இணைப்பு நான்கு வகைகளாகக் கிடைக்கின்றது

**வையக பிரிவு வலை**

268. நான்கு வகையான இணைய இணைப்புகளைக் கூறுக

**1. உறுப்பினர் எண்ணிலக்க இணைப்பு**

**2. கம்பி வடமாற்றி**

**3. செயற்கைக்கோள் சேவை**

**4. கண்ணறைச் சேவை**

269. கணினியைப் பயன்படுத்திக் கற்கும் கல்வியே ______ ஆகும்.

**கணினி வழிக்கல்வி**

270. கணினி வழியாக ______ ஐப் பெற முடியும்.

**மொழிக்கல்வி**

271. ______ என்னும் இணையத்தளம் தமிழ் எழுத்துகளை எழுதவும் ஒலிக்கவும் கற்றுத் தருகிறது.

**தமிழம்**

272. தொலைத்தொடர்புத் துறையில் ஈராயிரம் ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை விட எந்த ஆண்டு களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பல நூறு மடங்காகும்

**கடந்த 20 ஆண்டு**

273. கடந்த இருபதாண்டுக் கணினிப் பயணத்தில் இணையத்தின் பங்கு மிகச் சிறந்தது என்றே சொல்வேன் எனக் கூறியவர் யார்?

**கணினி வல்லுநர் பில்கேட்ஸ்**

## இலக்கணம்
## வழக்கு : இயல்பு வழக்கு தகுதி வழக்கு

274. நம் முன்னோர் எந்தச் சொல்லால் வழங்கி வந்தார்களோ அதனை அப்படியே நாமும் வழங்கி வருவதற்கு பெயர் என்ன

**வழக்கு**

275. வழக்கின் இருவகைகள் யாவை

**1. இயல்பு வழக்கு**

**2. தகுதி வழக்கு**

276. எந்தச் சொல் தனது இயல்பு பொருள் மாறாமல் ஒரே பொருளைச் சுட்டுகிறதோ அதற்கு ______ என்று பெயர்.

**இயல்பு வழக்கு**

277. இயல்பு வழக்கின் வகைகள் யாவை

**இலக்கணமுடையது, இலக்கணப் போலி மரூஉ.**

278. இலக்கணப்பிழை இல்லாமல் வழங்கி வருவதை ______ என்பர்.

**இலக்கணமுடையது**

279. நகர்ப்புறம், கால்வாய், கொம்பு நுனி போன்ற இலக்கணமுடைய சொற்களைப் புறநகர், வாய்க்கால், நுனிக்கொம்பு என மாற்றி நம் முன்னோர்கள் இலக்கண முடையது போல வழங்கி வருவதை ______ என்கிறோம்.

**இலக்கணப்போலி**

280. தஞ்சாவூர், கோயம்புத்தூர், இவை தஞ்சை, கோவை எனச் சிதைந்து வந்துள்ளதால் இதை ____ என்கிறோம்.

**மரூஉ**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

281. தகுதியான சொற்களைப் பேசுவது ______ என்பர்.

**தகுதி வழக்கு**

282. தகுதி வழக்கின் வகைகள் யாவை

**இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி**

283. பலர் முன்னே கூற இடர்ப்பாடாகத் தோன்றும் சொற்களை நீக்கித் தகுந்த சொற்களால் அப்பொருளைத் தெரிவிப்பது ______ என்பர்.

**இடக்கரடக்கல்**

284. அமலங்கலமான சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் அப்பொருளை வழங்குவது ______ என்பர்.

**மங்கலம்**

285. ஒரு குழுவினர் தமக்கு மட்டும் புரியும் வகையில் ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயரைக் ______ என்பர்

**குழூஉக்குறி**

286. பொருத்துக:

1. இலக்கணமுடையது - கோவை
2. இலக்கணப்போலி - நிலம்
3. மரூஉ - புறநகர்
4. இடக்கரடக்கல் - பறி
5. மங்கலம் - கால் கழுவி வந்தான்
6. குழூஉக்குறி- இறைவனடி சேர்ந்தார்

விடை:

1. **நிலம்**
2. **புறநகர்**
3. **கோவை**
4. **கால் கழுவி வந்தான்**
5. **இறைவனடி சேர்ந்தார்**
6. **பறி**

287. “யாழினி பாடம் படித்தாள்” இத்தொடர் யாது?

**இலக்கணமுடையது.**

## மரபுச்சொற்கள்

288. முன்னோர் எச்சொல்லை எப்படி வழங்கினரோ அச்சொல்லை அப்படியே ஏற்று வழங்குதல் ______

மரபு

**விலங்குகளின் இளமைப்பெயர்கள்**

1. அணிற்பிள்ளை
2. புலிப்பறழ்
3. நாய்க்குட்டி
4. கீரிப்பிள்ளை
5. எருமைக்கன்று
6. மான்கன்று
7. பன்றிக்குட்டி
8. சிங்கக்குருளை
9. கழுதைக்குட்டி
10. ஆட்டுக்குட்டி
11. யானைக்கன்று
12. குரங்குக்குட்டி
13. குதிரைக்குட்டி
14. எலிக்குஞ்சு

**விலங்குகளின் வாழிடங்கள்**

1. ஆட்டுப்பட்டி
2. குதிரைக்கொட்டில்
3. கோழிப்பண்ணை
4. மாட்டுத்தொழுவம்
5. யானைக்கூடம்
6. வாத்துப்பண்ணை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

**விலங்கு பறவை இனங்களின் ஒலிமரபு**

1. ஆந்தை அலறும்
2. கழுதை கத்தும்
3. காக்கை கரையும்
4. கிளி கொஞ்சும்
5. நரி ஊளையிடும்
6. குதிரை கனைக்கும்
7. குயில் கூவும்
8. கோழி கொக்கரிக்கும்
9. சிங்கம் முழங்கும்
10. மயில் அகவும்
11. யானை பிளிறும்

**தாவர உறுப்புப்பெயர்கள்**

1. ஈச்ச ஓலை
2. சோளத்தட்டை
3. மாவிலை
4. வேப்பந்தழை
5. பனையோலை
6. பலா இலை
7. தாழை மடல்
8. தென்னையோலை
9. மூங்கில் இலை
10. கமுகங்கூந்தல்
11. வாழை இலை
12. நெற்றாள்

**காய்களின் இளநிலை**

1. அவரைப்பிஞ்சு
2. தென்னங்குரும்பை
3. முருங்கைப்பிஞ்சு
4. மாவடு
5. வாழைக்கச்சல்
6. வெள்ளரிப்பிஞ்சு

**செடி கொடி மரங்களின் தொகுப்பிடம்**

1. ஆலங்காடு
2. கம்பங்கொல்லை
3. பனந்தோப்பு
4. சவுக்குத்தோப்பு
5. சோளக் கொல்லை
6. பலாத் தோப்பு
7. தென்னந்தோப்பு
8. தேயிலைத்தோட்டம்
9. பூஞ்சோலை

**பொருள்களின் தொகுப்பு**

1. ஆட்டு மந்தை
2. திராட்சைக்குலை
3. மாட்டுமந்தை
4. சாவிக்கொத்து
5. வைக்கோற்போர்
6. கற்குவியல்
7. வேளங்காடு
8. யானைக்கூட்டம்
9. பசுநிரை

**பொருளுக்கேற்ற வினைமரபு**

1. சோறு உண்
2. பழம் தின்
3. கோலம் இடு
4. தீ மூட்டு
5. பால்பருகு
6. நீர் குடி
7. பாட்டுப்பாடு
8. தயிர் கடை
9. படம் வரை
10. கவிதை இயற்று
11. விளக்கை ஏற்று
12. கூரை வேய்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

289. <u>பொருத்துக</u>

1. மக்கள் - போர்
2. வீரர் - கற்றை
3. விறகு - கூட்டம்
4. சுள்ளி - கட்டு
5. வைக்கோல் - படை

விடை

1. **கூட்டம்**
2. **படை**
3. **கட்டு**
4. **கற்றை**
5. **போர்**

## இயல் நான்கு
## செய்யுள் பகுதி
## விவேகசிந்தாமணி

290. "தியங்கு" என்பதன் பொருள் யாது

**மயங்கி**

291. "சம்பு" என்பதன் பொருள் யாது

**நாவல்**

292. "மதியம்" என்பதன் பொருள் யாது

**நிலவு**

293. "சம்புவின் கனி" எனக் குறிக்கப்படுவது எது

**நாவற்பழம்**

294. "மது" என்பதன் பொருள் யாது

**தேன்**

295. <u>குறிப்பு</u>

**விவேகசிந்தாமணி என்னும் இந்நூல் புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு. இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை.**

296. பெண்ணின் முகத்திற்கு ஒப்புமையாகக் காட்டப்பட்டுள்ளது______

**நிலவு**

297. <u>பொருத்துக</u>

1. வண்டு - தாமரை
2. மங்கையின் முகம் - நாவற்பழம்
3. மலர்க்கரம் - வான்நிலவு

**விடை:**

1. **நாவற்பழம்**
2. **வான்நிலவு**
3. **தாமரை**

298. "புகன்றாள்" என்பதன் பொருள் யாது

**கூறினாள்**

## பாரதத்தாய்

299. பாரதத்தாய் என்ற பாடலின் ஆசிரியர் யார்

**அசலாம்பிகை அம்மையார்**

300. அசலாம்பிகை அம்மையார் பிறந்த ஊர் எது

**திண்டிவனத்திற்கு அருகில் உள்ள இரட்டணை**

301. அசலாம்பிகை அம்மையார் இயற்றிய நூல்கள் எது

**ஆத்திசூடி வெண்பா, திலகர் புராணம் சுவாமிகள் சரிதம், காந்தி புராணம்,**

302. அசலாம்பிகை அம்மையார் ஒரு ______ ஆவார்.

**சிறந்த பேச்சாளர்**

303. அசலாம்பிகை அம்மையாரை இக்கால ஔவையார் என்று யார் பாராட்டுவார்?

**திரு.வி.க**

304. அசலாம்பிகை அம்மையார் பல காலம் எந்த ஊரில் வாழ்ந்தார்

**திருப்பாதிரிப் புலியூரில் (கடலூர்)**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1
அறிவுக்கடல் பதிப்பகம் 9842649140

305. அசலாம்பிகை அம்மையார் தனது இறுதிக் காலத்தில் எந்த ஊரில் வாழ்ந்தார்
**வடலூர்**

306. அசலாம்பிகை அம்மையார் தனது இறுதிக் காலத்தில் நானூற்று ஒன்பது பாடல்களைக் கொண்ட ______ என்னும் செய்யுள் நூலை இயற்றினார்
**இராமலிங்க சுவாமிகள் சரிதம்**

307. காந்திபுராணம் எத்தனைப் பாடல் களைக் கொண்டது?
**ஈராயிரத்து முப்பத்து நான்கு**

308. காந்திபுராணம் என்னும் நூல் யாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது?
**காந்தியடிகள்**

309. சொற்பொருள்
1. **வாய்மை - உண்மை**
2. **களையும் - நீக்கும்**
3. **வண்மை - வள்ளல் தன்மை**
4. **துலங்குதல் - விளங்குதல்**
5. **சேய்மை - தொலைவு**

310. "தவம்" என்பதன் பொருள் யாது
**பெரும்பேறு**

311. "கருணை" என்பதன் பொருள் யாது
**இரக்கம்**

312. "தாய்மையன் பிறனை" இதனைப் பிரித்து எழுதுக.
**தாய்மை + அன்பின் + தனை**



## இந்திய விடுதலைப் போரில் தமிழகப் பெண்களின் பங்கு

313. வேலுநாச்சியாரின் பெற்றோர் பெயர் என்ன?
**செல்லமுத்து சேதுபதி, சக்கந்தி முத்தாத்தாள்**

314. வேலுநாச்சியாரின் தந்தை ______ ஆண்ட மன்னர் ஆவர்.
**இராமநாதபுரம்**

315. வேலுநாச்சியார் பிறந்த ஆண்டு எது
**கி.பி. 1730 ஆம் ஆண்டு**

316. வேலுநாச்சியார் ______ வாரிசைப் போன்றே ஆயுதப்பயிற்சி முதல் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார்
**ஆண்**

317. வேலுநாச்சியாரின் கணவர் யார்
**சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர்**

318. ஆங்கிலேயர் எந்த ஆண்டில் சிவகங்கைச் சீமையின் மீது படையெடுத்தார்
**1772 ஆம் ஆண்டு**

319. முத்துவடுகநாதர் யாருடன் போர் செய்து வீரமரணமடைந்தார்
**ஆங்கிலேயர்**

320. வேலுநாச்சியார் ஆங்கிலேயரை எதிர்ப்பதைக் குறித்து யாருடன் கலந்து பேசினார்?
**மைசூர் மன்னர் ஐதர் அலி**

321. வேலுநாச்சியாருக்கு உதவ விரும்பிய ஐதர் அலி எத்தனை படைவீரர்களை அவருடன் அனுப்பினார்?
**ஐயாயிரம்**

322. வேலுநாச்சியார் தன் கணவரைக் கொன்ற ஆங்கிலேயரை வென்று எந்த ஆண்டில் சிவகங்கையை மீட்டார்
**1780 ஆம் ஆண்டு**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

323. வேலுநாச்சியார் _____ சகோதரர் களுடன் வீரர்படைக்குத் தலைமை யேற்றுச் சென்றார்

**மருது**

324. கடலூர் அஞ்சலையம்மாள் எந்த ஆண்டில் பிறந்தார்

**1890 ஆம் ஆண்டு**

325. கடலூர் அஞ்சலையம்மாள் பிறந்த ஊர் எது

**கடலூரில் உள்ள முதுநகரில்**

326. எந்த ஆண்டில் காந்தியடிகள் ஒத்துழை யாமை இயக்கத்தைத் தொடங்கிய போதே அஞ்சலையம்மாள் தமது பொது வாழ்க்கையைத் தொடங்கினார்

**1921 ஆம் ஆண்டு**

327. கடலூர் அஞ்சலையம்மாள் எந்தெந்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல ஆண்டு சிறையில் வாடினார்

**நீலன் சிலையை அகற்றும் போராட்டம், உப்புக்காய்ச்சும் போராட்டம், மறியல் போராட்டம், தனியாள் அறப் போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய ஐந்து போராட்டம்**

328. கடலூர் அஞ்சலையம்மாள் எந்தெந்த சிறையில் அடைப்பட்டு இருந்தார்

**கடலூர், திருச்சி, வேலூர், பெல்லாரி**

329. வேலூர்ச் சிறையில் இருந்த போது கருவுற்ற நிலையில் இருந்த அவரை (கடலூர் அஞ்சலையம்மாள்) எந்த அரசு வெளியில் அனுப்பி விட்டு மகப்பேற்றிற்குப் பின் மீண்டும் சிறையில் அடைத்தது?

**ஆங்கிலேய அரசு**

330. கடலூர் அஞ்சலையம்மாள் மிகச்சிறந்த _____ ஆக விளங்கினார்

**பேச்சாளர்**

331. குடும்பச் சொத்துகளையும் குடியிருந்த வீட்டையும் விற்று எதற்காக செலவு செய்தார்?

**விடுதலைப்போராட்டம்**

332. நீலன் சிலையை அகற்றும் போராட்டத் தில் தம்முடைய எத்தனை வயது மகளையும் ஈடுபடுத்தினார்?

**ஒன்பது வயது**

333. காந்தியடிகள் சிறையில் இருப்பவர்களைப் பார்க்க வந்த போது ஒன்பதே வயதான அம்மாகண்ணு அஞ்சலை யம்மாளின் மகள் என்பதையறிந்து, அச்சிறுமியைத் தன்னுடனுக்கு ஆசிரமத்து அழைத்துச் சென்று _____ என்று பெயரிட்டுப் படிக்கவும் வைத்தார்கள்

**வார்தாவில் உள்ள லீலாவதி**

334. அஞ்சலையம்மாள் பர்தா வேடமணிந்து எந்த வண்டியில் காந்தியடிகளை ஏற்றிச் சென்றார்

**குதிரைவண்டி**

335. அஞ்சலையம்மாளின் மகள் பெயர் என்ன

**அம்மாக்கண்ணு**

336. காந்தியடிகள் யாரைத் தென்னாட்டின் ஜான்சிராணி என்றழைத்தார்?

**கடலூர் அஞ்சலையம்மாள்**

337. அம்புஜத்தம்மாள் எந்த ஆண்டு பிறந்தார்

**1899 ஆம் ஆண்டு சனவரி8**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

338. அம்புஜத்தம்மாள் வீட்டிலிருந்தே எந்தெந்த மொழிகளைத் திறம்பட பயின்றார்?

**தமிழ், ஆங்கிலம், இந்தி, சமற்கிருதம்.**

339. அம்புஜத்தம்மாள் யாருடைய எளிமை யான தோற்றத்தினால் கவரப்பட்டு எளிமையாக வாழ்ந்தார்

**அன்னை கஸ்தூரிபாய்**

340. அம்புஜத்தம்மாள் எக்குணங்களைத் துறந்தார்?

**பட்டு, பகட்டு, ஆங்கிலமோகம்.**

341. அம்புஜத்தம்மாள் பல்வேறு கட்டுப் பாடுகள் மிகுந்த குடும்பத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு எதற்காகப் பாடுபட்டார்?

**நாட்டு விடுதலை**

342. ______ முதலியவர்களோடு நட்புக் கொண்டு பெண்ணடிமைக்கு எதிராக அம்புஜத்தம்மாள் குரல் கொடுத்தார்

**வை. மு. கோதைநாயகி அம்மாள், ருக்குமணி லட்சுமிபதி**

343. அம்புஜத்தம்மாள் யாருடைய பாடலைப் பாடி விடுதலை உணர்வை ஊட்டி ஆங்கிலேய அரசுக்கு எதிராகச் செயல்பட்டார்?

**மகாகவி பாரதியாரின் பாடல்**

344. அந்நியத்துணிகள் விற்கும் கடைக்கும் முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தி யதால் அம்புஜத்தம்மாள் எச்சிறையில் அடைக்கப்பட்டார்?

**வேலூர்ச் சிறையில்**

345. காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்று யார் செல்லமாக அழைக்கப்பட்டார்?

**அம்புஜத்தம்மாள்**

346. அம்புஜத்தம்மாள் நிறுவிய தொண்டு நிறுவனத்தின் பெயர் என்ன

**சீனிவாச காந்தி நிலையம்**

347. 1964 ஆம் ஆண்டு அம்புஜத்தம்மாள் பெற்ற விருது யாது

**தாமரைத்திரு (பத்மஸ்ரீ)**

348. அம்புஜத்தம்மாள் தம் எழுபதாண்டு நினைவாக எந்த அரிய நூலை எழுதியுள்ளார்

**நான் கண்ட பாரதம்**

## துணைப்பாடம்
## மரத்தின் வேண்டுகோள்

349. ஓர் ஏக்கர் பரப்பளவில் வளர்ந்துள்ள மரங்கள் பதினெட்டுப் பேர்களுக்கு ஓர் ஆண்டிற்குத் தேவையான உயிர் காற்றைக் கிடைக்கச் செய்கின்றன.

**தொகைநிலைத் தொடர்கள்**

350. சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது ______ எனப்படும்.

**தொடர்**

351. சொற்கள் தொடராகும் போது இரு சொற்களுக்கு இடையே வேற்றுமை வினை, உவமை முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று மறைந்து வரும். இங்ஙனம் உருபுகள் மறைந்து வரும் தொடர்களைத் ______ என்பர்.

**தொகைநிலைத்தொடர்கள்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

352. கயல், விழி இவ்விரு சொற்களுக்கு இடையே போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளதால் இதனை ______ எனக்கூறுவர்.

**உவமைத் தொகை**

353. தொகைநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?

**ஆறு**

354. தொகைநிலைத் தொடரின் வகைகளைக் கூறுக

1. **வேற்றுமைத்தொகை**
2. **வினைத்தொகை**
3. **பண்புத்தொகை**
4. **உவமைத்தொகை**
5. **உம்மைத்தொகை**
6. **அன்மொழித்தொகை**

355. "கண்ணனை இராமன் பார்த்தான்" என்னும் தொடரில் "ஐ" என்னும் உருபு யார், யாரைப் பார்த்தான் எனப் பெயரை வேறுபடுத்திக் காட்டும் உறுப்புக்கு என்றுப் பெயர்.

**வேற்றுமை**

356. பெயர்ப் பொருளை வேறுபடுத்திக் காட்டும் உருபை _____ என்கிறோம்.

**வேற்றுமை உருபு**

357. வேற்றுமைகள் எத்தனை வகைப்படும்?

**எட்டு**

358. முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் ______ இல்லை

**உருபு**

359. எத்தனை உருபுகள் உள்ளன

**6, ஐ, ஆல், கு, இன், அது, கண்,**

360. இரண்டாம் வேற்றுமை உருபு முதல் ஏழாம் வேற்றுமை உருபு வரை உள்ளவற்றுள் ஏதேனும் ஒன்று ______ ஆக வரும்.

**வேற்றுமை உருபு**

361. இரு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபு என்கிறோம். மறைந்து வருவதை

**வேற்றுமைத்தொகை**

362. "பால் பருகினான்" இதில் "ஐ" என்னும் உருபு மறைந்துள்ளதால் இதை ______ எனக் கூறுவர்

**இரண்டாம் வேற்றுமைத்தொகை**

363. "தலை வணங்கினான்." இதில் ஆல் என்னும் உருபு மறைந்துள்ள தால் இதை ______ என்பர்.

**மூன்றாம் வேற்றுமைத்தொகை**

364. "வேலுக்கு மகன்" இதில் "கு" என்னும் உருபு மறைந்துள்ளதால் இதை ______ என்பர்.

**நான்காம் வேற்றுமைத்தொகை**

365. "ஊர் நீங்கினான்" இதில் "இன்" என்னும் உருபு மறைந்துள்ளதால் இதை ______ என்பர்.

**ஐந்தாம் வேற்றுமைத்தொகை**

366. "செங்குட்டுவன் சட்டை" இதில் "அது" என்னும் உருபு மறைந்துள்ள தால் இதை ______ என்பர்.

**ஆறாம் வேற்றுமைத்தொகை**

367. குகைப்புலி இதில் கண் என்னும் உருபு மறைந்துள்ளதால் இதை ______ என்பர்.

**ஏழாம் வேற்றுமைத்தொகை**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

368. காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம் ______ எனப்படும்.

**வினைத்தொகை**

369. செம்மொழி என்னும் தொடர் ______

**பண்புத்தொகை**

370. கயல்விழி என்பது ______

**உவமைத்தொகை**

371. மல்லிகை என்பது சிறப்புப் பெயர், பூ என்பது பொதுப்பெயர் இரண்டுக்கும் இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து வந்துள்ளதால் இது ______ எனப்படும்.

**இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

372. ஒரு பெயருக்கு அல்லது ஒரு சொல்லுக்கு இடையிலும் உம் என்னும் இடைச் சொல் மறைந்து வந்து பொருள் தருவதால் அது _____ எனப்பட்டது.

**உம்மைத்தொகை**

373. வேற்றுமை, வினை, பண்பு, உவமை உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கு நின்று பொருள் தருவது ______ ஆகும்

**அன்மொழித்தொகை**

374. "பவளவாய் பேசினாள்" - இத்தொடரின் தொகை என்ன

**வினைத்தொகை**

375. ஆடுகொடி, பாய்புலி, அலைகடல் ஆகிய தொடர்கள் ஆகும்.

**வினைத்தொகை பயின்று வந்த தொடர்கள்**

## மொழித்திறன் பயிற்சி

376. பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை அறிவோம்

**சமஸ்கிருதம் - தமிழ்**

அகங்காரம் - செருக்கு
அதிர்ஷ்டம் - நற்பேறு
அபிப்பிராயம் - கருத்து
அபூர்வம் - புதுமை
ஆராதனை - வழிபாடு
ஆனந்தம் - மகிழ்ச்சி
சபதம் - சூளுரை
தினசரி - நாள்தோறும்
தைரியம் - துணிவு
பூஜை - வழிபாடு

**உருது - தமிழ்**

பஞ்சாயத்து - ஐம்பேராயம்
பதில் - விடை
பலே - நன்று
பேட்டி - நேர்காணல்
பைசா - காசு
அசல் - முதல்
கச்சேரி - அரங்கம்
குமாஸ்தா - எழுத்தர்
கைது - தளை
குஷி - மகிழ்ச்சி

**போர்த்துக்கிசியம் - தமிழ்**

அலமாரி - நெடும்பேழை
கிராம்பு - இலவங்கம்
சாவி - திறவுகோல்
சன்னல் - பலகணி
மேஸ்திரி - தலைமைத் தொழில்கள்
அரபி - தமிழ்
தகவல் - செய்தி



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

வக்கில் - வழக்குரைஞர்

பாக்கி - நிலுவை

மக்கர் - இடைஞ்சல்

மாமூல் - பழையபடி

மிட்டாய் - தீங்கட்டி

**மராத்தி - தமிழ்**

காகிதம் - தாள்

கில்லாடி - கொடியோன்

அபாண்டம் - வீண்பழிக்கூற்று

அட்டவணை- பொருட்குறிப்புப்பட்டியல்

பேட்டை - புறநகர்

பாரசீகம் - தமிழ்

ஜமாக்காளம் - விரிப்பு

ஜமீன் - நிலபுலம்

மாலுமி - நாவாயோட்டி

பஜார் - கடைத்தெரு

மைதானம் - திறந்தவெளித்திடல்

**ஆங்கிலம் தமிழ்**

லைசென்ஸ் - உரிமம்

இண்டர்வியூ - நேர்காணல்

கெஸ்ட் ஹவுஸ் - விருந்தகம்

எலாஸ்டிக் - நெகிழி

புனல் - வடிகுழலி

பீரோ - இழுப்பறை

அட்லஸ் - நிலப்படத் தொகுப்பு

உயில் - இறுதிமுறி

கவுன்சில் - மன்றம்

ரயில் - தொடர் வண்டி

பேனா - தூவல்

ரப்பர் - தேய்ப்பம்

## இயல் ஐந்து
## செய்யுள் - காவடிச்சிந்து

377. காவடிச்சிந்து பாடலை இயற்றியவர் யார்

**அண்ணாமலையார்**

378. அண்ணாமலையார் பிறந்த ஊர் எது

**திருநெல்வேலி மாவட்டத்துச் சென்னிகுளம்**

379. அண்ணாமலையாரின் பெற்றோர் யார்

**சென்னவர் - ஔவுஅம்மாள்**

380. அண்ணாமலையார் இயற்றிய நூல்கள் யாவை

**காவடிச்சிந்து, வீரை அந்தாதி, கோமதி அந்தாதி, வீரைப்பிள்ளைத்தமிழ்**

381. அண்ணாமலையாரின் காலம் எது

**1861-1890**

382. குறிப்பு

**தூத்துக்குடி மாவட்டம் கோவில் பட்டிக்கு அருகிலுள்ள வளமான ஊர் கழுகுமலை. இங்குக் கோவில் கொண்டுள்ள முருகனின் சிறப்பை எளிய இனிய இசைப்பாடல்களால் போற்றிப்பாடப் பெற்றது இந்நூல்.**

383. சொற்பொருள்

1. கலாபம் - தோகை
2. விவேகன் - ஞானி
3. கோல - அழகிய
4. இசைந்த - பொருத்தமான
5. வாவி - பொய்கை
6. மாதே - பெண்ணே



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## விக்கிரம சோழன் உலா

384. விக்கிரம சோழன் உலா- என்ற பாடலை இயற்றியவர் யார்
**ஒட்டக்கூத்தர்**

385. ஒட்டக்கூத்தரின் சிறப்புப்பெயர் யாது?
**கவிச்சக்கரவர்த்தி**

386. ஒட்டக்கூத்தர் இயற்றிய நூல்கள் எவை?
**மூவருலா, தக்கயாகப்பரணி, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்.**

387. ஒட்டக்கூத்தரின் காலம் எது
**பன்னிரண்டாம் நூற்றாண்டு**

388. உலா என்பது ______ வகைகளுள் ஒன்று
**தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய**

389. யாருடைய சிறப்புகளை எடுத்துக்கூறும் நோக்கில் இவ்வகைச் சிற்றிலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன?
**இறைவன், மன்னன், மக்களுள் சிறந்தோர்.**

390. "உலா" என்பதற்குப் பொருள் யாது
**ஊர்வலம் வருதல்**

391. மகளிரின் பருவங்கள் எத்தனை வகைப்படும்?
**ஏழு**

392. மகளிரின் ஏழுவகைப் பருவங்கள் யாவை?
**பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்.**

393. விக்கிரம சோழன் முதற்குலோத்துங்க சோழனுக்கு எத்தனையாவது மகன் ஆவார்?
**நான்காவது மகன்**

394. குறிப்பு
**விக்கிரம சோழனின் பிறப்பு:**
விக்கிரம சோழன் இரண்டாம் குலோத்துங்கன் இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு விளங்கியவர் ஆவர்.

395. விக்கிரம சோழனின் தாய் பெயர் என்ன?
**மதுராந்தகி**

396. மதுராந்தகி ______ கொண்ட சோழ புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார்.
**கங்கை**

397. மலரின் பருவங்கள் எத்தனை வகைப்படும்?
**ஏழு**

398. மலரின் ஏழுவகைப் பருவங்கள் யாவை?
1. அரும்பு
2. மொட்டு
3. முகை
4. மலர்
5. அலர்
6. வீ
7. செம்மல்

399. குடகுமலையை ஊடறுத்து அலை மோதும் காவிரியைத் தந்தவர் யார்?
**கவேரன்**

400. மேரு மலையின் உச்சியில் புலிக் கொடி நாட்டி பொன்னியாகிய காவிரியின் இருகரைகளையும் உயர்த்திக் கட்டியவர் யார்?
**சோழன் கரிகாலன்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

401. பொய்கையாரின் களவழி நாற்பது பாடலுக்குப் பரிசாகச் சேரமான் கணைக்கால் இரும்பொறையைச் சிறைவீடு செய்த சோழன் யார்?
**செங்கணான்**

402. போரில் பெருமையாக எண்ணத்தக்க விழுப்புண்கள் தொண்ணூற்றாறும் பெற்றவன் யார்?
**சோழன் விசயாலயன்**

403. சிவபெருமான் ஆடலரசராய்க் காட்சி தரும் தில்லைக்குப் பொன்வேய்ந்த சோழன் யார்?
**முதல் பராந்தகன்**

404. பதினெட்டுச் சிற்றூர்களையும் கைப்பற்றி மலைநாடு வென்ற சோழன் யார்?
**முதல் இராசராசன்**

405. வடக்கே படையெடுத்துக் கங்கையும் கிழக்கில் கடாரமும் வென்று கைக்கொண்டு, சேரர் கப்பற்படை முழுவதையும் அழித்த சோழன் யார்?
**இராசேந்திரன்**

406. சாளுக்கியர்களின் தலைநகரான கல்யாணபுரத்தின் மீது படையெடுத்து மும்முறை போரிட்டு வென்ற சோழன் யார்?
**இராசாதிராசன்**

407. கொப்பத்துப் போரில் ஆயிரம் யானைகளை வென்ற சோழன் யார்?
**இராசேந்திரன்**

408. சொற்பொருள்
1. குவடு - மலை
2. பொன்னி - காவிரி
3. கோது - குற்றம்
4. அரவம் - பாம்பு

## செய்தி உருவாகும் வரலாறு

409. உலகில் எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் சிறிய நிகழ்வும் ______ ஆகிறது.
**செய்தி**

410. எதன் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய முன்னேற்றத்தின் விளைவாக உடனுக்குடன் செய்திகள் வெளியிடப் படுகின்றன?
**அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி**

411. "ஏன்! என்ன? எப்போது? எப்படி? எங்கே? யார்? எனும் அன்புத் தொண்டர் ஆறுபேர்கள் அறியச் செய்வார் செய்தியினை" என்று யார் கூறியுள்ளார்?
**அறிஞர் கிப்ளிங்**

412. ஆறுவினாக்களுக்கும் உரிய விடைகளும் எந்தப் பக்கத்தில் இடம் பெற வேண்டும்?
**செய்தியின் முகப்புப் பக்கம்**

413. செய்தியை இனங்கண்ட பின்னர் செய்தியாளர் எதன் பணியில் ஈடுபடுகிறார்கள்?
**செய்தியைத் திரட்டும் பணி**

414. செய்தியைப் பெறுதல் என்பது எதைப் போன்றது?
**துப்பறிதல்**

415. ஆறு வினாக்களுக்கும் உரிய விடையைக் காண்பதென்பது எதைப் போன்ற அரிய பணி?
**கடலில் மூழ்கி முத்தெடுப்பது**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

416. ஒவ்வொரு செய்தியாளரும் தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களுக்கோ, அலுவலகங்களுக்கோ நாள்தோறும் சென்று செய்திகளைத் திரட்டுவதற்குப் பெயர் என்ன?

**செய்திக்களம்**

417. எந்தெந்த செய்திக்களங்களுக்குச் செய்தியாளர்கள் நாள்தோறும் சென்று, உரியவரிடம் தொடர்பு கொண்டு செய்திகளைப் பெற்று வருவர்?

செய்திகளின் மூலங்களாக இருக்கும் **அமைச்சகங்கள், காவல் நிலையங்கள், மருத்துவமனைகள், நீதிமன்றங்கள்.**

418. இலண்டன் டைம்ஸ் இதழின் செய்தியாளர் _______ போரின் போது நேரடியாகப் போர் நடைபெறும் இடத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டினார்கள்.

**இந்திய சீனப்போர்**

419. "இண்டியன் எக்ஸ்பிரஸ்" செய்தியாளர் _______ சிறைச்சாலையின் நிலை பற்றி அறிய தானே சிறைப்பட்டுச் செய்திகளைத் திரட்டித்தந்து புகழ் பெற்றார்.

**தில்லியிலுள்ள**

420. எதனைக் காண செய்தியாளருக்குத் தனி இடம் ஒதுக்கியிருப்பர்?

**விளையாட்டுப் போட்டிகள், புகழ் பெற்ற விசாரணைகள், சட்டமன்ற நடவடிக்கைகள், மாநாடுகள், பொதுக்கூட்டங்கள்**

421. செய்தியாளர்கள் எதனைப் படித்துத் தான் செய்தியாளர் செய்தியைத் திரட்டுகின்றார்கள்?

**அரசின் அறிக்கை, வாணிகக் குழுக்களின் வெளியீடுகள், நிதியமைச்சரின் வரவு செலவுத் திட்டங்கள்**

422. செய்தியாளர்கள் அறிவியல் ஆய்வு முறைகளையும் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதையும் அறிய உதவுவது எது?

**புள்ளியியல்**

423. பொதுமக்களின் கருத்துகளை எதன் வாயிலாக நடத்துவார்கள்?

**கூறெடுப்பு ஆய்வு**

424. செய்திகளை எதன் மூலம் பெறலாம்?

**உள்ளூர்ச் செய்தியாளர்**
**வெளியூர்ச் செய்தியாளர்**
**சிறப்புச் செய்தியாளர்**
**ஆர்வலர்கள் அரசு அறிக்கைகள் செய்தி நிறுவன்ங்கள்**

425. உலகெங்கும் நடக்கும் செய்திகளை உடனுக்குடன் எதன் வாயிலாகப் பெறலாம்?

**கம்பியில்லாத் தந்தி, தொலைபேசி, செல்பேசி, தொலை அச்சு தொலை நகல், வானொலி, தொலைக்காட்சி கணினி.**

426. செய்தியின் பகுதிகள் எத்தனை வகைப்படும்?

**தலைப்புச் செய்தி முகப்புச்செய்தி உடல்பகுதிச் செய்தி (மூன்று)**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

427. _______, _______ எனப் பதிப்புகள் பிரிக்கப்பட்டு விடியற்காலையில் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் செய்தித்தாள்கள் அச்சடிக்கப்படுகின்றன.
**முதல் பதிப்பு, இரண்டாம் பதிப்பு**

428. **குறிப்பு**
இதழியல் கலைச்சொற்கள்
1. Bulletin - சிறப்புச் செய்தி இதழ்
2. Deadline - குறித்தகாலம்
3. Editorial - தலையங்கம்
4. Fake News - பொய்ச்செய்தி
5. Flash News - சிறப்புச்செய்தி
6. Falio No - இதழ் எண்
7. Green Proof - திருத்தப்படாத அச்சுப்படி
8. Layout - செய்தித்தாள் வடிவமைப்பு

## தொகா நிலைத் தொடர்

429. ஒரு தொடரில் இருசொற்கள் அமைந்து இரண்டிற்கும் இடையில் சொல்லோ உருபோ மறையாது பொருளை உணர்த்துமானால், அது _______ எனப்படும்.
**தொகாநிலைத்தொடர்**

430. “கபிலன் வந்தான்” - இதில் “கபிலன்” என்னும் எழுவாயைத் தொடர்ந்து “வந்தான்” என்னும் பயனிலை வந்துள்ளதால், இது _______ என்பர்.
**எழுவாய்த் தொடர்.**

431. “கதிரவா! வா”. இது _____ தொடராகும்.
**விளித்தொடர்**

432. கண்டேன் சீதையை - வினைமுற்று முதலில் வந்து பெயரைத் தொடர்வதால் இதை, _______ என்பர்.
**வினைமுற்றுத்தொடர்**

434. விழுந்த மரம் - விழுந்த என்னும் எச்சவினை மரம் என்னும் பெயர்ச் சொல்லோடு முடிவதால் இது _____
**பெயரெச்சத்தொடர்**

435. வந்துபோனான் - இதில் “வந்து” என்னும் எச்சவினை “போனான்” என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளதால், இது _____ என்பர்.
**வினையெச்சத் தொடர்**

436. வீட்டைக்கட்டினான் - இத்தொடரில் ‘ஐ’ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்துள்ளதால், இதை _______ என்பர்.
**வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்**

437. மற்றொன்று - மற்று + ஒன்று ‘மற்று’ என்னும் இடைச்சொல்லை அடுத்து ‘ஒன்று’ என்னும் சொல் தொடர்ந்து வந்துள்ளதால், இது _____ .
**இடைச்சொற்றொடர்.**

438. மாமுனிவர் - இத்தொடரில் ‘மா’ என்பது உரிச்சொல், இதைத் தொடர்ந்து ‘முனிவர்’ என்னும் சொல் வந்துள்ள தால், இது _______ .
**உரிச்சொற்றொடர்.**

439. வாழ்க வாழ்க வாழ்க - இதில் ஒரே சொல் பலமுறை அடுக்கி வந்துள்ள தால், இது _______ .
**அடுக்குத்தொடர்.**

440. தொகாநிலை தொடரின் வகைகள் எத்தனை?
**ஒன்பது**





join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## இரட்டைக்கிளவி
## அடுக்குத்தொடர்

441. ‘பாம்பு பாம்பு’ - இதனைப் பிரித்தால் பொருள் தரும். எனவே இது _______ ஆகும்.

**அடுக்குத்தொடர்**

442. ‘கலகல’ - இதனைப் பிரித்தால் பொருள் தராது. எனவே இது _______ ஆகும்.

**இரட்டைக்கிளவி**

443. உரிய எழுத்து வழக்குச் சொற்களை அறிவோம்

1. பேச்சு வழக்கு - எழுத்து வழக்கு
   1. கோர்த்து - கோத்து
   2. சுவற்றில் - சுவரில்
   3. நாட்கள் - நாள்கள்
   4. மனதில் - மனத்தில்
   5. பதட்டம் - பதற்றம்
   6. சிலவு - செலவு
   7. அருகாமையில் - அருகில்
2. பிழை - சரி
   1. ஓர் மாவட்டம் - ஒரு மாவட்டம்
   2. ஒரு அமைச்சர் - ஓர் அமைச்சர்
   3. அவரது மகனோடு - அவருடைய மகனோடு
   4. மேற்க்கொண்டார் - மேற்கொண்டார்
   5. அந்த சுற்றுலா - அந்தச் சுற்றுலா
   6. கண்டதை கூறவே - கண்டதைக் கூறவே
   7. அவர்தான் - அவர்தாம்

## இயல் ஆறு
## செய்யுள் பகுதி - திருமந்திரம்

444. ‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர்’ என்ற பாடலை எழுதியவர் யார்?

**திருமூலர்**

445. திருமந்திரம் - என்ற நூலை இயற்றியவர் யார்?

**திருமூலர்**

446. திருமூலரின் பிறந்த காலம் எது?

**ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதி**

447. சைவத் திருமுறைகளில் எத்தனையாவது திருமுறை இது?

**பத்தாவது திருமுறை**

448. திருமந்திரத்திற்கு _____ என்னும் வேறு பெயரும் உண்டு.

**தமிழ் மூவாயிரம்**

449. திருமந்திரம் எத்தனை பாடல்களைக் கொண்டது?

**மூவாயிரம்**

450. திருமந்திரப் பாடல் மூன்றாம் தந்திரத்தில் எத்தனை பாடல்களைக் கொண்டது?

**எழுநூற்று இருபத்து நான்கு**

451. _____என்பது இந்நூலின் புகழ் பெற்ற தொடராகும்.

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

452. **சொற்பொருள்**

1. திடம் - உறுதி
2. மெய்ஞ்ஞானம் - மெய்யறிவு
3. உபாயம் - வழிவகை

453. **குறிப்பு**

மூலன் என்னும் பெயர், “திரு” என்னும் பெயரடை பெற்று, அத்துடன் “அர்” என்னும் மரியாதைப் பன்மையும் பெற்று “திருமூலர்” என ஆயிற்று.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## தேம்பாவணி

454. தேம்பாவணி என்ற பாடலை இயற்றியவர் யார்?
**வீரமாமுனிவர்**

455. வீரமாமுனிவரின் இயற்பெயர் என்ன?
**கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி**

456. வீரமாமுனிவரின் பெற்றோர் பெயர் என்ன?
**கொண்டல் போபெஸ்கி எலிசபெத்**

457. நகைசெய் தன்மையினம் பெழீ இத்தாய் ... என்று தொடங்கும் பாடலை எழுதியவர் யார்?
**வீரமாமுனிவர்**

458. வீரமாமுனிவர் பிறந்த ஊர் எது
**இத்தாலி நாட்டில் காஸ்திக்கிளியோன்**

459. வீரமாமுனிவர் அறிந்த மொழிகள் எவை?
**இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம் எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமற்கிருதம்**

460. வீரமாமுனிவருக்குத் தமிழ்மொழியை கற்றுக் கொடுத்தவர் யார்?
**மதுரைச் சுப்பிரதீபக் கவிராயர்**

461. வீரமாமுனிவரின் சிறப்பு யாது?
**முப்பதாம் வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை**

462. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் எவை?
**ஞானோபதேசம், பரமார்த்த குருகதை சதுரகராதி, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம்.**

463. வீரமாமுனிவரின் காலம் எது?
**1680-1747**

464. குறிப்பு
**தேம்பாவணி = தேம்பா+அணி = வாடாதமாலை; தேன்+பா+அணி = தேன் போன்ற**
இனிய பாடல்களாலான மாலை. இந்நூல் இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது. இந்நூல் கிறித்தவச் சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என அழைக்கப் படுகிறது. இந்நூலில் மூன்று காண்டங் களும் முப்பத்தாறு படலங்களும் உள்ளன; பாடல்களின் எண்ணிக்கை மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள இப்பாடல் மகவருள் படலத்தில் உள்ளது.

465. சொற்பொருள்
1. நகை - புன்னகை
2. முகை - மொட்டு
3. மேனி - உடல்

## நாடகக்கலை

466. உலகில் வேறு எம்மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு எந்த மொழிக்கு உள்ளது?
**தமிழ்மொழி**

467. தமிழ்மொழி ____ எனச் சிறப்பிக்கப்படும் பெருமையுடையது.
**முத்தமிழ்**

468. தமிழ் எத்தனை வகைப்படும்?
**மூன்று**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

469. மூன்று வகையான தமிழைக் கூறுக?
**இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ்**

470. தொன்று தொட்டுப் படிப்படியே வளர்ச்சி அடைந்துள்ள கலை எது?
**நாடகம்**

471. நாடகம் என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக.
**நாடு + அகம்**

472. நாட்டின் கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும், வருங்காலத்தையும், தன் அகத்தே காட்டுவதால் ________ எனப் பெயர் பெற்றது என்பர்.
**நாடகம்**

473. கதையை, நிகழ்ச்சியை உணர்வை நடித்துக் காட்டுவதும், கூத்தாக ஆடிக்காட்டுவதும் ________ என்று பெயர்.
**கூத்துக்கலை**

474. தமிழின் தொன்மையான கலை வடிவம் எது?
**நாடகம்**

475. நாடக அரங்கம் இருந்த செய்தி எந்த குறள் வழியாக அறிய முடிந்தது?
**'கூத்தாட் டவைக்குழாத் தற்றே'**

476. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், ______, ______ என்று நாட்டியமாடும் மாதவியை குறிப்பிடுகிறார்.
**நாடகமேத்தும், நாடகக்கணிகை**

477. 'நாட்டியம்', 'நாடகம்' இண்டிற்கும் பொதுவாக எந்த சொல்லே வழக்கில் இருந்தது?
**கூத்து**

478. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தெனக் கருதப்படும் தமிழ் நூல்களில் ஏழு நாடக நூல்கள் நாட்டியத்திற்கும், நாடகத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளன?
**முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்துநூல்.**

479. யார் செய்யுள் வடிவில் இயற்றிய தம் நாடகவியல் எனும் நூலில் நாடகம் அதன் விளக்கம், வகைகள், எழுதப்பட வேண்டிய முறைகள், நடிப்புக்குரிய இலக்கணம், நடிப்பவர்களுக்குரிய இலக்கணம், போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார்?
**பரிதிமாற்கலைஞர்**

480. சுவாமி விபுலானந்தர் எழுதிய நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல் எது?
**மதங்க சூளாமணி**

481. மறைமலையடிகள் எழுதிய நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல் எது?
**சாகுந்தலம்**

482. நாடகத்தமிழ் என்ற தம் நூலில் தொழில் முறை நாடக அரங்குகளைப் பற்றிய செய்திகளை எழுதியவர் யார்?
**நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார்.**

483. ஏழாம் நூற்றாண்டில் "மகேந்திரவர்ம பல்லவன்" ______ என்ற நாடக நூலை எழுதியுள்ளார்?
**மத்த விலாசம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

484. பதினொன்றாம் நூற்றாண்டில் யாருடைய ஆட்சிக் காலத்தில் இராசராசேச்சுவர நாடகம் நடைபெற்றதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது?

**இராசராச சோழன்**

485. நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் ________ தோன்றின.

**குறவஞ்சி நாடகங்கள்**

486. உழவர்களின் வாழ்க்கையைச் சித்தரித்துள்ளவை எவை?

**பள்ளு நாடகவகை**

487. நொண்டி நாடகங்கள் எந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது

**பதினேழாம் நூற்றாண்டு**

488. ஊர்களில் _____ என்னும் நாடகவகை புராணக் கதைகளையே மையமாகக் கொண்டு நடத்தப்பட்டன.

**தெருக்கூத்து**

489. எந்த நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் இராம நாடகம், கோபால கிருட்டின பாரதியாரின் நந்தனார் சரித்திரம் ஆகியன கட்டியங்காரன் உரையாடல்களோடு முழுவதும் பாடல்களாக அமைந்தன

**பதினெட்டாம் நூற்றாண்டு**

490. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எதன் தொடர்பான நாடகங்கள் சிறப்பிடம் பெற்றன?

**சமுதாயச் சீர்திருத்தம்**

491. "டம்பாச்சாரி விலாசம்" - என்ற நாடகத்தின் ஆசிரியர் யார்?

**காசி விசுவநாதர்**

492. பேராசிரியர் சுந்தரனார் "மனோன் மணியம்" என்னும் கவிதை நாடகக் காப்பியத்தை எந்த ஆண்டில் வெளியிட்டார்?

**கி.பி. 1891 ஆம் ஆண்டு**

493. "லார்ட் லிட்டன்" எழுதிய ஆங்கிலக் கதையின் பெயர் என்ன?

**மறைவழி**

494. ________ என்ற நாடகம் தமிழ்நாட்டில் முதன் முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகமாகும்?

**கதரின் வெற்றி**

495. கதரின் வெற்றி நாடகத்தைத் தொடர்ந்து எந்த நாடகங்கள் நடத்தப்பட்டன?

**தேசியக்கொடி, தேசபக்தி**

496. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்துறைக்குப் பெருந்தொண்டு புரிந்தவர் யார்?

**சங்கரதாசு சுவாமிகள்**

497. "சங்கரதாசு சுவாமிகள்" எத்தனை நாடகங்களை எழுதியுள்ளார்?

**நாற்பதுக்கும் மேல்**

498. நாடக உலகில் "தமிழ் நாடகத் தந்தை" என்று யாரை அழைத்தனர்?

**பம்மல் சம்பந்தனார்**

499. "தமிழ் நாடக மறுமலர்ச்சித் தந்தை" என்று நாடக உலகில் யாரை அழைத்தனர்?

**கந்தசாமி**

500. பம்மல் சம்பந்தனார் எத்தனை நாடகங்களை எழுதியுள்ளார்?

**தொண்ணூறுக்கும் மேல்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

501. மதுரையில் எந்த ஆண்டில் புலமைக் கடலான தமிழ் மூதாட்டி ஔவையார் நாடகம் அரங்கேறியது?

**1942 ஆம் ஆண்டு**

502. நாடகம் முழுவதும் ஔவையாராக நடிக்கும் வாய்ப்பைப் பெற்றுச் சிறந்த முறையில் நடித்தவர் யார்?

**தி.க. சண்முகனார்**

503. தி.க.சண்முகனாரை ________ என்று அழைத்தனர்.

**ஔவை சண்முகனார்**

504. தன்மான இயக்கம் வலுவடைந்த காலத்தில் யாருடைய நாடகங்கள் பகுத்தறிவுப் பரப்புரை செய்தன?

**அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி**

## ஆகுபெயர்

505. ஒன்றன் இயற்பெயர் தன்னைக் குறிக்காமல், தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வந்தால் அது ________ என்று பெயர்.

**ஆகுபெயர்**

506. "மல்லிகை சூடினாள்" எனச் சொன்னால் அங்கு மல்லிகை என்பது கொடியாகிய முதற்பொருளைக் குறிக்காமல் பூ என்னும் சினையைக் குறித்து, சினைக்கு (உறுப்புக்கு) ஆகி வருவதால் இது ________ எனப்படும்

**முதலாகு பெயர்.**

507. "முதலாகு பெயருக்கு" மற்றொரு பெயர் என்ன?

**பொருளாகு பெயர்**

508. பூண்டியில் உள்ள பள்ளியில் பயின்ற மாணவி பேசினாள் - இத்தொடரில் "பள்ளி" என்னும் இடப்பெயர் அப் பள்ளியில் பயிலும் மாணவிக்கு ஆகி வந்துள்ளதால், இது ________ ஆகும்.

**இடவாகு பெயர்**

509. 'திசம்பர் பூ' - இத்தொடரில் திசம்பர் என்னும் மாதப்பெயர் அம்மாதத்தில் பூக்கும் பூவிற்கு ஆகி வந்துள்ளதால் இது ________ ஆகும்.

**காலவாகு பெயர்**

510. சினை என்றால் உறுப்பு, வெற்றிலை நட்டான் இத்தொடரில் உள்ள வெற்றிலை என்பது சினையாகிய இலையைக் குறிக்காமல் அதன் முதல் பொருளாகிய கொடிக்கு ஆகி வந்துள்ளதால், இது ________ ஆகும்.

**சினையாகுபெயர்**

511. 'பொங்கலுக்கு வீட்டில் வெள்ளை அடிப்போம்' இத்தொடரில் வெள்ளை என்பது நிறப்பண்பு. ஆனால் அது நிறத்தைக் குறிக்காமல் சுண்ணாம்பைக் குறித்து வந்துள்ளதால், இது ________ ஆகும்.

**பண்பாகுபெயர்**

512. பண்பாகு பெயருக்கு மற்றொரு பெயர் என்ன?

**குணவாகுபெயர்**

513. பொங்கல் என்பது பொங்குதலாகிய தொழிற்பெயர். இவை தொழிலைக் குறிக்காமல் அத்தொழிலால் ஆகும். உணவைக் குறிப்பதால் இவை ________ஆகும்.

**தொழிலாகுபெயர்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

514. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
**ஆறு**

515. ஆகுபெயரின் ஆறு வகைகளை எழுதுக.
1. முதலாகு பெயர்
2. இடவாகு பெயர்
3. காலவாகுபெயர்
4. சினையாகு பெயர்
5. குணவாகு பெயர்
6. தொழிலாகு பெயர்

## மொழித்திறன் பயிற்சி

516. சொற்றொடைகளில் அமைந்துள்ள வழுக்களை அறிவோம்

அரசன் வந்தது (திணைவழு) - அரசன் வந்தான்

கபிலன் பேசினாள்(பால் வழு) - கபிலன் பேசினான்

குயில்கள் கூவியது (எண் வழு) - குயில்கள் கூவின

கமலா சிரித்தாய் (இடவழு) கமலா சிரித்தாள்

வளவன் நேற்று வந்திருக்கிறாள் (காலவழு) வளவன் நேற்று வந்தான்.

ஆந்தை கத்தியது (மரபுவழு) ஆந்தை அலறியது

517. கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள வழுக்களை நீக்கி எழுதுக.

1. புலவர் வந்தார்கள் - புலவர் வந்தார்
2. மயில் கூவ குயில் அகவியது - மயில் அகவ குயில் கூவியது
3. தாமரை படம் வரைந்தான் - தாமரை படம் வரைந்தாள்
4. யானைகள் வந்தது - யானைகள் வந்தன
5. பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தது - பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தன
6. வயலில் ஆட்டுக்கன்று மேய்கிறது - வயலில் ஆட்டுக்குட்டி மேய்கிறது
7. பசு குட்டி போட்டது - பசு கன்று போட்டது
8. மாட்டை இலாயத்தில் கட்டு - மாட்டைக் கொட்டகையில் கட்டு
9. வெற்றிலைத் தோப்புக்குச் சென்று வெற்றிலை பறித்து வா - வெற்றிலைத் தோட்டத்திற்குச் சென்று வெற்றிலை பறித்து வா
10. யானை முழங்கும் - யானை பிளிறும்

518. பொருத்துக
1. சிங்கம் கனைத்தது - எண்வழு
2. கண்ணன் படித்தாள் - காலவழு
3. இன்று வருவான் - திணை வழு
4. கபிலன் பேசியது - மரபு வழு
5. பறவைகள் பறந்தது - பால் வழு

விடைகள்:

**1. மரபு வழு 2. பால் வழு 3. காலவழு 4. திணை வழு 5. எண்வழு**

## இயல் ஏழு
## செய்யுள் பகுதி
## திருக்குறள் பண்புடைமை

519. சொற்பொருள்
1. வழக்கு - நன்னெறி
2. ஆன்ற - உயர்ந்த


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

3. நயன் - நேர்மை
4. நன்றி - உதவி
5. நகையுள்ளும் - விளையாட்டாகவும்
6. பாடறிவார் - நெறியுடையார்
7. மாய்வது - அழிவது
8. அரம் - வாளைக் கூர்மையாக்கும் கருவி
9. நண்பு - நட்பு
10. நயம் இல - தீங்கு, இனிமையற்ற
11. கடை - பழுது
12. நகல்வல்லர் - சிரித்து மகிழ்பவர்
13. மாயிரு ஞாலம் - மிகப்பெரிய உலகம்
14. திரிந்தற்று - திரிவது போன்றது

## திருவருட்பா

520. 'திருவருட்பா' - என்ற நூலை இயற்றியவர் யார்?
**இராமலிங்க அடிகளார்**

521. இராமலிங்க அடிகளாரின் பெற்றோர் யார்?
**இராமையா - சின்னம்மை**

522. இராமலிங்க அடிகளார் பிறந்த ஊர் எது?
**சிதம்பரத்துக்கு அருகிலுள்ள 'மருதூர்'**

523. இராமலிங்க அடிகளாரின் சிறப்புப் பெயர்கள் என்ன?
**திருவருட்பிரகாச வள்ளலார், வள்ளலார்**

524. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் பசியினால் ... எனத் தொடங்கும் திருவருட்பா பாடலை எழுதியவர்.
**இராமலிங்க அடிகளார்**

525. இராமலிங்க அடிகளார் இயற்றிய நூல்கள் யாவை?
**திருவருட்பா, சீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் முதலியன**

526. வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, சத்திய தருமச்சாலை ஆகியவற்றை நிறுவியவர் யார்?
**இராமலிங்கர்**

527. இராமலிங்க அடிகளாரின் காலம் எது?
**1823 -1874**

528. திருவருட்பா பிரித்து எழுதுக.
**திரு+அருள்+பா**

529. 'இறைவன் திருவருளைப் பெறுவதற்காகப் பாடிய பாடல்' என்றும் இறைவனின் திருவருளால் பாடிய பாடல் என்றும் எப்பாடலைக் குறிக்கிறோம்?
**திருவருட்பா**

530. திருவருட்பாவில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?
**ஐயாயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டுப் பாடல்**

531. சொற்பொருள்
1. பசியறாது - பசித்துயர் நீங்காது
2. அயர்ந்த - களைப்புற்ற
3. நீடிய - தீராத

## தமிழர் வானியல்

532. பழந்தமிழர்கள் கையாண்ட அறிவியல் நுணுக்கங்களை எதன் மூலம் அறியலாம்?
**தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம்,**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

**மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், திருமந்திரம், திருவாசகம்**

534. தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது எதைப் பற்றிய அறிவாகும்?
**வானியல்**

535. உலகில் தோன்றிய பல்வேறு அறிவியல் கல்விகளில் மிகத் தொன்மையானது, பழைமையானது எது?
**வானியல் கல்வி**

536. உலகம் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், வெப்பம், காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது ________ எனக் குறிப்பிடுகிறது?
**தொல்காப்பியம்**

537. குறிப்பு
நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் ஆதலின்....
(தொல்காப்பியம் பொருள். 635)
மண்திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல்....
(புறம், 2)

538. உலகம் தட்டை இல்லை உருண்டையானது என்று யார் கண்டறிந்தார்?
**போலந்து நாட்டைச் சார்ந்த 'நிக்கோலஸ்கிராப்ஸ்'**

539. நிக்கோலஸ்கிராப்ஸ் - என்பவர் உலகம் தட்டை இல்லை உருண்டையானது என்று எந்த ஆண்டில் கண்டறிந்தார்?
**பதினைந்தாம் நூற்றாண்டு**

540. உலகம் உருண்டையானது என்பதை யார் தொலைநோக்கியால் கண்டு பிடித்துச் சொன்ன பிறகுதான் மக்கள் ஏற்றுக் கொண்டனர்?
**பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கலிலியோ**

541. மேலை நாட்டினர் உலகம் உருண்டையானது என்று கண்டறிவதற்கு முன்பே திருவள்ளுவர் கண்டறிந்து அதற்கு குறளும் எழுதியுள்ளார் அந்தக் குறள் யாவை?
**'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை'**
- குறள், 103

542. வானவெளியில் மிகப்பெரிய வீண்மீன் ________ ஆகும்.
**ஞாயிறு**

543. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ________ என்று ஞாயிற்றைப் போற்றியுள்ளது.
**ஞாயிறு போற்றுதல் ஞாயிறு போற்றுதல்**

544. ஞாயிற்றைச் சுற்றிய பாதையை ______ என்று பழந்தமிழர் கூறியுள்ளார்.
**ஞாயிறு வட்டம்**

545. செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் இவை எந்த நூலின் வரிகள்?
**புறம், 30**

546. தானே ஒளிவிடக்கூடிய ஞாயிற்றை ________ என்று பண்டைத் தமிழர் குறிப்பிட்டுள்ளனர்.
**நாள்மீன்**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

547. ஞாயிற்றிடமிருந்து ஒளிபெற்று ஒளி விடக்கூடியவற்றை ________ என்று பண்டைத் தமிழர் குறிப்பிட்டுள்ளனர்.

**கோள்மீன்**

548. மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல் காதலை வாழி மதி.

- குறள் 118

இக்குறள் எக்கருத்தை வெளிப் படுத்துகிறது?

**திங்கள் தானே ஒளிவிசுவதில்லை என்று வானியல் உண்மையைத் திருக்குறள் வெளிப்படுத்துகிறது.**

545. திங்களைப் பாம்பு கொண்டற்று (குறள் 1146)

என்னும் குறள் தொடர் எதைப் பற்றியதாகும்

**திங்கள் மறைப்பு (சந்திரகிரகணம்)**

546. செவ்வாய்க் கோள் எந்நிறத்தைக் கொண்டது

**செந்நிறம்**

547. வெள்ளிக்கோளில் வெள்ளித்தாது இருப்பதை அறிவியல் ஆய்வு புலப்படுத்தி, வெள்ளியின் நிறம் ________ என்று அறிவித்துள்ளன.

**வெண்மை நிறம்**

548. ஞாயிறு உதயத்திற்கு முன்பே வெள்ளி எழுந்து விடியலை உணர்த்துவதால் இதனை ________ என்றனர்.

**விடிவெள்ளி**

549. புதிதாகக் கண்டறிந்த கோள் ________ என வழங்கப்பட்டது?

**புதன்**

550. புதன்கோளைப் புதிதாகக் கண்டறிந்த தால் இதற்கு மற்றொரு பெயர் உண்டு. அது என்ன?

**அறிவன்**

551. ‘வியா’ என்பதன் பொருள் என்ன?

**பெரிய, நிறைந்த**

552. வானில் பெரிய கோளாக வலம் வருவதையே ________ என்று அழைக்கின்றனர்.

**வியாழன்**

553. சனிக்கோளைக் ____ என்றழைக்கப்படு கிறார்கள்.

**காரிக்கோள்**

554. காரிக்கோளில் எது இருப்பதாக இன்றைய அறிவியல் ஆய்வு கூறுகிறது

**கந்தகம்**

555. தூமகேதுவை ________ என்றும் கூறுவர்.

**வால்நட்சத்திரம்**

556. ‘வலவன் ஏவா வானவூர்தி’ - இது எந்த நூலில் உள்ள வரிகள்?

**புறம், 27:8**

557. வானூர்தி ஓட்டுகிறவனைத் தமிழில் ________ என அழைக்கிறார்கள்.

**வலவன்**

## கலீலியோ கலிலி

558. ‘கலீலியோ’ எந்த ஆண்டில் பிறந்தார்?

**1564 ஆம் ஆண்டு பிப்ரவரி15 திங்கள் கிழமை**

559. கலிலியோவின் தந்தை பெயர் என்ன

**வின்சென்சோகலீவி**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

560. கலிலியோ தம் இளமைக் காலத்தில் இருந்து எதன் மீது மிகுந்த ஆர்வம் உடையவராய் விளங்கினார்?

**இயற்கை அறிவியல்**

561. கடிகாரத்தின் பெண்டுலத்தை. ஊசலை (ஊசல்விதி) அமைத்து நேரத்தைக் கணக்கிடும் முறையைக் கண்டறிந்தவர் யார்?

**கலிலியோ கலிலி**

562. பைசா நகரப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் கலிலியோவின் முதற் கண்டுபிடிப்பு யாது?

**ஊசல் விதி**

563. கலிலியோ தம்முடைய இருபத்தைந்தாம் அகவையிலேயே பைசாநகரப் பல்கலைக்கழகத்தில் ________ ஆகப் பணியமர்த்தப்பட்டார்

**கணிதப் பேராசிரியர்**

564. எந்த ஆண்டில் கலிலியோ கணித விரிவுரையாளராகப் பணியாற்றினார்?

**1592 ஆம் ஆண்டு**

565. எந்தப் பல்கலைக்கழகத்தில் கணித விரிவுரையாளராகக் கலிலியோ பணியாற்றினார்?

**பதுவா பல்கலைக்கழகம்**

566. கலிலியோ எதற்கு அளவியை முதன் முதலாக உருவாக்கினார்?

**காற்று, வெப்பம்**

567. கலிலியோவிற்கு முன்பு வானியல் பற்றிய கொள்கைகளை வெளியிட்டவர் யார்?

**அரிஸ்டாடில்**

568. ________என்ற வானியலாளரும் நிலம் அண்டத்தின் மையப்பகுதி என்றும் அஃது அசையாதது நிலையானது என்றும் கூறினார்.

**தாலமி என்ற வானியலாளர்**

569. சூரியனைச் சுற்றிய புவி நகர்கிறது என்பது எந்த வானியல் அறிஞரின் கொள்கையாகும்?

**வானியல் அறிஞர் கோபர்நிகசின்**

570. எந்த ஆண்டில் தொலை நோக்கியை அமைத்து விண்வெளியை ஆய்வு செய்தார்?

**1610 ஆம் ஆண்டு**

571. ________ என்பது பலகோடி விண்மீன் களின் தொகுதி என்று மெய்ப்பித்தார்

**பால் வீதி**

572. நிலாவின் மேற்பரப்பு எது நிறைந்துள்ள தாக கலிலியோ தொலைநோக்கி மூலம் கண்டறிந்து கூறினார்?

**கரடுமுரடானது, மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்துள்ளது**

573. எந்த அறிஞர் அண்டத்தின் மையம் பூமியன்று, சூரியனே என்றும் சூரியனைப் பூமியும் பிற கோள்களும் சுற்றி வருகிறது என்றும் கூறியவர்?

**அறிஞர் கோபர்நிகசு**

574. வியாழன் கோளை எத்தனை சிறு கோள்கள் சுற்றி வருகின்றன?

**நான்கு**

575. கலிலியோவை எந்த ஆண்டில் வீட்டுச் சிறை வைத்தனர்?

**1616 ஆம் ஆண்டு**

576. கி.பி. 1632 இல் உலகத்தின் முதன்மையான இரு முறைமைகளைப் பற்றிய உரையாடல் என்ற நூலை எழுதியவர் யார்?

**கலிலியோ**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

577. புதிய அறிவியலைச் சார்ந்த இரு உரையாடல் என்ற நூலைக் கலிலியோ எந்த ஆண்டு எழுதி வெளியிட்டார்?
**கி.பி.1638 ஆம் ஆண்டு**

587. கலிலியோ நூல்களைக் கொண்டு யார் தம்முடைய கொள்கைகளை உருவாக்கினார்?
**ஐசக் நியூட்டன்**

588. கலிலியோ எந்த ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்?
**கி.பி.1642 ஆம் ஆண்டு, சனவரி திங்கள் கிழமை**

## வேற்றுமை

589. "முருகன் வந்தான்" - இத்தொடரில் முருகன் என்பது என்ன?
**எழுவாய்**

590. "முருகனைப் பார்த்தான்" - இத்தொடரில் முருகன் என்பது என்ன?
**செயப்படுபொருள்**

591. "முருகனால் வரையப்பட்டது" - இத் தொடரில் முருகன் என்பது என்ன?
**எழுவாயைச் செயப்படுபொருளாகவும் கருத்தாவாகவும் வேறுபட்டுள்ளது**

592. பெயர்கள் வேறுபட்டு வந்தால் ________ எனப்படும்.
**வேற்றுமை**

593. எழுவாய் வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றுள் ஒன்றைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தால் அது ________ அல்லது ________ எனப்படும்.
**எழுவாய் வேற்றுமை, முதல் வேற்றுமை**

594. "முருகேசன் செடியை நட்டான்" இத் தொடரில் முருகேசன் என்பது எழுவாய் செடி என்பது பெயர்ச்சொல். அ∴து 'ஐ' என்னும் உருபை ஏற்றுச் செயப்படுபொருளை உணர்த்துவதால் இது ________ எனப்படும்
**இரண்டாம் வேற்றுமை**

595. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை
**ஆல், ஆன், ஒடு, ஓடு**

596. ஆல், ஆன், உருபுகள் ________ ஆகிய இருபொருள்களிலும் வரும்.
**கருவி, கருத்தா**

597. கருவி எத்தனை வகைப்படும்?
**இரண்டு**

598. கருவியின் வகைகளை கூறுக?
**முதற்கருவி, துணைக்கருவி**

599. "கருத்தா" எத்தனை வகைப்படும்?
**இரண்டு**

600. கருத்தாவின் வகைகளைக் கூறுக?
**இயற்றுதல் கருத்தா, ஏவுதல் கருத்தா.**

601. ஓர் எழுவாயின் செயலுடன் பிறிதொன்றனது செயலும் உடனிகழ்வதை ________ என்பர்.
**உடனிகழ்ச்சிப் பொருள்**

602. நான்காம் வேற்றுமை உருபு யாது?
**'கு'**

603. 'கு'- வுக்குப் பதிலாக எவை சொல்லுருபு களாக வரும்?
**பொருட்டு, நிமித்தம்**

604. ஐந்தாம் வேற்றுமை உருபுகள் யாவை?
**இல், இன்**

605. ஐந்தாம் வேற்றுமைக்குரிய சொல்லுரு புகள் யாவை?
**இருந்து, நின்று, விட, காட்டிலும்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

606. ஆறாம் வேற்றுமை உருபுகள் யாவை?

**அது, ஆது, அ**

607. ஆறாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகள் யாவை?

**உடைய**

608. ஏழாம் வேற்றுமைக்குரிய உருபுகள் யாவை?

**கண், கால், மேல், கீழே, இடம், இல்**

609. எட்டாம் வேற்றுமை உருபு எது

**விளிவேற்றுமை**

610. படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக்கி அழைக்க எந்த வேற்றுமை பயன்படுகிறது?

**விளிவேற்றுமை**

611. **பொருத்துக**

1. காட்டை அழித்தான் - ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு
2. புவியைப் போன்றவன் - பொருட்டு
3. கூலியின் பொருட்டு வேலை - அழித்தல்
4. என்னுடைய வீடு - ஒத்தல்

விடை

1. **அழித்தல்**
2. **ஒத்தல்**
3. **பொருட்டு**
4. **ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு**

612. பொருத்துக

1. முதல் வேற்றுமை - கிளையின் கண் காக்கை
2. மூன்றாம் வேற்றுமை - கல்வியில் பெரியவர் கம்பர்
3. ஐந்தாம் வேற்றுமை - மரத்தால் செய்தது

விடை

1. **கல்வியில் பெரியவர் கம்பர்**
2. **மரத்தால் செய்தது**
3. **கிளையின் கண் காக்கை**

## இயல் எட்டு
## செய்யுள்பகுதி - வில்லிபாரதம்

613. வான் பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன் என்ற பாடலை எழுதியவர் யார்?

**வில்லிபுத்தூரார்**

614. வில்லிபாரதம் பாடலை எழுதியவர் யார்?

**வில்லிபுத்தூரார்**

615. வில்லிபுத்தூராரின் தந்தை பெயர் என்ன?

**வீரராகவர்**

616. வில்லிபுத்தூராரை ஆதரித்தவர் யார்?

**வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்**

617. வில்லிபாரதம் எத்தனை பருவத்தைக் கொண்டது?

**பத்துப்பருவம்**

618. வில்லிபாரதம் எத்தனை விருத்தப் பாடலால் ஆனது

**நாலாயிரத்து முந்நூற்றைம்பது**

619. வில்லிபாரத்தில் எட்டாம் பருவம் எந்தப் பருவத்தில் இடம் பெற்றுள்ளது?

**கன்னபருவம்**

620. ‘வான்பெற்ற நதி’ - என்பதன் பொருள் யாது?

**கங்கையாறு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

621. 'இருநிலம்' - என்பதன் பொருள் யாது?

**பெரிய உலகம்**

622. 'ஊன்' - என்பதன் பொருள் யாது?

**தசை**

623. சொற்பொருள் கூறுக

1. களபம் - சந்தனம்
2. துழாய் அலங்கல் - துளசிமாலை
3. புயம் - தோள்
4. தைவந்து - தொட்டுத்தடவி
5. பகழி - அம்பு
6. நாமம் - பெயர்

624. வில்லிபுத்தூராரின் காலம் எது?

**பதினான்காம் நூற்றாண்டு**

## யார் கவிஞன்

625. யார் கவிஞன் பாடலின் ஆசிரியர் யார்?

**முடியரசன்**

626. கவிஞர் முடியரசரின் இயற்பெயர் யாது?

**துரைராசு**

627. முடியரசரின் பெற்றோர் பெயர் என்ன?

**சுப்பராயலு - சீதாலெட்சுமி**

628. முடியரசரின் பிறந்த ஊர் எது?

**தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம்**

629. முடியரசர் இயற்றிய நூல்கள் யாவை?

**பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம் முடியரசன் கவிதைகள் முதலியன.**

630. முடியரசரின் பணி என்ன

**தமிழாசிரியர், மீ.சு. உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி.**

631. பறம்புமலையில் நடந்த விழாவில் 'கவியரசு' என்னும் பட்டம் எந்த அடிகளாரால் வழங்கப்பெற்றது?

**குன்றக்குடி அடிகள்**

632. பூங்கொடி என்னும் காவியத்துக்காக எந்த ஆண்டில் தமிழக அரசு முடியரசருக்குப் பரிசு வழங்கியது?

**1966 ஆம் ஆண்டு**

633. முடியரசரின் காலம் எது

**1920-1998**

634. சிறப்பு

**முடியரசன், பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தவர். தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர் ஆவர்.**

635. சொற்பொருள்

1. **கைம்மாறு - பயன்**
2. **மாசற்ற - குற்றமற்ற**
3. **தேட்டை - திரட்டிய செல்வம்**
4. **மீட்சி - மேன்மை**
5. **மாள நீங்க**

## தேவநேயப் பாவாணர்



636. மன்னிப்பு என்பது உருதுச் சொல்; பொறுத்துக் கொள்க என்பது தமிழ்ச் சொல் என்று விளக்கியவர் யார்?

**தேவநேயப்பாவாணர்**

637. தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் யார்?

**கால்டுவெல்**

638. தனித்தமிழுக்கு வித்திட்டவர் யார்?

**பரிதிமாற்கலைஞர்**

639. தேவநேயப்பாவாணரின் பெற்றோர் பெயர் என்ன?

**ஞானமுத்து - பரிபூரணம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

640. தேவநேயப்பாவாணர் பிறந்த ஊர் எது?
**சங்கரன்கோவில்**

641. தேவநேயப்பாவாணர் வாங்கிய பட்டங்கள் என்ன?
**பண்டிதர் புலவர், வித்துவான், முது கலைத்தமிழ், பி.ஓ.எல்.,**

642. தேவநேயப்பாவாணரின் காலம் என்ன?
7.02.1902 - 15.01.1981

643. தேவநேயப்பாவாணரின் சிறப்புகள் என்ன?
**செந்தமிழ்ச் செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ்ப் பெருங்காவலர் என 174 சிறப்புப் பெயர்கள்**

644. கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெறுவேண்டும் என்றும் பிறப்பு இறப்புத் தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெறவேண்டும் என்றும் யார் வலியுறுத்தினார்?
**தேவநேயப்பாவாணர்**

645. தேவநேயப்பாவாணர் எத்தனை நூல்களைப் படைத்துள்ளார்?
**நாற்பத்து மூன்று**

646. தேவநேயப்பாவாணரை எந்த ஆண்டு சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராகப் பணியமர்த்தினார்கள்?
08.05.1974

647. 'மன்னிப்பு' எந்த மொழிச்சொல்?
**உருதுச்சொல்**

648. அரசின் உதவியோடு எத்தனை ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்?
**இருநூற்றுக்கும் மேற்பட்ட**

649. தேவநேயப்பாவாணரின் பெயரில் எந்த ஊரில் அண்ணாசாலையில் நூலகம் செயல்பட்டு வருகிறது?
**சென்னை**

650. எவ்வூரில் பாவாணர் கோட்டம் அவர்தம் முழு உருவச்சிலை, அவர் பெயரில் நூலகம் ஆகியவை அமைக்கப் பட்டுள்ளது?
**இராசபாளையத்திற்கு அருகிலுள்ள முறம்பில்**

651. மதுரையில் 05.01.1981 - அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் எந்தத் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்?
**மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்**

## புணர்ச்சி - இயல்பு, விகாரம்

652. நிலைமொழியும் வருமொழியும் சேரும் போது எவ்வித மாற்றமும் ஏற்பட வில்லையென்றால் அது ________ புணர்ச்சி ஆகும்.
**இயல்புப்புணர்ச்சி**

653. பொன்+வளையல்=பொன் வளையல் - இணையும் இருசொற்களில் முதல் சொல் ________ எனப்படும்.
**நிலைமொழி**

654. நிலைமொழியின் இறுதி எழுத்துப் புள்ளியாக (மெய்யாக) இருந்தால் அதை ________ எனக் கூறுவர்
**மெய்யீறு**

655. நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் மெய்யாக இருந்தால் அவை ______ எனச் சொல்லப்படும்.
**உயிரீறு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

656. வருமொழியின் முதல் எழுத்து உயிர் மெய்யாக இருப்பின் அதை ________ என அழைப்பர்.

**மெய்முதல்**

657. வருமொழியின் முதல் எழுத்து உயிராக இருப்பின் அதை ________ என அழைப்பர்.

**உயிர்முதல்**

658. நிலைமொழியும் வருமொழியும் சேரும் போது மாற்றங்கள் ஏற்படுமானால் அதனை ________ என்பர்.

**விகாரப்புணர்ச்சி**

659. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

**மூன்று**

660. விகாரப்புணர்ச்சியின் மூன்று வகைகளை எழுதுக.

**1. தோன்றல் 2. கெடுதல் 3. திரிதல்**

661. இயல்புப்புணர்ச்சிக்கு (எ.கா) கூறுக?

**வாழை+மரம் = வாழைமரம்**

662. விகாரப்புணர்ச்சி (எ.கா) தருக?

**வாழை + பழம் = வாழைப்பழம்**

663. தோன்றல் புணர்ச்சிக்கு எ.கா தருக?

**திரு + குறள் = திருக்குறள் (க்)**

664. கெடுதல் புணர்ச்சிக்கு எ.கா தருக?

மரம் + வேர் = மரவேர் (ம்)

665. திரிதல் புணர்ச்சிக்கு எ.கா தருக?

**பல் + பொடி = பற்பொடி (ற்)**

666. புணர்ச்சி எத்தனை வகைப்படும் அவை யாவை?

**இரண்டு- 1.இயல்பு 2.விகாரம்**

## மொழித்திறன் பயிற்சி

667. வல்லினம் மிகும் இடங்கள்:-

1. அ இ என்னும் சுட்டெழுத்துகளின் பின் வல்லொற்று மிகும்
   (எ.டு) அ + கனி = அக்கனி
   இ + புத்தகம் = இப்புத்தகம்
2. எ என்னும் வினை எழுத்தின் பின் வல்லொற்று மிகும்.
   (எ.டு) எ+பொருள் = எப்பொருள்
3. அந்த, இந்த என்னும் சுட்டுத் திரிபுகளின் பின் வல்லொற்று மிகும்.
   (எ.டு) அந்த+பையன்=அந்தப்பையன்
   இந்த+பள்ளி = இந்தப்பள்ளி
4. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வல்லொற்று மிகும்.
   (எ.டு) அப்படி+கேள்=அப்படிக்கேள்
   இப்படி+செய் = இப்படிச்செய்
   எப்படி+ படித்தான் = எப்படிப்படித்தான்
5. அவ்வகை, இவ்வகை, எவ்வகை எனும் சொற்களின் பின் வல்லொற்று மிகும்.
   (எ.டு) அவ்வகைப்பேச்சு
6. இனி, தனி, மற்று, மற்ற, மற்றை எனும் சொற்களின் பின் வல்லொற்று மிகும்
   (எ.டு) இனிப்பேசினான்
7. இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரியின் பின் வல்லொற்று மிகும்.
   (எ.டு) படத்தைப் பார்த்தான்
   அவனுக்குக் கொடு
8. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடந்தொக்கத் தொகையின் பின்னும் வல்லொற்று மிகும்.
   (எ.டு) தயிர்க்குடம்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

9. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடந்தொக்கத் தொகையின் பின்னும் வல்லொற்று மிகும்.
(எ.டு) பட்டுச்சேலை

10. நான்காம் வேற்றுமையில் அஃறிணைப் பெயர்களின் பின்னும் வல்லொற்று மிகும்.
(எ.டு) கூலித்தொழில்

11. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையின் பின்னும் வல்லொற்று மிகும்.
(எ.டு) விழிப்புனல்

12. ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையின் பின்னும் வல்லொற்று மிகும்.
(எ.டு) நீர்ப்பாம்பு

13. ஏழாம் வேற்றுமைத் தொகையின் பின்னும் வல்லொற்று மிகும்.
(எ.டு) குடிப்பிறந்தார்

## இயல் ஒன்பது
## செய்யுள் பகுதி - கம்பராமாயணம்

668. கம்பராமாயணம் பாடலை எழுதியவர் யார்?
**கம்பர்**

669. கம்பர் எந்த ஊரில் பிறந்தார்?
**நாகை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூர்**

670. கம்பரை ஆதரித்தவர் யார்?
**சடையப்ப வள்ளல்**

671. சடகோபரந்தாதி, ஏரெழுபது சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம் இந்நூல்களை இயற்றியவர் யார்?
**கம்பர்**

672. கம்பரின் காலம் என்ன?
**கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்றும் கூறுவர்**

673. கம்பர் வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவிய எந்நூலை இயற்றினார்?
**தமிழில் காப்பியம்**

674. கம்பர் இயற்றிய காப்பிய நூலுக்கு ______எனப் பெயரிட்டார்.
**இராமாவதாரம்**

675. கதை மாந்தரின் வடசொற் பெயர்களைத் ______ தமிழ்ப்படுத்திய பெருமைக்குரியவர் கம்பர்.
**தொல்காப்பிய நெறிப்படி**

676. கம்பராமாயணம் எத்தனை காண்டங்களையுடையது?
**ஆறு**

677. ஆறு காண்டங்களைக் கூறுக?
**1.பாலகாண்டம், 2. அயோத்தியா காண்டம், 3. ஆரணிய காண்டம், 4. கிட்கிந்தாகாண்டம், 5.சுந்தரகாண்டம், 6. யுத்தகாண்டம்**

678. கம்பராமாயணப் பாடல் எந்த காண்டத்து ஆற்றுப்படலத்தில் உள்ளது?
**பாலகாண்டம்**

679. எந்த மாநிலத்தில் பாயும் சரயு நதியின் வளம் கம்பராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது?
**உத்திரபிரதேச மாநிலம்**

680. தாது- என்பதன் பொருள் யாது?
**மகரந்தம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

681. சொற்பொருள்

1. போது - மலர்
2. பொய்கை - குளம்
3. பூகம் - கமுகம் (பாக்கு மரம்)

## விழுதும் வேரும்

682. விழுதும் வேரும்- இப்பாடலை இயற்றியவர் யார்?
**பாரதிதாசன்**

683. பாரதிதாசரின் இயற்பெயர் என்ன?
**கனக சுப்புரத்தினம்**

684. பாரதிதாசரின் பெற்றோர் பெயர் என்ன?
**கனகசபை - இலக்குமி**

685. பாரதிதாசன் பிறந்த ஊர் எது?
**புதுச்சேரி**

686. பாரதிதாசன் வாழ்ந்த காலம் எது
29.04.1891-21.04.1964

687. பாரதிதாசரின் சிறப்புப் பெயர்கள் என்ன?
**பாவேந்தர், புரட்சிக்கவிஞர்**

688. யாருடன் கொண்ட நெருங்கிய தொடர்பினால் பாரதிதாசன் எனத் தன் பெயரை அமைத்துக் கொண்டார்?
**பாரதியார்**

689. தூலம் போல் வளர் கிளைக்கு விழுதுகள் தூன்கள் என்ற பாடலை எழுதியவர் யார்?
**பாரதிதாசன்**

690. தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பாரதிதாசன் அவர்கள் எவ்வடிவில் தந்தார்?
**கவிதை**

691. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?
**பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு இருண்டவீடு, அழகின் சிரிப்பு கண்ணகி புரட்சிக் காப்பியம், குறிஞ்சித்திட்டுத் தமிழியக்கம்**

692. இங்கு இடம்பெற்றுள்ள பாடல் ______ என்னும் நூலில் 'விழுதும் வேரும்' என்னும் தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது?
**அழகின் சிரிப்பு**

693. திறல் - என்பதன் பொருள் யாது
**வலிமை**

694. மறவர் - என்பதன் பொருள் யாது
**வீரர்**

## காட்டுயிரிகள்

695. ஐம்பூதங்களைக் கூறுக?
**நிலம், நீர், தீ, காற்று, வானம்**

696. ஐம்பூதங்களில் ______, ______ இருவகையான பொருள்கள் உள்ளன.
**உயிருள்ள, உயிரற்ற**

697. மெய்யினால் அறியும் உயிர் எத்தனை அறிவுகளைக் கொண்டது?
**ஓரறிவு**

698. ஓரறிவு கொண்ட உயிரினங்களுக்கு எ.கா தருக?
**புல் மரம் போன்ற தாவரங்கள்**

699. மெய்-கண்- ஈரறிவு கொண்ட உயிரினங்களுக்கு எ.கா தருக?
**நத்தை, சங்கு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

700. மெய், வாய், மூக்கு, மூவறிவு கொண்ட உயிரினங்களைக் கூறுக?
**எறும்பு, கரையான், அட்டை**

701. ஐயறிவு என்பது எந்தெந்த அறிவுகளைக் கொண்டதாகும்?
**மெய், வாய், மூக்கு, கண், செவி**

702. ஐயறிவு கொண்ட உயிரினங்களுக்கு எ.கா தருக?
**விலங்கு, பறவை**

703. ஆறறிவு கொண்ட உயிரினங்களுக்கு எ.கா தருக?
**மனிதர்**

704. ஆறறிவு என்பது எந்தெந்த அறிவு களைக் கொண்டதாகும்?
**மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம்**

705. உயிரிகளின் ஆற்றலுக்கு அடிப்படை யாக விளங்குபவை எவை?
**தாவரங்கள்**

706. உலகிலேயே அதிக அளவு மழை பெறும் இடம் எது?
**அசாமில் மரங்கள் அடர்ந்துள்ள "சிரபுஞ்சி"**

707. அக்டோபர் முதல் வாரத்தை அரசு எவ்வாறு கொண்டாடி வருகிறது?
**வனவிலங்கு வாரம்**

708 வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
**1972 ஆம் ஆண்டு**

709. வனவிலங்குப் பாதுகாப்புச்சட்டம் எதைத் தடுக்கிறது?
**வனவிலங்குகளை வேட்டையாடுதல்**

710. நமது நாட்டில் எத்தனை வனவிலங்கு பாதுகாப்பு இடங்கள் உள்ளன?
**பதினேழு**

711. நமது நாட்டில் எத்தனை தேசிய வனவிலங்குப் பூங்காக்கள் உள்ளன?
**அறுபத்தாறு**

712. நமது நாட்டில் எத்தனை புகலிடங்கள் அமைந்துள்ளன?
**முந்நூற்று அறுபத்தெட்டு**

713. உலக வனவிலங்கு நாள் எப்போது கொண்டாடப்படுகின்றன?
**அக்டோபர், 4-ஆம் நாள்**

## சென்னை அருங்காட்சியகம்

714. அருங்காட்சியகம் எங்கு அமைந்துள்ளது?
**சென்னை, எழும்பூரில்**

715. சென்னை, எழும்பூர் அருங்காட்சியகம் எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது?
**கி.பி. 1851 ஆம் ஆண்டு**

716. அருங்காட்சியகத்தில் எத்தனை காட்சியகங்கள் உள்ளன
**பதின்மூன்று**

## புணர்ச்சி: உயிரீறு உடம்படுமெய், மெய்யீறு

717. உயிர் ஈற்றுச் சொல்முன் வல்லின எழுத்துகள் வந்தால் அதன் மெய் யெழுத்துகள் ______.
**மிகும்**

718. 'பல' - இச்சொல்லில் (ல்+அ=ல) எனப் பிரித்தால், இதில் அ ______ ஆகும்.
**உயிர் ஈறு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

719. இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும். எந்த நூலில் உள்ள வரிகள்?

**நன்னூல், 165**

## உடம்படுமெய்

720. நிலைமொழி ஈற்று உயிரும் வருமொழி முதல் உயிரும் இணையும் போது வ் அல்லது ய் இடையில் தோன்றினால் இதற்கு ______ என்று பெயர்

**உடம்படுமெய்**

721. பாடும் பாடல் - இத்தொடரில் பாடல் என்பது என்ன?

**வருமொழி**

## மொழித்திறன் பயிற்சி

722. வல்லினம் மிகா இடம்

1. கதை + சொன்னான் = கதை சொன்னான்
2. அழகனோடு + சென்றான் = அழகனோடு சென்றான்
3. வீட்டியிலிருந்து + பார்த்தான் = வீட்டியிலிருந்து பார்த்தான்
4. எனது + புத்தகம் = எனது புத்தகம்
5. சுடு + சோறு = சுடு சோறு
6. கல்வி + கேள்வி = கல்விகேள்வி
7. படித்த + பாடம் = படித்த பாடம்
8. கோழி + கொக்கரித்தது = கோழி கொக்கரித்தது
9. வாழ்க + செந்தமிழ் = வாழ்க செந்தமிழ்
10. அது, இது, எது, என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது

அது + தான் = அதுதான்

அன்று, இன்று, என்று எனும் சொற்களுக்குப் பின் மிகாது (எ.டு) அன்று கொடுத்தேன்.

11. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.

(எ.டு) எத்தனை + பொருள் = எத்தனைபொருள்

12. படி என்று முடியும் வினையெச்சம் உகரவீற்று வினையெச்சம் எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது.

(எ.டு) வரும்படி கூறினாள்

723. பலவாண்டு இச்சொல் பிரியும் முறை ______

**பல + ஆண்டு**

724. பனை + ஓலை - இரண்டிற்கும் இடையில்______ தோன்றும்?

**ய்**

725. இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ்விருமையும் உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும் இப்பாடல் எந்த நூலில் வந்துள்ளது

**நன்னூல்**

## மெய்யீற்றுப்புணர்ச்சி

726. நூல்+ஆடை - இதில் நூல் என்பது நிலைமொழி ஆடை என்பது வருமொழி எனவே நிலைமொழியின் ஈறு மெய்யாக இருந்தால் அதை ______ என அழைப்பர்.

**மெய்யீறு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

727. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. இவ்வரி எந்நூலில் வந்துள்ளது?

**நன்னூல் 204**

728. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் இந்த வரி எந்நூலில் வந்துள்ளது.

**நன்னூல் 205**

## இயல்பத்து - செய்யுள்பகுதி முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் வருகைப்பருவம்

729. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழை இயற்றியவர் யார்?

**குமரகுருபரர்**

730. குமரகுருபரரின் பெற்றோர் பெயர் என்ன?

**சண்முக சிகாமணிக் கவிராயர் சிவகாம சுந்தரியம்மை**

731. குமரகுருபரர் பிறந்த ஊர் எது?

**திருவைகுண்டம்**

732. குமரகுருபரர் எந்தெந்த மொழிகளில் புலமை மிக்கவராய்த் திகழ்ந்தார்?

**தமிழ், வடமொழி, இந்துஸ்தானி**

733. திருப்பணந்தாளிலும், காசியிலும குமரகுருபரர் தம் பெயரால் என்ன நிறுவி உள்ளார்?

**மடம்**

734. பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்?

**இரண்டு**

735. இருவகையான பிள்ளைத்தமிழை எழுதுக

1. **ஆண்பாற்பிள்ளைத்தமிழ்**
2. **பெண்பாற்பிள்ளைத்தமிழ்**

736. பிள்ளைத்தமிழில் எத்தனை பருவங்கள் உள்ளன?

**பத்துப்பருவம்**

737. பத்துப்பருவங்களில் எத்தனை பருவங்கள் இருபாற் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை ஆகும்?

**ஏழு பருவங்கள்**

738. ஏழுவகையான பருவங்களைக் கூறுக?

**காப்பு, செங்கீரை, தால் சப்பாணி முத்தம் வருகை, அம்புலி**

739. பத்துப்பருவங்களில் ஆண்பாலுக்குரிய இறுதி மூன்று பருவங்களை எழுதுக?

**சிற்றில், சிறுபறை, சிறுதேர்**

740. பத்துப்பருவங்களில் பெண்பாலுக்குரிய இறுதி மூன்று பருவங்களை எழுதுக?

**அம்மானை, கழங்கு (நீராடல்), ஊசல்**

741. புள்ளிருக்கு வேளுரில் (வைத்தீசுவரன் கோவில்) எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் பெயர் என்ன?

**முத்துக்குமாரசுவாமி**

742. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் எவை?

**கந்தர் கலிவெண்பா, மதுரை மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, நீதிநெறி விளக்கம்.**

743. குமரகுருபரர் எவ்வூரில் இறைவனடி சேர்ந்தார்?

**காசி**

744. குமரகுருபரரின் காலம் என்ன?

**பதினேழாம் நூற்றாண்டு**

745. குறிப்பு

நமக்குப் பாடப்பகுதியாக உள்ள பாடல் வருகைப் பருவத்தில் இடம்பெற்றுள்ளது. இது நூலின் ஆறாவது பருவமாகும்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் நிகழ்வது; தளர்நடையிட்டு வரும் குழந்தையின் திறப்புகளை எடுத்துக் கூறி அருகில் வருக வருக என வாய்குளிர மனங்குளிர அழைக்கும் பாடல்களைக் கொண்டதாய் இப்பருவம் அமைந்துள்ளது.

746. இறைவனையோ நல்லாரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்படும் சிற்றிலக்கிய வகை ______

**பிள்ளைத்தமிழ்**

747. சொற்பொருள்

1. மதி - அறிவு
2. அமுத கிரணம் - குளிர்ச்சியான ஒளி
3. உதயம் - கதிரவன்
4. மதுரம் - இனிமை
5. நறவம் - தேன்
6. கழுவிய துகளர் - குற்றமற்றவர்
7. சலதி - கடல்
8. அலகு இல் - அளவில்லாத
9. புவனம் - உலகம்
10. மதலை - குழந்தை
11. பருதிபுரி - கதிரவன் வழிபட்ட இடம் (வைத்தீசுவரன் கோவில்)

## இலக்கியத்தில் நகைச்சுவை

748. நகைச்சுவை தோன்றுவதற்கான காரணம் என்னவென்று தொல்காப்பியம் கூறுகிறது?

**எள்ளல், இனிமை, அறியாமை, மடமை**

749. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம் பகலும்பாற் பட்டன் றிருள் இது எந்நூலின் வரிகள்?

**குறள் 999**

750. நம் உடலில் ______, ______ ஏற்படுவதற்கும் நல்ல நகைச்சுவை துணை புரிகின்றது.

**குருதிஓட்டம் கூடுவதற்கும், மூளையில் புத்துணர்ச்சி**

751. இவ்வுலகில் நகைக்கத் தெரியாதவர்களை என்ன வென்று கருதப் படுவார்கள்?

**அரைமனிதர்கள்**

752. அஞ்சலை அரக்க! பார்விட் டந்தர மடைந்தா னன்றே வெஞ்சின வாலி, மீளான், வாலும் போய் வீழ்ந்ததன்றே.... இவ்வரிகள் எந்நூலில் இடம் பெற்றுள்ளன?

**கம்பராமாயணம்**

753. செயங்கொண்டார் ______ இருபொருள் தருமாறு சொற்களைப் பாட்டில் அமைத்துப் பாடுவதில் வல்லவர் ஆவர்

**கவிகாளமேகம்**

754. கவி என்பதற்கு ______ என்னும் பொருள்.

**குரங்கு**

நாங்கள் கவிராசர்கள் என்று செருக்குடன் கூறிய புலவர்களின் செருக்கை அடக்கும் படி, கவி என்பதற்குக் குரங்கு என்னும் பொருள் தோன்றுமாறு.

வாலெங்கே? நீண்டு எழுந்த வல்லுகிரெங்கே நாலு காலெங்கே



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

ஊன்வடித்த கண்ணெங்கே? சாலப் புவிராயர் போற்றும் புலவர்காள்! நீங்கள் கவிராயர் என்றிருந்தக் கால்.
எனும் பாடலை செயங்கொண்டார் பாடினார்.

755. இக்காலக் கவிஞர்கள் தாங்கள் கையாளுகின்ற எதனைக்கொண்டு நகைச்சுவையை அழுகுற அமைத்துக் காட்டுகிறார்கள்?

**கற்பனைகளிலும், உவமைகளிலும்**

756. கவிஞர் பாரதிதாசன் எதனுடைய தோகை நீண்டு இருப்பதை நகைச் சுவையாக கூறினார்?

**மயில்**

கவிஞர் பாரதிதாசன் மயிலின் கழுத்து நீண்டு இருப்பதை நகைச்சுவையாக விளக்குகிறார்.

அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
இயற்கை யன்னை இப்பெண் கட்கெல்லாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தான்:
கறையொன் றில்லாக் கலாப மயிலே!
உனக்கோ நிமர்ந்து நிற்க நீள் கழுத்து அளித்தான்.

757. நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிக விநாயகனாரின் ______ ஒரு நகைச் சுவைக் களஞ்சியம் என்பர்.

**மருமக்கள் வழி மான்மியம்**

படிக்கச் சென்றவன் எதையெல்லாம் பணயம் வைக்கிறான் என்பதை நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிக விநாயகனார் பாடியுள்ளார்.

ஆமை வடைக்காய் அரைஞாண் பணயம்
போளிக் காகப் புத்தகம் பணயம்
சீடைக் காகச் சிலேட்டு பணயம்
முறுக்குக் காக மோதிரம் பணயம்
காப்பிக் காகக் கடுக்கன் பணயம்
கூத்துக் காகக் குடையும் பணயம்

758. 'முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன்' - எனத் தொடங்கும் நகைச்சுவை உணர்வு மிக்க பாடல் எதில் இடம் பெற்றுள்ளது?

**நாட்டுப்புறப்பாடல்**

759. நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் ______ தோன்றும்

**இருளாய்**

## யாப்பு அணி

760. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்

**ஐவகைப்படும்**

761. ஐந்து வகையான தமிழ் இலக்கணத்தை எழுதுக?

**எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம்**

762. 'யாப்பு' என்பதன் பொருள் யாது?

**கட்டுதல்**

763. எலும்பு தசை நரம்பு முதலியவற்றால் உடல் கட்டப்பட்டு இருப்பது போலச் செய்யுளுக்கு உரிய உறுப்புகளைச் கொண்டு பாடலை உருவாக்குவதை ______ என்கிறோம்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

**யாப்பு**

764. செய்யுள் உறுப்புகள் எத்தனை வகைப்படும்?

**ஆறு**

765. ஆறு வகையான செய்யுள் உறுப்புகளை எழுதுக?

**எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை**

766. எழுத்து அசை சீர் தளை அடி தொடை இந்த ஆறும் எதன் உறுப்புகள் ஆகும்?

**யாப்பு**

767. ஓரெழுத்து தனித்தோ இணைந்தோ ஒலித்தால் அது ______ எனப்படும்.

**அசை**

768. அசை எத்தனை வகைப்படும்?

**இரண்டு**

769. இரு வகையான அசையின் வகைகளை விளக்குக.

**நேரசை, நிரையசை**

770. அசைகள் பல சேர்ந்து அமைந்தால் அது ______ எனப்படும்.

**சீர்**

771. சீர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்த அமைவது ______ எனப்படும்.

**தளை**

772. இரண்டு அல்லது பல சீர்கள் சேர்ந்து அமைவது ______ எனப்படும்.

**அடி**

773. அடிகள் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து அடுக்கிப் பாடுவது ______ எனப்படும்.

**பா**

774. பா-வின் வகைகள் எத்தனை வகைப்படும்?

**நான்கு**

775. நான்கு வகையான பா வகைகளைக் கூறுக?

**வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா**

776. எதனை வேறுபடுத்தி அறிவதற்காக நால்வகைப் பாக்கள் அமைக்கப் பட்டுள்ளன?

**ஓசைநயம்**

777. ஆயிரத்து முந்நூற்று முப்பது திருக்குறளும் வெண்பா ஆகும். ஆனால் இரண்டடிகள் மட்டும் வருவதால் இதைக் ______ என அழைப்பர்.

**குறள் வெண்பா**

778. குறள்வெண்பாவிற்கு எ.கா தருக?

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை**

779. குறிப்பு

கண் இமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்
எண்ணி நறுந்தா மரை விரும்பும்
நன்னுதலே அன்னாள் அறிந்தாள்
நளன் தன்னை ஆங்கு.

-இப்பாடல் **நேரிசை வெண்பா** ஆகும்

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

- இப்பாடல் **கலிப்பா** ஆகும்.

வளையாடு மலர்ச்சுனை நீரினிடை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

வளையாடிகை மங்கைய ரன்ன மென
விளையாடுவ ரோடுவர் கூடுவர்பின்
விளையாடுவர் பைங்கிளி மேவுறவே!

- இப்பாடல் **வஞ்சிப்பா** ஆகும்.

## அணியிலக்கணம்

780. அணி என்பதன் பொருள் யாது?

**அழகு**

781. புலவர்கள், பொருளழகும் சொல்லழகும் தோன்றக் கவிதைகளை இயற்றிக் கற்போரை மனங்குளிரச் செய்யும் இலக்கணத்தை ______ என்பர்.

**அணியிலக்கணம்**

782. அணியிலக்கணம் குறித்த தமிழ் நூல்கள் யாது?

**தண்டியலங்காரம் மாறனலங்காரம்**

783. உவமை உவமேயம் இரண்டும் தனித்தனியாக எடுத்துக்காட்டி இடையில் உவம உருபு மறையுமாறு அமைக்கப்பட்டிருந்தால் அது ______ அணி ஆகும்.

**எடுத்துக்காட்டு உவமை அணி**

784. உவமானம் வேறு உவமேயம் வேறு எனத் தோன்றாத வகையில் உவமானத்தின் இயல்புகளை உவமேயத்தின் மேல் ஏற்றிக் கூறுவது ______ அணியாகும்.

**உருவக அணி**

785. மதிமுகம் - உருவகமாக மாறும்போது ______ எனவரும்.

**முகமதி**

## 9 ஆம் வகுப்பு
## இயல் - ஒன்று
## செய்யுள் - வாழ்த்து

1) உலகம் யாவையும் தாமுள வாக்கலும் - என்ற வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?

**கம்பர்**

2) சொற்பொருள்:-

1. உளவாக்கல் - உண்டாக்குதல், (படைத்தல்)
2. நிலைபெறுத்தல் - காத்தல்
3. நீக்கல் - அழித்தல்
4. நீங்கலா - இடைவிடாது
5. அலகிலா - அளவற்ற
6. அன்னவர் - அத்தகைய இறைவர்
7. தலைவர் - இறைவர்
8. சரண் - அடைக்கலம்

3) இலக்கணக் குறிப்பு:-

1 யாவையும் - உம் - முற்றும்மை: ஆக்கல், நீக்கல்,
2. விளையாட்டு - தொழிற் பெயர்கள்
3. அலகிலா விளையாட்டு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

4) பகுபத உறுப்பிலக்கணம்:-

உடையா - உடை + ய் + ஆர்
உடை - பகுதி
ய் - சந்தி
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

5) **ஆசிரியர் குறிப்பு**:-

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூரில் கம்பர் பிறந்தார். இவர் கம்பராமாயணம், ஏர் எழுபது, சிலை எழுபது, சரசுவதி



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் குலோத்துங்கச் சோழனின் அவைப்புலவராக விளங்கினார். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றார். இவர் கவிச்சக்கரவர்த்தி எனவும் கல்வியில் பெரியர் கம்பர் எனவும் போற்றப் படுகிறார். இவரின் காலம் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு எனக் கூறுவர்.

6) நூற்குறிப்பு:-

வடமொழியில் வான்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழில் கம்பர் எழுதியதே கம்பராமாயணம். கம்பர், இந்நூலுக்கு இராமாவதாரம் என்றே பெயரிட்டார். இது பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணியகாண்டம், கிடகிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம் என ஆறு காண்டங்களை உடையது. கம்பராமாயணப் பாலகாண்டத்திலுள்ள முதற்பாடல் வாழ்த்துப் பாடலாக இடம் பெற்றுள்ளது.

7) பொருத்துக:-

1. உளவாக்கல் - படைத்தல்
2. நிலைபெறுத்தல் - காத்தல்
3. நீக்கல் - அழித்தல்
4. தலைவர் - இறைவர்

8) நிரப்புக:-

1. கல்வியிற் பெரியர் ______ என அழைக்கப் பெறுபவர்.

**கம்பர்**

2. கம்பராமாயணம் ______ காண்டங்களை உடையது.

**ஆறு**

3. கம்பர் பிறந்த ஊர் ______

**தேரழுந்தூர்**

## திருக்குறள்
## பொறையுடைமை

9) பகுபத உறுப்பிலக்கணம்

1. அகழ்வார் = அகழ் + வ் + ஆர்
அகழ் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

2. மறத்தல் = மற + த்+ தல்
மற - பகுதி
த் - சந்தி
தல் - தொழிற்பெயர் விகுதி

3. வைப்பர் = வை + ப் + ப் + அர்
வை - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

4. ஒறுத்தார் = ஒறு + த் + த் + ஆர்
ஒறு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

5. இறந்தார் = இற + த்(ந்) + த் + ஆர்
இற - பகுதி
த் - சந்தி
த் - ந் ஆனது விகாரம்
த் - இறந்த கால இடைநிலை


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

10) சொற்பொருள் :-

1. அகழ்வாரை - தோண்டுபவரை
2. இகழ்வார் - இழிவுபடுத்துவோர்
3. தலை - சிறந்த பண்பு
4. பொறுத்தல் - பொறுத்துக் கொள்ளுதல்
5. இறப்பினை - பிறர் செய்த துன்பத்தை
6. இன்மை - வறுமை
7. விருந்து - வீட்டுக்குப் புதியவராய் வந்தவர்
8. ஒரால் - தவிர்த்தல்
9. மடவார் - அறிவிலிகள்
10 நிறை - சால்பு
11. ஒறுத்தாரை - தண்டித்தவரை
12. ஒன்றாக - ஒரு பொருட்டாக
13. பொதிந்து வைப்பர் - (மனத்துள்) வைத்துக் கொள்வர்
14. பொன்றும் துணையும் - உலகம் உள்ளவரை
15. திறனல்ல - செய்யத்தகாத
16. நோநொந்து - துன்பத்திற்கு வருந்தி
17. மிகுதியான் - மனச்செருக்கால்
18. மிக்கவை - தீமை
19. தகுதியான் - பொறுமையால்
20 துறந்தார் - பற்றினை விட்டவர்
21. இறந்தார் - வரம்பு கடந்தவர்
22. இன்னா - தீய
23. நோற்கிற்பவர் - பொறுப்பவர்
24. நோற்பார் - நோன்பு மேற்கொள்பவர்
25. இன்னாச் சொல் - தீய சொல்

11) இலக்கணக் குறிப்பு:-

1. உண்ணாது - வினையெச்சம்
2. பொறுத்தல் - தொழிற் பெயர்
3. அகழ்வார், இகழ்வார் - வினையாலணையும் பெயர்
4. மறத்தல், பொறுத்தல் - தொழிற் பெயர்கள்
5. நன்று - குறிப்பு வினைமுற்று
6. விருந்து - பண்பாகு பெயர்
7. ஒரால், பொறை - தொழிற்பெயர்கள்
8. நீங்காமை - எதிர்மறைத் தொழிற் பெயர்
9. போற்றி - வினையெச்சம்
10. பொதிந்து – வினையெச்சம்
11. ஒறுத்தார், பொறுத்தார் வினையாலணையும் பெயர்கள்
12. தற்பிறர் - ஏழாம் வேற்றுமைத் தொகை
13. செய்யினும் - இழிவுச் சிறப்பும்மை
14. நொந்து - வினையெச்சம்
15. அறன், திறன் - ஈற்றுப் போலிகள்
16. செய்தாரை - வினையாலணையும் பெயர்
17. விடல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று
18. இறந்தார், துறந்தார், நோற்கிற்பவர் - வினையாலணையும் பெயர்கள்
19. இன்னாச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

12) **ஆசிரியர் குறிப்பு:**

திருவள்ளுவர், திருக்குறளில் அனைத்து நாட்டினரும் இனத்தினரும் தமக்கே உரியதெனக் கொண்டாடும் வகையில் பொதுமைக் கருத்துகளைப் படைத்தவர்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான் முகனார், மாதானு பங்கி, செந்நாப் போதார், பெருநாவலர் என்னும் சிறப்புப் பெயர்களும் இவருக்கு உண்டு. இவரின் காலம் கி.மு. 31 ஆம் ஆண்டு என அறிஞர் கூறுவர்.

13) நூற் குறிப்பு:-

திரு + குறள் = திருக்குறள். திரு – செல்வம், சிறப்பு, அழகு, மேன்மை, தெய்வத்தன்மை எனப் பல பொருள் கொண்ட ஒரு சொல்.

குறள் - குறுகிய அடி உடையது. ஏழு சீர்களைக் கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆனது திருக்குறள். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. அறம் 38 அதிகாரங்களாகவும், பொருள் 70 அதிகாரங்களாகவும், இன்பம் 25 அதிகாரங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. இது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றிப் பாராட்டிய பாடல்களின் தொகுப்பு திருவள்ளுவ மாலை.

திருக்குறளுக்கு அந்நாளிலேயே பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவ்வுரையுள், பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர்.

14) விக்டோரியா மகாராணியார் கண் விழித்ததும் முதலில் படித்த நூல் **திருக்குறள்**

15) திருக்குறளுக்கு உரைசெய்த பதின்மர்:

**1. தருமர், 2. தாமத்தர், 3. பரிதி, 4. திருமலையர், 5. பரிப்பெருமாள், 6. மணக்குடவர், 7. நச்சர், 8. பரிமேலழகர், 9. மல்லர், 10. காளிங்கர்.**

16) பொருந்துக:-

1. அறம் - முப்பத்தெட்டு
2. பொருள் - எழுபது
3. இன்பம் - இருபத்தைந்து

17) எதுகைச் சொற்களை எடுத்தெழுதி அடிக் கோடிடுக:-

1. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

**எதுகை: மிகுதி, தகுதி**

2. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

**எதுகை: அகழ், இகழ்**

18) பொருள் வேறுபாடு அறிக:

1. பொறுத்தல் / பொருத்தல்
பொறுமையாய் இருத்தல், பொருந்தச் செய்தல்

2. இறத்தல் / இரத்தல்
உயிர் விடுதல், யாசித்தல்

3. நிறை / நிரை
சால்பு, வரிசை

4. வண்மை / வன்மை
வள்ளல் தன்மை, வலிமை

19) இருபொருள் தருக:-

1. நிறை ______, ______,
சால்பு, எடை

2. தலை ______, ______,
சிரம், முதன்மை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## திராவிட மொழிகள் (உரைநடை)

20) தம் எண்ணங்களையும் கருத்துகளையும் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக விளங்குவது எது?
**மொழி**

21) தனக்கென தனிச்சிறப்பும் பலமொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழி எந்த மொழி?
**மூலமொழி**

22) **இந்திய மொழிக் குடும்பங்கள்:-** இந்தியாவில் பேசப்படும் மொழிகள், மொழியியல் அறிஞர் எத்தனை மொழிக் குடும்பங்களுள் அடக்குவர்? அவை யாவை?
**நான்கு மொழிக் குடும்பங்கள்**
1. இந்தோ - ஆசிய மொழிகள்
2. திராவிட மொழிகள்
3. ஆஸ்திரோ - ஆசிய மொழிகள்
4. சீன - திபெத்திய மொழிகள்

23) நம் நாட்டில் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?
**ஆயிரத்து முந்நூற்க்கும் மேற்பட்ட மொழிகளும் அதன் கிளை மொழிகளும்.**

24) இந்திய நாட்டை, ______ எனக் குறிப்பிட்டுள்ளார்?
**“மொழிகளின் காட்சிச் சாலை” (Museum of Languages)**

25) மொழியியல் பேராசிரியர் யார்?
**ச.அகத்தியலிங்கம்**

26) திராவிட மொழிகள் எத்தனை உள்ளன?
**இன்று இருபத்து மூன்றுக்கும் மேற்பட்ட**

27) மொழிகள் எத்தனை வகையாகப் பிரிப்பர்?
**தென் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் மூவகையாகப் பிரிப்பர்.**
இந்தியாவில் மொத்தம் பன்னிரண்டு மொழிக் குடும்பங்கள் உள்ளன. அவற்றுள், முந்நூற்று இருபத்தைந்து மொழிகள் பேசப்படுவதாக இந்திய மானிடவியல் கணக்கெடுப்புத் தெரிவிக்கின்றது.

28) **தென் திராவிட மொழிகள்**
தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா.
**நடுத்திராவிட மொழிகள்**
தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி,கதபா, கோண்டா,நாயக்கி, பெங்கோ, ஜதபு.
**வடதிராவிட மொழிகள்**
குரூக், மால்தோ,பிராகுய்.

29) தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் ______ மொழிகள்.
**திராவிடப் பெருமொழிகள்**

30) உலகநாடுகளின் பழைமையான நாகரிகங்கள் எது?
**இந்திய நாகரிகம்**

31) இந்திய நாகரிகம் என்பது ______ பிறகு நிறுவப்பட்டுள்ளது?
**மொகஞ்சதாரோ – அரப்பா அகழ்வாய்க்குப்**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

32) ______ ஆண்டுகளுக்கு முன்னரே பரந்து விரிந்திருந்த இந்திய நாகரிகம் உலக நாகரிகங்கள் அனைத்திற்கும் தாயாகவும் வழிகாட்டியாகவும் விளங்கியிருக்கிறது.

**கி.மு. 3000 ஆண்டுகள்**

33) இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்த பழம் பெரும் நாகரிகத்தை அறிஞர் எவ்வாறு கருதுகின்றனர்?

**திராவிட நாகரிகம்**

34) திராவிடர் பேசிய மொழி என்ன மொழியாகும்?

**திராவிட மொழியாகும்**

35) திராவிடம் என்னும் சொல் ______ என்னும் பொருளைத் தருவது.

**திராவிட நாடு**

36) திராவிடம் என்னும் சொல்லைக் கால்டுவெல் ______ என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.

**திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்**

37) திராவிடம் என்னும் சொல்லை உருவாக்கியவர் யார்?

**குமாரிலபட்டர்**

38) திராவிட மொழியை பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தவர் யார்?

**கால்டுவெல்**

39) மொழியியல் அறிஞர், தொடக்கக் காலத்தில் தமிழையும் அதன் கிளைமொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளையும் ______ அல்லது ______ என்று வழங்கினர்.

**தமிளியன் அல்லது தமுலிக்**

40) திராவிட என்னும் சொல்லே ______ என்னும் சொல்லிருந்து உருவானதாகும்.

**தமிழ்**

41) தமிழ் > திரமிள > திரவிட > திராவிட – உருவாயிற்று என எந்த மொழியியல் அறிஞர் கூறிகிறார்?

**ஈராஸ் பாதிரியார்.**

42) தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்பும் தமிழை இன்று எவ்வாறு உயர்ந்து நிற்கச் செய்துள்ளது?

**உயர் தனிச் செம்மொழி**

43) தமிழ் மொழியிலுள்ள மிகப் பழைமை யான நூல் எது?

**தொல்காப்பியம்.**

44) தொல்காப்பியம் எந்த நூலாகத் திகழ்கின்றது?

**இலக்கண நூலாக**

45) ______ விழுக்காடு அளவிற்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிட மொழி, தமிழ்.

**எண்பது விழுக்காடு**

46) செவ்வியல் மொழியாக ஒளிர்வது எது?

**நமது தாய்மொழியாம் தமிழே**

47) நிரப்புக:

1. மொழிகள் பல தோன்றி வளர அடிப்படையான மொழியை ______ என்பர்.

**மூலமொழி**

2. இந்தியாவை மொழிகளின் காட்சிச் சாலை எனக் குறிப்பிட்டவர் ______

**அகத்தியலிங்கம்**

3. ஒரு மூல மொழியிலிருந்து தோன்றி வளரும் மொழியை ______ என்பர்.

**கிளைமொழி**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## எழுத்து (இலக்கணம்)

48) மொழியைப் பிழையின்றிப் பேசவும் கேட்கவும், கற்கவும் எழுதவும் துணை செய்வது எது?
இலக்கணம்

49) இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
தமிழிலக்கணம், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என ஐவகைப்படும்.

50) எழுத்துகளின் வகை:-
எழுத்து முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.

51) முதலெழுத்துகள் என்றால் என்ன?
அ முதல் ஔ வரை உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் . க் முதல் ன் வரை உள்ள மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகளாகும்.

52) சார்பெழுத்துகள் என்றால் என்ன?
முதல் எழுத்துகளைச் சார்ந்து இயங்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும்.

53) சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்து வகைப்படும்.

## அளபெடை

54) அளபெடை என்றால் என்ன?
செய்யுளில் ஓசை குறையும் போது ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும்.

55) அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
இரண்டு வகைப்படும்.
அவை:-
1. உயிரளபெடை, 2. ஒற்றளபெடை

56) உயிரளபெடை என்றால் என்ன?
செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். இஃது உயிரளபெடை எனப்படும்.

57) உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
மூன்று வகைப்படும்
அவை – 1. செய்யுளிசை அளபெடை,
2. இன்னிசை அளபெடை,
3. சொல்லிசை அளபெடை.

58) செய்யுளிசை அளபெடை என்றால் என்ன?
செய்யுளில் இசையை நிறைக்கவரும் அளபெடையைச் செய்யுளிசை அளபெடை என்பர்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

59) இன்னிசை அளபெடை என்றால் என்ன?
**ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுத்தலை இன்னிசை அளபெடை என்பர்.**

60) சொல்லிசை அளபெடை என்றால் என்ன?
**ஒரு சொல் மற்றொரு சொல்லாகப் பொருள் படவரும் அளபெடை சொல்லிசை அளபெடை என்பர்.**

61) ஒற்றளபெடை என்றால் என்ன?
**செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும். இஃது ஒற்றளபெடை எனப்படும்.**

62) குறிப்பு

1. செய்யுளிசை அளபெடை ( இசைநிறை அளபெடை) செய்யுளின் ஓசையை நிறைவு செய்ய ஈரசை கொண்ட சீர்களாக மட்டும் வரும். (எ.கா) உழா அர், படா அர்,

2. இன்னிசை அளபெடை - இனிய இசைக்காக மூவசை கொண்ட சீர்களாக மட்டும் வரும். (எ.கா) கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்.

3. சொல்லிசை அளபெடை – பெயர்ச் சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும். இ என்னும் எழுத்தில் முடிவு பெற்றிருக்கும். (எ.கா) நசை இ, நிறீ இ.

4. ஒற்றளபெடை – வல்லினத்து க், ச், ட், த், ப், ற், என்னும் ஆறும், இடையினத்தில் ர், ழ் என்னும் இரண்டும் ஆக இந்த எட்டு மெய்யெழுத்துகள் தவிரப்பிற மெய்யெழுத்துகள் அளபெடுக்கும்.

63) எழுத்துவகை ______ மாத்திரை

1. உயிர்க்குறில், உயிர்மெய்க் குறில் - ஒன்று
2. உயிர்நெடில்,உயிர் மெய் நெடில் - இரண்டு
3. மெய், ஆய்தம் - அரை
4. உயிரளபெடை - மூன்று
5. ஒற்றளபெடை - ஒன்று

64) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:

1. உறா அர்க் குறுநோய் உரைப்பாய் - இத்தொடரில் ______ வந்துள்ளது.
**செய்யுளிசை**

2. உடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு - இக்குறட்பாத் தொடரில் ______ அளபெடை வந்துள்ளது.
**இன்னிசை**

3. சொல்லிசை அளபெடையைத் தெரிவு செய்க:
**வரனசைஇ இன்னும் உள்ளேன்.**

65) பொருத்துக:

அ. ஒற்றளபெடை – அரங்ங்கம்
ஆ. செய்யுளிசை அளபெடை – உழாஅர்
இ. இன்னிசை அளபெடை – உடுப்பதூஉம்
ஈ. சொல்லிசை அளபெடை – குடிதழீஇ

66) நிரப்புக –

1. அளபெடை என்னும் சொல்லுக்கு ______ என்பது பொருள்
அளபு - மாத்திரை
எடை - எடுத்தல்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## எழுத்துகளின் பிறப்பு

67) எழுத்துகளின் பிறப்பு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**எழுத்துகளின் பிறப்பு இருவகைப்படும்.**

1. **இடப்பிறப்பு**
2. **முயற்சிப் பிறப்பு**

68) இடப்பிறப்பு என்றால் என்ன?

**எழுத்துகள் தோன்றுகின்ற மார்பு முதலானவற்றை இடப்பிறப்பு என்பர்.**

69) முயற்சிப்பிறப்பு என்றால் என்ன?

**உதடு முதலான உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப் பதனை முயற்சிப்பிறப்பு என்பர்.**

70) மெய்யெழுத்துகளை ஒலிக்கும் போது வேறுபட்ட மூன்று ஒலிகள் யாவை?

1. **வல்லின ஒலி**
2. **மெல்லின ஒலி**
3. **இடையின ஒலி**

71) முதலெழுத்துகளின் இடப்பிறப்பு

**அ) இடையின எழுத்துகள் ஆறும் கழுத்திலிருந்து பிறக்கின்றன.**

**ஆ) மெல்லின எழுத்துகள் ஆறும் மூக்கிலிருந்து பிறக்கின்றன.**

**இ) வல்லின எழுத்துகள் ஆறும் மார்பிலிருந்து பிறக்கின்றன.**

72) ஆவி இடைமை இடமிடறு ஆகும்

**மேவும் மென்மை மூக்கு**

**உரம்பெறும் வன்மை**

- நன்னூல், 75

ஆவி - உயிரெழுத்து

இடைமை - இடையினம்

மிடறு - கழுத்து

மென்மை - மெல்லினம்

உரம் - மார்பு

73) இரண்டு உதடுகள் பொருந்துவதனால் பிறக்கும் எழுத்துகள்.

**ப், ம்**

## மொழித்திறன் பயிற்சி

74) **தமிழ் எண்ணுருக்களை அறிவோம்**

1. **க**
2. **உ**

75) **தமிழ்ச் சொல்லறிவோம்:-**

1. சுவிட்ச் - பொத்தான்
2. ஐஸ்வாட்டர் - குளிர் நீர்
3. கூல்ட்ரிங்ஸ் - குளிர்பானம்
4. கிரைண்டர் - மின் அரைவை
5. பிரிஜ் - குளிர்சாதனப் பெட்டி
6. டீ - தேநீர்
7. வாஷிங்மெஷின் - சலவை இயந்திரம்
8. டெலிபோன் - தொலைபேசி

76) தமிழ்ப் பழமொழியை அறிக –

1. Bend the tree while it is young

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

2. As is the mother, so is her daughter

தாயைப்போலப் பிள்ளை, நூலைப் போல சேலை

3. A friend in need is a friend indeed

உயிர்காப்பான் தோழன்

4. A man of courage never wants weapons

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

5. Blood is thicker than water

தான் ஆடாவிட்டாலும் தன்தசை ஆடும்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## இயல் இரண்டு
## செய்யுள் - சிறுபஞ்சமூலம்

77) கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை – என்ற சிறுபஞ்சமூலம் என்ற பாடலைப் பாடியவர் யார்?

**காரியாசான்**

78) **சொற்பொருள் -**

1. கண்ணோட்டம் - இரக்கம் கொள்ளுதல்
2. எண்வனப்பு - ஆராய்ச்சிக்கு அழகு
3. வனப்பு - அழகு
4. கிளர்வேந்தன் - புகழுக்கு உரிய அரசன்
5. வாட்டான் - வருத்தமாட்டான்

79) **இலக்கணக் குறிப்பு:-**

1. கண்ணோட்டம், செல்லாமை, உரைத்தல், என்றல் - தொழிற்பெயர்கள்
2. கேட்டார், வாட்டான் - வினையாலணையும் பெயர்கள்

80) பகுபத உறுப்பிலக்கணம் -

1. கேட்டார் - கேள் (ட்) + ட் + ஆர்

கேள் - பகுதி

ள் - ட் ஆனது விகாரம்

ட் - இறந்தகால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

அணி - சொற்பொருள் பின்வருநிலை அணி

81) **ஆசிரியர் குறிப்பு:-**

காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர் எனச் சிறப்புப்பாயிரம் கூறுகிறது. இவர், சமண சமயத்தைச் சார்ந்தவர். இவரும் கணிமேதாவியாரும் ஒரு சாலை மானாக்கராவர்.பெரும்பான்மை பொது அறக்கருத்துகளும் சிறுபான்மை சமண அறக்கருத்துகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

82) நூற் குறிப்பு :-

சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் காரியாசான். இந்நூலில், கடவுள் வாழ்த்துடன் தொண்ணூற்றேழு வெண் பாக்கள் உள்ளன. கண்டங் கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையின் வேர்களும் உடல் நோயைத் தீர்ப்பன. அதுபோல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து கருத்துகளும் மக்கள் மனநோயைப் போக்குவன. ஆகையால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப்பெயர் பெற்றது.

நிரப்புக:

1. பண்ணுக்கு அழகு ______ நன்றென்றல் கேட்டோர்.
2. பிறரிடம் இரந்து செல்லாமை ______ அழகு.

**காலுக்கு**

## பாஞ்சாலிசபதம் - பாரதியார்

83) இந்திர மாநகரை ஆண்டு வந்தவர் யார்?

**பாண்டவர்**

84) சொற்பொருள் -

1. எம்பி – என்தம்பி
2. மடப்பிடி – பாஞ்சாலி
3. களிக்க – மகிழ
4. கோமான் – அரசன் ( திருதராட்டிரன்)



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

5. நுந்தை – நும் தந்தை
6. அடவி – காடு
7. தடந்தோள் – வலியதோள்
8. மணிநகர் – அழகிய நகரம்
9. மருங்கு – பக்கம்
10. கோலமுறு – அழகு மிக்க
11. செறிந்து – அடர்ந்து
12. கா – காடு
13. குலவு – விளங்கும்
14. ஞாலம் – உலகம்
15. பண்ணவர் – தேவர்
16. அரம்பையர் – தேவ மகளிர்
17. ஞானம் – அறிவு
18. புன்மை – இழிந்த தன்மை
19. வீறு – வலிமை
20. சதுரங்கச் சேனை – நால்வகைப் படைகள்
21. மதுரமொழி – இனிய மொழி
22. குசலங்கள் பேசி – நலன் கேட்டல்

85) **இலக்கணக் குறிப்பு:–**

1. மாநகர் – உரிச்சொற்றொடர்
2. சார்ந்தவர் – வினையாலணையும் பெயர்
3. நுந்தை – நும் தந்தை என்பதன் மரூஉ
4. அடவி மலையாறு – உம்மைத் தொகை
5. கடந்து – வினையெச்சம்
6. தடந்தோள் – உரிச்சொற்றொடர்
7. பாலுடையும் நறுநெய்யும் தேனும் – எண்ணும்மை
8. நீலமுடி, நன்செய், புன்செய் – பண்புத் தொகைகள்
9. பாய்ந்து, செறிந்து – வினையெச்சங்கள்
10. ஞாலமெலாம், மக்களெலாம் – எல்லாம் என்பதன் தொகுத்தல் விகாரம்.
11. காத்தல் – தொழிற்பெயர்
12. தொல்லுலகு – பண்புத் தொகை
13. தாளமும் மேளமும் – எண்ணும்மை
14. பதமலர் – உருவகம்

86) பகுபத உறுப்பிலக்கணம்

1. கடந்து – கட+ த்(ந்)+ த் + உ
கட – பகுதி
த் – சந்தி
த் – ந் ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

2. செல்வான் – செல் + வ் + ஆன்
செல் – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

87) **ஆசிரியர் குறிப்பு:-**

சுப்பிரமணிய பாரதியார் தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் 11-12-1882 அன்று பிறந்தார். இவர்தம் பெற்றோர் சின்னசாமி – இலக்குமி அம்மையார் ஆவர். இவரின் துணைவியார் செல்லம்மாள். சிறந்த படைப்பாளரான பாரதியார் குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய நூல்களைப் படைத்தளித்தார். நாடு, மொழி, இறை, பெண்மை முதலிய



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

பாடுபொருள்களில் எண்ணற்ற பாடல் இயற்றினார். ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை இலக்கியங்களையும் எழுதினார். இவர் 11-09-1921 அன்று நள்ளிரவு மறைந்தார்.

88) நூற்குறிப்பு:-

இப்பாடப்பகுதி, பாரதியாரின் முப்பெரும் படைப்புகளுள் ஒன்றாகிய பாஞ்சாலி சபதம் என்னும் காப்பியத்தின் சூழ்ச்சிச் சருக்கத்தில் இடம் பெற்றுள்ளது. அனைவரும் அறிந்த இதிகாசக் கதையை எளிய சொற்கள், எளிய நடை, எளிய சந்தம் ஆகியவற்றுடன் கூடிய பெண்ணுரிமைக் காப்பியமாகத் தமிழில் பாரதி வடித்துத் தந்ததே பாஞ்சாலிசபதம். வியாசரின் பாரதத்தைத் தழுவி எழுதப் பெற்றது. பாஞ்சாலி சபதம் இரு பாகங்களைக் கொண்டது. இது சூழ்ச்சிச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் என ஐந்து சருக்கங்களையும் நானூற்றுப் பன்னிரண்டு பாடல் களையும் கொண்ட குறுங்காப்பியம்.

89) சிறப்பு:

பாரதியார் பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியக்கவி, மகாகவி என்றெல்லாம் புகழப்பெற்றார்.

சுதேசமித்திரன், இந்தியா முதலிய இதழ்களின் ஆசிரியராக இருந்தார். இந்திய விடுதலைக்குப் பாடுப்பட்டார்.

90) நிரப்புக-

1. நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா எனப் பாராட்டப் பெற்றவர் _______ ஆவார்.

**பாரதியார்**

2. துரியோதனின் தந்தை _______ ஆவார்.

**திருதராட்டிரன்**

91) பொருத்துக

1. வனப்பு – அழகு
2. பிடி – பெண் யானை
3. அடவி – காடு
4. மருங்கு – பக்கம்
5. வீறு – வலிமை
6. மதுரமொழி – இனிய மொழி

## இக்காலக் கவிதைகள் (உரைநடை)

92) இருபதாம் நூற்றாண்டில் _______, _______ மும் விரைவாக வளர்ந்தன.

**அறிவியலும், இலக்கியமும்**

93) செய்யுள், உரைநடை என்னும் இரு வடிவிலும் _______ மலர்ந்துள்ளன.

**புதுவகை இலக்கியங்கள்**

94) உரைநடைக்காலம் என்றால் என்ன?

**இருபதாம் நூற்றாண்டின் உரைநடை வளத்தைக் கருத்திற்கொண்டு நோக்கும் போது இக்காலத்தை உரைநடைக் காலம் எனலாம்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

95) இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் நாடு, மொழி, இனம், சமுதாயம், கலை என எந்த எந்தக் கவிஞர் பலவற்றைப் பாடினர்?
**பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிகம் விநாயகனார், நாமக்கல், இராமலிங்கனார்.**

96) பாரதியின் கவிதைகள் இருபதாம் நூற்றாண்டில் எதற்கு வித்தாக அமைந்தனர்?
**அரும்பிய மறுமலர்ச்சிக்கு**

97) மன்னர்களை மட்டுமே மகிழ்வித்து வந்த கவிதை மரபை மாற்றி, எளிய மக்களை நோக்கிக் கவிதைக் கருவியைத் திருப்பி அமைத்த பெருமை யாரைச் சாரும்?
**பாரதியாரைச் சாரும்**

98) பாரதிதாசனின் கவிதைகள் யாவை?
**தமிழ், தமிழர், தமிழுணர்வு, சமுதாய மறுமலர்ச்சி, பெண் விடுதலை, திராவிட இயக்கச் சிந்தனை, பொதுவுடைமை**

99) விடுதலை இயக்கக் கவிஞர் யார்?
**நாமக்கல் கவிஞர்**

100) குறிப்பு –
கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள் மிளிர்கின்றன. இவர் தமிழரின் சிறப்பையும் தமிழ்மொழியின் இனிமையையும் சேர்த்துப் பாடினார்?
**நாமக்கல் கவிஞர்**

101) வாழ்க்கை சிறக்க ஒவ்வொருவரும் ஒரு தொழிலையாவது கற்றுக் கொள்வது நல்லது என வலியுறுத்தியவர் யார்?
**நாமக்கல்லார்**

102) புலவர் குழந்தை, முடியரசன் முதலியோர் கவிதைகளில் பகுத்தறிவு நோக்கும் _______ இலங்கக் காணலாம்.
**முற்போக்குச் சிந்தனையும் தமிழுணர்வும்**

103) உவமைக்கவிஞர் என சிறப்புப் பெற்றவர் யார்?
**சுரதா**

104) சுரதா பாடல்களில் இடையில் கலந்து வருவது எது?
**வரலாற்றுச் செய்திகளும், இலக்கண விளக்கங்களும்.**

105) சுரதா யாரை உவமைகளால் பாராட்டியுள்ளார்?
**மறைமலையடிகளாரை**

106) பாரதிதாசனைத் தொடர்ந்து இயற்கையின் அழகை எழிலுறப் படம் பிடித்துக் காட்டுவதில் யாருடைய கவிதைகள் சிறந்து விளங்குகின்றன?
**வாணிதாசன்**

107) மரபுக் கவிதைகள் புனைந்து தமிழன்னைக்கு மேலும் வளமும் பெருமையும் யார் சேர்த்துள்ளனர்?
**சுத்தானந்த பாரதியார், பட்டுக் கோட்டைக் கல்யாணசுந்தரம், கவிஞர் கண்ணதாசன், தமிழ்ஒளி**

108) மனிதகுல வளர்ச்சிக்கு ஏற்றவாறு சிந்தனை மாற்றங்களும் சமூக மாற்றதின் விளைவே_______
**புதுக்கவிதையின் தோற்றம்**

109) அமெரிக்கக் கவிஞர் 'வால்ட்விட்மனின்' சாயலில் வசன கவிதை எழுதியவர் யார்?
**பாரதியார்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

110) பாரதிதாசனின் உரைநடைகள் அனைத்தும் _______ கொண்டவை?

**கவிதைநடை**

111) தமிழில் புதியதொரு வடிவம் தோன்றக் காரணமாக இருந்தவை?

**மேலை நாட்டு இலக்கியத் தொடர்பும், சமுதாயச் சூழ்நிலையும்**

112) புதிய ஆங்கிலக் கவிதைகளைப் படித்த தமிழரது சிந்தனையில் எந்தக் கவிதைகள் மலர்ந்து மணம் பரப்பின?

**புதுக்கவிதைகள்**

113) மணிக்கொடி என்னும் இதழில் புதுக்கவிதை எழுதியவர் யார்?

**ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப. இராசகோபாலான், க.நா.சுப்பிரமணியன்.**

114) எழுத்து என்னும் புதுக்கவிதைகளைப் படைத்தவர் யார்?

**எஸ்.வைத்தீஸ்வரன், தருமு சிவராமு, மணி, சி.சு செல்லப்பா முதலியோர் ஆவர்.**

115) கோவையில் வானம் பாடிக் குழுவினர் எந்தக் கவிதையைப் பரவலாக்கப் பாடுபட்டனர்?

**புதுக்கவிதை**

116) புதுக்கவிதை பாடுவதில் ஈடுபட்டுப் பெரு வெற்றி பெற்ற கவிஞர்கள் யார்?

**நா.காமராசன், மீரா(மீ. இராசேந்திரன்), சிற்பிபாலசுப்பிரமணியன், வாலி, இன்குலாப், மு.மேத்தா, வைரமுத்து, அப்துல்ரகுமான், ஈரோடு தமிழன்பன்**

117) குறிப்பு:-

புவியரசு, கங்கை கொண்டான், சிற்பி, தமிழ்நாடன், அக்கினிப்புத்திரன், சக்திக்கனல், இரவீந்திரன், ஞானி, பா. செயப்பிரகாசம், பிரபஞ்சன், பாலா, கோ.ராஜாராம் என வளரும் பெரும் பட்டியலைக் கொண்டது வானம்பாடி இயக்கம். இவர்களது வருகைக்குப் பின்னர் புதுக்கவிதை, சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் ஓர் இலக்கிய வகையாகச் சிறப்புற்றது.

118) **நிரப்புக:-**

1. காந்தியக் கவிஞர் எனப் போற்றப் படுபவர் _______

**நாமக்கல் கவிஞர்**

2. புதுக்கவிதை வளர்ச்சியில் _______ பங்கு போற்றத்தக்கது.

**வல்லிக்கண்ணன்**

## கண்ணதாசன் கவியின்பம் (துணைப்பாடம்)



119) இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களின் வரிசையில் தனக்கென்று தனி முத்திரையைப் பதித்தவர் யார்?

**கவியரசு கண்ணதாசன்**

120) எளிய சொற்களைக் கொண்டு உள்ளத்தை மகிழ்விக்கும் பாடல்களை இயற்றிய பெருமை யாருக்கு உண்டு?

**கண்ணதாசன்**

121) வாழ்க்கையும் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகளுமே _______ குரிய பொருள்களாம்.

**கவிதைக்குரிய**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

122) உழவர் பெருமக்களின் இல்லத்தே எழுகின்ற பல்வேறு ஓசைகள் _______, ஒத்து ஒலிக்கின்றன?

**இயைபுத் தொடையும், இசைநயமும்**

123) **கண்ணதாசன் - படைப்புகளும், சிறப்புகளும்.**

முத்தையா என்ற இயற்பெயர் கொண்ட கண்ணதாசன், சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிறு கூடல்பட்டி என்னும் சிற்றூரில் 24.06.1927 என்று பிறந்தார். பெற்றோர் சாத்தப்பன் - விசாலாட்சி ஆவர். கண்ணதாசன் கவிதைகள் பல தொகுதிகளாக வெளி வந்துள்ளன. அவர்தம் திரைப்படப் பாடல்கள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

124) ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மாகாவியம், இயேசு காவியம் முதலியன அவர் படைத்த நெடுங் கவிதை நூல்கள்.

இராசதண்டனை என்பது, கம்பர் - அம்பிகாபதி வரலாற்றை அடிப்படை யாகக் கொண்டு, அவர்படைத்த இனியநாடகம். ஆயிரம் தீவு அங்கயற் கண்ணி, வேலங்குடித் திருவிழா முதலிய பல புதினங் களையும் கண்ணதாசன் படைத்திருக்கிறார். அவர் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட புதினங்களில் சேரமான் காதலி சிறந்த வரலாற்றுப் புதினமாகும். அதற்குச் சாகித்திய அகாதமியின் பரிசு கிடைத்துள்ளது. கண்ணதாசன் தென்றல், முல்லை, கண்ணதாசன் தமிழ்மலர் முதலிய இதழ்கள் தொடங்கி, அவற்றுக்கு ஆசிரியராக இருந்து சிறந்த இதழ்ப்பணி ஆற்றியுள்ளார். கவிதையிலும் உரைநடையிலும் சொற் பொழிவிலும் திரைப்படத் துறையிலும் தமக்கென ஒரு புதிய வழியினை வகுத்துக் கொண்டு தலை நிமிர்ந்து நின்றவர் கண்ணதாசன். அவர் தம் கவிதைகளால் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

நான் நிரந்திரமானவன் அழிவதில்லை.
எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை.

**- கண்ணதாசன்**

## ஆகுப்பெயர் (இலக்கணம்)

125) ஆகு பெயர் என்றால் என்ன?

**ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ஆகு பெயர் எனப்படும்.**

126) ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?

**ஆகுபெயர் பதினாறு வகைப்படும்**

127) அளவைக் குறிக்கும் பெயர்கள் _______ என்பர்.

**அளவைப்பெயர்கள்**

128) அளவைப் பெயர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**நான்கு வகைப்படும்**

அவை

**1. எண்ணல் அளவை, 2. எடுத்தல் அளவை, 3. முகத்தல் அளவை, 4. நீட்டல் அளவை.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

129) எண்ணல் அளவை ஆகுபெயர்க்கு (எ.கா) தருக

**ஒன்று பெற்றால் ஒளிமயம்**

130) எடுத்தல் அளவை ஆகுபெயர்க்கு (எ.கா) தருக?

**ஐந்து கிலோ என்ன விலை?**

131) முகத்தல் அளவை ஆகுபெயர்க்கு (எ.கா) தருக?

**நான்கு லிட்டர் தேவை**

132) நீட்டல் அளவை ஆகுபெயர்க்கு (எ.கா) தருக?

**மூன்று மீட்டர் கொடு**

133) சொல்லாகு பெயர் என்றால் என்ன?

**வள்ளுவர் சொல் வாழ்க்கைக்கு இனிது. இத்தொடரில் வள்ளுவர் சொல் என்பது, சொல்லைக் குறிக்காது பொருளுக்குப் பெயராகி வந்ததால்.**

134) தானியாகுபெயர் என்றால் என்ன?

**பாலை இறக்கு – பாலின் பெயர் பாலைக் குறிக்காமல் பாத்திரத்தைக் குறிக்கிறது. ஓர் இடத்தில் உள்ள ஒரு பொருளின் பெயர் (தானி) அது சார்ந்திருக்கும் இடத்திற்குப் பெயராகி வருவது.**

135) கருவியாகு பெயர் என்றால் என்ன?

**யாழ் கேட்டு மகிழ்ந்தாள். இத் தொடரில் யாழ் என்னும் கருவி இசைக்கு ஆகி வந்ததால்.**

136) காரியவாகு பெயர் என்றால் என்ன?

**நான் சமையல் கற்றேன். இங்குச் சமையல் என்னும் காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்குப் (கருவிக்கு) பெயராகி வருவது காரியவாகு பெயர்.**

137) கருத்தாவாகு பெயர் என்றால் என்ன?

**திருவள்ளுவரைப் படித்துப்பார் இத்தொடரில் திருவள்ளுவர் என்பது அவரால் இயற்றப் பெற்ற நூலுக்கு ஆகிவந்ததால் கருத்தாவாகு பெயராயிற்று.**

138) உவமையாகு பெயர் என்றால் என்ன?

**ஒருவரைப் பார்த்து , நாதர் வருகிறார் எனல்.**

139) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

1. ‘நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி’ - இத்தொடர் _______ ஆகும்.

**எண்ணலளவை ஆகுபெயர்**

2. தயிரை இறக்கு. - இத்தொடர் _______ ஆகுபெயர் ஆகும்.

**தானியாகு பெயர்**

3. தானம் தானிக்கு (பொருளுக்கு) ஆகி வருவது _______ ஆகுபெயர்.

**இடவாகு பெயர்**

140) பொருத்துக:-

1. முகத்தல் அளவை ஆகுபெயர் - இரண்டு லிட்டர் தா.
2. உவமையாகு பெயர் - காளை வருகிறான்
3. சொல்லாகு பெயர் - பெரியோர் சொல் கேள்
4. எடுத்தல் அளவை ஆகுபெயர் - பத்துக் கிராம் கொடு

## மொழித்திறன் பயிற்சி

141) வேர்ச்சொற்களை வினைமுற்றாக்குக.

1. நான் நாளை சந்தைக்குப் _______ (போ) **விடை: போவேன்**
2. மாணவர்கள் பள்ளியில் கல்வி _______ (கல்) **விடை : கற்கின்றனர்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

3. யானை கோபம் கொண்டு _______ (பிளிறு) **விடை: பிளிறிற்று**

4. தேசிங்குராசா பாராசாரிக் குதிரையை _______ (அடக்கு)

**விடை : அடக்கினார்**

5. இந்திய அணி நேற்றைய கால் பந்துப் போட்டியில் வெற்றி _______ (பெறு) **விடை: பெற்றது**

142) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைச் சொற்றொடருக்கேற்ப மாற்றுக:-

1. அவர் _______ (விரைவு) வந்தும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
2. மாணவர்களுக்குப் பரிசளிக்குமாறு _______ (தலைவர்) கேட்டுக் கொள்கிறேன்.
3. குழந்தைகள் _______ (பெற்றோர்) மரியாதை தருதல் வேண்டும்.
4. அடுப்பு நன்றாக_______ (எரி) விறகு காய்ந்திருத்தல் வேண்டும்.
5. எதிலும் _______ (எளிமை) கடைப்பிடித்தல் வேண்டும்.

**விடைகள்:**

1. **விரைந்து**
2. **தலைவரைக்**
3. **பெற்றோருக்கு**
4. **எரிய**
5. **எளிமையைக்**

143) பெயரெச்சத்தை வினைமுற்றாக மாற்றி எழுதுக:

(எ.கா) வனப்பு மிக்க சோலை. சோலை வனப்பு மிக்கது.

1. துள்ளி ஓடிய புள்ளிமான் _______
2. மிகவும் இனித்த பழம் _______
3. மரங்கள் நிறைந்த காடு _______
4. நீதி தவறாத மன்னன் _______
5. நேற்றுப் பெய்த மழை _______

144) வினைமுற்றைப் பெயரெச்சமாக மாற்றுக

**(எ.கா) நேற்று மதியழகன் வந்தான். நேற்று வந்த மதியழகன்.**

1. எழிலன் வரைந்தான் _______
2. அப்பா சினம் கொண்டார் _______
3. எழில் பாம்பைக் கண்டாள் _______
4. குதிரை விரைவாக ஓடியது _______
5. குரங்குகள் தாவிக் குதித்தன _____

விடைகள்: (நீங்கள் முயற்சி செய்யவும்)

## இயல் மூன்று
## செய்யுள் - புறநானூறு

148) தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி – என்ற புறநானூறு பாடலைப் பாடியவர் யார்?

**மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.**

149) சொற்பொருள் :-

1. நிழற்றிய - நிழல் செய்த
2. நடுநாள்யாமம் - நள்ளிரவு
3. துஞ்சான் - துயிலான்
4. மா - விலங்கு
5. கல்லா - கல்வியறிவில்லாத
6. நாழி - அளவுப்பெயர்
7. ஈதல் - கொடுத்தல்
8. துய்ப்பேம் - நுகர்வோம்
9. தப்புந - இழக்க

150) இலக்கணக் குறிப்பு :-

1. வெண்குடை - பண்புத்தொகை
2. கல்லா ஒருவற்கும் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

3. நாழி - ஆகுபெயர்

4. ஈதல் - தொழிற் பெயர்

5. துய்ப்பேம் - தன்மைப் பன்மை வினைமுற்று

151) பகுபத உறுப்பிலக்கணம்

1. துஞ்சான் - துஞ்சு+ (ஆ)+ ஆன்

துஞ்சு – பகுதி

ஆ – எதிர்மறை இடைநிலை ஆ – மறைந்தது

ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

2. ஈதல் - ஈ + தல்

ஈ - பகுதி

தல் - தொழிற்பெயர் விகுதி

3. துய்ப்பேம் - துய் + ப் + ப் + ஏம், துய் - பகுதி

ப் - சந்தி

ப் - எதிர்கால இடைநிலை

ஏம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

152) ஆசிரியர் குறிப்பு:-

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். இவர் இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர்; பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப் படையையும் நெடுநல் வாடையையும் இயற்றியவர். இப்பாடலில் இவர், உலகியல் உண்மையைக் கூறியுள்ளார்.

153) நூற்குறிப்பு:-

புறநானூறு – புறம் + நான்கு + நூறு புறப்பொருள் பற்றிய நானூறு பாடல் களைக் கொண்டதனால் புறநானூறு எனப் பெயர் பெற்றது. புறம் என்பது ஒருவரின் வீரம், கொடை, கல்வி முதலிய சிறப்புகளைக் குறிக்கும். இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூலிலுள்ள பாடல்கள் பல்வேறு புலவர்களால் பாடப் பெற்றவை. இப்பாடல்கள் வாயிலாகப் பண்டைத் தமிழ் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, வீரம், கொடை, கல்வி முதலியவற்றை அறியலாம். இந்நூலின் சில பாடல்களை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

## குறுந்தொகை (தேவகுலத்தார்)

154) நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று – என்ற குறுந்தொகை பாடலைப் பாடியவர் யார்?

**தேவகுலத்தார்.**

155) சொற்பொருள்:-

1. நீர் - கடல்

2. கருங்கோல் - கருமை நிறமுடைய கொம்பு

3. உயர்ந்தன்று - உயர்ந்தது

4. அளவின்று - அளவினையுடையது

156) இலக்கணக் குறிப்பு:-

1. நிலத்தினும், வானினும், நீரினும் - உயர்வுச் சிறப்பும்மைகள்

2. கருங்கோல், பெருந்தேன் - பண்புத் தொகைகள்

157) பிரித்தறிதல் :-

1. ஆரளவு = அருமை + அளவு

2. கருங்கோல் = கருமை + கோல்

3. பெருந்தேன் = பெருமை + தேன்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

158) நூற்குறிப்பு :-

குறுமை + தொகை = குறுந்தொகை. குறைந்த அடியளவால் பாடப் பெற்ற பாடல்களின் தொகுப்பே குறுந்தொகை. இந்நூல், எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. இதில், கடவுள் வாழ்த்துடன் நானூற்றொரு பாடல்கள் உள்ளன. அகப்பொருள் பற்றிய பாடல்களைப் பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர் கள் பாடியுள்ளார்கள். இப்பாடல்கள் குறைந்த அளவாக நான்கடிகளையும் அதிக அளவாக எட்டு அடிகளையும் கொண்டிருக்கின்றன. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ. பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இப்பாடலா சிரியர் குறித்த செய்திகள் கிடைக்க வில்லை.

இந்நூல் வாயிலாகப் பண்டைத் தமிழரின் இல்வாழ்க்கை, ஒழுக்கம், மகளிர் மாண்பு, அறவுணர்வு முதலியவற்றை அறியலாம்

159) உரிய விடையைத் தேர்வு செய்க:-

1. எட்டுத்தொகை நூல் ______

**குறுந்தொகை**

2. குறுந்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை ______

**401**

3. குறுந்தொகைப் பாடல்களின் அடிவரை ______

**4-8**

160) ஐந்திணை

1. குறிஞ்சி, 2. முல்லை, 3. மருதம், 4. நெய்தல் 5. பாலை.

## திருவிளையாடற் புராணம்
## பரஞ்சோதி முனிவர்

161) தமிழ்ப்புலவர்கள் இறைவனுக்கும் தமிழுக்கும் உள்ள பிணைப்பை உறுதிப்படுத்தவே ______ புராணம் முதலிய புராணங்களை இயற்றியதாகக் கொள்ளலாம்.

**திருவிளையாடல் புராணம்**

162) புலவர் தம் புலமைத் திறத்தை அறிய இறைவனை வேண்டிச் ______ பெற்றனர்.

**சங்கப் பலகையைப்**

163) வங்கிய சேகர பாண்டியனின் மகன் ______ மதுரையில் அரசாட்சிப் பொறுப்பை ஏற்றனர் யார்?

**வங்கிய சூடாமணிபாண்டியன்**

164) சூடாமணிபாண்டியனுக்குச் ______ என்னும் பெயர் வழங்கலாயிற்று.

**சண்பகப் பாண்டியன்**

165) சொற்பொருள்:-

1. வையை நாடவன் - பாண்டியன்
2. உய்ய - பிழைக்க
3. இரந்து செப்பினான் - பணிந்து வேண்டினான்
4. தென்னவன் குலதெய்வம் - சொக்கநாதன்(அ) சுந்தரபாண்டியன்
5. இன்னல் - துன்பம்
6. நல்கினார் - அளித்தார்
7. இறைஞ்சி - பணிந்து
8. அளக்கில் கேள்வியார் - அளவற்ற கேள்வியறிவினர்.
9. சிரம் துளக்கி - தலையசத்து



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

10. மீனவன் - மீன்கொடியை உடைய பாண்டியன்
11. விபுதர் - புலவர்
12. தூங்கிய - தொங்கிய
13. பொற்கிழி - பொன் முடிப்பு
14) நம்பி - தருமி
15. புறம்பு - வெளியில்
16. பையுள் - வருத்தம்
17. பனவன் - அந்தணன்
18. கண்டம் - கழுத்து
19. வழுவு பாடல் - குற்றமுள்ள பாடல்
20. ஆர்அவை - (புலவர்கள்) நிறைந்த அவை
21. கிளத்திேனன் - சொன்னேன்
22. சீரணி - புகழ்வாய்ந்த
23. வேணி - செஞ்சடை
24. ஓரான் - உணரான்
25. அற்குற்ற - (அல்கு + உற்ற) - இருளையொத்த
26. நாற்றம் - நறுமணம்
27.குழல் - கூந்தல்
28. அல்கு - இரவு
29. ஏத்தும் - வணங்கும்
30. ஞானப்பூங்கோதை - உமையம்மை
31. கற்றைவார் சடையான் - சிவபெருமான்
32. உம்பரார் பதி - தேவர் தலைவன் (இந்திரன்)
33. நுதல் விழி - நெற்றிக்கண்
34. பொற்பங்கயத்தடம் - பொற்றாமரைக் குளம்
35. நாவலன் - புலவர்
36. கரந்தான் - மறைந்தான்.

166) இலக்கணக் குறிப்பு:-

1. உரைத்து, இரந்து- வினையெச்சங்கள்
2. சொல்லி, இறைஞ்சி- வினையெச்சங்கள்
3. விளக்கி, சிறந்து - வினையெச்சங்கள்
4. மகிழ்ந்த - தொழிற்பெயர்
5. தூங்கிய, ஆய்ந்த - பெயரெச்சங்கள்
6. நேர்ந்து - வினையெச்சம்
7. கொண்டு, வைத்து - வினையெச்சங்கள்
8. நோக்கி - வினையெச்சம்
9. கிளத்திேனன் - தன்மை ஒருமை வினைமுற்று
10. தேராக்கீரன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
11. புனைமலர் - வினைத்தொகை
12. பற்றுவான், அஞ்சான் - வினையாலணையும் பெயர்கள்
13. குற்றம் - தொழிற்பெயர்
14. தேய்ந்த, பாய்ந்த, ஆய்ந்த, காய்ந்த - பெயரெச்சங்கள்
15. விழுந்து - வினையெச்சம்
16. செந்தீ, வெம்மை - பண்புத் தொகைகள்

167) பகுபத உறுப்பிலக்கணம்

1. இரந்து = இர + த்(ந்)+ த் + உ
இர - பகுதி
த் - சந்தி
த் - ந் ஆனது விகாரம்
த் - இறந்த கால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி
2. நல்கினார் - நல்கு + இன் + ஆர்
நல்கு - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

ஆர் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

3. விளக்கி - விளக்கு + இ

விளக்கு - பகுதி

இ - வினையெச்ச விகுதி

4. தூங்கினான் - தூங்கு + இன் + ஆன்

தூங்கு - பகுதி

இன் - இறந்தகால இடைநிலை

ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

5. பற்றுவான் - பற்று + வ் + ஆன்

பற்று - பகுதி

வ் - எதிர்கால இடைநிலை

ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

6. தேரான் - தேர் + ஆ + ஆன்

தேர் - பகுதி

ஆ - எதிர்மறை இடைநிலை (மறைந்தது)

ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

7. தேய்ந்த - தேய் + த்(ந்) + த் + அ

தேய் - பகுதி

த் - சந்தி

த் - ந் ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

168) **ஆசிரியர் குறிப்பு:**

பரஞ்சோதி முனிவர் நாகை மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்) என்னும் ஊரில் பிறந்தார். தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர். இவரின் தந்தையார் மீனாட்சி சுந்தர தேசிகர் ஆவார்.

பரஞ்சோதி முனிவர் துறவியாகிச் சிவாலயங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டு வந்தார். அவ்வாறு மதுரை நகரினை அடைந்து மீனாட்சி அம்மனையும் சோமசுந்தரக் கடவுளையும் வணங்கியவர். அந்நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார். அந்நகரத்தார் அவரைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க திருவிளையாடற் புராணத்தை இயற்றினார். அந்நூலைச் சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி, தென் மொழிப்புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினார்.

இவர் திருவிளையாடற் போற்றிக்கலி வெண்பா, மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

169) **நூற்குறிப்பு:-**

திருவிளையாடற் புராணம், மதுரைக் காண்டம் (பதினெட்டுப் படலம்), கூடற்காண்டம் (முப்பது படலம்), திருவாலவாய்க் காண்டம் ( பதினாறு படலம்) என்னும் முப்பெரும் பகுதிகளையும் படலம் என்னும் அறுபத்து நான்கு உட்பிரிவுகளையும் உடையது. இதில் மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று விருத்தப் பாக்கள் உள்ளன. மதுரையில் இறைவன் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இப்படலங்கள் விளக்குகின்றன.

இந்நூல், இறைவனின் திருவிளையாடல்களை விளக்கி எழுந்த நூல்களுள் விரிவானதும் சிறப்பானதும் ஆகும். தொடைநயம் பத்திச்சுவை மிக்க இந்நூலுக்கு ந.மு. வேங்கடசாமி உரையெழுதியுள்ளார்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

170) நிரப்புக:-

1.திருவிளையாடற் புராணத்தை இயற்றியவர் ________

**பரஞ்சோதி முனிவர்**

2. திருவிளையாடற் புராணத்தில் ________ காண்டங்கள் உள்ளன.

**1. மதுரைக் காண்டம், 2. கூடல் காண்டம், 3. திருவாலவாய்க் காண்டம்**

3. இறைவனிடம் பாடலைப் பெற்றுச் சென்றவர் ________

**தருமி**

4. பொற்கிழி பெறச்சென்ற தருமியைத் தடுத்தவர் ________

**நக்கீரனர்**

5. உடல் முழுவதும் கண்களை யுடையவர் ________

**சிவபெருமான்**

171) பொருத்துக :-

1. மதுரைக்காண்டம் - பதினெட்டுப் படலம்

2. கூடல்காண்டம் - முப்பது படலம்

3. திருவாலவாய்க் காண்டம் - பதினாறு படலம்

## கடற்பயணம் (உரைநடை)

172) தமிழ் நாட்டு வாணிக வரலாறு மிகவும் ________ வாய்ந்தது.

**தொன்மை**

173) பழங்காலந் தொட்டே தமிழர் எந்த வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர்.

**உள்நாட்டு, அயல்நாட்டு**

174) உள்நாட்டு வாணிகத்தை விட எந்த நாட்டு வாணிகம் வருவாய் மிகுதியாக உள்ளது?

**அயல்நாட்டு வாணிகத்திலேயே**

175) ——— என்னும் ஔவை மொழியும், ——— என்னும் கணியன் பூங்குன்றன் மொழியும், தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்கும் பன்னாட்டுத் தொடர்புக்கும் சான்றுகளாம். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு,

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

176) பழங்காலத்தில் தமிழர் பிறநாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி ——— வழக்கம் எனத் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

**முந்நீர் வழக்கம்**

177) பழந்தமிழர் எதைத் தம் கடமையாகக் கருதினர்?

**பொருளீட்டுதலை**

178) தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ள எந்த பிரிவு விளக்குகிறது.

**பொருள்வயிற் பிரிவு**

179) பிரிவு எத்தனை வகைப்படும் ? அவை யாவை?

**காலில் (தரைவழிப்பிரிதல்) பிரிவு, கலத்தில் ( நீர்வழிப்பிரிதல்) பிரிவு**

180) பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் ——— கடல்வழி வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

**மேற்கே கிரீசு, உரோம், எகிப்து முதல் கிழக்கே வரையிலும்.**

181) எந்த நாடுகள் தமிழரின் பொருள்களை விரும்பிப் பெற்றன?

**எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, சீனம்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

182) ஏலமும் இலவங்கமும் இஞ்சியும் மிளகும் எந்த நாடுகளில் நல்ல விலைக்கு விற்கப்பட்டன.

**மேற்காசிய நாடுகள்**

183) தமிழ்நாட்டில், பிறநாட்டாள் உள்ளத்தைக் கவரும் பல மிகுதியாகக் கிடைத்தன? அவை யாவை?

**முத்தும் பவளமும் ஆரமும் அகிலும் வெண்துகிலும் சங்கும் குறிப்பிடத் தக்கன.**

184) பழந்தமிழர், கிரேக்கரையும் உரோமானியரையும் _______ என அழைத்தனர்?

**யவனர்**

185) ஒவ்வொரு பெரிய கப்பலும் எப்படி தோன்றும்.

**மதில் சூழ்ந்த கோட்டை போல**

186) பழங்காலத்திலேயே தமிழகத்தில் பலவகையான _______ கட்டப்பட்டன.

**கப்பல்கள்**

187) கோடையின் தோற்றமானது, நடுக் கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாகப் _______ கூறப்பட்டு உள்ளது.

**புறநானூற்றில்**

188) கடலைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள் யாவை?

**ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி.**

189) மரக்கலத்துக்கும் தமிழ்மொழியில் பல பெயர்கள் உள்ளன அவை?

**கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, ப·றி, ஓடம் என்பன.**

190) கடலில் செல்லும் பெரிய கப்பல் — எனப்படும்.

**நாவாய்**

191) குறிப்பு:-

புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப் புண்டு கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவது போல் அசைந்தன. அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின எனப் பட்டினப்பாலை கூறுகின்றது.

192) தமிழகத்தில் நடைபெற்று வந்த வாணிகத்தின் பயனாகப் பல துறை முகங்கள் கடற்கரைப் பட்டினங் களாகச் சிறந்து விளங்கின. அவற்றுள் ———, ——— ஆகியவை குறிப்பிடத் தக்கன.

**காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை**

193) முசிறி யாருடைய துறைமுகம்?

**சேரமன்னர்க்குரியது.**

194) ——— என்னும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள், ஆற்றுத் துறைகள் கலங்கிப் போகும்படி வந்து நின்றன.

**சுள்ளி**

195) அக்கலங்களுக்கு உரிய யவனர்கள் பொன்னைச் சுமந்து வந்து, அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்றார்கள். என்ற இச்செய்தியை _______ தெரிவிக்கிறது.

**அகநானூறு**

196) பாண்டிய நாட்டின் வளம் பெருக்கியது எந்தத் துறைமுகம்.

**கொற்கை**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

197) வெனிசு நாட்டறிஞர் யார்?
**மார்க்கோபோலோ**

198) 'விளைந்து முதிர்ந்த விழுமுத்து' என்று முத்தினை சிறப்பாகக் கூறியது யார்?
**மதுரைக் காஞ்சி**

199) கடல் கடந்த தமிழ்
1. தமிழ் - கிரேக்கம்
2. அரிசி - ஒரைஸா
3. கருவூர் - கரோரா
4. காவிரி - கபிரில்
5. குமரி - கொமாரி
6. சோபட்டினம் - சோபட்னா
7. தொண்டி - திண்டிஸ்
8. மதுரை - மதோரா
9. முசிறி - முசிரில்

200) கடற்கரையை அடுத்து இருக்கும் உள்ளர்கள் _______, ______, இருந்தன.
**கலங்கரை விளக்கம்**

201) பழந்தமிழகத்தின் வாணிகப் பொருள்களைப் பற்றிய குறிப்புகள் எங்குக் காணப்படுகின்றன. பட்டினப் பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் ஏற்றமதியான பொருள்களுள் கீழ் காண்பவை?
**இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண் துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி.**

202) தமிழகத்தில் என்ன இறக்குமதி ஆயின.
**சீனத்துப் பட்டும் சருக்கரையும்.**

203) எந்தப் பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பட்டம், பட்டயக்கல்வி கற்பிக்கப்பெற்று வருகின்றன?
**கடல்சார் பல்கலைக்கழகம்**

204) _______என்னும் பாரதியின் கனவு இன்று நனவாகி உள்ளது?
**மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்.**

205) பொருத்துக:-

**நாடு – துறைமுகம்**
1. சேரநாடு – முசிறி
2. சோழநாடு – காவிரிப்பூம் பட்டினம்
3. பாண்டியநாடு – கொற்கை

206) மரபுத்தொடர்களைச் சொற்றொடரிகளில் அமைக்க:-
1. கைவந்தகலை : _______
2. அத்தி பூத்தாற்போல : _______
3. உள்ளங்கை நெல்லிக்கனி : _____

207) இருபொருள் எழுதுக:
1. திரை _______, _______,
2. கலிங்கம் _______, _______,
3. கலை _______, _______,
4. கவி _______, _______,

208) திணையும் - நிலமும்
1. குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்
2. மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும்
3. நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்
4. பாலை - மணலும் மணல்சார்ந்த இடமும்

## கெலன் கெல்லர் (துணைப்பாடம்)

209) அமெரிக்காவின் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் அரசியல் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கியவர் யார்?
**கெலன் கெல்லர்**





join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

210) "இந்த உலகத்தில் அமைதி மலர வேண்டும் எனக் கேட்பேன்" - என்றவர் யார்?
**கெலன்**

211) பத்தொன்பது மாதக் குழந்தையாக இருந்த போது கெலன் கெல்லருக்கு ஏற்பட்ட கொடிய நோய் எது?
**கண்கள் பாரா, காதுகள் கேளா, வாய்பேசாது.**

212) கெலன் கெல்லருக்கு ஆறு வயதான போது யாருடைய உதவியால் 'பெர்கின்ஸ் பள்ளியில்' சேர்ந்தார்?
**அலெக்சாண்டர் கிரகாம்பெல்**

213) கெலனின் ஆசிரியர் யார்?
**அன்னிசல்லிவான்**

214) பாஸ்டனில் உள்ள _______ காது கேளாதோருக்கான பள்ளியிலும், நியூயார்க்கில் உள்ள _______ பள்ளியிலும் முறைப்படி பயின்றார்.
**ஹோரஸ்மான் ரைட்ஹுமாசன்**

215) கெலன், எந்த முறையில் எழுதவும் படிக்கவும் கற்றார்?
**பிரெய்லி**

216) ஆசிரியை அன்னி அளித்த பயற்சியின் பயனாக, எந்தக் கல்லூரி நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று, இளங்கலைப்பட்ட வகுப்பில் சேர்ந்தது பட்டமும் பெற்றார்?
**கேம்பிரிட்ஜ் ரெட்கிளிஃப்**

217) கண்ணிழந்தோருக்கும், காதுகேளா தோர்க்கும் அல்லும் பகலும் அயராது உழைத்தவர் யார்?
**கெலன்**

218) _______ நிதி என ஒன்றனைத் தொடங்கி, அதில் சேர்ந்த தொகையான ரூபாய் ஒன்றரைக் கோடியை அப்பள்ளிகளுக்கு வழங்கினார்.
**கெலன் கெல்லர் நிதி**

219) பார்வையற்றோருக்கென எந்த நூலகம் ஒன்றனை உருவாக்கி, உலகம் முழுவதிலும் இருந்து நூல்கள் வந்து குவிய ஏற்பாடு செய்தார்.
**தேசிய நூலகம்.**

220) "வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை; ஒன்று போனால் இன்னொன்று வரும். அந்த நம்பிக்கையிருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது" எனக் கூறியவர் யார்?
**கெலன்**

221) நீங்கள் கண்பார்வை அற்றவராகவும் காது கேளாதவராகவும் இருந்தும் கூட எப்படி உங்களால் சாதிக்க முடிந்தது என கெலனிடம் கேட்டது யார்?
**விக்டோரியா மகாராணி**

222) ஆசிரியர் அன்னி எந்த ஆண்டு இறந்தார்?
**1930 ஆம் ஆண்டு**

223) அன்னி இறந்த பிறகு கெலன் யார் உதவியுடன் வாழ்ந்தார்?
**பாலி தாம்சன்**

224) கெலன் எந்த நகரின் புகழ் பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தார்?
**வாஷிங்டன்**

225) கெலன் கெல்லர் ஒரு நாள் கடவுளின் அருளால் எத்தனை நாள் மட்டுமே தமக்குப் பார்வை கிட்டியதாகக் கனவு கண்டார்?
**மூன்று நாள் மட்டும்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

226) முதல் நாள் கெலன் கெல்லர் பார்த்தது யார்?
**ஆசிரியர்**

227) இரண்டாவது நாள் கெலன் கெல்லர் _______ தோன்றுவதனைக் கண்டார்.
**கதிரவன்**

228) கெலன் யாருடைய புகழ் பெற்ற கலைஞர்களின் ஓவியங்களையும் கலைப் பொருள்களையும் கண்டு மகிழ்ந்தவர் யார்?
**லியனார் டோ டாவின்சி**

229) கெலன் யாருடைய நாடகத்தைப் பார்த்தார்.
**செகப்பிரியருடைய**

230) மூன்றாவது நாள் பார்த்தாவை?
**நகரின் கிழக்குப் பக்கத்திலுள்ள ஆற்றுப்பாலத்தை உற்று நோக்கினார். நியூயார்க்கில் உள்ள கம்பீரமான இரட்டைக் கோபுரக் கட்டடத்தைக் கண்டு களித்தார்.**
**மக்களின் முகத்தில் வெளிப்படும் மகிழ்ச்சி, துன்பத்தைப் பார்த்து புரிந்துக் கொண்டார்.**

231) குறிப்பு:-
**1880 சூன் 27 இல் அமெரிக்காவிலுள்ள அலபாமா மாகாணத்தில் துஸ்கும்பி யாவில் பிறந்து, சாதனையாளராகத் திகழ்ந்த கெலன், 1968 ஆம் ஆண்டு சூன் முதல் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது உடல் வாஷிங்டனில் அன்னி, பாலி ஆகியோரது உடல்களுக்கு அருகே நல்லடக்கம் செய்யப்பட்டது.**

232) உலகின் எட்டாவது அதிசயம் எனப் பாராட்டப் பெற்றவர் யார்?
**கெலன் கெல்லர்**

233) பார்வையற்றோருக்கான எழுத்து முறையை உருவாக்கியவர் யார்?
**பிரெய்லி**

## பெயர்ச்சொல் (இலக்கணம்)
## தொழிற்பெயர்

234) பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள், தொழிற் பெயர்களைக் கூறுக?
**மாதவி, கோவலன் - பெயர்ச்சொற்கள்**
**கண்டு, மகிழ்ந்தான் - வினைச்சொற்கள்**
**ஆடல் - என்பது தொழிற்பெயர்**

235) ஆடல் பிரித்தெழுதுக:
**ஆடு + அல்**

236) தொழிற்பெயரைக் குறிக்க வரும் விகுதிகள்:-
**தல்,அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்பன.**

237) பெறுதல் = பெறு + தல்
ஆட்டம் = ஆடு + அம்
பறவை = பற + வை
போக்கு = போ + கு
தோற்றரவு = தோற்று + அரவு
பாய்த்து = பாய் + து
கோடல் = கோடு + அல்
வாழ்க்கை = வாழ் + கை
புளிப்பு = புளி + பு
வரவு = வர + உ
கோட்பாடு = கோள் + பாடு
கேளானை = கேள் + ஆனை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

238) தொழிற்பெயர் வகைகள் யாவை?

**தொழிற்பெயர் இருவகைப்படும்**

1). முதனிலைத் தொழிற்பெயர்

2). முதனிலை திரிந்த தொழிற்பெயர்

239) முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன?

**தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல், பகுதி மட்டும் வந்து, தொழிலை உணர்த்துவது முதனிலைத் தொழிற் பெயர்.**

240) முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன?

**தொழிற்பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது முதனிலை திரிந்த தொழிற் பெயராகும்.**

241) வினையாலணையும் பெயர் என்றால் என்ன?

**வினைமுற்று, வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறிப்பது வினையாலணையும் பெயர்.**

242) தொழிற்பெயர்க்கும், வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகள்

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| தொழிலுக்குப் பெயராய் வரும். | தொழில் செய்பவருக்குப் பெயராய் வரும். |
| படர்க்கை இடத்தில் வரும். | மூவிடங்களிலும் வரும். |
| காலங்காட்டாது. | முக்காலத்தையும் காட்டும். |

243) பண்புப் பெயர் எதன் அடிப்படையில் தோன்றும்?

**பண்பை உணர்த்தும் பெயர் பண்புப் பெயர். அறுவகைப் பெயர்களுள் ஒன்றான பண்புப் பெயர் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.**

1. செம்மை, வெண்மை, கருமை - நிறப் பண்பு
2. வட்டம், சதுரம், கூம்பு, செவ்வகம் - வடிவப்பண்பு
3. ஒன்று, அரை, கிலோமீட்டர் - அளவுப் பண்பு
4. காரம், புளிப்பு, இனிப்பு - சுவைப் பண்பு

244) பண்புப் பெயர் விகுதிகள்

**மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், பம், து, மன், இல் என்பன பண்புப் பெயர் விகுதிகள்.**

245) வேற்றுமை உருபேற்கும் போது திரியும் பெயர்கள்?

**வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. இவற்றைக் குறித்து முன் வகுப்பில் தெளிவாகப் படித்திருப்பீர்கள். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்களை ஏற்று வரும்போது எவ்வாறு திரியும் என்பது குறித்துக் காணலாம்.**

246) தன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது?

யான் + ஐ = என்னை

யான் + ஆல் = என்னால்

யான் + கு = எனக்கு, யான்

யான் +இன் = என்னின்

யான் + அது = எனது

யான் + கண் = என்கண் எனத் திரியும்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

247) முன்னிலைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது
நீ + ஐ = நின்னை, உன்னை
நீ + ஆல் = நின்னால், உன்னால்
நீ + கு = நினக்கு, உனக்கு, நீ
நீ + இன் = நின்னின், உன்னின்
நீ + அது = நினது, உனது
நீ + கண் = நின்கண், உன்கண்
எனத் திரியும்

248) படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது
தான் + ஐ = தன்னை
தான் + ஆல் = தன்னால்
தான் + கு = தனக்கு, தான்
தான் + இன் = தன்னின்
தான் + அது = தனது
தான் + கண் = தன்கண் எனத் திரியும்

249) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-
1. தொழிற் பெயரின் பகுதி திரிந்து வரும் பெயர் ______
**முதனிலை திரிந்த தொழிற்பெயர்**
2. காட்சி என்னும் தொழிற்பெயர் ______ எனப் பிரியும்.
**காண் + சி**
3. மாட்சி என்பது ______ ஆகும்.
**பண்புப்பெயர்**
4. 'வந்தான்' என்னும் வினைமுற்று ______ என வினையாலணையும் பெயராய் வரும்.
**வந்தவன்**

250) பொருத்துக:-
1. தொழிற்பெயர் - சூடு
2. முதனிலை திரிந்த தொழிற்பெயர் - வருதல்
3. பண்புப்பெயர் - நன்றி
4. வினையாலணையும் பெயர் - அகழ்வார்

251) நிரப்புக:-
1. பகுதி மட்டும் தொழிலைக் குறிப்பது ______
**முதனிலைத் தொழிற்பெயர்**
2. வரவு என்னும் தொழிற்பெயரின் விகுதி ______ எதுவுமில்லை.
3. வட்டம் என்பது ______ பெயர் ஆகும்.
**வடிவப்பண்பு**
4. நீ எனும் முன்னிலைப் பெயர் உருபேற்கும் போது ______ எனத் திரியும்.
**உன்**

## மொழித்திறன் பயிற்சி

252) ஐந்திணைகள் யாவை?
**குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை.**
1. முக்கனி – மாங்கனி, பலாக்கனி, வாழைக்கனி
2. நாற்படை - தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை.
3. ஐந்திலக்கணம் - எழுத்திலக்கணம், சொல்லிக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம்.
4. அறுசுவை - இனிப்புச்சுவை, கசப்புச் சுவை, கார்ப்புச்சுவை, துவர்ப்புச்சுவை, உவர்ப்புச் சுவை, புளிப்புச் சுவை


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

253) இணையான தமிழ்ப் பழமொழியை அறிக:

1. In a fiddler's house all are dancers
கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்

2. No man can flay a stone
கல்லிலே நார் உரிக்க முடியுமா?

3. Difficulties give way to diligence
கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

4. Command your man and do it your self
வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்

5. Charity is a double blessing
தருமம் தலை காக்கும்

## இயல் நான்கு
## செய்யுள் - திருக்குறள்

254) சொற்பொருள் -

1. செவிச்செல்வம் - கேள்விச் செல்வம்
2. தலை - முதன்மை
3. போழ்து - பொழுது
4. ஈயப்படும் - அளிக்கப்படும்
5. அவி உணவு - தேவர்களுக்கு வேள்வியின்பொழுது கொடுக்கப்படும் உணவு.
6. ஆன்றோர் - கல்வி, கேள்வி, பண்பு, ஆகியவற்றில் சிறந்தோர்.
7. ஒப்பர் - ஒப்பாவர்
8. ஒற்கம் - தளர்ச்சி
9. ஊற்று - ஊன்று கோல்
10. ஊற்றுக்கோல் - ஊன்றுகோல்
11. அற்றே - போன்றதே
12. எனைத்தானும் - எவ்வளவு சிறிதே ஆயினும்
13. அனைத்தானும் - கேட்ட அளவிற்கு
14. ஆன்ற - நிறைந்த
15. பிழைத்துணர்ந்தும் - தவறாக உணர்ந்திருந்தாலும்
16. பேதைமை - அறியாமையின் பாற்பட்ட தீய சொற்கள்.
17. இழைத்துணர்ந்து - நுட்பமாக ஆராய்ந்து
18. ஈண்டிய - ஆய்ந்தறிந்த
19. தகையவே - தன்மையதே
20. தோட்கப்படாத - துளைக்கப்படாது.
21. நுணங்கிய - நுட்பமாகிய
22. வணங்கிய - பணிவான
23. வாயினராதல் - மொழியினை உடையவர்
24. வாயுணர்வின் மாக்கள்- உணவுச் சுவை மட்டும் அறிந்தோர்.
25. அவியினும் - இறந்தாலும்

255) **இலக்கணக் குறிப்பு:-**

1. வயிற்றுக்கும் - இழிவுச் சிறப்பும்மை
2. அவியுணவு - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
3. கேட்க - வியங்கோள் வினைமுற்று
4. இழுக்கல், ஒழுக்கம் - தொழிற் பெயர்கள்
5. ஊற்றுக்கோல் - ஊன்று கோல் என்பதன் வலித்தல் விகாரம்
6. ஆன்ற பெருமை - பெயரெச்சம்
7. கேளாத் தகையவே - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
8. அவியினும் வாழினும் - எண்ணும்மை

256) பிரித்தறிதல் -

1. செவிக்குணவு = செவிக்கு + உணவு



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

2. சுவையுணரா = சுவை + உணரா

3. வாயுணர்வு = வாய் + உணர்வு

257)பகுபத உறுப்பிலக்கணம்

1. கேட்க - கேள் (ட்) + க

கேள் - பகுதி

ள் - ட் ஆனது விகாரம்

க - வியங்கோள் வினைமுற்று விகுதி

2. உணர்ந்து - உணர் + த்(ந்) + த் + உ

உணர் - பகுதி

த் - சந்தி

த் - ந் ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

உ - வினையெச்ச விகுதி

258) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

1. செவிக்குணவாவது ______

**கேள்வி**

2. ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் ____

**ஊற்றுக்கோல்**

259) உடைமைகள் பத்து

திருக்குறளில் பத்து அதிகாரப் பெயர்கள் உடைமை என்னும் சொல்லில் அமைந்துள்ளன.

1. அன்புடைமை
2. அடக்கமுடைமை
3. ஒழுக்கமுடைமை
4. பொறையுடைமை
5. அருளுடைமை
6. அறிவுடைமை
7. ஊக்கமுடைமை
8. ஆள்வினையுடைமை
9. பண்புடைமை
10. நாணுடைமை

260) குறளும் ஏழு என்னும் எண்ணுப் பெயரும்

திருக்குறளுக்கும் ஏழு என்னும் எண்ணிற்கும் பெரிதும் தொடர்புள்ளது. திருக்குறள் ஏழு சீர்களால் அமைந்த வெண்பாக்களைக் கொண்டது. ஏழு என்னும் எண்ணுப்பெயர் எட்டுக் குறட்பாக்களில் இடம் பெற்றுள்ளது. அதிகாரங்கள், 133. இதன் கூட்டுத் தொகை ஏழு. மொத்த குறட்பாக்கள் 1330. இதன் கூட்டுத் தொகையும் ஏழு.

## சீட்டுக்கவி

261) ஏடாயிரங் கோடி எழுதாது - என் சீட்டுக்கவிப் பாடலை பாடியவர் யார்?

**அந்தகக்கவி வீரராகவர்.**

262) பாட்டிசைக்காத கந்தருவம் (இசை), எறியமுடியாத கந்துகம் (பந்து), கூர்மை மழுங்காத கோணம் (வாட் படை), பறக்காத கொக்கு, அனல் வீசாத கோடை (வேனிற்காலம்), கொடிய படைக்கலம் போன்று பிடியாத குந்தம் (சூலம்), அணியாத பாடலம் (பாதிரிப் பூ), பூவாத மா (மாமரம்), மலர்மாலை அணியாத சடிலம் (சடை), சொல்லியதைத் திருப்பிச் சொல்லாத கிள்ளை (கிளி) ஒன்றனைக் காண்போர் எல்லாம் புகழுமாறு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

263) கந்தருவம், கந்துகம்,கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், சடிலம், கிள்ளை என்பன எதை குறிக்கும் பல பெயர்கள்.

**குதிரை**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

264) சொற்பொருள்:-

1. கந்துகம் - பந்து
2. கோணம் - வாட்படை
3. குந்தம் - சூலம்
4. கோடை - வேனிற்காலம்
5. பாடலம் - பாதிரிப் பூ
6. மா - மாமரம்
7. சடிலம் - சடை
8. கிள்ளை - கிளி

265) இலக்கணக் குறிப்பு:-

1. படித்த விரகன், தீர்த்த செழியன் - பெயரெச்சங்கள்
2. பாடாத, பறவாத, சூடாத - எதிர் மறைப் பெயரெச்சங்கள்
3. எதிரிலாக் கவி - ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்
4. விடல் - தொழிற்பெயர்

266) **ஆசிரியர் குறிப்பு:-**

வீரராகவர் காஞ்சிபுரம் மாவட்டத்துப் பூதூரில் பிறந்து, பொன் விளைந்த களத்தூரில் வாழ்ந்தவர். இவரின் தந்தையார் வடுகநாதர். வீரராகவர் பிறவியிலேயே கண்ணொளி இழந்தவர். எனினும் கேள்வியறிவின் வாயிலாகக் கல்வி பயின்றார். இவர், ஏடுகள் எழுதாமல் தம் மனத்திலேயே எழுதிப் படித்தேன் எனத் தாமே கூறுவதி லிருந்து, அவர் கற்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியை எண்ணி வியக்கத் தோன்றுகிறது. வள்ளல்கள் மீதும் சிற்றரசர்கள் மீதும் பல தனிப்பாடல்களைப் பாடிப் பரிசுகள் பெற்றார். இலங்கை சென்று பரராச சேகர மன்னனைப் பாடி ஒரு யானை, பொற்பந்தம், ஓர்ஊர் ஆகியவற்றைப் பரிசிலாகப் பெற்று ஊர் திரும்பினார். இதனால், இவர்தம் புகழ் கடல் கடந்தும் பரவிற்று. இவரது பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ளன. திருக்கழுக்குன்றப் புராணம், திருக் கழுக்குன்ற மாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருவாரூர் உலா, சந்திர வாணன் கோவை ஆகிய நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

267) **நூற் குறிப்பு:-**

இப்பாடல், தனிப் பாடல் திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல். இதில் நூற்றுப்பத்துப் புலவர்கள் பாடிய ஆயிரத்து நூற்றுப் பதின் மூன்று பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. வீரராகவர் இயற்றிய முப்பத்தொன்பது பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. வீரராகவர், சேலத்து வேந்தன் செழிய தரையனுக்கு குதிரை வேண்டி எழுதி அனுப்பிய பாடல் இது.

268) நிரப்புக:-

1. வீரராகவர் எழுதிய நூல்களுள் ஒன்று ______ புராணம்.
**திருக்கழுக்குன்றப்**

2. ஓலைச்சீட்டில் செய்யுள் வடிவில் எழுதப்படும் கடிதவகை ______ ஆகும்.
**சீட்டுக்கவி**

3. சீட்டுக்கவிக்கு ______,______, என்னும் வேறு பெயர்களும் உண்டு.
**ஓலைத்தூக்கு, ஓலைப்பாசுரம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

269) பொருத்துக:-

1. கந்துகம் - பந்து
2. குந்தம் - சூலம்
3. பாடலம் - பாதிரிப்பூ
4. சடிலம் - சடை

## ஆனந்தரங்கர் நாட்குறிப்பு (உரைநடை)

270) ஒரு நாட்குறிப்பானது, அக்கால நிகழ்வுகளை நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கும் வரலாற்று ஆவணமாகத் திகழ்வது எது?

**ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு**

271) நாட்குறிப்பு எதற்கு பதிவு செய்வதற்காகப் பயன்படல் வேண்டும்?

**குறித்த நாளில் நிகழ்ந்த சமூக மாற்றங்கள், அரசியல் நிகழ்வுகள், இயற்கையில் ஏற்பட்ட பேரிடர்கள், உலகின் சீரிய நிகழ்வுகள்.**

272) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு ஓர் _____, ______, ஆவணமாகவும் மதிக்கப் பெறுகிறது.

**இலக்கியமாகவும், வரலாற்று ஆவணமாகவும்**

273) ஆனந்தரங்கர் எந்த ஊர், ஆண்டு, நாள் பிறந்தார்?

**ஆனந்தரங்கர், சென்னைப் பிரம்பூரில் (பெரம்பூர்) 1709 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30 ஆம் நாள் பிறந்தார்.**

274) ஆனந்தரங்கர் எந்த வயதில் தாயை இழந்தார்.

**தம் மூன்று வயதில்**

275) யாரிடம் ஆனந்தரங்கர் கல்வி பயின்றார்?

**எம்பார் என்பாரிடம் கல்வி பயின்றார்.**

276) ஆனந்தரங்கர் தந்தை, மைத்துனரின் பெயர்?

**திருவேங்கடம், நைனியப்பரின்**

277) ஆனந்தரங்கர் அரசுப் பணியில் உதவி யாளராகச் சேர்ந்து, நாளடைவில் ______ பதவி உயர்வு பெற்றார்.

**திவானாகப்**

278) ஆனந்தரங்கர் கல்வி கற்ற பின்னர் என்ன நடத்தி வந்தார்?

**பாக்குக் கிடங்கு**

279) ‘துய்ப்ளெக்சு’ என்னும் ஆளுநரின் மொழி பெயர்ப்பாளர் (துபாசி) இறந்ததனால் பன்மொழியறிவு பெற்ற யாரை அப்பணிக்கு நியமிக்கப்பட்டார்?

**ஆனந்தரங்கர்**

280) ஆனந்தரங்கர் துபாசியாகப் பணியாற்றிய காலத்தில் எந்த ஆண்டு நாட்குறிப்பு எழுதியுள்ளார்?

**1736 ஆம் ஆண்டு முதல் 1761 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள்.**

281) நாட்குறிப்புக்கு ஆனந்தரங்கர் என்ன பெயரிட்டார்?

**தினப்படி செய்திக் குறிப்பு, சொஸ்தலிகிதம்**

282) ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும் பகுதி எந்த செய்திகளையே விவரிக்கின்றன.

**வாணிகச் செய்தி**

283) துறைமுக நகரங்களில் வாழும் மக்களின் வருவாய்க்கு அடிப்படையாய் அமைவது அங்கு வரும் ______ போக்குவரத்தே.

**கப்பல்களின் போக்குவரத்து**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

284) 1. சொஸ்த - தெளிந்த அல்லது உரிமையுடைய என்பது பொருள்
2. லிகிதம் - கடிதம் அல்லது ஆவணம்
3. வளவு - வீடு
4. துபாசி - இருமொழிப் புலமையுடையவர் (மொழி பெயர்ப்பாளர்)

285) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பானது, அக்காலத்தில் ______ எடுத்துரைக்கின்றது.
**பேச்சுத்தமிழ், சொற்கள், சொற்றொடர்கள் மற்றும் இலக்கணக் கூறுகளை எடுத்துரைக்கின்றது.**

286) பிரெஞ்சுக் காரர்களுக்கும் இந்திய மன்னர்களுக்கும் இடையே பாலமாக இருந்தவர் யார்?
**ஆனந்தரங்கர்**

287) முசபர் சங், ஆனந்தரங்கருக்கு 1749 ஆம் ஆண்டு மூவாயிரம் குதிரைகளை வழங்கி அவருக்கு ______ என்னும் பட்டத்தையும் வழங்கினார்?
**மன்சுபேதார்**

288) செங்கற்பட்டுக் கோட்டைக்குத் தளபதியாகவும் அம்மாவட்டம் முழுமைக்கும் ______ கவும் நியமனம் பெற்றார்?
**ஜாகீர்தாரராகவும்**

289) ______ பணியாற்றுவோர் தமழ் மக்களின் தலைவராக அறிவிக்கப் படுவர்?
**துபாசி**

290) ஆனந்தரங்கருக்குத் தனிப்பட்ட உரிமைகள் யார் ஆட்சியில் இருக்கும் போது வழங்கப்பட்டிருந்தன?
**துய்ப்ளே**

291) ஆனந்தரங்கரை இந்தியாவின் ______ எனவும், ______ எனவும், அறிஞர் போற்றுகின்றனர்?
**பெப்பிசு, நாட்குறிப்பு வேந்தர்**

292) டைஸ் என்னும் இலத்தீன் சொல்லுக்கு நாள் என்பது பொருள். இதிலிருந்தே டைரியம் என்னும் இலத்தீன் சொல் உருவானது. இச்சொல்லுக்கு நாட் குறிப்பு என்பது பொருள். இதிலிருந்தே டைரி என்னும் ஆங்கிலச் சொல் உருவானது.

293) **ஆனந்தரங்கர் குறித்து வெளிவந்துள்ள இலக்கியங்கள்:-**
ஆனந்தரங்கக் கோவை - தியாகராச தேசிகர்
ஆனந்தரங்கன் தனிப்பாடல்கள் கள்வன் நொண்டிச் சிந்து
ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் - அரிமதி தென்னகன்
ஆனந்தரங்கர் புதினங்கள்
ஆனந்தரங்க விஜயசம்பு - சீனிவாசக் கவி (வடமொழி)
ஆனந்தரங் ராட்சந்தமு - கஸ்தூரிரங் கக்கவி (தெலுங்கு)

## இலக்கணம்
## சொல் (பகாப்பதம், பகுபதம்)

294) சொல் என்றால் என்ன?
**ஓர் எழுத்து, தனித்தேனும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தேனும் ஒரு பொருளை உணர்த்துமானால், அது, சொல் எனப்படும்.**

295) சொல் என்பதன் வேறு பெயர்கள் யாவை?
**பதம், மொழி, கிளவி**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

296) பதம் பகாப்பதம், பகுபதம் என இரு வகைப்படும்.

297) பகாப்பதம் என்றால் என்ன?

**பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும்.**

298) பகாப்பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பகாப்பதம் நான்கு வகைப்படும்**

அவை-

பெயர், வினை, இடை, உரி.

299) பகுப்பதத்தின் பிரிவுகள் -

**பகுதி, விகுதி, இடைநிலை.**

300) பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இரு வகைப்படும்.**

301) பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் ஆறன் அடியாகத் தோன்றுவது.**

302) வினைப்பகுபதம் என்பது என்ன?

**பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பகுக்கப்படும் வினைமுற்று, வினைப்பகுபதம் எனப்படும்.**

303) பகுபத உறுப்புகள் எத்தனை உள்ளன?

**பகுபத உறுப்புகள் ஆறு உறுப்புகள்**

**அவை-**

**பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.**

304) பகுதி -

**பகுபதத்தில் முதலில் நின்று பொருள் தரும் முதனிலையைப் பகுதி**

305) விகுதி -

**பகுபதத்தில் இறுதியில் நின்று விகுதி எனப்படும் இது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.**

306) இடைநிலை -

**பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது இடைநிலை எனப்படும்.**

1. நிகழ்கால இடைநிலைகள்
2. இறந்தகால இடைநிலைகள்
3. எதிர்கால இடைநிலைகள்
4. எதிர்மறை இடைநிலைகள்

307) சந்தி -

**பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்து சந்திக்க வைப்பது சந்தி.**

308) சாரியை -

**பெயர்ச்சொல்லையும், வினைச் சொல்லையும் சார்ந்து வருவது சாரியை எனப்படும்.**

309) விகாரம் --

**பகுதி, இடைநிலை, விகுதி போன்றவை சேரும் போது இடையில் ஏற்படும் மாறுபாடு விகாரம் எனப்படும்.**

310) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

1. ______ என்பது பெயர்ப்பகுபதம் ஆகும்.

விடை

2. இடைச்சொற்கள் ______ பதம் ஆகும்.

விடை:

3. மதுரையான் ______பெயர்ப்பகுபதம் ஆகும்.

விடை:



Arivukkadal Pathippagam 9842649140

join telegram@tamizhanexammaterials1

@tamizhanexammaterials1

4. பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள் ______

விடை:

5. ஏவல் வினையாக அமைவது ______ ஆகும்.

விடை:

6. ‘இல்’ என்னம் எதிர்மறை இடை நிலை அமைந்துள்ள வினைச்சொல்

விடை:

7. செய்தான் - இச்சொல்லில் அமைந்துள்ள இடைநிலை ______

விடை:

311) பொருத்துக:-

அ) 1) பொருட்பெயர்ப் பகுபதம் --- சென்னையான்

2) இடப்பெயர்ப் பகுபதம் -- மூக்கன்

3) காலப்பெயர்ப் பகுபதம் -- பொன்னன்

4. சினைப்பெயர்ப் பகுபதம் -- சித்திரையான்

விடை:

ஆ) சொல் -- இடைநிலை

1. வருவான் - இறந்தகால இடைநிலை (த்)

2. காணான் - நிகழ்கால இடைநிலை (கிறு)

3. பார்த்தான் - எதிர்கால இடைநிலை (வ்)

4. நடக்கிறான் - எதிர்மறை இடைநிலை (ஆ)

விடை:

## மொழித்திறன் பயிற்சி

312) சொற்களை வகைப்படுத்துதல் பெயர், வினை, இடை, உரிச்சொற் களைக் கண்டறிந்து வகைப்படுத்தல் வேண்டும். மார்கழி, நடந்தான், உம், சால, பாடினான், மயிலம், உறு, என்று, கடி, கொல், அம்ம.

பெயர்ச்சொற்கள் - மார்கழி, மயிலம்

வினைச்சொற்கள் - நடந்தான், பாடினான்

இடைச்சொற்கள் - உம், என்று, கொல், அம்ம

உரிச்சொற்கள் - சால, உறு, கடி

313) வகைப்படுத்துக:-

தாமரை, கால், தவ, எழுதினான், ஆனால், வென்றான், மற்றும் சால

பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச் சொல் உரிச்சொல்

பெயர்சொல்:- தாமரை, கால்

வினைச் சொல்:- எழுதினான், வென்றான்

இடைச்சொல்:- ஆனால், மற்றும்

உரிச் சொல்:- தவ, சால

314) ஒருபொருள் குறித்த பல சொற்களுக்கு (எ.கா)

அழகு - பொலிவு, எழில், வனப்பு

இரக்கம் - அருள், பரிவு, கருணை

கிளி - தத்தை, சுகம், கிள்ளை

மலை - வெற்பு, சிலம்பு, பொருப்பு

கதிரவன் - சூரியன், பகலவன், ஞாயிறு.

315) கீழ்க்காணும் ஒரு பொருள் குறித்த பல சொற்களை எழுதுக:-

வயல் -- -----------,-----------,-----------

கடல் -- ஆழி, ஆர்களி, முந்நீர்

நெருப்பு -- தீ, கனல்

316) தமிழ்ச்சொல்

1. சமஸ்தானம் - அரசு

2. முக்கியஸ்தர் - முதன்மையானவர்

3. சினிமாதியேட்டர் - திரையரங்கம்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

4. கார் - மகிழுந்து

5. ஏரோப்பிளேன் - வானூர்தி

6. இலாகா - துறை

7. அப்பாயிண்ட் - பணி அமர்த்தல்

8. பிரதானம் - முதன்மை

9. விஞ்ஞானம் - அறிவியல்

10. பஸ் - பேருந்து

11. இரயில் - தொடர்வண்டி

12. கஜானா - கருவூலம்

13. உத்தியோகஸ்தர் - அலுவலர்

14. டிபார்ட்மெண்டல் ஸ்டோர் - பலபொருள் அங்காடி

317) இரஷ்ய நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் யார்?

**லியோ டால்ஸ்டாய்**

318) இணையான தமிழ்ப்பழமொழியை அறிக:

1. one flower makes no garland
தனிமரம் தோப்பாகாது

2. little wealth little care
மடியில் கனமில்லையென்றால் வழியில் பயமில்லை

3. Look before you leap
ஆழம் அறியாமல் காலை விடாதே

4. Some thing is better than nothing
ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை

5. Though he endeavours all he can
புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டாற் போல்

## இயல் ஐந்து - செய்யுள் முத்தொள்ளாயிரம்

319) சொற்பொருள் -

1. உய்ம்மின் - பிழைத்துக் கொள்ளுங்கள்
2. மல்லல் - வளமை
3. வள் - நெருக்கம்
4. விசும்பு - வானம்
5. புறவு - புறா
6. நிறை - எடை
7. ஈர்த்து - அறுத்து
8. துலை - துலாக்கோல் (தராசு)
9. நிறை - ஒழுக்கம்
10. வன்கண் - வீரத்தன்மை
11. மேனி - உடல்
12. மருப்பு - தந்தம்
13. ஊசி - எழுத்தாணி
14. மறம் - வீரம்
15. கனல் - நெருப்பு
16. திருத்தக்க - செல்வம் நிலைத்த
17. வையகம் - உலகம்
18. மொய்யிலை - நெருங்கியமைந்த இலை
19. மாறன் - பாண்டிய மன்னன்
20. களிறு - ஆண் யானை

320) இலக்கணக் குறிப்பு:

1. மல்லல் நெடுமதில் - உரிச்சொற்றொடர்
2. நெடுமதில் - பண்புத் தொகை
3. வாங்குவில் - வினைத் தொகை
4. உயர்துலை - வினைத் தொகை
5. குறையாவன் கண் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
6. இலைவேல் - உவமைத் தொகை
7. மருப்பூசி, மார்போலை - உருவகங்கள்
8. மாறன் களிறு - ஆறாம் வேற்றுமைத் தொகை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

321) பிரித்தறிதல்:-

1. தந்துய்ம்மின் - தந்து + உய்ம்மின்
2. வில்லெழுதி - வில் + எழுதி
3. பூட்டுமின் - பூட்டு + மின்
4. மருப்பூசி - மருப்பு + ஊசி
5. மார்போலை - மார்பு + ஓசை
6. எமதென்று - எமது + என்று
7. மொய்யிலை - மொய் + இலை

322) அணி:-

**தற்குறிப்பேற்ற அணி**

**உருவக அணி**

323) நூற் குறிப்பு:

மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் முத்தொள்ளாயிரம். ஆயினும் இந்நூல் முழுமையாகக் கிடைக்க வில்லை. புறத்திரட்டு என்னும் நூல் வாயிலாக நூற்றெட்டு வெண்பாக் களும், பழைய உரை நூல்களில் மேற்கோள்களாக இருபத்திரண்டு வெண்பாக்களும் கிடைத்துள்ளன. மூவேந்தர்களின் ஆட்சிச்சிறப்பு, படைச் சிறப்பு, போர்த்திறன் கொடை முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன. சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை.

324) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

1. சேர மன்னரின் அடையாளச் சின்னம் ______

**வில்**

2. சோழ மன்னன் ______ வினைக் காக்க, தன் தசையை அளித்தான்.

**புறா**

3. மார்போலையில் எழுதும் எழுத் தாணி ______

**தந்தம்**

325) பொருத்துக:-

1. விசும்பு - வானம்
2. துலை - துலாக்கோல்
3. மருப்பு - தந்தம்
4. கனல் - நெருப்பு
5. களிறு - யானை

## கலிங்கத்துப்பரணி
## சயங்கொண்டார்

326) சொற்பொருள் -

1. தீயின்வாய் - நெருப்பில்
2. சிந்தை - எண்ணம்
3. கூர - மிக
4. நவ்வி - மான்
5. முகில் - மேகம்
6. மதி - நிலவு
7. உகு - சொரிந்த(பொழிந்த)
8. புனல் - நீர்

327) **இலக்கணக் குறிப்பு:-**

1) வெந்து, உலர்ந்து, எனா, கூர, - வினையெச்சங்கள்
2. கூர - வினையெச்சங்கள்
3. செந்நாய் - பண்புத் தொகை
4. கருமுகிலும், வெண்மதியும் - எண்ணும்மை
5. கருமுகில், வெண்மதி - பண்புத் தொகைகள்
6. கடக்க ஓடி, இளைத்து - வினை யெச்சங்கள்
7. வியர்த்த வியர்வன்றோ - பெயரெச்சம்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

328) பகுபத உறுப்பிலக்கணம் :-

1. உலர்ந்து - உலர் + த்(ந்) + த் + உ

உலர் - பகுதி

த் - சந்தி

த் - ந் ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

உ - வினையெச்சவிகுதி

329) பிரித்தறிதல் :-

1. வாயினீர் - வாயின் + நீர்
2. வெந்துலர்ந்து - வெந்து + உலர்ந்து
3. காடிதனை - காடு + இதனை
4. கருமுகில் - கருமை + முகில்
5. வெண்மதி - வெண்மை + மதி

330) **ஆசிரியர் குறிப்பு:-**

கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் சயங்கொண்டார். இவர், திருவாரூர் மாவட்டத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரினர். முதல் குலோத்துங்கச் சோழனின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தவர். பரணிக்கோர் சயங் கொண்டார் எனப் பலபட்டடைச் சொக்க நாதப் புலவர் பாராட்டியுள்ளார். இசையாயிரம், உலாமடல் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது காலம் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு.

331) **நூற் குறிப்பு:-**

ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்குப் பரணி என்பது பெயர். இது தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று. பரணி இலக்கியங்களுள் தமிழில் தோன்றிய முதல் நூல் கலிங்கத்துப் பரணி. கலிங்க மன்னன் அனந்த பன்மன் மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர்தொடுத்து வெற்றி பெற்றான்.

அவ்வெற்றியைப் பாராட்டி எழுந்த இந்நூல் தோல்வியுற்ற கலிங்க நாட்டின் பெயரால் அமைந்துள்ளது. இந்நூல் ஐந்நூற்றுத் தொண்ணூற்றொன்பது தாழிசைகள் உள்ளன. சயங் கொண்டாரின் சமகாலப் புலவரான ஒட்டக் கூத்தர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்.

332) பரணி இலக்கியங்கள்

1. **தக்கயாகப்பரணி,**
2. **மோகவதைப்பரணி,**
3. **சீனத்துப்பரணி,**
4. **வங்கத்துப்பரணி,**
5. **பாசவதைப்பரணி,**
6. **திராவிடத்துப்பரணி.**

333) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

1. தமிழில் தோன்றிய முதல் பரணி இலக்கியம் ______

**கலிங்கத்துப்பரணி**

2. கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் ______

**சயங்கொண்டார்**

3. நவ்வி - இச்சொல்லின் பொருள் ______

**மான்**

4. சிற்றிலக்கியங்கள் ____ வகைப்படும்.

96



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

334) பொருத்துக:-

1. சிந்தை - எண்ணம்
2. நவ்வி - மான்
3. முகில் - மேகம்
4. புனல் - நீர்
5. உருகுதல் - சொரிதல்

## உலகளாவிய தமிழர் (உரைநடை)

335) உலகில் ஐக்கிய சபையின் உறுப்புரிமை பெற்ற எத்தனை நாடுகள் மற்றும் ஆட்சிப்புலங்களும் உள்ளன?
**நூற்றுத் தொண்ணூற்று இரண்டு நாடுகளும் நாற்பத்து மூன்று ஆட்சிப் புலங்களும் ஆக இரு நூற்று முப்பத்தைந்து நாடுகள்.**

336) ஏறத்தாழ நூற்றைம்பத்து நான்கு நாடுகளில் ______ இனம் பரவியுள்ளது.
**தமிழினம்**

337) தமிழர்கள் அயல்நாடுகளுக்கு செல்வதற்கான காரணம்?
**வாணிகம், வேலைவாய்ப்பு**

338) திரைகடலோடியும் திரவியம் தேடு என்றவர் யார்?
**ஔவையார்**

339) சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு எதில் உள்ளது.
**மணிமேகலை**

340) பரப்பளவில் சிறியதான எந்த தீவில் வாழ்பவர்களுள் பெரும் பான்மை மக்கள் தமிழர்?
**ரியூனியன் தீவில்**

341) பிரெஞ்சுக் காரர்களால் புதுச்சேரி, காரைக்கால், பகுதிகளிலிருந்து ஒப்பந்தக் கூலிகளாக யாரை குடியமர்த் தப்பட்டார்கள்?
**தமிழர்**

342) பிரான்சு நாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படும் அத்தீவில் வாழும் தமிழர்கள் எந்த மொழியில் பேசுகிறார்கள்?
**பிரெஞ்சு மொழியில்**

343) இலங்கையில் வாழும் தமிழருள் எத்தனை விழுக்காட்டினர் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழிலேயே கல்வி பயில்கின்றனர்?
**தொண்ணூற்றைந்து விழுக்காடு**

344) எந்த நாடுகளில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது?
**சிங்கப்பூர், மொரிசியசு, மலேசியா, பிஜித் தீவுகள், தென் அமெரிக்கா, கனடா, பிரிட்டன்.**

345) இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் ______ மொழியாகத் தமிழ் திகழ்கிறது?
**ஆட்சி மொழியாகத்**

346) ______, ______, ______, ஊடகங்களை உலகெங்கும் தமிழர் நடத்தி வருகின்றன.
**அச்சு, ஒலி, ஒளி**

347) தமிழர், நாட்டை விட்டுச் சென்ற போதும் -------------- என்னும் உயர் நோக்கோடு வாழ்ந்து வருகின்றனர்?
**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

348) தமிழர் எந்த நாடுகள் பலவற்றில் உள்ளாட்சித் தேர்தல்களில் வெற்றி



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

பெற்று ஆட்சிப் பொறுப்புகளையும் வகித்து வருகின்றனர்.

**இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்.**

349) இந்தியாவில் மட்டுமல்லாமல், சிங்கப்பூர், மொரிசியசு ஆகிய நாடுகளில் ______ யாக தமிழர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**குடியரசுத் தலைவர்ராக**

350) உலகெங்கும் வாழும் தமிழர்கள் தங்களது பண்பாட்டு அடையாளங் களை மறவாமல் இருப்பது எது?

**தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு.**

351) திரு விழாக்களில் ______ எடுப்பதும் ______ இழுப்பதும் இன்றும் நடைபெறுகிறது.

**காவடி, தேர்**

## திரு.வி.கலியாணசுந்தனாரின் தமிழ்ப்பணி (துணைப்பாடம்)

352) திரு.வி.கலியாணசுந்தரனார் தமது தங்கு தடையற்ற மேடைப் பேச்சாலும் இயல்பான மொழிநடையாலும் தமிழைப் பட்டிதொட்டிகள் எல்லாம் பரப்பித் ______ எனப் போற்றப்பட்ட பெருந்தகையர்.

**தமிழ்த்தென்றல்**

353) பிறப்பும், கல்வியும்

திரு.வி.கலியாண சுந்தரனார்

ஊர் - சென்னைக்கு அருகேயுள்ள துள்ளம்

பெற்றோர் - விருத்தாசலனார் - சின்னம்மை

பிறந்த நாள் - 26.08.1883

பள்ளி -- சென்னை இராயப்பேட்டை யிலுள்ள வெஸ்லி பள்ளியில் படித்தார்.

354) திரு.கலியாணசுந்தரனார் உடல் நலக் குறைவினால் இடைநின்று ______ ஆண்டு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் அதே பள்ளியில் சேர்ந்தார்.

**நான்கு ஆண்டு**

355) யாரிடம் தமிழ் பயின்று தமிழ்ப் பேராசிரியராக உயர்ந்தார்?

**கதிரை வேலர்**

356) திரு. கலியாணசுந்தரனார் எதை கற்பதில் பேரார்வங் கொண்டார்?

**இலக்கியங்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களை**

357) எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதனை முழு மூச்சாகக் கொண்டு வடமொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டும் என வலியுறுத்தியவர் யார்?

**திரு.வி.கலியாண சுந்தரனார்**

358) திரு.வி. கலியாண சுந்தரனார் தமிழை வளர்க்க எதை வெறுக்க வேண்டும் என்கிறார்?

**பிறமொழியை**

359) காந்தியடிகள் தமிழகம் வந்த போதெல்லாம் அவரது மேடைப் பேச்சினை மொழி பெயர்த்தவர் யார்?

**திரு.வி.கலியாண சுந்தரனார்**

360) ______ நடை என்றே ஒரு தனி நடையை நடைமுறைப்படுத்தும் இவர் பேசுவது போலவே எழுதுவது, எழுதுவது போலவே பேசுவது என்னும் முயற்சியில் இவர் வெற்றி கண்டவர் யார்?

**திரு.வி.க.நடை**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

361) திரு.வி.க., வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து உணர்ச்சிச் சொற்களைக் கோத்துக் ______ பேசுவதில் வல்லவர்.
**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் விரும்பும் வண்ணம்**

362) திரு.வி.க வாய்த்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந் துள்ளது எனக் கூறியவர் யார்?
**தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்**

363) உரைநடை நூல்கள் (குறிப்பு)
முருகன் அல்லது அழகு, சைவத் திறவு, சைவத்தின் சமரசம், கடவுட் காட்சியும் தாயுமானவரும், இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ் நாடும் நம்மாழ்வாரும், நாயன்மார் வரலாறு தமிழ் நூல்களில் பௌத்தம், காதலா? முடியா? சீர்திருத்தமா? என் கடன் பணிசெய்து கிடப்பதே, இந்தியாவும் விடுதலையும், தமிழ்ச் சோலை, உள்ளொளி என்பன இவர் இயற்றிய இன்ன பிற உரைநடை நூல்கள்.

364) செய்யுள் நூல்கள்:-
**முருகன் அருள்வேட்டல், திருமால் அருள்வேட்டல், கிறித்துவின் அருள் வேட்டல், அருகன் அருகே, உரிமை வேட்டல், பொதுமை வேட்டல், பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும் ஆகியன இவரது செய்யுள் நூல்கள்.**

365) எந்த இதழ்களின் வாயிலாகத் தொழிலாளர் முன்னேற்றம் பெறப் பாடுபட்டவர்?
**தேச பக்தன், நவசக்தி**

366) திரு.வி.க. எழுபது வயதாகி கடல் தளர்ந்து படுக்கையில் இருந்த போதும் வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் என்னும் நூலை யாருடைய உதவியுடன் வெளியிட்டார்?
**மு.வரதராசனாரின்**

367) திரு.வி.கவின் மனைவியின் பெயர் என்ன?
**கமலாம்பிகை அம்மையாரை**

368) திரு.வி.க எந்த ஆண்டு தமிழ் மூச்சுக்கு விடைத்தந்தார்?
**1953 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பதினேழாம் நாள் தமது எழுபத்தோரம் வயதில் இறந்தார்.**

## வழாநிலை, வழு, வழுவமைதி (இலக்கணம்)

369) வழாநிலை என்றால் என்ன?
**இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.**

370) வழாநிலை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
**வழாநிலை ஆறு வகைப்படும்**
அவை:
1. திணை வழாநிலை, 2. பால் வழாநிலை, 3. இட வழாநிலை, 4. கால வழாநிலை, 5. வினா வழாநிலை, 6. விடை வழாநிலை.

371) வழுநிலை என்றால் என்ன?
**இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.**

372) வழு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
**வழு ஏழு வகைப்படும்**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

அவை:

1. திணை வழு, 2. பால் வழு, 3. இட வழு, 4. கால வழு, 5. வினா வழு, 6. விடை வழு, 7. மரபு வழு.

373) வழாநிலை ஆறு வகைகளின் (எ.கா)

1. திணை வழாநிலை -செல்விபாடினாள், மாடுவந்தது

2. பால் வழாநிலை - கண்ணன்வந்தான், நாய்ஓடியது

3. இட வழாநிலை - நான் வந்தேன், நீ வருவாய்

4. கால வழாநிலை - நாளை வருவேன், நேற்றுப் படித்தேன்

5. வினா வழாநிலை - தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?

6. விடை வழாநிலை - தமிழ் நாட்டின் தலைநகரம் எது? என்ற வினாவுக்குச் சென்னை என விடையளித்தல்

374) வழுநிலை ஏழு வகைகளின் (எ.கா) தருக?

1. திணை வழு - என் மாமா வந்தது

2. பால் வழு -- கண்ணகி வந்தான்

3. இட வழு -- நாங்கள் வந்தார்கள்

4. கால வழு - கரிகாலன் நாளை வந்தான்

5. வினா வழு - முட்டையிட்டது சேவலா பெட்டையா?

6. விடை வழு - நாளை பள்ளி திறக்கப்படுமா?

7. மரபு வழு - நாய் கத்தும்

375) வழுவமைதி என்றால் என்ன?

**இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என்று ஏற்றுக் கொள்ளப்படுவது வழுவமைதி ஆகும்.**

376) வழுவமைதியின் சான்று:-

**திணை வழுவமைதி**

**கால வழுவமைதி**

377) வழு - பிழை, தவறு, குற்றம்

வழா நிலை - பிழையின்மை, தவறியின்மை

வழுவமைதி - பிழை - ஆனால் பிழையாகக் கொள்ளாமை.

378) பிழையைத் திருத்தி எழுதுக:-

1. தம்பி நேற்று வந்தாள் -- தம்பி நேற்று வந்தான்

2. எருது வண்டியை இழுத்தன - எருது வண்டியை இழுத்தது.

3. மாணவர் தேர்வு எழுதினான் -- மாணவர் தேர்வு எழுதினர்.

4. அவன் மாணவன் அல்ல - அவன் மாணவன் அல்லன்.

5. உடைகள் கிழிந்து விட்டது - உடைகள் கிழிந்து விட்டன.

6. எங்களூரில் ஒரு புலவர் வாழ்ந்தனர் - எங்களூரில் புலவர் ஒருவர் வாழ்ந்தார்.

379) உவமை என்றால் என்ன?

**உவமை என்பது, ஒரு பொருளை அல்லது நிகழ்வை மற்றொரு பொருளோடு அல்லது நிகழ்வோடு ஒப்புமைப்படுத்துவது.**

380) உருவகம் என்றால் என்ன?

**கவிஞர், தாம் கருதிய பொருளையும் ஒப்புமைப் பொருளையும் (உவமையையும்) வெவ்வேறு எனக் கூறாமல், இரண்டும் ஒன்றெனக் கூறுவது உருவகம்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

381) உவமை உருவக மாற்றம்:-

உவமை - உருவகம்

தாமரை முகம் - முகத்தாமரை

தேன்மொழி - மொழித்தேன்

பவளவாய் - வாய்ப்பவளம்

முத்துப்பல் - பல்முத்து

382) அடிச்சொல்லிலிருந்து சொற்களை உருவாக்குதல்

1. வா - அடிச்சொல்
2. வந்தான் - வினைமுற்று
3. வந்த - பெயரெச்சம்
4. வந்து - வினையெச்சம்
5. வருதல் - தொழிற்பெயர்
6. படி - அடிச்சொல்
7. படித்தான் - வினைமுற்று
8. படித்த - பெயரெச்சம்
9. படித்து - வினையெச்சம்
10. படித்தல் - தொழிற்பெயர்

## மொழித்திறன் பயிற்சி

383) பிழை நீக்கி எழுதுதல்:-

ஒருவர் பேசும் போது எழுதும் போதும் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும். பேச்சில் அல்லது எழுத்தில் பிழையிருப்பின் பொருள் மயக்கம் ஏற்படும். எனவே, சொற்களிலும் தொடர்களிலும் பிழைவராமல் காத்தல் வேண்டும்.

384) வழுஉச் சொற்கள் என்றால் என்ன?

பேச்சு வழக்குச் சொற்களை அப்படியே எழுத்தில் கொண்டு வருவது தவறு. அவ்வாறு எழுதுவதனை வழுஉச் சொற்கள் எனக் கூறுவர். அவற்றுக் குரிய எழுத்து வழக்குச் சொற்களை எழுதுவதே முறை.

385) வழுஉச் சொற்களைத் திருத்துக:-

பிழை திருத்தம்

1. அடமழை ______
2. அரிவாமணை ______
3. அவரக்காய் ______
4. தவக்களை ______
5. சிலவு ______
6. தாவாரம் ______
7. சுடுதண்ணி ______
8. எண்ணை ______
9. ஒட்டறை ______
10. கவுறு ______
11. பச்சதண்ணி ______
12. நஞ்சை ______

386) தமிழ்ச் சொல் அறிவோம்:-

பிறமொழிச் சொற்கள் - தமிழ்ச் சொற்கள்

1. அங்கத்தினர் ______
2. அர்த்தம் ______
3. அலங்காரம் ______
4. ஆரம்பம் ______
5. விஞ்ஞானம் ______
6. தீபம் ______
7. கும்பாபிஷேகம் ______
8. சாவி ______
9. சரித்திரம் ______
10. சபதம் ______
11. சாதம் ______
12. பௌத்திரி ______

387) இணையான தமிழ்ப் பழமொழியை அறிக:

1. One doth the act, another hath the blow

1. பழி ஓரிடம் பாவம் ஓரிடம்.

2. Every fox must at last pay his skin to the flayer

2. பல நாள் திருடன், ஒருநாள் அகப்படுவான்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

3. Money makes many things

3. பணம் பத்தும் செய்யும்.

4. The day has eyes, the night has ears

4. பகலில் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே

5. What comes from the cradle goes to the grave

5. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

## இயல் ஆறு - செய்யுள்
## உமர்கய்யாம் பாடல்கள்

388) சொற்பொருள் :-

1. பகர்வது - சொல்வது
2. தெளிவீரே - தெளியுங்கள்
3. துவ்வா - நுகராத
4. அகன்று - விலகி
5. ஆழி - கடல்

389) இலக்கணக் குறிப்பு:-

1. நோக்கி - வினையெச்சம்
2. துவ்வா விடம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

390) ஆசிரியர் குறிப்பு:-

**கவிமணி தேசிக விநாயகனார் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் பிறந்தவர். இவரின் பெற்றோர் சிவதாணு - ஆதிலட்சுமி அம்மையார். இவர் உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். அப்பாடல்களின் தொகுப்பு 'உமர்கய்யாம் பாடல்கள்' என்பது உமர்கய்யாம் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர். இவரது முழுப்பெயர் கியாதுதீன் அபுல்பாத் உமர்கய்யாம் என்பது. இவர் கணிதம், வானவியல் ஆகியவற்றில் புலமை மிக்கவர். இவரின் கவிதைகள் மக்கள் அடையும் இன்ப துன்பங்களையும், இறைவனது படைப்பையும் பாடு பொருளாகக் கொண்டவை.**

**இவர் இயற்றிய பிற நூல்கள்:-**

மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், குழந்தைச் செல்வம், ஆசிய ஜோதி முதலியன இவரது காலம் 1876 முதல் 1954 ஆம் ஆண்டு வரை.

391) நூற் குறிப்பு:-

**இந்நூல் இம்மை மறுமை பற்றி ரூபாயத் என்னும் பெயரில் உமர்கய்யாம் எழுதிய செய்யுள்களின் மொழி பெயர்ப்பு. இதனையே கவிமணி மொழிபெயர்த்துள்ளார். இதில் நூற்றுப் பதினைந்து பாடல்கள் உள்ளன. வாழ்க்கைத் தத்துவத்தை இப்பாடல்கள் விளக்குகின்றன.**

392) நிரப்புக:-

1. அன்பு செய்யின் அயலாரும் அண்டி நெருங்கும் ______

**உறவினராம்**

2. துன்ப நோயை நீக்கிடு மேல் _____ அமுதாகும்.

**துவ்வாவிடமும்**

3. ஏழையாகி எளியவரின் ______ வேண்டுமடா.

**ஏளியனாக**

## மணிமேகலை
## சீத்தலைச்சாத்தனார்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

393) மணிமேகலை என்ற பாடலை இயற்றியவர் யார்?

**சீத்தலைச் சாத்தனார்.**

394) கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகள் யார்?

**மணிமேகலை**

395) யாருடைய உதவியால், அமுத சுரபியைப் பெற்றுப் புகார் நகரை மணிமேகலை அடைகிறாள்.

**தீவதிலகையின்**

396) சொற்பொருள்:-

1. ஆயம் - தோழியர் கூட்டம்
2. ஆசனம் - இருக்கை
3. நாத்தொலை வில்லை - சொல் சோர்வின்மை
4. யாக்கை - உடம்பு
5. பிணிநோய் - நீங்கா நோய்
6. பேதைமை - அறியாமை
7. செய்கை - இருவினை
8. உணர்வு - அறிவியல் சிந்தனை
9. அரு - உருவமற்றது
10. உரு - வடிவம்
11. வாயில் - ஐம்பொறிகள்
12. ஊறு - புலன்களின் இயல்பு
13. நுகர்வு - இன்ப துன்ப நுகர்ச்சி
14. வேட்கை - விருப்பம்
15. பவம் - பயன் நோக்கிய செயல்
16. தோற்றம் - பிறப்பு
17. பெரும்பேறு - வீடுபேறு
18. கோடு - கொம்பு
19. அலகில - அளவற்ற
20. தொக்க விலங்கு - விலங்குத் தொகுதி
21. களவு - திருட்டு
22. காமத்தீ - காமமெனும் கொடிய விருப்பம்
23. உலையா உடம்பு - தளராத உடல்
24. குறளை - புறம் பேசுதல்
25. வெஃகல் - விரும்புதல்
26. வெகுளல் - சினத்தல்
27. பொல்லாக் காட்சி - மாயத்தோற்றம்
28. தானம் - கொடை
29. புரைதீர் - குற்றம் தீர்ந்த
30. கேண்மின் - கேளுங்கள்
31. முத்தேர் நகை - முத்துச் சிரிப்பு
32. உய்ம்மின் - போற்றுங்கள் நற்கதியடையுங்கள்
33. உறைதல் - தங்குதல்
34. கூற்று - எமன்
35. மாசில் - குற்றமற்ற
36. தொழுது - வணங்கி
37. புக்கு - புகுந்து
38. இடர் - இன்னல்
39. சீலம் - ஒழுக்கம்

397) **இலக்கணக் குறிப்பு:-**

1. தேவியும் ஆயமும் - எண்ணும்மை
2. அருந்தவர், நல்வினை - பண்புத் தொகைகள்
3. வாழ்க - வியங்கோள் வினைமுற்று
4. செய்தவம், வீழ்கதிர் - வினைத் தொகைள்
5. பெரும்பேறு - பண்புத் தொகை
6. ஆழ்நரகு - வினைத் தொகை
7. தெளிதல் - தொழிற்பெயர்கள்
8. பல்லுயிர், நல்வினை, தீவினை, பேரின்பம் - பண்புத் தொகைகள்
9. ஆய்தொடி நல்லாய் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

10. காமத்தீ - உருவகம்

11. கடுஞ்சொல் - பண்புத் தொகை

12. பொல்லாக் காட்சி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

13. பயன்தெரிபுலவர் – வினைத் தொகை

14. அரைசன் - இடைப்போலி

15. நல்லறம் - பண்புத் தொகை

398) பிரித்தறிதல்:-

1. எழுந்தெதிர் - எழுந்து + எதிர்

2. அறிவுண்டாக - அறிவு + உண்டாக

3. நாக்தொலைவில்லை - நா + தொலைவு + இல்லை

4. பிணி நோயுற்றோர் - பிணி + நோய் + உற்றோர்

5. இயல்பீராறு - இயல்பு + இரண்டு + ஆறு

6. நன்மொழி - நன்மை + மொழி

7. எனக்கிடர் - எனக்கு + இடர்

8.தொழுதேத்தி - தொழுது + ஏத்தி

9. உண்டென்று - உண்டு + என்று

10. நல்லறம் -- நன்மை + அறம்

399) பகுபத உறுப்பிலக்கணம்:-

1. பிறந்தார் -- பிற + த்(ந்) + த் + ஆர்

பிற - பகுதி

த் - சந்தி

த் - ந் ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

2. அறிகுவர் - அறி + கு + வ் + அர்

அறி - பகுதி

கு - சாரியை

வ் - எதிர்கால இடைநிலை

அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

3. தோன்றுவர் - தோன்று + வ் + அர்

தோன்று - பகுதி

வ் - எதிர் கால இடைநிலை

அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

4. படர்குவர் - படர் + கு + வ் + அர்

படர் - பகுதி

கு - சாரியை

வ் - எதிர்கால இடைநிலை

அர் - பலர்பால் வினைமுற்று

5. உண்குவர் - உண் + கு + வ் + அர்

உண் - பகுதி

கு - சாரியை

வ் - எதிர்கால இடைநிலை

அர் - பலர்பால் வினைமுற்று

400) ஐம்பெருங்காப்பியங்கள்

**சிலப்பதிகாரம்**

**மணிமேகலை**

**சீவக சிந்தாமணி**

**வளையாபதி**

**குண்டலகேசி**

401) **ஆசிரியர் குறிப்பு:-**

கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றியது மணிமேகலை. சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவர், திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர். கூலவாணிகம் (கூலம் - தானியம்) செய்தவர். இக்காரணங்களினால், இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று வழங்கப் பெற்றார். இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவர். இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற் புலவன்



join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

என்று இளங்கோவடிகள் சாத்தனரைப் பாராட்டியுள்ளார். இவரது காலம் கி.பி இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

402) நூற் குறிப்பு:-

மணிமேகலை, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதைத் தொடர்புடையன. எனவே இவை இரட்டைக்காப்பியங்கள் என வழங்கப்பெறும். மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு. இந்நூல் சொற் சுவையும் பொருட் சுவையும், இயற்கை வருணனைகளும் நிறைந்தது. பௌத்த மதச் சார்புடையது; முப்பது கதைகளைக் கொண்டது. முப்பது காதைகளுள், பாடப்பகுதியான ஆபுத்திரன் நாடு அடைந்த காதை இருபத்து நான்காவது காதை.

403) **நிரப்புக:-**

1. "அருந்தவர்க் கமைந்த ஆசனம்." - இவ்வடியில் 'அருந்தவர்' எனக் குறிப்பிடப்படுபவர் ______

**அறவணடிகள்**

2. சொல்லில் ஏற்படும் குற்றங்கள் ______

**சொல்**

3. மனத்தில் தோன்றும் குற்றங்கள் ______

**பேரவா, கடுஞ்சினம், தெளிவிலா அறிவு**

4. மறுபிறப்பு உணர்ந்தவளாகக் குறிப்பிடப்படுபவள் ______

**மணிமேகலை**

404) பொருத்துக:

அ) ஆயம் - விருப்பம்
ஆ) வெகுளல் - குற்றம் நீங்கிய
இ) புரைதீர் - புறங் கூறல்
ஈ) குறளை - சினத்தல்
உ) வேட்கை - தோழியர் கூட்டம்

விடை:

## உணவே மருந்து(உரைநடை)

405) மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது எது?

**உணவு**

406) தமிழர் மருத்துவத்தில் உணவு என்பது அனைத்து நோய்களையும் தீர்க்கக் கூடிய எவ்வகை மருந்தாகக் கருதப்படுகிறது?

**சஞ்சீவி**

407) பசியின் கொடுமையைப் பசிப்பிணி என்னும் பாவி என்றது ______ காப்பியம்.

**மணிமேகலைக் காப்பியம்**

408) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனக் கூறியது யார்?

**புறநானூறும், மணிமேகலையும்**

409) திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உணவே மருந்தாகும் தன்மையைத் தெளிவாக எடுத்துரைத்தவர் யார்?

**திருவள்ளுவர்**

410) முன் உண்டது செரித்தது கண்டு உண்பார்க்கு மருந்துண்ணும் தேவை ஏற்படாது என்பது யாருடைய வாக்கு.

**வள்ளுவர்**

411) நீரின்றமையாது உலகு எனக் கூறியவர்.

**வள்ளுவர்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

412) மீதூண் விரும்பேல் என்றவர்
**ஔவையார்**

413) உடலைக் காத்தலின் தேவையை வலியுறுத்தியவர் யார்?
**திருமூலரும்**

414) அறுசுவையின் பயன்கள்
1. இனிப்பு - வளம்,
2. துவர்ப்பு - ஆற்றல்
3. கைப்பு - மென்மை
4. கார்ப்பு - உணர்வு
5. உவர்ப்பு - தெளிவு
6. புளிப்பு - இனிமை

415) நிரப்புக:-
1. பசிப்பிணிக்கு உணவே ______
**மருந்து**
2. நோய்க்கு முதல் காரணம் ______
**உப்பு**

## நோய் நீக்கும் மூலிகைகள் (துணைப்பாடம்)

416) கீழ்க்காய் நெல்லி என்று எப்படி குறிப்பிடுவர்
**கீழாநெல்லி, கீழ்வாய்நெல்லி**

417) தூதுவளையின் வேறு பெயர்கள்?
**சிங்கவல்லி, தூதுளை**

418) ஞானப்பச்சிலை என வள்ளலார் போற்றும் இவ்விலை எதை மேம்படுத்தும்
**குரல் வளத்தை**

419) கரிசலாங்கண்ணிக்கு வேறு பெயர்கள்?
**கரிசாலை, கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம்**

420) துளசி செடி எந்த நோயை குணமாக்கும்?
**மார்புச்சளி, நீர்க்கோவை, தலைவலி**

421) கீழா நெல்லிச் செடி எந்த நோயை குணமாக்கும்?
**மஞ்சட் காமாலை**

422) தூதுவளை எந்த நோயை குணமாக்கும்?
**சுவாசகாசம் அகலும்**

423) குப்பைமேனி எந்த நோயை குணமாக்கும்?
**படுக்கைப் புண், சிரங்கு நீங்கும்**

424) முருங்கை கீரை எந்த நோயை குணமாக்கும்?
**முரிந்த எலும்பு விரைவில் கூடும், கண்பார்வை ஒழுங்குபடுத்தும், உடலை வலுவாக்கும், கூந்தலை வளரச் செய்யும்**

425) கரிசலாங்கண்ணி எந்த நோயை குணமாக்கும்?
**நரையைப் போக்கும், மஞ்சள் காமாலை**

426) மணித்தக்காளிக்கீரை எந்த நோயை குணமாக்கும்?
**வாய்ப்புண், குடற்புண்ணைக் குணமாக்கும்.**

427) வல்லாரைக் கீரை எந்த நோயை குணமாக்கும்?
**நினைவாற்றல் பெருகும்**

## பொருள்கோள் (இலக்கணம்)

428) பொருள்கோள் என்றால் என்ன?
**ஒரு செய்யுளில் உள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் அமைத்துக் கொள்ளும் முறையைப் பொருள் கோள் எனப்படும்.**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

429) பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

எட்டு வகைப்படும்

1. ஆற்று நீர்ப் பொருள்கோள்
2. மொழி மாற்றுப் பொருள்கோள்
3. நிரல் நிறைப் பொருள்கோள்
4. விற்பூட்டுப் பொருள்கோள்
5. தாப்பிசைப் பொருள்கோள்
6. அளைமறிபாப்புப் பொருள்கோள்
7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்
8. அடிமறி மாற்றுப் பொருள்கொள்

430) ஆற்று நீர்ப் பொருள்கோள் என்றால் என்ன?

இடையறாது செல்லும் ஆற்று நீரைப் போலப் பாடலின் சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள் கொள்வது ஆற்று நீர்ப் பொருள்கோளாகும்.

431) மொழிமாற்றுப் பொருள்கோள் என்றால் என்ன?

ஓரடியுள் உள்ள சொற்களை, அவை தரும் பொருளுக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் மொழி மாற்றுப் பொருள்கோள் என வழங்கப்படும்.

432) நிரல் நிறைப் பொருள்கோள் என்றால் என்ன?

செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறை மாறாமல் வரிசையாக அமைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

433) விற்பூட்டுப் பொருள்கோள் என்றால் என்ன?

வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல் போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும் இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருத்துவது விற்பூட்டுப் பொருள்கோள்.

434) விற்பூட்டுப் பொருள்கோளின் வேறுபெயர்?

பூட்டுவிற் பொருள்கோள்

435) தாப்பிசைப் பொருள்கோள் என்றால் என்ன?

ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவது போலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும். சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது.

436) அளைமறி பாப்புப் பொருள் கோள் என்றால் என்ன?

செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது.

437) கொண்டு கூட்டுப் பொருள்கோள் என்றால் என்ன?

செய்யுளின் பல அடிகளிலும் கூறப் பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோள்.

438) அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்றால் என்ன?

செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

439) கீழ்க்காணும் பாடலை நிறைவு செய்க:-

1. பாட்டுக்கு அழகு ______
பொருள்

2.பகலுக்கு அழகு ______
வெளிச்சம்

3. வீதிக்கு அழகு ______
தூய்மை

4. நீதிக்கு அழகு ______
நேர்மை

5. வீட்டுக்கு அழகு ______
விருந்து

6. காட்டுக்கு அழகு ______
மரங்கள்

440) தமிழ் பழமொழியை அறிக:-

1. The wise and the fool have their follows
இனம் இனத்தோடு சேரும்

2. He who has an art has every where a part
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

3. Being on the sea. Sail being on the land. settled
காலத்திற்கேற்ற கோலம் கொள்

4. No rains no grains
மாரியல்லது காரியம் இல்லை

5. Bad words find bad acceptance
நுணலும் தன் வாயாற் கெடும்

## இயல் ஏழு - செய்யுள்
## திருக்குறள்

441) சொற்பொருள்:-

1. கடன் - கடமை
2. சான்றோர் - நல்ல குணங்கள் நிறைந்தவர்
3. நாண் - நாணம்
4. ஒப்புரவு - உதவுதல்
5. கண்ணோட்டம் - உயிர்களிடத்து இரக்கம்
6. வாய்மை - உண்மை
7. சால்பு - சான்றாண்மை
8. ஆற்றுவார் - செயல் செய்பவர்
9. ஆற்றல் - வலிமை
10. மாற்றார் - பகைவர்
11. துலையல்லார் - ஆற்றலின் குறைந்தவர்
12. கட்டளை - உரைகல்
13. இன்னா - தீங்கு
14. இனிய - நன்மை
15. செய்யாக்கால் - செய்யாவிடத்து
16. இன்மை - வறுமை
17. இளிவன்று - இழிவானதன்று
18. திண்மை - வலிமை
19. ஊழி - உலகம்
20. ஆழி - கடல்
21. இருநிலம் - பெரிய நிலம்
22. பொறை - சுமை

442) **இலக்கணக் குறிப்பு:-**

1. என்ப - பலர்பால் வினைமற்று
2. மேற்கொள்பவர் - வினையாலணையும் பெயர்
3. உள்ளதூஉம் - இன்னிசையளபெடை
4. அன்று - குறிப்பு வினைமுற்று
5. கண்ணோட்டம் - தொழிற்பெயர்
6. கொல்லா நலத்தது, சொல்லா நலத்தது - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
7. பணிதல் - தொழிற்பெயர்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

8. ஆற்றுவார், மாற்றார் - வினையாலணையும் பெயர்

9. இன்மை, திண்மை - பண்புப் பெயர்கள்

10. சான்றவர் - வினையாலணையும் பெயர்

11. இருநிலம் - உரிச்சொற்றொடர்

12. மன், ஓ - அசைச்சொற்கள்

443) பகுபத உறுப்பிலக்கணம்

1. அறிந்து - அறி + த்(ந்) + த் + உ
அறி - பகுதி
த் - சந்தி
த் - ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

2. ஆற்றுவார் - ஆற்று + வ் + ஆர்
ஆற்று - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

3. பணிதல் - பணி + தல்
பணி - பகுதி
தல் - தொழிற்பெயர் விகுதி

444) பிரித்தறிதல்

அ) ஒருவற்கு - ஒருவன் + கு
ஆ) இளிவன்று - இளிவு + அன்று
இ) சால்பென்னும் - சால்பு + என்னும்

445) நிரப்புக:-

1) நற்குணங்களால் சிறந்திருத்தல் ______ பெருமையாகும்.
**சான்றோரின்**

2) தவம் என்பது ______
**பிற உயிர்களைக் கொல்லாமையே**

3) தோல்வியை ஒப்புக் கொள்வதே சான்றாண்மையை அளந்தறியும் ______
**உரைகல்**

4. மாற்றார் என்னும் சொல்லின் பொருள் ______
**பகைவர்**

5. தீங்கிழைத்தவர்க்கும் ______ செய்ய வேண்டும்.
**நன்மையே**

446) பொருத்துக

அ) இன்மை - வறுமை
ஆ) திண்மை - வலிமை
இ) ஆழி - கடல்
ஈ) நோன்மை - தவம்

## இன்பம் - சுரதா

447) பழந்தமிழ் கற்றல் இன்பம் --- இப்பாடலின் ஆசிரியர் யார்?
**சுரதா**

448) சொற்பொருள் தருக:-

1. இசை பட - புகழுடன்
2. கயவர் - கீழ்க்குணமுடையோர்

449) **இலக்கணக் குறிப்பு:-**

1. களிர்க்கை - உவமைத்தொகை
2. பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் - பண்புத் தொகைகள்
3. வழங்கி - வினையெச்சம்
4. கற்றல், பெறுதல், வாழ்தல் - தொழிற்பெயர்கள்

450) **ஆசிரியர் குறிப்பு**

உவமைக்கவிஞர் சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். இவர் திருவாரூர் மாவட்டதிலுள்ள பழையனூரில் 23.11.1921 அன்று பிறந்தார். பெற்றோர் திருவேங்கடம் - - செண்பகம் ஆவர்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

பாவேந்தர் பாரதிதாசன் மீது கொண்ட பற்றுக் காரணமாகத் தம் பெயரைச் சுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டார். அதன் சுருக்கமே சுரதா ஆயிற்று.

தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும் சுரதாவின் கவிதைகள் முதலான கவிதை நூல்களை இயற்றியுள்ளார். தேன்மழை என்னும் கவிதை நூல், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது. தமிழக இயலிசை நாடக மன்றத்தின் கலை மாமணிப் பட்டத்தையும், தமிழக அரசின் பாவேந்தர் விருதையும் இவர் பெற்றுள்ளார்.

451) **நூற் குறிப்பு:-**

தேன்மழை நூலில் இயற்கையெழில் முதலாக ஆராய்ச்சி ஈறாகப் பதினாறு பகுதிகளாகக் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள், தேன்துளிகள் என்னும் பகுதியில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

452) **நிரப்புக:**

1. குழந்தையின் தளிர்க்கைபட்ட ______ உண்பது இன்பம்.

**கூழினை**

2. கற்றவர் முன் தாம் கற்ற ______ இன்பம்.

**கல்வியைக் கூறல்**

3. வெற்றியை வாழ்வில் சேர்க்கும் ______ இன்பம்.

**வினைபல புரிதல்**

4. ______ சேராது வாழ்தல் இன்பம்.

**சிற்றினக் கயவரோடு**

## பெருந்தலைவர் காமராசர் (உரைநடை)

453) தன்னலமற்ற தலைவர்; கர்ம வீரர்; கல்விக் கண் திறந்த முதல்வர் யார்?

**காமராசர்**

454) காமராசர் பெற்றோர் யார்?

**விருது நகரில் உள்ள குமாரசாமி, சிவகாமி**

455) காமராசர் எந்த ஆண்டு, எந்த நாள் பிறந்தார்?

**1903 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் பதினைந்தாம் நாளன்று**

456) திண்ணைப் பள்ளியில் தமிழ் எழுத்துகளைக் கற்று, ஓர் ஆண்டு தமிழ் பாடம் கற்றவர் யார்?

**காமராசர்**

457) காமராசர் தனது ஏழுவயதில் சுவரொட்டியில் ______ என்று எழுதப்பட்டிருப்பதைனைக் கண்டார்.

**வந்தே மாதரம்**

458) காமராசர், பள்ளி செல்ல இயலாத போதும் நாள்தோறும் --------- படித்தும் அரசியல் கூட்டங்களில் தலைவர்களின் சொற் பொழிவுகளைக் கேட்டும், தம்முடைய அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டார்.

**செய்தித் தாள்கள்**

459) மெய்கண்டான் புத்தகச்சாலை என்ற நூல் நிலையத்திற்குச் சென்று ______, ______, ______, ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துத் திறமையாகப் பேசவும் வாதம் செய்யவும் தொடங்கினார்.

**இலெனின், கரிபால்டி, நெப்போலியர்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

460) காமராசர் இளமையில் எந்த காங்கிரசில் சேர்ந்தார்?

**தேசிய இயக்கமான காங்கிரசில்**

461) காமராசர் எந்த போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றார்?

**சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு.**

462) காமராசரைக் கட்சியின் செயலாளராக நியமித்தவர் யார்?

**தலைவர் சத்தியமூர்த்தி**

463) காமராசர் எந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேந்தெடுக்கப்பட்டார்?

**1937**

464) எந்த ஆண்டு தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகக் காமராசர் தேர்ந்தெடுக்கப்பட்டார்?

**1939 ஆம் ஆண்டு**

465) காங்கிரசுக் கட்சியின் தலைவர் பதவியில் எத்தனை ஆண்டுகள் காமராசர் இருந்தார்?

**பன்னிரண்டு ஆண்டுகள்**

466) எந்த ஆண்டு யாருக்கு முதலமைச்சராகப் பதவியேற்பதற்குக் காமராசர் காரணமாக இருந்தார்?

**1945 ஆம் ஆண்டு பிரகாசம், 1947 ஆம் ஆண்டு ஓமந்தூர் இராமசாமி மற்றும் 1949 ஆம் ஆண்டு குமாரசாமி**

467) நேருவின் மறைவுக்குப் பின் லால்பகதூர் சாஸ்திரியின் மறைவுக்குப் பின் யாரை முதன்மையமைச்சராக ஆக்குவதற்கு காமராசர் பெரும் பங்காற்றினார்.

**இந்திரா காந்தி**

468) காமராசர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

**தலைவர்களை உருவாக்குபவர்**

469) 1954 இல் இராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதும் யார் அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்?

**காமராசர்**

470) காமராசர் ஆட்சிக்காலத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர்யாக யார் இருந்து உறுதுணையாகப் பணியாற்றினார்?

**ஆர். வெங்கட்ராமன் தொழிலமைச் சராகவும், சி.சுப்பிரமணியம் கல்வியமைச்சராகவும்**

471) காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் எந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டன?

**இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள்**

472) பெரிய தொழிற் பேட்டைகள் எங்கு அமைக்கப்பட்டன.

**கிண்டி, அம்பத்தூர், இராணிப் பேட்டை.**

473) காமராசர் காலத்தில் ---------- இயக்கம் வேரூன்றியது?

**கூட்டுறவு இயக்கம்**

474) காமராசர் ஆட்சியில் எந்த தொழிற் சாலைகள் தொடங்கப் பெற்றன?

**நெய்வேலி, நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, கிண்டி அறுவை சிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, சருக்கரை ஆலை, சோடா உப்புத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, பெரம்பூர்த் தொடர் வண்டிப் பெட்டித் தொழிற் சாலை, மேட்டூர்க் காகிதத் தொழிற் சாலை.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

475) காமராசர் காலத்தில் எந்த கல்வி நடைமுறைப் படுத்தப்பட்டது.
**கட்டாயக் கல்வி**

476) பள்ளி வேலை நாள்களை எவ்வளவாக காமராசர் உயர்த்தினார்?
**நூற்றெண்பதிலிருந்து இருநூறாக**

477) தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் யாரால் தொடங்கப்பட்டது?
**காமராசர்**

478) காமராசர் எத்தனை மாநாடுகள் கூட்டத்தை கூட்டி வந்தார்?
**ஈராண்டுகளில் நூற்று முப்பத்து மூன்று மாநாடுகள்**

479) யாரால் உயர்நிலைப் பள்ளி இலவசக் கல்வி கொண்டு வரப்பட்டது?
**காமராசர்**

480) மருத்துவம் கல்லூரி முதலான தொழிற் கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு ______ கடனளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.
**வட்டியில்லாக் கடனளிக்க**

481) தஞ்சாவூர்ப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்திச் சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு எவ்வளவு விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை செய்தார்.
**அறுபது விழுக்காடு**

482) நில உச்சவரம்பு ______ ஏக்கர் எனக் குறைக்கப்பட்டது?
**முப்பது ஏக்கர்**

483) எந்த ஆண்டு சீனப்படையெடுப்புக்குப் பின், காங்கிரசுக் கட்சியின் செல்வாக்குச் சரியத் தொடங்கியது.
**1962 ஆம் ஆண்டு**

484) புவனேசுவர் நகரில் எந்த ஆண்டு காங்கிரசு மாநாட்டில் காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராகப் பதவியேற்றார்?
**1963 ஆம் ஆண்டு**

485) இந்தியப் பிரதமர் நேரு எந்த ஆண்டு காலமானார்?
**1964**

486) சாஸ்திரி எதிர்பாராத முறையில் 1966 ஆம் ஆண்டு எங்கு உயிரிழந்தார்?
**தாஸ்கண்டில்**

487) காமராசர், நேருவின் மகள் இந்திரா காந்திக்கு எந்த பதவி பொருத்தமானது?
**பிரதமர் பதவி**

488) காமராசருக்கு நடுவணரசு ______ விருது அளித்துச் சிறப்பித்தது.
**பாரத ரத்னா (இந்தியமாமணி) விருது**

489) நாடாளுமன்றத்தில் காமராசர்க்கு ______ சிலையை நிறுவியது?
**ஆளுயர வெண்கலச்சிலையை**

490) தமிழக அரசு, காமராசரின் கல்விப் பணியைச் சிறப்பிக்கும் வகையில் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு என்ன பெயர் சூட்டியது?
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

491) காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் ______ இல்லமாக ஆக்கப்பட்டது?
**நினைவு இல்லமாக**

492) காமராசர் அரங்கம் எங்கு நிறுவப்பட்டது?
**தேனாம் பேட்டையில்**

493) காமராசர் பிறந்த நாளான சூலை பதினைந்தாம் நாளை ஆண்டுதோறும் ______ அறிவித்துள்ளது
**கல்வி வளர்ச்சிநாள்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

494) காந்தியடிகள் மீது அளவற்ற அன்பு கொண்ட காமராசர் எந்த ஆண்டு காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம்நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்?

1975 ஆம் ஆண்டு

## இலக்கணம் - புணர்ச்சி

495) புணர்ச்சி என்றால் என்ன?

**நிலை மொழியின் ஈறும் வருமொழி யின் முதலும் சேருவது புணர்ச்சி ஆகும்.**

496) விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**மூன்று வகைப்படும்.**

**அவை: தோன்றல், திரிதல், கெடுதல்**

497) தோன்றல் புணர்ச்சிக்கு எ.கா தருக

**தமிழ் + பாடம் = தமிழ்ப்பாடம்**

498) திரிதல் புணர்ச்சிக்கு எ.கா தருக?

**கல் + சிலை = கற்சிலை**

499) கெடுதல் புணர்ச்சிக்கு எ.கா தருக?

**மரம் + வேர் = மரவேர்**

500) குற்றியலுகரப் புணர்ச்சி என்றால் என்ன?

**கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறும் நெடிலடுத்தும் இரண்டு முதலிய பல எழுத்துகளைச் சார்ந்தும் வரும் போது, தன் மாத்திரையளவில் குறைந்து ஒலிக்கும். இதனைக் குற்றியலுகரம் என்பர்.**

501) குற்றியலிகரப் புணர்ச்சி என்றால் என்ன?

**நிலை மொழியின் ஈறு (கடைசி) குற்றியலுகரமாக இருந்து, வருமொழி யின் முதல் எழுத்து, ய கரமாக இருந்து புணரும் போது, உகரம் இகரமாகத் திரியும் இதனைக் குற்றியலிகரப் புணர்ச்சி என்பர்.**

502) சேர்த்து எழுதுக:

1. காடு + கோழி = காட்டுக்கோழி
2. ஆறு + பாலம் = ஆற்றுப்பாலம்
3. கிணறு + தவளை = கிணற்றுத்தவளை
4. நாகு + கடிது = நாகுகடிது
5. எ∴து + சிறிது = எ∴குசிறிது
6. வரகு + தீது = வரகுதீது
7. குரங்கு + பெரிது = குரங்குபெரிது
8. தெள்கு + சிறிது = தெள்குசிறிது
9. தெள்கு + கால் = தெள்குகால்
10. எ∴கு + சிறுமை = எ∴குசிறுமை
11. நாகு + தலை = நாகுதலை
12. மருந்து + பை = மருத்துப்பை
13. இரும்பு + ஆணி = இருப்பாணி
14. கரும்பு + வில் = கருப்புவில்
15. செம்பு + குடம் = செப்புக்குடம்.

503) நிரப்புக:

1) வாழை + மரம் = வாழைமரம் என்பது _______

**இயல்புப் புணர்ச்சி**

2) மரம் +வேர் = மரவேர். இது _______

**கெடுதல் விகாரம்**

3) கன்று + ஆ என்பது _______ எனப்புணரும்.

விடை:

504) பொருத்துக:-

1. இயல்புப் புணர்ச்சி - கற்கோட்டை
2. தோன்றல் விகாரம் - மரவேல்
3. கெடுதல் விகாரம் - வாழைப்பழம்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

4. திரிதல் விகாரம் - பொன் வளையல்
விடை:

## மொழித்திறன் பயிற்சி

505) வல்லினம் மிகும் இடங்கள்
அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும் 'எ' என்னும் வினாவை அடுத்தும் வரும்.
வல்லினங்களாகிய க, ச, த, ப, மிகும்.
(எ.கா) இ + செடி = இச்செடி.

506) அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி என்ற சுட்டு, வினாச் சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.
எ.கா அந்த + கோவில் = அந்தக்கோவில்

507) இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.
(எ.கா) நூலை + படி = நூலைப்படி

508) நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.
(எ.கா) பணிக்கு + சென்றான் = பணிக்குச்சென்றான்

509) இரண்டு, மூன்று , நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.
(எ.கா) மரம் + பெட்டி = மரப்பெட்டி

510) பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.
(எ.கா) பச்சை + கிளி = பச்சைக்கிளி

511) இருபெயரொட்டுப் பண்புத்தொகையில வல்லினம் மிகும்.
(எ.கா) மல்லிகை +பூ = மல்லிகைப்பூ

512) உவமைத் தொகையில் வல்லினம் மிகும்
(எ.கா) மலர் + கண் = மலர்க்கண்

513) ஓரெழுத்து ஒரு மொழியின் பின் வல்லினம் மிகும்
(எ.கா) பூ + கூடை = பூக்கூடை.

514) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.
(எ.கா) ஓடா+ குதிரை = ஓடாக்குதிரை

515) வன்தொடர் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.
(எ.கா) பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

516) ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில் தொடர்க் குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்
(எ.கா) நாடு + பற்று = நாட்டுப்பற்று

517) முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்
(எ.கா) திரு + குறள் = திருக்குறள்

518) சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.
(எ.கா) சால + பேசினான் = சாலப்பேசினான்

519) ஆய், என, இனி, ஆக முதலிய இடைச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
(எ.கா) இனி + காண்போம் = இனிக்காண்போம்.

520) வல்லினம் மிகா இடங்கள்:
அது, இது, அவை, இவை எனும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை எனும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.
(எ.கா) அது + பறந்தது = அது பறந்தது.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

521) ஆ, ஏ, ஓ எனும் வினா எழுத்துகளின் பின் வல்லினம் மிகாது.

(எ.கா) அவனா+ சென்றான் = அவனா சென்றான்

522) எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.

(எ.கா) மலர் + பூத்தது = மலர்பூத்தது

523) அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

(எ.கா) அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்

524) வினைத் தொகையில் வல்லினம் மிகாது.

(எ.கா) ஊறு + காய் = ஊறுகாய்

525) உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.

(எ.கா) கபிலபரணர், இரவுபகல்

526) இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.

(எ.கா) கடல் + கடந்தார் = கடல்கடந்தார்.

527) மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது.

(எ.கா) பூவொடு + சேர்ந்த = பூவொடுசேர்ந்த

528) எட்டு, பத்து தவிரப்பிற எண்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

(எ.கா) ஒன்று கொடு ஒன்றுகொடு இரண்டு + பேர் = இரண்டுபேர்

529) வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் வல்லினம் மிகாது.

(எ.கா) வாழ்க + தமிழ் = வாழ்கதமிழ்

530) இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர்களில் வல்லினம் மிகாது.

(எ.கா) சல + சல = சலசல

531) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களுடன் பின் வல்லினம் மிகாது.

(எ.கா) சிறிய + பெண் = சிறியபெண்

532) பொருத்துக:

க + சு = கசு

அ + உ = கூ

ரு + கூ = உஉ

உ0 + உ = கங

கஅ + க0 = க0

533) தமிழ்ப் பழமொழியை அறிக:-

1. Take away the full. The boiling will cease
எரிவதைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்

2. Practice makes perfect
சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்

3. The law - maker should not be a law - breaker
வேலியை பயிரை மேய்ந்தாற் போல

4. Misfortune never comes single
பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்

5. Look no gift horse in the mouth
தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கலாமா?

## இயல்எட்டு - செய்யுள்
## நாட்டுப்புறப்பாடல்

534) சொற்பொருள்:

1) விரிகடல் - பரந்தகடல்

join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

2) காயும் ரவிச்சுடர் - சுட்டெரிக்கும் சூரியக்கதிர்

3. யோகம் - வழிபாடு

535) நாட்டுப்புறப் பாடல் விளக்கம்.

பழங்காலப் பண்பாட்டின் எச்சம் எனக் கருதப்படும் நாட்டுப்புறப் பாடல்கள் ஏட்டில் எழுதாக் கவிதைகள் ஆகும். இவை வழிவழியாகப் பாடப்பட்டுவரும் வாய்மொழி இலக்கியங்களே. பழமொழிகள், விடுகதைகள், கதைப் பாடல்கள், தொழிற்பாடல்கள் முதலியன நாட்டுப்புற இலக்கியத்துள் அடங்கும். தெம் மாங்குப்பாடல், களையெடுப்புப் பாடல், கதிரறுப்புப் பாடல், மீனவர் பாடல், முதலியன தொழிற் பாடல்கள். எளிய சொற்களும் நடைமுறை வாழ்க்கையை ஒட்டிய ஆழ்ந்த கருத்துகளும் அடங்கியவை இப்பாடல் கள். இப்பாடல்கள் வேலை செய்யும் போது களைப்பு ஏற்படாமல் இருக்கப் பாடப்படுவன. நாட்டுப்புறவி யல் துறையில் பல்வேறு ஆய்வுகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. நாட்டுப்புறப் பாடல்கள், படிக்காதவர் களும் ஓரளவு கல்வியறிவு பெற்றவர் களும் பாடுவனவாக உள்ளன. இப்பாடல்கள் செவி வழியாகப் பரவுவன. இவற்றை இயற்றியவர் இன்னாரெனக் கூறவியலாது.

536) நிரப்புக

1. மீனவர்களுக்கு இரவில் விளக்காக விளங்குவது ______

**விடிவெள்ளி**

2. மீன்வலை மீனவரின் ______

**படிக்கும் நூல்**

3. மீனவர் கண்ணாடியாகப் பயன்படுத்துவது ______

**முழுநிலவே**

4. மீனவரின் வாழும் வீடு

**கட்டு மரம்**

## பெண்மை - வெ. இராமலிங்கனார்

537) அன்பும் ஆர்வமும் அடக்கமும் – என்ற ‘பெண்மை’ பாடலை பாடியவர் யார்?

**வெ.இராமலிங்கனார்**

538) சொற்பொருள்

1. உறுதி - ஊஉறுதி
2. சகிப்புத்தன்மை - பொறுத்துக் கொள்ளுதல்
3. சொரூபம் - வடிவம்
4. தரணி - உலகம்
5. தாரம் - மனையாள்
6. சேவை - தொண்டு
7. அயலார் - உறவல்லாதோர்

539) இலக்கணக் குறிப்பு:

1. **அன்பும் ஆர்வமும் அடக்கமும் -- எண்ணும்மை**
2. **இன்பசொரூபம் -- உருவகம்**

540) ஆசிரியர் குறிப்பு

கவிஞர் வெ.இராமலிங்கனார், நாமக்கல் மாவட்டத்திலுள்ள மோகனூரில் பிறந்தவர். இவர்தம் பெற்றோர் வெங்கட்ராமன் -- அம்மணி அம்மாள் ஆவர். கவிதைப் போட்டிகள் பலவற்றில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றார். தமிழக அரசின் முதல்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவருக்கு நடுவணரசு பத்மபூஷண் விருது வழங்கிச் சிறப்பித்தது. இவர், தமிழக மக்களால் காந்தியக் கவிஞர் எனப் பெருமையுடன் வழங்கப் பெற்றார். இவரின் காலம் கி.பி 1888 முதல் 1972 வரையாகும்.

541) **நூற்குறிப்பு**

நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் கவிதைத் தொகுப்பில் தெய்வத் திருமலர், தமிழ்த் தேன்மலர், காந்திமலர், தேசிய மலர், சமுதாய மலர், பெரியோர் புகழ் மலர், திருநாள் மலர், சிறுகாப்பிய மலர், இசைமலர், அறிவுரை மலர், பல்சுவை மலர் ஆகிய தலைப்புகளில் கவிதைகள் அமைந்துள்ளன. இப்பாடல், சமுதாய மலர் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

542) நாமக்கல்லாரின் படைப்புகள்

இசை நாவல்கள் - 3
கட்டுரைகள் - 12
தன்வரலாறு - 3
புதினங்கள் - 5
இலக்கியத்திறனாய்வுகள் - 7
கவிதைத் தொகுப்புகள் - 10
சிறுகாப்பியங்கள் - 5
மொழிபெயர்ப்புகள் - 4

## தில்லையாடி வள்ளியம்மை (உரைநடை)

543) ஆங்கிலேயரின் அடக்குமுறைக் கொடுமைக்கு எதிராக உரிமைக் குரல் எழுப்பிப் போராடியவரின் பெண்ணின் பெயர்?

**தில்லையாடி வள்ளியம்மை**

544) தில்லையாடி வள்ளியம்மை பெற்றோரின் பெயர், ஊர்?

**புதுச்சேரியில் வாழ்ந்த முனுசாமி என்ற நெசவாளி**

**தில்லையாடி என்னும் ஊரில் பிறந்த மங்களம்.**

545) முனுசாமி நெசவுத் தொழில் பாதிப் பால் வறுமையில் வாடி வேலைதேடி எங்கு குடியேறினர்?

**தென் ஆப்பிரிக்காவில்**

546) வீர மங்கை வள்ளியம்மை எந்த ஆண்டு பிறந்தார்?

**1898 ஆம் ஆண்டு**

547) வள்ளியம்மை எந்த நாட்டில் பிறந்தார்?

**தென்னாப் பிரிக்காவில்**

548) தாயார் தில்லையாடியில் பிறந்தால் வள்ளியம்மை பெயர் எவ்வாறு அழைக்கப்படுகின்றது.

**தில்லையாடி வள்ளியம்மை**

549) எந்த ஆண்டு தென்னாப் பிரிக்க நாட்டின் திருமணப் பதிவுச் சட்டப் படியும், கிறித்து மதச் சட்டப்படியும் திருமணங்கள் செல்லாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பை வெளியிட்டது?

**1913 ஆம் ஆண்டு**

550) காந்தியடிகள் எந்த போராட்டத்தினைக் தலைமை ஏற்று வழி நடத்தினார்?

**அறப் போராட்டம்**

551) அறப்போர் போராட்டம் எந்த ஆண்டு, எந்த இடத்தில் நடைபெற்றது?

**1913 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 23 ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்றது.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

552) சிறைச் சூழலால் உடல் நலம் குன்றிய வள்ளியம்மை எந்த ஆண்டு மரணம் அடைந்தார்?

**1914 பிப்ரவரி இருபத்திரண்டாம் நாளன்று தமது பதினாறாம் அகவையில்.**

553) "நம்பிக்கைதான் அவரது ஆயுதம்" என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து எந்த இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார்?

**இந்தியன் ஒப்பீனியன்**

554) தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் ______ என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம்**

555) காந்தியடிகள், தமிழர் மீதும் தமிழ் மொழியின் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு யார் காரணம் என்று கூறலாம்?

**வள்ளியம்மை**

556) வள்ளியம்மையின் நினைவைப் போற்றும் வகையில் --------------- தமிழ் நாடு அரசு அவரது சிலையை நிறுவியுள்ளது.

**தில்லையாடியில்**

557) கோ - ஆப் - டெக்ஸ் என்றழைக்கப் படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னையிலுள்ள தனது அறுநூறாவது விற்பனை மையத்திற்குத் ______ எனப்பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது?

**தில்லையாடி வள்ளியம்மை மாளிகை**

## இராணி மங்கம்மாள் (துணைப்பாடம்)

558) காப்பாட்சியாளராக ஆட்சி புரிந்தவர் யார்?

**இராணி மங்கம்மாள்**

559) மதுரை ஆண்டு வந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி யார்?

**இராணி மங்கம்மாள்**

560) சொக்கநாத நாயக்கர், இராணி மங்கம்மாள் இவர்களுக்கு பிறந்த மகன் யார்?

**கிருட்டின முத்து வீரப்பன்**

561) முத்து வீரப்பன் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்து எந்த நோயால் உலக வாழ்வை நீத்தார்?

**ஏழாண்டுக்காலம், அம்மைநோய்**

562) இராணி மங்கம்மாளின் மருமகளின் பெயர்?

**சின்ன முத்தம்மாள்**

563) எந்த பொறுப்பு இராணி மங்கம்மாளின் மனத்தைக் கல்லாக்கியிருந்தன?

**அரசியல் பட்டறிவும், ஆட்சிப் பொறுப்பும்**

564) இராணி மங்கம்மாள் பெயரன் விசயரங்கச் சொக்க நாதன் பெயரளவில் எந்த ஆண்டு அரியணையில் ஏற்றப்பட்டான்.

**1688 ஆம் ஆண்டு**

565) திருவிதாங்கூரின் மன்னர் யார்?

**இரவிவர்மா**

566) இராணி மங்கம்மாள் காலத்தில் மைசூர் மன்னன் யார்?

**சிக்கதேவராயன்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

567) ஒவ்வொரு வரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தைக் கைக் கொண்டு வாழவிடுவதே தருமம் என்ற கொள்கையே பின்பற்றியவர் யார்?

**மங்கம்மாள்**

568) மங்கம்மாள் மதுரையில் ------------ கட்டினார்?

**பெரியதொரு அன்னச்சத்திரத்தைக்**

569) கன்னியாகுமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை, ______ என அழைக்கப்படுகிறது?

**மங்கம்மாள் சாலை**

570) மங்கம்மாள் கட்டியவை எவை?

**மத்தியச் சந்தை, மதுரைக் கல்லூரி, உயர் நிலைப்பள்ளிக் கட்டடம், இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவரின் பழைய அலுவலகம்.**

571) மங்கம்மாளின் பெயர்

**மங்காத புகழோடு விளங்கும்**

## யாப்பு - செய்யுள் உறுப்புகள் (இலக்கணம்) (எழுத்து, அசை, சீர், தளை)

572) செய்யுளின் உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**செய்யுளின் உறுப்புகள் ஆறு வகைப்படும்.**

**அவை:**

**எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை.**

573) எழுத்து என்றால் என்ன?

**செய்யுளில் குறில், நெடில், மெய், ஆய்தம் என்னும் எழுத்துகள் முதன்மையாகக் கருதப்படும்.**

574) அசை என்றால் என்ன?

**எழுத்து தனியாகவோ, பல சேர்ந்தோ ஓசைப்பட அசைந்து (பிரிந்து) நிற்பது அசை எனப்படும்.**

575) அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**அசை இரண்டு வகைப்படும்**

**அவை 1 நேரசை, 2. நிரையசை**

576) நேரசை என்றால் என்ன?

**குறில் தனித்தும் குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும் நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசை எனப்படும்.**

577) நிறையசை என்றால் என்ன?

**குறில் இணைந்தும் குறில் இணைந்து ஒற்றும், குறில் நெடில் இணைந்தும் குறில் நெடில் இணைந்து ஒற்றும் வருவது நிரையசை.**

578) சீர் என்றால் என்ன?

**அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும். அ∴து ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நால் வகைப்படும்.**

579) ஓரசைச்சீர் என்றால் என்ன?

**வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசையுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். அவற்றை ஓரசைச்சீர் என்பர்.**

580) ஓரைச்சீர் நால்வகைப் வாய்ப்பாடு?

**நாள் (நேர்), மலர் (நிரை), காசு (நேர்பு), பிறப்பு (நிரைபு).**

581) ஈரசைச்சீர் என்றால் என்ன?

**இரண்டு அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது ஈரசைச்சீர். நேரில் முடிவது இரண்டும், நிரையில் முடிவது இரண்டுமாக ஈரசைச்சீர் நான்கு ஆகம்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

582) சீர் வாய்ப்பாடு

| | | |
|---|---|---|
| 1. நேர் நேர் | -- | தேமா |
| 2. நிரை நேர் | -- | புளிமா |
| 3. நிரைநிரை | -- | கருவிளம் |
| 4. நேர் நிரை | -- | கூவிளம் |

மாச்சீர் -- 2
(தேமா, புளிமா, என மாவில் முடிவதனால் மாச்சீர்)
விளச்சீர் -- 2
(கருவிளம், கூவிளம் என விளத்தில் முடிவதனால் விளச்சீர்)

583) மூவசைச்சீர் என்றால் என்ன?
**மூன்று அசைகள் சேர்ந்து ஒருசீர் ஆவது மூவசைச்சீர். நேரசையில் முடிவது நான்கும் நிரை அசையில் முடிவது நான்குமாக மூவசைச்சீர் எட்டு ஆகும்.**

584) காய்ச்சீர் நான்கு:

| | | |
|---|---|---|
| 1. நேர் நேர் நேர் | -- | தேமாங்காய் |
| 2. நிரை நேர் நேர் | -- | புளிமாங்காய் |
| 3. நிரை நிரை நேர் | -- | கருவிளங்காய் |
| 4. நேர் நிரை நேர் | -- | கூவி |

**வெண்பாவிற்கு உரியன ஆதலின் வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.**

585) கனிச்சீர் நான்கு:

| | | |
|---|---|---|
| 1. நேர் நேர் நிரை | --- | தேமாங்கனி |
| 2. நிரை நேர் நிரை | -- | புளிமாங்கனி |
| 3. நிரை நிரை நிரை | - | கருவிளங்கனி |
| 4. நேர் நிரை நிரை | -- | கூவிளங்கனி |

(இவை வஞ்சிப்பாவிற்கு உரியதால் வஞ்சியுளிச்சீர் எனவும் கூறுவர்)

586) நாலசைச்சீர் என்றால் என்ன?
**மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால் நாலசைச்சீர் பதினாறு கிடைக்கும் இதனைப் பொதுச்சீர் எனக் கூறுவர்.**

587) தளை என்றால் என்ன?
**நின்ற சீரின் ஈற்றசையும் வரும் சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது தளை எனப்படும்.**

588) தளை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
**ஏழு வகைப்படும்.**
**அவை:**
**1. நேரொன்றாசிரியத்தளை**
**2. நிரையொன்றாசிரியத்தளை**
**3. இயற்சீர் வெண்டளை**
**4. வெண்சீர் வெண்டளை**
**5. கலித்தளை**
**6. ஒன்றிய வஞ்சித்தளை**
**7. ஒன்றாத வஞ்சித்தளை**

589) நேரொன்றாசிரியத்தளை என்றால் என்ன? எ.கா தருக?
**மாமுன் நேர் வருவது நேரொன்றாசிரியத்தளை.**
எ.கா நேர் – நேர் சேர்ந்து வருவதால் நேரொன்றாசிரியத்தளை

590) நிரையொன்றாசிரியத்தளை என்றால் என்ன? எ.கா தருக?
**விளம்முன் நிரை வருவது நிரையொன்றாசிரியத்தளை.**
எ.கா நிரை - நிரை சேர்ந்து வருவதால் நிரையொன்றாசிரியத்தளை.

591) இயற்சீர் வெண்டளை என்றால் என்ன?
**மாமுன் நிரையும், விளமுன் நேரும்வருவது இயற்சீர் வெண்டளை.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

592) வெண்சீர் வெண்டளை என்றால் என்ன?

**காய்முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை.**

எ.கா. நேர் நேர் நேர் -- தேமாங்காய்

593) வெண்பாவிற்கு உரிய தளைகள்

1. **இயற்சீர் வெண்டளையும்**
2. **வெண்சீர் வெண்டளையும்**

594) கலித்தளை என்றால் என்ன?

**காய்முன் நிரை வருவது கலித்தளை**

595) ஒன்றிய வஞ்சித்தளை என்றால் என்ன?

**கனிமுன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித்தளை.**

596) ஒன்றாத வஞ்சித்தளை என்றால் என்ன?

**கனிமுன் நேர் வருவது ஒன்றாத வஞ்சித்தளை எனப்படும்.**

567) உரியவிடைத் தேர்ந்தெழுதுக

1. மெய்யும், ஆய்தமும் யாப்பில் ______ எனக் குறிக்கப்படும்.

விடை

2. காய்ச்சீர் ______ வகைப்படும்.

நான்கு

3. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர்கள் - ______ ஆகும்.

விடை

4. காய்முன் நேர்வரின் ______ ஆகும்.

விடை

5. வெண்பாவில் உயர்வு என்னும் ஈற்றுச்சீரில் வரும் ஓரசையின் வாய்ப்பாடு ______

விடை

597) கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு

599) இணையான தமிழ்ப் பழமொழியை அறிக

1.The servant of the king is also a king

எல்லாரும் இந்நாட்டு மன்னனர்

2. Frest and fraud have foul ends

சூதும் வாதும் வேதனை செய்யும்

3. The place where you find your food is your paradise

சோறு கண்ட இடம் சொர்க்கம்.

4. No advice like fathers

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.

5. When the head is there, the tail should not wag

தலையிருக்க வால் ஆடலாமா?

## இயல் ஒன்பது -- செய்யுள் வஞ்சகமாய நெஞ்சமோடு மொழிதல்

600) மாயமான வாழ்வை நம்பித் ______ வஞ்சமாய நெஞ்சமோடு மொழிதல் என்ற பாடலை எழுதியவர் யார்?

**மதுரகவி பாஸ்கரதாஸ்**

601) **இலக்கணக் குறிப்பு:**

1. மனக்குரங்கு -- உருவகம்
2. நாடு நகர் -- உம்மைத் தொகை
3. செம்பொன் -- பண்புத் தொகை
4. மாடும் ஆடும் -- எண்ணும்மை

602) **ஆசிரியர் குறிப்பு:**

பாஸ்கரதாஸ் மதுரை நகரில் பிறந்தவர். இவர் இனிய இசையமைப் பால் புதிய பல இசையுருக்களை அமைத்தவர். இசைப்புலமையுடன் நாடகப்புலமையும் பெற்றவர். நாடக மேடைகளில் விடு தலைப்பாடல்களை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

இசைத்தவர். இவரின் இசைப்பாடல்களைக் கேட்ட காந்தியடிகள், இவரைப் பெரிதும் பாராட்டினார். இவரைச் சிறப்பிக்கும் வகையில் மதுரையில் இவர் வாழ்ந்த பகுதிக்கு மதுரகவி பாஸ்கரதாஸ் நகர் எனப் பெயரிப்பட்டுள்ளது. இவரின் காலம் கி.பி 1892 முதல் 1952 வரையாகும். பாடப்பகுதியிலுள்ள பாடல் மதுகைவி பாஸ்கரதாஸ் கீர்த்தனைகளின் இரண்டாம் பாகத்தில் இடம் பெற்றுள்ளது.

ஒப்படைப்பு:

திருவிளையாடற் புராணத்தில் தருமிக்கு பொற்கிழி அளித்த படலக் கதையைப் பொம்மலாட்டமாக வடிவமைத்து வகுப்பில் நடத்திக் காட்டுக.

## இரட்சணிய யாத்திரிகம்
## எச்.ஏ கிருட்டினனார்

603) இறை மகனாகிய இயேசு பெருமான் பெத்தலகேமில் யாருக்கு மகனாகப் பிறந்தார்?

**மரியன்னைக்கு**

604) இயேசு பெருமான் தந்தையின் பெயர்?

**சோசப்பும்**

605) குழந்தை இயேசுவை, ஏரோது மன்னனின் கொடுமையிலிருந்து காப்பாற்ற தந்தை சோசப்பும் தாய் மரியன்னையும் எந்த நாட்டிற்கு சென்றனர்?

**எகிப்து**

606) இயேசுவின் தோள்களின் சிலுவையினைச் சுமத்தித் துன்புறுத்திக் எந்த மலைக்குக் கொண்டு சேர்த்தனர்?

**கல்வாரி மலைக்குக்**

607) சொற்பொருள்:

1. ஈண்டு -- இவ்விடம்
2. புகல்வது -- சொல்வது
3. காண்டகு -- காணத்தக்க
4. இருப்பாணி -- இரும்பு ஆணி
5. கடாவினார் -- அடித்தார்
6. கீண்டு -- தோண்டி
7. செற்றம் -- சினம்
8. குருசு -- சிலுவை
9. சொற்ற -- சொன்ன
10. துளக்கம் -- விளக்கம்
11. சுருதிமுதல் – மறை முதல்வராகிய இயேசு நாதர்
12. சதைப்புண்டு -- சிதைக்கப்பட்டு
13. பன்னரிய -- சொல்லுதற்கரிய
14. பலபாடு -- பலதுன்பம்
15. இரும்பொறை -- பெரும் பொறுமை
16. வித்தகன் -- ஆண்டவன்
17. தொழும்பர் -- அடியார்
18. இசை பெறுதல் -- புகழ் பெறுதல்
19. துஞ்சினவர் -- உறங்கியவர்
20. கீண்டு -- பிளந்து
21. இருப்பு முளை -- ஆணியின் நுனி
22. வதைப்புண்டு -- துன்பமடைந்து
23. மாண்டுபடும் போது -- இறக்கும் நிலையில்
24. இரட்சகர் -- காப்பவர்
25. மன்றாடும் -- மிக வேண்டுதல்
26. ஆகடியம் -- ஏளனம்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

608) **இலக்கணக் குறிப்பு:**

1. செங்கை, சேவடி, வெவ்விருப்பு - பண்புத் தொகைகள்
2. இருப்பு -- வலித்தல் விகாரம்
3. கனிவாய் -- உவமைத் தொகை
4. வன்மறவோர் -- பண்புத் தொகை

609) பகுபத உறுப்பிலக்கணம்

1) தீண்டினார் -- தீண்டு + இன் + ஆர்

தீண்டு - பகுதி

இன் - இறந்தகால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

2) கடாவினார் – கடாவு + இன் + ஆர்

கடாவு - பகுதி

இன் - இறந்தகால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

610) பிரித்தறிதல்:

அ) மற்றிரண்டு -- மற்று + இரண்டு

ஆ) குருசேற்றி -- குருசு + ஏற்றி

இ) தன்னரிய -- தன் + அரிய

ஈ) தவிப்பெய்தி -- தவிப்பு + எய்தி

உ) இத்தகைய -- இ + தகைய

ஊ) மனநலம் -- மனம் + நலம்

எ) பங்கிட்டார் -- பங்கு + இட்டார்

ஏ) எழுத்திட்டார் -- எழுத்து + இட்டார்

ஐ) என்றாகடியமான - என்று + ஆகடியம் + ஆன

611) **ஆசிரியர் குறிப்பு:**

இரட்சணிய யாத்திரிக நூலாசிரியர் எச்.ஏ கிருட்டினனார். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரையிருப்பு என்னும் ஊரில், 1827 ஏப்ரல் இருபத்து மூன்றாம் நாள் பிறந்தார். இவருடைய தந்தை சங்கர நாராயணர் பெரும் புலவராக விளங்கினார். அன்னையார் பெயர் தெய்வ நாயகி அம்மாள். இவர்கள் ரெட்டியாபட்டியில் வாழ்ந்த வர்கள். பிறகு, கரையிருப்பு சென்று வாழ்ந்த கிருட்டினனார், முப்பதாவது அகவையில் தம் பெயரை எச்.ஏ கிருட்டினனார் என வைத்துக் கொண்டார்.

கிருட்டினனார் தந்தையிடம் தமிழிலக்கி யங்களையும் மாணிக்க வாசகத்தேவரி டம் இலக்கணங் களையும், பிலவணச் சோதிடரிடம் வடமொழியையும் கற்றார். சாயர்புரம் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள் என்னும் நூல்களையும் இயற்றினார். கிறித்துவக் கம்பர் எனப் புகழ்ப் பெற்ற பெருங் கவிஞர் 1900 பிப்ரவரி மூன்றாம் நாள் இயற்கை எய்தினார்.

612) **நூற்குறிப்பு:**

இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள் (உயிர், தன்னைக் காக்க வேண்டி) இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் என்பது. ஆன்ம ஈடேற்றத்தை விரும்புபவர் என்பதும் பொருந்தும்.

ஜான் பன்யன் என்னும் புகழ் பெற்ற ஆங்கில நூலாசிரியர் இயற்றிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்னும் நூலைத் தழுவி, ஹென்றி ஆல்பர்ட்டு கிருட்டினனார் வழி நூலாகத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயரில் இயற்றினார்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

613) நிரப்புக:

1. கிறித்தவக் கம்பர் எனப் புகழப் பெறுபவர் _______

**ஏச்.எ கிருட்டினனார்**

2. இரட்சணிய யாத்திரிகம் _______ நூலைத்தழுவி இயற்றப்பட்டது.

**பில்கிரிம்ஸ் புரோகிரஸ்**

## பொங்கல் திருவிழா (உரைநடை)

614) தமிழர் திருநாள் எது?

**பொங்கல் விழா, தைத்திங்கள் நாள் விழா, தமிழினத்தின் தனி விழா, பண்பாட்டுப் பெருவிழா.**

615) வளமையின் அடையாளமே _______!

**அறுவடைக் காலம்**

616) வீடும், நாடும் தூய்மைப்படுகிற, சுற்றுப்புறச் சூழலைப் போற்றுகின்ற இனிய திருநாள் எது?

**போகித் திருநாள்**

617) உழவுக்கு உறுதுணையான மாடுகளை நன்றியுணர்வோடு மதித்துப் போற்றிடும் திருநாள் எது?

**மாட்டுப் பொங்கல்**

618) ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓரிடத்தில் நிலைத்து உழவுத் தொழில் செய்து, பண்பட்ட நாகரிக வாழ்வை மேற் கொண்டவர்கள் யார்?

**தமிழர்கள்**

619) ஆந்திரா, கருநாடகா ஆகிய மாநிலங்களில் மகர சங்கராந்தி எனவும் ஜப்பான், ஜாவா முதலிய நாடுகளில் அறுவடைத் திருவிழா எனவும் கொண்டாடப்படுகிறது. தமிழகம் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, மொரீசியது, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற கடல் கடந்த நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

## (இலக்கணம்) யாப்பு - செய்யுள் உறுப்புகள் (அடி, தொகை)

620) அடி என்றால் என்ன?

**சீர்கள் பல அடுத்து நடப்பது அடி எனப்படும்.**

621) அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**அடி ஐந்து வகைப்படம்.**

**அவை - 1. குறளடி, 2. சிந்த அடி, 3. அளவடி, 4. நெடிலடி, 5. கழிநெடிலடி.**

622) குறளடி என்றால் என்ன?

**அடிதோறும் இருச்சீர்களைப் பெற்று வருவது குறளடி எனப்படும்.**

**எ.கா.. முக்தி வேண்டுமேல்**

623) சிந்தடி என்றால் என்ன?

**அடிதோறும் மூச்சீர்களைப் பெற்று வருவது சிந்தடி எனப்படும்.**

**எ.கா பழுதி லாது பயிற்றினர்.**

624) அளவடி என்றால் என்ன?

**அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது அளவடி அல்லது நேரடி எனப்படும்.**

**எ.கா வாய்மொழி தப்பிடா வகையில் ஆற்றுவன்.**

625) நெடிலடி என்றால் என்ன?

**அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது நெடிலடி எனப்படும்.**



Arivukkadal Pathippagam 9842649140

join telegram@tamizhanexammaterials1

@tamizhanexammaterials1

எ.கா நீடும் குடையைத் தரித்த பிரானிந்த நீள் நிலத்தில்

626) கழிநெடிலடி என்றால் என்ன?
அடிதோறும் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பல சீர்களைப் பெற்று வருவதைக் கழிநெடிலடி எனக் கூறுவர்.

627) தொடை என்றால் என்ன?
மலர்களைத் தொடுப்பது போலவே சீர்களிலும் அடிகளிலும் மோனை முதலியன அமையத் தொடுப்பது தொடை எனப்படும்.

628) தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
தொகை எட்டு வகைப்படும்.
அவை - 1. மோனைத் தொடை, 2. எதுகைத் தொடை, 3. முரண் தொடை, 4. இயைபுத் தொடை, 5. அளபெடைத் தொடை, 6. இரட்டைத் தொடை, 7. அந்தாதித் தொடை, 8. செந் தொடை.

629) மோனைத் தொடை என்றால் என்ன?
செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும்.

630) எதுகைத் தொடை என்றால் என்ன?
அடிதோறும் முதலெழுத்து அளவொத்து (ஓசையில்) நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடை எனப்படும்.

631) முரண் தொடை என்றால் என்ன?
அடிதோறும் முதற்சீர் முரண்படத் தொடுப்பது அடிமுரண் தொடை எனப்படும்.

632) இயைபுத் தொடை என்றால் என்ன?
அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது அடிஇயைபுத் தொடை எனப்படும்.

633) அளபெடைத் தொடை என்றால் என்ன?
அடிதோறும் முதல் சீர் அளபெடுத்து வருவது அடியளபெடைத் தொடை எனப்படும்.

## மோனை:

634) இணைமோனை என்றால் என்ன?
இணைமோனை (1,2)
நாலடி கொண்ட சீருள் முதலிரு சீர்களில் முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது இணைமோனை எனப்படும்.

635) பொழிப்பு மோனை (1,3) என்றால் என்ன?
ஓர் அடியுள் முதற்சீரிலும், மூன்றாம் சீரிலும் முதலெழுத்து ஒத்து வருவது பொழிப்பு மோனை எனப்படும்.

636) ஒரூஉமோனை (1,4) என்றால் என்ன?
ஓர் அடியுள் முதற் சீரிலும், நான்காம் சீரிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, ஒரூஉமோனை எனப்படும்.

637) கூழைமோனை (1,2,3) என்றால் என்ன?
ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றி வருவது கூழைமோனை எனப்படும்.

638) மேற்கதுவாய்மோனை (1,3,4) என்றால் என்ன?
ஓர் அடியுள் முதல், மூன்று, நான்காம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கது வாய்மோனை.


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

639) கீழ்க்கதுவாய் மோனை என்றால் என்ன? (1,2,4)

ஓரடியுள் முதல், இரண்டு, நான்காம் சீர்களில் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் மோனை எனப்படும்.

640) முற்றுமோனை (1,2,3,4) என்றால் என்ன?

ஓர் அடியின் நான்கு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றுமோனை எனப்படும்.

## எதுகைத் தொடை:

641) இணை எதுகை என்றால் என்ன? (1,2)

முதலிரு சீர்களின் முதலெழுத்து அளவொத்து நிற்க (ஓசையளவில்) இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணை எதுகை எனப்படும்.

642) பொழிப்பு (1,3) என்றால் என்ன?

ஓர் அடியுள் முதற் சீரிலும், மூன்றாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு எதுகை எனப்படும்.

643) ஒரூஉ எதுகை (1,4) என்றால் என்ன?

ஓர் அடியுள் முதல் சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது ஒரூஉ எதுகை எனப்படும்.

644) கூழை எதுகை (1,2,3) என்றால் என்ன?

ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீகளில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை எதுகை எனப்படும்.

645) மேற்கதுவாய் எதுகை (1,3,4) என்றால் என்ன?

ஓர் அடியுள் முதல், மூன்று, நான்காம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

646) கீழ்க்கதுவாய் எதுகை (1,2,4) என்றால் என்ன?

ஓர் அடியுள் முதல், இரண்டு, நான்காம் சீகளில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் எதுகை எனப்படும்.

647) முற்றெதுகை (1,2,3,4) என்றால் என்ன?

ஓர் அடியுள் உள்ள நாற்சீர்களிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றெதுகை எனப்படம்.

648) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:

1. தொடை _______ வகைப்படும்.

எட்டு

2. முதல், மூன்று, நான்காம் சீர்களில் மோனை ஒத்து வருவது.

மேற்கதுவாய்

3. அளவடிக்கு _______ என்னும் வேறு பெயருண்டு.

நேரடி

4. இணையெதுகை என்பது _______ _______, சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

1,2



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

649) பொருத்துக:

அ) கூழை --- 1,2,3 சீர்களில் வரும்

ஆ) மேற்கதுவாய் -- 1,3,4 சீர்களில் வரும்

இ) கீழ்க்கதுவாய் -- 1,2,4 சீர்களில் வரும்

ஈ) முற்று -- 1,2,3,4 சீர்களில் வரும்

650) தமிழ்ப் பழமொழி:-

1) Anger is sworn enemy

கோபம் குலத்தைக் கெடுக்கும்.

2) Break my head and bring a plaster

பிள்ளையைக் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது.

3) There is danger in mens smiles

தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்.

4) Like hand and glove

நகமும் சதையும் போல

5) Wealth is best known by want

நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

## இயல் பத்து - செய்யுள் ஓய்வும் பயனும்

651) ஓய்வாக இருக்கையில் தம்பி - நீ ஓவியம் வரைந்து பழகு! -- இப்பாடலை இயற்றியவர் யார்?

**பெருஞ்சித்திரனார்**

652) **ஆசிரியர் குறிப்பு:**

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை, மாணிக்கம். இவரது ஊர் சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம். இவரின் பெற்றோர் துரை சாமி, குஞ்சம்மாள் ஆவர். 10.03.1933 அன்று பிறந்த இவர், 11.06.1995 ஆம் நாள் மறைந்தார்.

கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக் கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். தென் மொழி, தமிழ்ச் சிட்டு, தமிழ் நிலம் ஆகிய இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை இந்நூல் குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை என்னும் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது.

653) நிரப்புக:

1. இசையால் _______ மறைந்து போகும்.

**துன்பம்**

2. உலக நிகழ்வுகளை அறிந்தால் _______ மேம்படும்.

**அறிவுத்திறன்**

3. ஏட்டுக்கல்வியறிவுடன் _______ கல்வியறிவு?

**கலையவும், தொழிற்கல்வி, அறிவியற் சிந்தனை**

4. பள்ளிப்பறவைகள் நூல் _______பிரிவுகளாக அமைந்துள்ளது.

**மூன்று**

## எதிர்காலம் யாருக்கு -- மீரா

654) உதிர்காலம் இனிமேலே - என்ற எதிர்காலம் யாருக்கு என்ற பாடலை பாடியவர் யார்?

**மீரா**

655) சொற்பொருள்:

**தேட்டை -- செல்வம்**

656) ஆசிரியர் குறிப்பு:

**மீரா என்னும் பெயர் மீ. இராசேந்திரன் என்பதன் சுருக்கம்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

இவர் 1938 ஆம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தார். தாம் படித்த சிவகங்கைக் கல்லூரியில் பேராசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றினார். இராசேந்திரன் கவிதைகள், மூன்றும் ஆறும், கோடையும் வசந்தமும், ஊசிகள், கனவுகள் கற்பனைகள் காகிதங்கள், குக்கூ ஆகிய கவிதை நூல்களையும் வா இந்தப்பக்கம் மீரா கட்டுரைகள் ஆகிய கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார்.

தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, பாவேந்தர் விருது, சிற்பி இலக்கிய விருது, தமிழ்ச் சான்றோர் பேரவை விருது முதலியவற்றை வழங்கித் தமிழுலகம் இவரைச் சிறப்பித்துள்ளது.

657) **நூற்குறிப்பு:**

இப்பாடல் இராசேந்திரன் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இப்பாடல்களைத் தொகுத்தவர் சேந்தி உடையநாதபுரம் சீனிவாசன். இந்நூல், சிறுதுளி பெருவெள்ளம் என்னும் பெருந்தலைப்பி னுள் அமுதத்துளிகள், தேன் துளிகள், கண்ணீர்த் துளிகள், பன்னீர்த்துளிகள், மழைத்துளிகள், குருதித்துளிகள் என்னும் சிறுதலைப்பு களின் கீழ் நாற்பத்தைந்து கவிதைகள் உள்ளன. இக்கவிதை, மழைத்துளிகள் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

658) **நிரப்புக:**

1. ஏர் பிடித்து உழைப்பவருக்குக் கிடைப்பது --------

**நல்ல எதிர்காலம்**

2. அறச்சாலை ——— விதைப்பாருக்கே கிட்டும்.

**உயிர்களின் இன்னல் நீக்கும் அருளாளர்க்குக்**

## உயிர்க்கோளம் (உரைநடை)

659) உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற உயிர்க்கோளமாக அது மாறுவதற்குச் ------------------ ஆண்டுகள் மேலானது.

**சுமார் நூற்றைம்பது கோடி**

660) உயிர்கள் முதன்முதலில் எதில் தோன்றின?

**நீரில்**

661) எந்த அண்டத்தில் நிலவும் கோள்களில் உயிரினங்கள் வாழ இயலா?

**சந்திரன், செவ்வாய்**

662) நிலத்தில் மட்டுமே உயிர்கள் வாழ இயலுமாதலால், அதனை ________ என வழங்குகிறோம்.

**உயிர்க்கோளம்.**

663) உயிரினங்களின் இயல்பை யார் ஆராய்ந்தன?

**அறிஞர்**

664) மனிதனே _______ மையம்.

**உயிர்க் கோளத்தின்**

665) உயிர்க்கோளம் தன்னகத்தே பல இயற்கைக் காட்சிகளை கீழ்க்காண்போம்?

**பரந்த வான்வெளியும், உயர்ந்த மலைமுகடும், மலைவீழ் அருவியும், வற்றாமல் வளம் பரப்பும் ஆறும், கவின்மிகு சோலையும், கனிதரும் மரங்கள், உயிரினங்களும் அதன் நிலைகளன்கள் ஆகும்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

666) உயிர்களின் வாழ்க்கை இயற்கைச் சூழ்நிலைகளாகிய _______, _______, கொண்டு நடைபெற்று வருகின்றது.

**காற்று, நீர்**

667) _______ மற்றும் _______ நிலப்பகுதிகள் கடலில் மூழ்கிவிடுவதும், புதிய நிலத் தோற்றங்கள் உருவாவதும் உண்டு.

**எரிமலைகள், நிலநடுக்கங்கள்**

668) மனித வாழ்கைக்குத் தேவையான _______, _______, முதலியவற்றை வழங்குகின்றது.

**உப்பு, தாதுப்பொருள்**

669) கடல் என்ன பொருள்களை அளிக்கின்றது?

**முத்து, பவளம், கிளிஞ்சல், கடற்பஞ்சு, சங்கு**

670) நீர்ப்பாகத்தை _______ என்றும், காற்று மண்டலத்தை _______ என்றும் கூறுவர்.

**நீர்க்கோளம், வளிக்கோளம்**

671) காற்று மண்டலத்தின் கலவை யாது?

**உயிர்வளி ( ஆக்சிசன்) 21%**
**உப்புவளி (நைட்டிரசன்) 78%**
**மற்ற வளிகள் 1%**

672) சுற்று சூழல் என்பது என்ன?

**உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள நிலம், நீர், காற்று போன்றவை அடங்கிய நிலைகள்.**

673) உலக வளிக்கோளம், உயரத்தையும் வெப்பநிலையையும் அடிப்படையாகக் கொண்டு பல பிரிவுகளில் இரண்டு எது?

**அடிவளி மண்டலம், மேல்வளி மண்டலம்**

674) அடிவளி மண்டலம் என்றால் என்ன?

**நிலத்தின் வெப்பநிலையை ஒரே சீரான நிலையில் வைத்திருக்கப் பெரிதும் உதவுகிறது.**

675) மேல்வளி மண்டலம் என்றால் என்ன?

**உயிர்வளிப் படலம் (ஓசோன்) உயிர்கள் செழிக்க இயற்கை அளித்திருக்கும் பாதுகாப்பு அரணாகும்.**

676) கதிரவனிடமிருந்து வெளிவரும் புற ஊதாகக் கதிர்கள் நிலப்பரப்பைத் தாக்காத வகையில் எந்த படலம் தடுக்கிறது?

**உயிர்வளிப் படலம் (ஓசோன்)**

677) குளிர்பதனப் பெட்டியில் பயன்படுத்தப் படும் ------ இவ்வுயிர் வளிப்படலத்தைச் சிதைப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.

**குளோரோ.: புளுரோ கார்பன்**

678) திண்ம, நீர்ம, வாயுப்பொருள் கழிவுகளால் எது சீர்கேடு அடைகின்றது?

**நிலம், நீர், காற்று**

679) நிலம் மாசுடைவதற்கான காரணம்?

**குப்பைகள், விவசாயக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள்.**

680) காற்று மாசுடைவதற்கான காரணம்?

**போக்குவரத்து ஊர்திகள், தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நச்சுப்புகை, அணுமின் நிலையங்கள் வெளியேற்றும் கதிரியக்க மாசு முதலியவற்றினால் காற்று பெருமளவு மாசு அடைகின்றது.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

681) மரங்களைத் தொடர்ந்து அழித்து வருவதனால் _______ நிகழ்கின்றன.

**நிலச்சரிவு, மண் அரிப்பு, மழையின்மை**

682) மழைவளம் பெருக _______ வளர்த்தல் வேண்டும்.

**மரம்**

## இலக்கணம் அணி

683) அணி என்றால் என்ன?

**தம் கற்பனை ஆற்றலாலும் மொழிப் புலமையாலும் சொல்லிலும் பொருளிலும் அழகு சேர்த்துப் பாடல்கள் இயற்றுவர் இத்தகைய செய்யுட்களில் காணப்படும் அழகே.**

684) ஏகதேச உருவக அணி என்றால் என்ன?

**கவிஞர் தாம் எடுத்துக் கொண்ட பலபொருள்களை உருவகப்படுத்திக் கூறும்போது ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, அதனோடு தொடர்பு டைய மற்றொன்றை உருவகப்படுத் தாமல் விடுவது.**

685) இல்பொருளு உவமையணி என்றால் என்ன?

**உலகில் இல்லாத பொருளை ஒன்றிற்கு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமை அணி எனப்படும்.**

686) பிறிதுமொழிதல் அணி என்றால் என்ன?

**புலவன், தான் கருதிய பொருளை நேரடியாகச் சொல்லாமல், அதனோடு தொடர்பு உடையனவற்றைச் சொல்லி விளங்கவைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும்.**

687) வேற்றுமையணி என்றால் என்ன?

**செய்யுளில் இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையைக் கூறிய பின்னர் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணியாகும்.**

688) நிரல்நிறை அணி என்றால் என்ன?

**சொல்லையும், பொருளையும் வரிசையாக (நிரலாக) நிறுத்தி, நேரே பொருள் கொள்வது நிரல் நிறை அணியாகும்.**

## மொழித்திறன் பயிற்சி

689) 1) ஒருமைச் சொற்களைப் பன்மையாக மாற்றுக

(எ.கா) யானையின் கண் சிறியது

யானையின் கண்கள் சிறியன

2) பண்மையை ஒருமையாக மாற்றுக:

(எ.கா) பசுவும் கன்றும் மேய்ந்தன

பசுவுடன் கன்று மேய்ந்தது.

690) இணையான தமிழ்ப் பழமொழியை அறிக

1. a wolf in sheeps clothing

பசுத்தோல் போர்த்திய புலி

2. union is strength

ஒற்றுமையே வலிமை

3. no smoke with out fire

நெருப்பில்லாமல் புகையாது.

4. might is right

வல்லான் வகுத்ததே வாய்க்கால்

5. many things fall betaeen the cup and the lip

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## பத்தாம் வகுப்பு
## இயல் - 1
## செய்யுள் - வாழ்த்து



1. “மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்” என்னும் பாடலை இயற்றியவர் யார்?
   **மாணிக்கவாசகர்**
2. மாணிக்கவாசகர் குறிப்பு?
   **சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவர் மாணிக்கவாசகர். இவர் மதுரைக்கு அருகில் திருவாதவூரில் பிறந்தவர். அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமை யமைச்சராகப் பணியாற்றியவர். “அமுது அடியடைந்த அன்பர்” என்பர். இவர் அருளிய நூல்கள் “திருவாசகமும் திருக்கோவையாரும் ஆகும். இவர் எழுப்பிய கோவில் தற்போது ஆவுடையார் கோவில் என வழங்கப்படும் திருப்பெருந்துறையில் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ளது. இவர் தம் காலம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும்.**
3. ”திருவாசகமும் திருக்கோவையாரும்” சைவத்திரு முறைகளின் எந்த திருமுறையில் இடம் பெற்றுள்ளது?
   **எட்டாம் திருமுறையில்**
4. திருவாசகத்தில் எத்தனைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளது?
   **658**
5. திருவாசகத்தின் சிறப்பை உணர்ந்த ஜி.யு.போப் எம்மொழியில் மொழி பெயர்த்தார்?
   **ஆங்கிலத்தில்**
6. ”சதகம்” - என்பதன் பொருள் என்ன?
   **நூறு பாடல்கள்**
7. பொருத்துக

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 1. விரை | - | உடல் |
| 2. கழல் | - | பெருகி |
| 3. ததும்பி | - | மணம் |
| 4. மெய் | - | அணிகலன் |

விடை:(1 2 3 4)

## திருக்குறள்
## ஒழுக்கமுடைமை

**சிறப்புகூறுகள்:**

முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில் புலவர், பெருநாவலர் முதலிய பெயர்களால் போற்றுகின்றது. இவரது காலம் கி.மு 31இல் பிறந்தவர். தமிழக அரசு தைத் திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகின்றது. திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் முதலிய உலகமொழிகள் பலவற்றிலும் இந்நூலை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருவள்ளுவமாலை என்னும் நூல் இவரது பெருமைகளைப் புகழ்கிறது.

8. திருக்குறளை எந்த ஆண்டு யார் பதிப்பித்தார்?
   **மலையத்துவசன் மகன் ஞானப் பிரகாசம் 1812இல் தஞ்சையில் வெளியிட்டவர்.**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

9. ”இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே” எனப் பாடியவர் யார்?
**பாரதிதாசன்**

10. **உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக:-**
அ) இறுவரை காணின் ______ (கிழக்காம்/கிளக்காம்தலை)
**விடை: கிழக்காம்**
ஆ) மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும் சொல் ______ (உரவோர்/உறவோர்)
**விடை: உறவோர்**

## ஏலாதி
## கணிமேதாவியார்

11. **ஆசிரியர் குறிப்பு:**
சமண சமயத்தவர் காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு.இவர் ”திணைமாலை நூற்றைம்பது” என்னும் நூலையும் இயற்றியுள்ளார். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஏலாதி ஒன்று. 81 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்பது பெயர்.

## உரைநடை
## உயர்தனிச் செம்மொழி

12. “வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி” என்ற வரி எழுதியவர்
**“பாவலரேறு பெருஞ்சித்திரனார்”**

13. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்” என்று பரிதிமாற் கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

14. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி என்பர் அவை யாவை?
**1. தொன்மை 2.முன்மை 3.நுண்மை 4. திண்மை 5.எண்மை 6.ஒண்மை 7. இனிமை 8.தனிமை 9.இளமை 10.வளமை 11.தாய்மை 12.தூய்மை 13.மும்மை 14.செம்மை 15.இயன்மை 16.வியன்மை**

15. 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுத் தொன்மையுடைய மொழிகள் சிலவே இவற்றுள் வழக்கிழந்து போன மொழி யாவை?
**தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன். ஈப்ரு, கிரேக்கம், இலத்தீனும், ஈப்ருவும் வழக்கிழந்து போயின.**

16. ”என்றுமுள தென்தமிழ்” என்றவர் யார்?
**கம்பர்**

17. எந்த மொழிகளுக்கு தமிழ்மொழி தாய்மொழியாகத் திகழ்கிறது?
**கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம்**

18. சங்க இலக்கியங்களின் மொத்த அடிகள் எத்தனை?
**26,350**

19. **“கமில்சுவலபில்”** எந்த நாட்டு மொழியியல் பேரறிஞராவார்?
**செக் நாட்டு**

20. **“மாக்சுமுல்லர்”** என்னும் மொழி நூலறிஞரோ தமிழே மிகவும் பண்பட்ட மொழி யென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப்



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டியிருக்கின்றார்.

21. சங்க இலக்கியங்களை இப்படியும் அழைப்பர்?
**மக்கள் இலக்கியம்**

22. தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் யார்?
**கெல்லட்**

23. தொல்காப்பியரின் ஆசிரியராகிய அகத்தியர் எந்த ஐந்து இலக்கணங் களை எழுதியுள்ளார்?
**எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, இன்நூலுக்கு அகத்தியம் என்பது பெயர்.**

24. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" - **புறநானூறு**
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" - **திருக்குறள்**

25. மக்கட் பண்பில்லாதாரை எதற்கு ஒப்பிடுகிறார் வள்ளுவர்?
**மரம்**

26. "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்ற அறநெறி கருத்தை கூறும் நூல் எது?
**சிலப்பதிகாரம்**

27. இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறை களைத் தொல்காப்பியம் கூறுகின்றது என்றவர் யார்?
**முனைவர் எமினோ**

## துணைப்பாடம் இயல்-1
## பரிதிமாற்கலைஞர்

28) குறிப்பு:-
சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் தம் பெயரைப் "பரிதிமாற்கலைஞர்" எனத் தனித் தமிழாக்கிக் கொண்டவர்.
தந்தை பெயர்: கோவிந்தசிவனார்
தாயார் பெயர் : இலட்சுமி அம்மாள்
மூன்றாவது மகனாக 1870ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஆறாம் நாள் பிறந்தார்.
மதுரையை அடுத்த விளாச்சேரி என்னும் சிற்றூரில் பிறந்தார்.
சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பி.ஏ. பயின்றார்.

29. தன்னிடம் தமிழ் கற்ற மாணவர்களை பரிதிமாற்கலைஞர் எவ்வாறு அழைத்தார்?
**இயற்றமிழ் மாணவர்**

30. பாசுகரசேதுபதி தலைமையில் பாண்டித் துரை மேற்பார்வையில் பரிதிமாற் கலைஞர் உ.வே.சாமிநாதர் இராகவனார் ஆகிய பேராசிரியர்கள் துணையுடன் மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.

31. திராவிட சாஸ்திரி என்னும் சிறப்புப் பட்டத்தை பரிதிமாற்கலைஞருக்கு சூட்டிய யாழ்ப்பாணத்து தமிழறிஞர் யார்?
**சி.வை.தாமோதரனார்**

32. "தனிப்பாசுரத் தொகை" என்னும் நூலினை இயற்றியவர் யார்?
**பரிதிமாற்கலைஞர்**

33. "விடுநனி கடிது" - என்ற சொல் இடம் பெற்ற நூல் எது?
**கம்பராமாயணம்-குகப்படலம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

34. பரிதிமாற்கலைஞர் இயற்றிய நற்றமிழ் நாடகங்கள் யாவை?
**ரூபாவதி, கலாவதி**

35. "சித்திரக்கவி" என்னும் நூலை எழுதியவர் யார்?
**பரிதிமாற்கலைஞர்**

36. குமரகுருபரரின் நீதிநெறி விளக்கத்தின் எத்தனை பாடல்களுக்கு உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்?
**51 பாடல்கள்**

37. மு.சி.பூர்ணலிங்கம் தொடங்கி வைத்த _______ என்னும் இதழைப் பரிதிமாற் கலைஞர் நடத்தினார்.
**ஞானபோதினி**

38. 33அகவையில் இயற்கை எய்தினார்?
**பரிதிமாற்கலைஞர்(2.11.1903)**

## இலக்கணம்: எழுத்து

உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துகளை முதலெழுத்துகள் என்பர் .

**ஐ-இரண்டு மாத்திரை**

அ. வளையம்-இச்சொல்லின் ஐகாரம் _______ மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.
**இடையில் வந்து ஒரு**

ஆ) ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்து சொல் ______ ஆகும்.
1.திண்ணை 2.வளையம் 3.ஐந்து

இ) பல் + தீது என்பது ______ எனப் புணரும்
1. பல்தீது 2.ப∴றீது 3. பலதீது

ஈ) குறுக்கங்கள் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ______ ஆய்தக் குறுக்கம் என நால்வகைப்படும்.
**மகரக்குறுக்கம்**

39. **பொருத்துக:-**
1. ஐகாரக்குறுக்கம் -அ) மு∴டீது
2. ஔகாரக்குறுக்கம் -ஆ) தலைவன்
3. ஆய்தக்குறுக்கம் -இ) போன்ம்
4. மகரக்குறுக்கம் -ஈ) வௌவால்

**விடை:- 1-ஆ, 2-ஈ, 3-அ, 4-இ**

## இயல்-2 செய்யுள்
## சிலப்பதிகாரம்
(மதுரைக்காண்டம்)
(வழக்குரை காதை)

40. இளங்கோவடிகள் சேரமரபினர் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தாய் நற்சோணை. இவர்தம் தமையன் சேரன் செங்குட்டுவன்.

41. **நூற்குறிப்பு:**
சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்
1. புகார்க்காண்டம் 2. மதுரைக் காண்டம் 3. வஞ்சிக்காண்டம் என்னும் முப்பெருங் காண்டங்களை உடையது. முப்பது காதைகளையும் உடையது. புகார்க்காண்டம் 10 காதைகளையும், மதுரைக்காண்டம் 13 காதைகளையும், வஞ்சிக்காண்டம் 7 காதைகளையும் கொண்டது. "உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்" எனவும் வழங்கப் பெறும். முதற்காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், ஒற்றுமைக்காப்பியம், நாடகக்காப்பியம் எனச் சிலப்பதி காரத்தைப் போற்றிப்புகழ்வர். "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" எனப் பாரதியார் புகழ்ந்தார்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

42. ஐம்பெருங்காப்பியங்கள் என்பவை எவை?எவை?
   1. சிலப்பதிகாரம்
   2. மணிமேகலை
   3. சீவகசிந்தாமணி
   4. வளையாபதி
   5. குண்டலகேசி

43. சிலப்பதிகாரத்தை எவ்வகையில் அமைந்துள்ளது?
   **இசைநாடகமாக**

44. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?
   **1. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்,**
   **2.உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்**
   **3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்**

45. பாண்டிய மன்னனின் துறைமுகம் - **கொற்கை**

## தமிழ்வளர்ச்சி
## பாவேந்தர் பாரதிதாசன்

46. பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர்-சுப்புரத்தினம்
   பிறப்பு : 1891 ஏப்ரல் 29 புதுவையில் பிறந்தார்.
   தாய்: இலக்குமி
   தந்தை : கனகசபை
   படைப்புகள் :குடும்பவிளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு

## இயல்-2
## உரைநடை
## பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள்

47. கோடிட்ட இடங்களை நிரப்புக:-
1. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள ________ ஒன்று உண்டு.
   **பெருநோய்**
2. பெரியார் சமூக ________ எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை ________
   **முரண்களை, முட்டறுத்தவர்**

## இயல்-2
## இலக்கணம் சொல்

1. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ________
   **தனிமொழி**
2. தொழிலைக் குறிக்கும் சொல் ________
   **வினைச்சொல்**
3. வினைமுற்று ________, ________ என இருவகைப்படும்.
   **தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று**
4. ஓர் எச்ச வினை ________ கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.
   **பெயரைக்**

## தொகைச்சொற்களை விரித்தெழுதுக

48. இருவினை - 1. நல்வினை
   2. தீவினை

49. முத்தமிழ்
   **1.இயல்** **2.இசை**
   **3.நாடகம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

50. மூவேந்தர்

1. சேரன் 2.சோழன்

3.பாண்டியன்

51. நானிலம்

1.குறிஞ்சி 2.முல்லை

3.மருதம் 4.நெய்தல்

52. ஐந்திணை

1. குறிஞ்சி 2. முல்லை

3. மருதம் 4. நெய்தல்

5. பாலை

## இயல்-3 - செய்யுள்
## கம்பராமாயணம்
## அயோத்தியா காண்டம்
## குகப்படலம்

53. ஆசிரியர் குறிப்பு

கம்பர் பிறப்பு - தேரழுந்தூர் (நாகை மாவட்டம்)

தந்தை - ஆதித்தன்

காலம் - இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர்.

ஆதரித்தவர் - திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல்

கம்பரது காலம் - கி.பி.12 நூற்றாண்டு

54. கம்பர் இயற்றிய நூல்கள்?

**கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி, அந்தாதி, திருக்கை வழக்கம்.**

55. சமகாலத்துப் புலவர்கள்:-

சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி.

56. "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்" என்று பாரதியார் புகழ்ந்து பாடியுள்ளார்

57. வடமொழியில் கம்பராமாயணத்தை வால்மீகி முனிவர் எழுதினார். கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.

58. கம்பராமாயணத்தில் உள்ள 6 காண்டங்கள்

1. பாலகாண்டம்
2. அயோத்தியா காண்டம்
3. ஆரண்ய காண்டம்
4. கிட்கிந்தா காண்டம்
5. சுந்தர காண்டம்
6. யுத்த காண்டம்

59. "தமிழுக்குக் கதி" என்ற சிறப்பும் கம்பராமாயணத்திற்கு உண்டு.

60. குகப்படலத்தை கங்கைப்படலம் எனவும் கூறுவர்.

பொருத்துக:-

1. இடர் - நிலவு
2. நாவாய் - துன்பம்
3. இறை - படகு
4. இந்து - தலைவன்

**விடை: 1.துன்பம் 2.படகு 3.தலைவன் 4.நிலவு**

## உரைநடை
## அண்ணல்
## அம்பேத்கர்



61. அம்பேத்கர் மராட்டிய கொங்கண் மாவட்டத்தில் தபோலி என்னும் அம்பவாடே பிறந்தார்.

பிறந்த நாள் -14.4.1891

தந்தை - இராம்ஜி சக்பால்

தாய் - பீமாபாய்

இவர்களுக்கு 14ஆவது பிள்ளையாகப் பிறந்தார்.

இயற்பெயர்- பீமாராவ் ராம்ஜி



join telegram@tamizhanexammaterials1

@tamizhanexammaterials1

62. **கல்விப்பயணம்:-**
பள்ளி- 1908 இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப்படிப்பு 1912 இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங் கலைப்பட்டம் பெற்றார்.
1915 இல் அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம்.
1916 இல் இலண்டன் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார். மீண்டும் இலண்டன் சென்று அறிவியல் முதுகலைப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

63. **அம்பேத்கர் முதலில் நடத்தப் பெற்ற போராட்டங்கள்!**
1924ஆம் ஆண்டு கேரளாவில் வைக்கத்தில் நடத்திய ஒடுக்கப்பட்டோர் ஆலயநுழைவு முயற்சியும்,1927 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் இருபதாம் நாள் அம்பேத்கர் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டமும் மனித உரிமைக்காக முதலில் நடத்தப் பெற்ற போராட்டங்கள் எனலாம்.

64. வட்டமேசை மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது?
1930

65. இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் வகுக்க எத்தனை பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது?
எழுவர்

66. இந்தியா முழுமையான குடியரசு நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்ட நாள்?
1950 - 1 - 26 நாள்

67. மக்கள் கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தவர் யார்? எந்த ஆண்டு?
**அம்பேத்கர் 1946**

68. **குறிப்பு:-**
சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்து பாடங்களும் கற்பிக்கப்படுகிறது.

69. "இந்தியாவின் தேசியப் பங்குவீதம்" - என்ற நூலின் ஆசிரியர் யார்?
**அம்பேத்கர்**

70. அம்பேத்கர் புகழுடம்பு எய்திய நாள்?
**1956 ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் ஆறாம் நாள்**

71. இந்திய அரசு பாரத ரத்னா (இந்திய மாமணி) என்னும் உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு எந்த ஆண்டு வழங்கி பெருமைப்படுத்தியது?
1990

## துணைப்பாடம்
## அன்றாட வாழ்வில் சட்டம்

72. அரசியல் சாசனத்தின் 19(1) ஆவது பிரிவின்படி குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் முழுமையான பேச்சுரிமை, எழுத்துரிமை உண்டு.

73. தகவல் அறிவும் உரிமைச்சட்டம் சரத் என்ன?
2005 பிரிவு 6

## இலக்கணம் - பொது

74. எழுத்திலக்கணம்,சொல்லிலக்கணம் ஆகிய இரண்டிலும் கூறப்படாத பொதுவான செய்திகள் சொல்லப்படுவ தால் இது பொது என அழைக்கப் படுகிறது



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

75. "ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே" என்ற நூட்பா இடம் பெற்ற நூல்?

**நன்னூல் (359)**

76. இளவழகன் வந்தான் இது ________ தொடர்

அ) குறிப்பு ஆ) வெளிப்படை

இ) எதுவுமில்லை

**விடை: ஆ**

77. "மாடு" என்னும் சொல் ______ ஆகும்.

அ) உயர்திணைப் பொதுப்பெயர்

ஆ) அஃறிணைப் பொதுப்பெயர்

இ) விரவுப்பெயர்

**விடை: ஆ**

78. மாடு கன்றை ஈன்றது இத்தொடரில் மாடு என்பது ________ குறிக்கும்

அ) பசு ஆ) காளை

இ) கன்று

**விடை: அ**

78. **பொருத்துக:-**

1. வெளிப்படைச் சொற்கள் - சோறு உண்டான்

2. குறிப்புச் சொல் -கல்,மண்

3.இனங்குறித்தல் - மாடு பால் கறந்தது

**விடை. 1. கல்,மண்**

**2. மாடு பால் கறந்தது**

**3. சோறு உண்டான்**

79. **இளமைப் பெயர்களைப் பெருத்துக**

1. ஆடு - கன்று

2. மான் - பிள்ளை

3. கீரி - குட்டி

4. சிங்கம் - குஞ்சு

5. கோழி - குரளை

**விடை: 1. குட்டி 2. கன்று 3. பிள்ளை 4. குருளை, 5. குஞ்சு**

80. பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக:-

1. ஷேத்திரங்கள் தோறும் சென்று விக்கிரங்களை வழிபடுக.

**புண்ணியத்தலந்தோறும் சென்று கடவுள் சிலைகளை வழிபடுக.**

2. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்

**இவ்வழியே புண்ணியப் பயணம் செல்லுங்கள்.**

3. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.

**இந்த மேலாடை மிகுந்த விலை மதிப்புள்ளது.**

4. நாளை நடக்க விருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்

**நாளை நடக்கவிருக்கும் போட்டியில் இந்தியா உறுதியாய் வெற்றி பெறும்.**

5. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்

**நான் இந்தக் கல்லூரியின் மேனாள் மாணவன்.**

## இயல் - 4
## செய்யுள் - நற்றிணை

81. மிளைகிழான் நல்வேட்டனார் எழுதிய பாடல் நம் பாடப்பகுதியில் உள்ளது.

**மிளை என்னும் ஊரில் பிறந்தவராதலால், மிளைகிழான் நல்வேட்டனார் என்னும் பெயர் பெற்றார்.**

82. "நல்" என்று அடைமொழி கொடுத்துப் போற்றப்படுவதும் நற்றிணையே!

83. நற்றிணையின் தொகுப்பித்தவர்

**பன்னாடு தந்த மாறன் வழுதி**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

784. நற்றிணைப் பாடல்கள் நானூறு பாடினோர்
275

85. நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ______ பேரெல்லையும் கொண்ட நூல்.
**பன்னிரண்டு அடிப்**

86. "அரி" என்னும் சொல்லின் பொருள் ______
**நெற்கதிர்**

## புறநானூறுக் கண்ணகனார்

87. கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவராக திகழ்ந்தவர்?
**கண்ணகனார்**

88. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
**புறநானூறு**

## உரைநடை பேச்சுக்கலை

89. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை ______
அ) ஓவியக்கலை
ஆ) இசைக்கலை
இ) பேச்சுக்கலை
**விடை: இ**

90. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர் ______
அ) பேரறிஞர் அண்ணா
ஆ) மு.வரதராசனார்
இ) திரு.வி.க
**விடை: அ**

## இலக்கணம்
## வினா-விடை வகைகள்
## ஒருபொருட் பன்மொழி

91. **பொருத்துக:-**
1. அறிவினா - வருவாயா? எனில் "வாரேன்" என்பது
2. ஏவல்விடை - உண்டாயா? எனில், "வயிறு வலிக்கும்" என்பது
3. மறைவிடை - இதனைச் செய்வாயா? எனில் "நீயே செய்" என்பது
4.உறுவது கூறல் - "இதன் பொருள் யாது?" என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது
விடைகள்:
1. இதன் பொருள் யாது? என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது
2. இதனைச் செய்வாயா? எனில், "நீயே செய்" என்பது
3. வருவாயா? எனில், "வாரேன்" என்பது
4. உண்டாயா? எனில், "வயிறு வலிக்கும்" என்பது

92. கோடிட்ட இடங்களை நிரப்புக:-
அ) ஒரு பொருள் குறித்துவரும் சொற்களையே ______ என்பர்.
**ஒருபொருட் பன்மொழி**
ஆ) ஒரு பொருட் பன்மொழிக்குச் சான்று ______
**ஓங்கி உயர்ந்த**
இ) "இது செய்வா" என்னும் வினாவிற்கு "வயிறு வலிக்கும்" எனக் கூறுவது ______ விடை
**உறுவது கூறல்**
ஈ) ஆடத்தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது ______ விடை **இனமொழி**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

உ) நன்னூல் கிடைக்குமா எனக் கடைக்காரரிடம் கேட்பது ______ வினா

**கொளல்**

93. வினா எத்தனை வகைப்படும்?அவை யாவை?

**ஆறுவகைப்படும்.**

**அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா**

94. விடை எத்தனை வகைப்படும்?அவை யாவை?

**எட்டு வகைப்படும்**

**சுட்டு விடை, மறைவிடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர்வினாதல் விடை, உற்றதுரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை**

## இயல் -5
## செய்யுள் - பெரியபுராணம்
## அப்பூதியடிகள் புராணம்

95. **ஆசிரியர் குறிப்பு**

பெரியபுராணத்தை அருளியவர் - சேக்கிழார்

பிறப்பு - குன்றத்தூரில் பிறந்தவர் (காஞ்சிபுரம் மாவட்டம்)

இயற்பெயர் - அருண்மொழித்தேவர்

பணி - அநபாயச் சோழனிடம் தலைமை அமைச்சராகத் திகழ்ந்தவர்

பெற்ற பட்டம் - உத்தம சோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர்

சிறப்பு பெயர் - தெய்வச் சேக்கிழார் என்றும் தொண்டர்சீர் பரவுவார்

காலம் - கி.பி.12 நூற்றாண்டு

96. **நூற்குறிப்பு**

தனியடியார் - 63
தொகையடியார் - 9
மொத்தம்
சிவனடியார் = 72

97. பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர்

**"திருத்தொண்டர் புராணம்"**

98. "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்ற தெனவும் கூறுபவர்?

**தில்லை நடராசப் பெருமான்**

99. "பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என்று புகழ்ந்துரைத்தவர் யார்?

**மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

100. "உலகம், உயிர், கடவுள்" ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந் தான் பெரியபுராணம் என்றவர் யார்?

**திரு.வி.கலியாணசுந்தரனார்**

101. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள் களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் ______

**அப்பூதியடிகளார்**

102. பொருத்துக:-

1. மேதி - அ) சிவன்
2. சந்தம் - ஆ) எருமை
3. கோதில் - இ) அழகு
4. அங்கணர் - ஈ) குற்றமில்லாத பசு

**விடை: 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ**

## உரைநடை
## திரைப்படக்கலை உருவான கதை

103. ஒளிப்படம் எடுக்கும் முறையை எந்த ஆண்டு எட்வர்டு மைபிரிட்சு கண்டுபிடித்தார்?

**1830**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

104. படச்சுருள் உருவாக்கும் முறையை கண்டுபிடித்தவர்?
**ஈஸ்ட்மன்**

105. பிரான்சிஸ் சென்கின்சு என்ற அமெரிக்கர் 1894 இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார்.

106. திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் ______ என்னும் பொருளால் ஆனது.
**செல்லுலாயிடு**

107. கோடிட்ட இடங்களை நிரப்புக:-
1. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் _____ என அழைப்பர்.
**இயக்குநர்**
2. படப்பிடிப்புக் கருவியை ______ பொருத்துவதும் உண்டு.
**நகர்த்தும் வண்டியில்**
3. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ______ இருக்கும்.
**வேடிக்கையாய்**

108. பொருத்துக:-
1. ஈஸ்ட்மன் -அ) ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி
2. எடிசன் -ஆ) படச்சுருள்
3. எட்வர்டு மைபிரிட்சு -இ)கருத்துப்படம்
4. வால்ட் டிஸ்னி -ஈ)இயக்கப்படம்

**விடை: 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ**

## துணைப்பாடம்
## பாரதரத்னா
## எம்.ஜி.இராமச்சந்திரன்



109. பாரதரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் இலக்கையிலுள்ள கண்டியில் 1917 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினேழாம் நாள் பிறந்தார்.

110. தந்தை - கோபாலமேனன்
தாய் - சத்யபாமா இருவருக்கும் 5 மகனாக பிறந்தார்.

111. புரட்சி நடிகர்,மக்கள் திலகம் என்று போற்றப்பட்டார்.

112. அறிஞர் அண்ணா அவர்கள் எம்.ஜி.இராமச்சந்திரனை இதயக்கனி என்று போற்றினார்.

113. 1963 ஆம் ஆண்டு சென்னை மாநிலச் சட்ட மன்ற மேலவை உறுப்பினரானார்.

114. 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது பரங்கிமலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

115. 1972 ஆம் ஆண்டு தாமிருந்த இயக்கத்திலிருந்து விலகிப் புதிய கட்சியைத் தொடங்கினார்.

116. 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் பெரு வெற்றி பெற்று முதல்வராகப் பதவி ஏற்றார்.

117. சென்னைப் பல்கலைக்கழகம் அவரது பணிகளைப் பாராட்டி, டாக்டர் பட்டம் வழங்கியது.

118. மத்திய அரசு அவர்தம் பணியைப் பாராட்டி உயரிய விருதான பாரதரத்னா (இந்தியமாமணி)விருது வழங்கியது. இவ்விருது அவருடைய மறைவுக்குப் பின் 1988 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

## இலக்கணம்
## உவம உருபுகள்

உவம உருபு - தொடர்
1. போல - கிளிபோலப் பேசினாள்
2. புரைய - வேய்புரை தோள்
3. ஒப்ப - தாயொப்பப் பேசும் மகள்
4. உறழ - முழவு உறழ் தடக்கை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

5\. அன்ன - மலரன்ன சேவடி

"போல புரைய ஒப்ப உறழ
மான கடுப்ப இயைப ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே."

நன்னூல் 367

| உவமை | | உருவகம் |
|---|---|---|
| அமுதமொழி | - | மொழியமுது |
| கயற்கண் | - | கண்கயல் |
| தேன்தமிழ் | - | தமிழ்த்தேன் |
| பூவிரல் | - | விரல்பூ |
| மதிமுகம் | - | முகமதி |
| மலரடி | - | அடிமலர் |
| முத்துப்பல் | - | பல்முத்து |
| விற்புருவம் | - | புருவவில் |
| மலர்ப்பாதம் | - | பாதமலர் |

## இயல் ஆறு
## செய்யுள்: தமிழ் விடு தூது

**நூற்குறிப்பு:-**

1. போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர் ______
   **அதிவீரராம பாண்டியன்.**
2. நால்வகைப் பாக்களும் வயலுக்கு ______ அமைந்துள்ளன.
   **வரப்புகளாய்**
   "செவியை அறுப்பதற்கு வில்லி புத்தூரணும் தலையை வெட்டுவதற்கு ஒட்டக்கூத்தனும் இருந்தமையால் தமிழே நீ கிளைத்துச் செழித்து வளர்ந்தாய்

## இயல் - 6
## உரைநடை -
## தொன்மைத் தமிழகம்

119) "மனித நாகரிகத் தொட்டில்" என்று அழைக்கப்படுவது?
**இலெமுரியா**

120) எந்த பயிர் வகைகளை தமிழர்கள் விற்றார்கள்?
**நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை, வரகு முதலிய தானிய வகைகளையும், உளுந்து, கடலை, அவரை, துவரை, தட்டை, பச்சை, கொள்ளு, எள்ளு முதலிய பயறு வகைகளையும் தமிழர்கள் விற்றார்கள்.**

121) கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு எப்பொருள்களை அனுப்பப்பட்டன?
**அரிசியும், மயில்தோகையும், சந்தனமும்.**

122) கி.மு.பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.

123) மதுரைத் தமிழ்ச்சங்கத்தையே குறிக்கும் புறநானூறு, பரிபாடலில் இடம் பெற்ற சொற்கள் யாவை?
**தமிழ்கெழு கூடல், தமிழ் வேலி**

124) "கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்" - என்ற வரி இடம் பெற்ற நூல் எது?
**மணிவாசகம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

125) பாணன், பாடினி, கூத்தன், விறலி என்று இயலிசை நாடகக் கலைஞர்கள் இருந்தமையையும் அறிய முடிகிறது.

126) ”பண்ணொடு தமிழொப்பாய்” - என்ற வரி இடம் பெற்ற நூல்?

**தேவாரம்**

127) ”உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்” - என்ற வரி இடம் பெற்ற நூல்?

**திருக்குறள்**

128) ”களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே” என்னும் பரிபாடல்

129) தனக்குவமையில்லா ஒரு -------------- தமிழ் இனம்.

**தனிஇனம்**

## துணைப்பாடம்:- தற்காலத் தொல்லியல் ஆய்வுகள்

130) தொல்லியலை ஆங்கிலத்தில் ”ஆர்க்கியாலஜி” எனக் குறிப்பிடுவர்.

131) இந்தியத் தொல்லியல் துறையினர் 1963 ஆம் ஆண்டு பூம்புகார் அருகில் உள்ள கீழார்வெளி என்னும் இடத்தில் மேற்கொண்ட கடல் அகழாய்வின் போது கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறியப் பட்டன.

132) முதுமக்கள் தாழிகள் என்றால் என்ன?

**பண்டைய காலத்தில் இறந்தோரை அவர்கள் பயன்படுத்திய பொருள் களுடன் ஒரு தாழியிலிட்டுப் புதைக்கும் வழக்கம் இருந்தது. இவ்வகைத் தாழிகளையே முதுமக்கள் தாழிகள் என்கிறோம்.**

## இலக்கணம் புணர்ச்சி

133) இருசொற்கள் சேரும்போது தோன்றல், கெடுதல், திரிதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படுமாயின் அவற்றை விகாரப் புணர்ச்சி என்பர்.

(எ.டு) 1. வாழை + பழம் - வாழைப்பழம் - தோன்றல்

2. மரம் + வேர் - மரவேர் - கெடுதல்

3. பொன் + குடம் - பொற்குடம் - திரிதல்

134) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

1. வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது ______

அ) நிலைமொழி ஈறு நீங்கும்

ஆ) நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்

இ) வருமொழி முதல் கெடும்

**விடை: ஆ**

2. மேற்கு + நாடு என்பது ______எனச் சேரும்.

அ) மேற்கு நாடு ஆ) மேநாடு இ) மேனாடு

**விடை: இ**

3. கருமை + குழி என்பது ______எனும் விதிகளின் படி புணரும்.

அ) ஆதிநீடல், இனமிகல்.

ஆ) தன்னொற்றிரட்டல், இடையுகரம

இ) ஆதல்

இ) ஈறுபோதல், இனமிகல்

**விடை: இ**

135) **பொருத்துக:-**

1. அடி அகரம் ஐ அதம் - அ) வெற்றிலை

2. ஆதிநீடல் -- ஆ) கரும்பலகை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

3. இனமிகல் -- இ) பைங்கூழ்

4. தன்னொற்றிரட்டல் - ஈ) மூதூர்

விடை: 1-இ, 2-ஈ, 3-ஆ, 4- அ

## இயல் ஏழு செய்யுள் திருக்குறள் பெரியாரைத் துணைக்கோடல்

136) இல்லாரை ---------- எள்ளுவர்.

**எல்லாரும்**

137) அறனீனும் இன்பமும் ஈனும் ______ தீதின்றி வந்த பொருள்.

**திறனறிந்து**

138) திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் ______

1. அன்புள்ள பெற்றோர்.
2. ஆர்வமுள்ள நண்பர்.
3. மூத்த அறிவுடையார்

**விடை: 3**

139) அரியவற்றுள் எல்லாம் அரிது ______ பேணித் தமராக் கொளல்

1. சிறியவர் 2. பெரியார் 3. உறவினர்

**விடை: 2**

140) முதலிலார்க்கு ------------- இல்லை.

1. ஊதியம் 2. நட்பு 3. புகை

**விடை: 1**

## தேவாரம் - திருநாவுக்கரசர்

141) **ஆசிரியர் குறிப்பு:-**

திருநாவுக்கரசர் திருவாமூரில் பிறந்தவர். பெற்றோர் புகழனார். மாதினியார் இவரது தமக்கையார் திலகவதியார், திருநாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருணீக்கியார். இவருக்குத் தருமசேனர், அப்பர், வாசீசர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவரது நெறி தொண்டு நெறி. சைவ அடியார்களை நாயன்மார்கள் என்று வழங்குவர். இவர்கள் அறுபத்து மூவர். சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர் திருநாவுக்கரசர். இவர்தம் பாடல்கள் தேவாரம் எனப் போற்றப்படுகின்றது. இவர் தாண்டகம் பாடுவதில் வல்லவர் ஆதலால், இவர் தாண்டக வேந்தர் எனவும் வழங்கப்படுகிறார். இவரது காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு திருவாமூர் கடலூர் மாவட்டம் பண்ணுருட்டியை அடுத்துள்ளது.

142) **நூற்குறிப்பு:-**

தேவாரம் என்னும் சொல்லைத் தே + வாரம் எனப் பிரித்துத் தெய்வத் தன்மையை உடைய இசைப் பாடல்கள் என்றும் தே + ஆரம் எனப் பிரித்துத் தெய்வத்திற்குச் சூட்டிப் பெற்ற பாமாலை என்றும் கூறுவர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் ஏழும் மூவர் தேவாரம், திருநாவுக்கரசர் பாடி அருளிய பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் நமக்குப் பாடமாக அமைந்துள்ள பாடல் திருநாவுக்கரசர் அருளிய ஆறாந்திரு முறையில் உள்ளது.

143) "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் பாடல் ______ "அச்சமில்லை அச்சமில்லை" எனப் பாடத் தூண்டியது.

1. பாரதிதாசனை 2. சுரதாவை
3. பாரதியாரை

**விடை: 3**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## உரைநடை
## தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள்

144) "அறிவு அற்றம் காக்கும் கருவி" - **திருவள்ளுவர்**

145) உலகம் உருண்டை என்பதைப் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிறகே மேலை நாட்டினர் உறுதி செய்தனர்.

146) உலகம் என்னும் தமிழ்ச்சொல் ______ என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது. **உலவு**

147) உலவு என்பது சுற்றுதல் என்ற பொருளைத் தரும்.

148) ஞாலம் என்னும் தமிழ்ச் சொல் "ஞால்" என்னும் சொல்லடியாகத் தோன்றியது என்பர். "ஞால்" என்பதற்குத் தொங்குதல் என்பது பொருள்.

149) "வறிது நிலைஇய காயமும்" இவ்வரி இடம் பெற்ற நூல் எது? **புறம்(30)**

150) "வலவன் ஏவா வானூர்தி" - புறம்(27)

151) "தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த" என்ற வரி இடம் பெற்ற நூல் எது? **பதிற்றுப்பத்து**

152) "அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்" - **பெருங்கதை**

153) "உறுமிடத் துதவா உவர்நிலம்" - **புறநானூற்று வரிகள்**

154) "பயவாக் களரனையர் கல்லாதவர்" - **திருக்குறள்**

155) "ஓர் அணுவினைச் சதகூறிட்ட கோணினும் - உளன்" - யார் கூறியது? **கம்பர்**

156) "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" - **திருமூலர்**

157) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் - **திருக்குறள்**

158) "புல்லாகிப் பூடாய்" - **திருவாசகம் வரி**

## இலக்கணம்: பொருள் இலக்கணம் அகப்பொருள்

159) அன்பின் ஐந்திணை எவை? **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை**

160) முதற்பொருள் என்பவை அகவொழுக்கம் நிகழ்தற்குக் காரணமாகும் நிலமும் பொழுதும் ஆகும்.

161) ஐவகை நிலங்கள்

**1. குறிஞ்சி - மலையும், மலைசார்ந்த இடமும்**
**2. முல்லை - காடும் காடுசார்ந்த இடமும்**
**3. மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும்**
**4. நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்**
**5. பாலை - மணலும் மணல்சார்ந்த இடமும்**

162) பொழுதுகள் 2 வகைப்படும்:-

1. **பெரும்பொழுது**
2. **சிறுபொழுது**

1) **பெரும்பொழுது:-**

அ) கார்காலம் - ஆவணி, புரட்டாசி
ஆ) குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை
இ) முன்பனிக்காலம் - மார்கழி, தை
ஈ) பின்பனிக்காலம் - மாசி, பங்குனி
உ) இளவேனிற்காலம் - சித்திரை, வைகாசி
ஊ) முதுவேனிற்காலம் - ஆனி, ஆடி

2) **சிறுபொழுது:-**

அ) காலை - காலை 6 மணிமுதல் 10 மணிவரை
ஆ) நண்பகல் - காலை 10 மணிமுதல் 2 மணிவரை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

இ) எற்பாடு - பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை

ஈ) மாலை - மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை

உ) யாமம் - இரவு 10 மணிமுதல் இரவு 2 மணிவரை

ஊ) வைகறை - இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை

(எற்பாடு - எல் + பாடு, எல் - ஞாயிறு - பாடு - மறையும் நேரம்)

163) திணையும் பொழுதும்:-

| திணை | பெரும் பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறுபெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறுபெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

164) அகம், புறம் ஆகிய இரண்டும் ______ இலக்கணம் ஆகும்.

**பொருள்**

165) குறிஞ்சி, முல்லை, முதலிய ஐந்தும் ______ எனப்படும்.

**அகன் ஐந்திணை**

166) நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி ______ பகுதியாகும்.

கடலும் கடல்சார்ந்த

167) யாமம் என்பது இரவு 10 மணிமுதல் ______ வரை ஆகும்.

**2 மணி**

168) மருதம், நெய்தல் ஆகிய இரண்டனுக்கும் ______ பெரும்பொழுதுகளும் வரும்.

**ஆறு**

169) திருமால் ______ நிலத்திற்குரிய தெய்வம்.

**முல்லை**

170) மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் ______ திணைக்குரிய பறைகள்.

**மருதத்**

171) நெய்தல் திணைக்குரிய தொழில்கள் ______ ஆகும்.

**மீன்பிடித்தல், உப்புவிளைவித்தல்**

172) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

அ) பொருளிலக்கணம் ______ வகைப்படும்.

**1.இரண்டு 2.மூன்று 3.ஐந்து**

**விடை:1**

ஆ) அகத்திணைகள் ______ வகைப்படும்.

**1.மூன்று 2.ஐந்து 3.ஏழு**

**விடை:3**

இ) மார்கழி, தை ஆகிய இரண்டும் ______ காலத்திற்குரியன.

**1.முன்பனி 2.பின்பனி 3.இளவேனில்**

**விடை:1**

ஈ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் ______

**1.கிளி, மயில் 2.நாரை, அன்னம் 3.புறா, பருந்து**

**விடை:3**

173) **பொருத்துக:-**

1.குறிஞ்சி - அ) முயல், மான்

2.முல்லை - ஆ) புலி, கரடி

3.மருதம் - இ) முதலை, சுறா

4.நெய்தல் - ஈ) எருமை, நீர்நாய்

**விடைகள்:- 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**



join telegram@tamizhanexammaterials1

@tamizhanexammaterials1

## இயல் எட்டு
## செய்யுள் சீறாப்புராணம்
## விலாதத்துக் காண்டம்
## புலி வசனித்த படலம்

174) ஆசிரியர் குறிப்பு:-

**பெயர் - உமறுப்புலவர்**

இவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர். அப்துல்காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக் காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணம் எழுதத் தொடங்கினார். நூல் முற்றும் முன்னமே சீதக்காதி மறைந்தார். அவருக்குப்பின், அபுல்காசிம் என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணம் நிறைவுற்றது. உமறுப்புலவர் வள்ளல் பெருமக்களை நூலின் பலவிடங்களில் நினைவுகூர்ந்து போற்றுகிறார்.இவர் எண்பது பாக்களால் ஆகிய முதுமொழி மாலை என்னும் நூலையும் படைத்தளித்துள்ளார். இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு.

175) இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும் இனிய நூல் எது?

**சீறாப்புராணம்**

176) சீறா - என்பதன் பொருள் யாது?

**வாழ்க்கை**

177) புராணம் - என்பதன் பொருள் யாது?

**வரலாறு**

178) சீறாப்புராணம் எத்தனை விருத்தப் பாக்களால் ஆனது?

**ஐயாயிரத்து இருபத்தேழு**

179) சீறாப்புராணத்தின் முப்பெரும் பிரிவு களை எழுதுக?

**விலாதத்துக்காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம்**

180) **கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

அ) சீறாப்புராணத்தை இயற்றியவர் ________

**உமறுப்புலவர்**

ஆ) உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் ________

**சீதக்காதி**

181) **உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக:-**

அ) சீறாப்புராணம் ________ காண்டங் களை உடையது.

1. மூன்று 2. ஐந்து 3. ஏழு

**விடை:1**

ஆ) "கேழல்" என்பதன் பொருள் ________

1.எருமை 2.புலி 3.பன்றி

**விடை:3**

182) யார், யாரிடம் கூறிய தொடர் இது:-

அ) வென்றி வாளரசே

**இது, புலியைப்பற்றிக் கூறியவன் முகம்மது நபியிடம் கூறியதாகும்.**

ஆ) வேறொரு காட்டினிற் புகுக

**இது, முகம்மது நபி, புலியிடம் கூறியதாகும்.**

183) **சீர்மோனையை எழுதுக:-**

மன்ற லுன்றிய முகம்மதின் மலரடி வணங்கி

**சீர்மோனை. மன்றல் - மலரடி**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

184) அடி எதுகையை எழுதுக:-

நீண்ட வால்நிலம் புடைத்திடக்
கிடந்துடல் நிமிர்ந்து கூண்ட கால்மடித்
திருவிழி கனல்கள் கொப்பளிப்ப

**அடி எதுகை நீண்ட - கூண்ட**

185) பொருத்துக:-

1. கான் - அ) கரடி
2. உழுவை - ஆ) சிங்கம்
3. மடங்கல் - இ) புலி
4. எண்கு - ஈ) காடு

**விடை:- 1-ஈ 2-இ 3-ஆ 4-அ**

## உரைநடை காந்தியம்

186) காந்தியடிகள் சிறுவனாக இருந்த போது, குஜராத்திப் பாடல் ஒன்றனைக் கேட்டார். "தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை: தீமை செய்தவர்க்கும் நன்மையே செய், உண்மைப் பொருண்மை உண்டு" என்ற அப்பாடல் இன்னா செய்யாமை (அகிம்சை) என்னும் கருத்தினை அவருள் விதைத்தது.

187) உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரனை ஒரு பொய் பேச வைக்க வேண்டும் என்பதற்காகவே பல இன்னல்களுக்கு உள்ளாக்கியவர் யார்?

**முனிவர் விசுவாமித்திரர்**

188) அறவழி - என்பதன் பொருள் யாது?

**அன்பு, அருள்**

189) **அறவழி விடுதலைப்போர்:-**

வலிய போரில் சாகின்றவர்களின் எண்ணிக்கையை விட, அறவழிப் போரில் இறப்போரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும் என்றும், மற்ற உலக நாடுகள் இதனை ஏற்காவிடினும் இந்தியா அதனை ஏற்று நடத்தி, ஏனைய நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என்று விரும்பினார். காந்தியடிகளின் அறவழிப் போராட்டங்களுக்கு மக்கள் ஆதரவு பெருகியது: கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகிய இயக்கங்கள் பரவின. காந்தியடிகள் தமிழ்நாட்டுக்கு வந்த போது ஏழை உழவர்கள் வறுமையால் அரையாடை உடுத்தியதைக் கண்டார். தாமும் அன்று முதல் மேலாடை அணிவதனை நிறுத்திக் கொண்டார். அரையாடை யுடன் இங்கிலாந்தில் நடந்த வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற போது, அப்போதைய இங்கிலாந்து முதன்மையமைச்சர் சர்ச்சில், "அரை நிருவாணப்பக்கிரி" என்று ஏளனம் செய்தபோதும், காந்தி யடிகளின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

190) தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்க்கு எதிரான எந்த நிறச் சட்டங்களைக் காந்தியடிகள் கொளுத்தியதால், சிறையில் அடைக்கப்பட்டார்?

**கறுப்பு**

191) எந்த ஆண்டில் காந்தியடிகளை சுட்டுக் கொல்லப்பட்டார்?

**1948 ஆம் ஆண்டு, சனவரி 30, திங்கள்**

192) **இளைஞர்களின் கடமை:-**

நாட்டில் இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்று, தெய்வப்பற்று, மொழிப்



join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

பற்று வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.

193) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**

அ) காந்தியடிகள் _______ என்னும் நாடக நூலைப் படித்தார்.

**சிரவண பிதுர்பத்தி**

ஆ) திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் _______

**தால்சுதாய்**

194) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

அ) காந்தியடிகள் _______ நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.

1.சிரவணபிதுர்பத்தி 2.அரிச்சந்திரன் 3.பக்தப்பிரகலாதன்

**விடை:2**

ஆ) பகைவனிடமும் அன்புகாட்டு எனக் கூறிய நூல் _______

1.பகவத்கீதை 2.நன்னூல் 3.பைபிள்

**விடை:3**

இ) அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை _______

1.ஆடம்பரம், வீண்செலவு 2.எளிமை, சிக்கனம் 3.அன்பு, அருள்

**விடை:2**

195) **வினாத்தொடர்கள் அமைக்க:-**

அ) காந்தியடிகள், "பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம்" கதர் என்று கருதினார்.

**"பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம்"** என எதைக் காந்தியடிகள் கருதினார்.

ஆ) இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.

**இளைஞர்களின் உள்ளத்தில் எவை வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.**

196) **ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக:-**

அ) ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

இளம்பெண் ஒருத்தி நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தாள்.

ஆ) மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.

மனிதனின் நோக்கம் உயர்வானதாகவும் தூய்மையானதாகவும், இருந்தால் மட்டும் போதாது.

197) **பொருத்துக:-**

1. சத்திய சோதனை - அ) திருவள்ளுவர்
2. பகவத் கீதை - ஆ) கிறித்துவ சமயநூல்
3. திருக்குறள் - இ) காந்தியடிகள்
4. பைபிள் -ஈ) இந்து சமயநூல்

**விடைகள்: 1-இ 2-ஈ 3-அ 4-ஆ**

## இலக்கணம் புறப்பொருள்

198) புறப்பொருள் எனப்படுவது, வாழ்க்கைக்குத் துணைபுரியும் கல்வி, செல்வம், புகழ், வீரம், அரசியல் முதலிய பொருள் களைப் பற்றி கூறுவது.

199) அகப்பொருள் வாழ்வியல் எனில், புறப்பொருள் உலகியல் ஆகும். புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை ஆகும்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

200) புறத்திணைகள் வெட்சியின் வகைகள் எத்தனை?

**பன்னிரண்டு**

201) பன்னிரண்டு வகையான புறத்திணைகள் வெட்சி எழுதுக:-

1. வெட்சித்திணை
2. கரந்தைத் திணை
3. வஞ்சித் திணை
4. காஞ்சித் திணை
5. நொச்சித் திணை
6. உழிஞைத் திணை
7. தும்பைத் திணை
8. வாகைத் திணை
9. பாடாண் திணை
10. பொதுவியல் திணை
11. கைக்கிளைத் திணை
12. பெருந்திணை

202) **வெட்சித்திணை:-**

பகைநாட்டின் மீது போர் தொடங்கு முன், அந்நாட்டிலுள்ள ஆநிரைகளுக்குத் தீங்கு நேரக் கூடாது எனக் கருதும் மன்னன், தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்து வரச் செய்வது வெட்சித் திணை. அவ்வீரர்கள் வெட்சிப்பூவைச் சூடிச் செல்வார்கள்.

203) **கரந்தைத் திணை:-**

வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளைக் கரந்தைப் பூவைச் சூடிச்சென்று மீட்பது, கரந்தைத் திணை ஆகும்.

204) **வஞ்சித் திணை:-**

மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப் பூவைச் சூடிப் போருக்குச் செல்வது, வஞ்சித்திணை.

205) **காஞ்சித்திணை:-**

தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு காஞ்சிப் பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை.

206) **நொச்சித்திணை:-**

பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே, வெளியே இருக்கும் பகையரசனோடு நொச்சிப் பூவைச் சூடிப் போரிட்டு, அம்மதிலைக் காப்பது நொச்சித்திணை.

207) **உழிஞைத்திணை:-**

உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை.

208) **தும்பைத்திணை:-**

பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தம் வீரர்களுடன் போரிடுவது தும்பைத்திணை. இவ்வீரர்கள் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவர்.

209) **வாகைத்திணை:-**

வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது, வாகைத்திணை.

210) **பாடாண்திணை:-**

பாடுதற்குத் தகுதியுடைய ஓர் ஆண் மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை.

211) **பொதுவியல் திணை:-**

வெட்சி முதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளின் பொதுவானவற்றையும்,



join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, பொதுவியல் திணை.

212) **கைக்கிளைத் திணை:-**

கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். இஃது ஆண்பால் கூற்று, பெண்பால் கூற்று என இருவகைப்படும்.

213) **பெருந்திணை:-**

பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் இதுவும் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப்படும்.

214) உரிய விடையைத் தேர்ந்தெடுழுதுக:-

1. புறத்திணைகள் ------------ வகைகள் எத்தனை?

அ) ஐந்து ஆ) ஏழு இ) பன்னிரண்டு

**விடை:இ**

2. நிரைகவர்தல் என்பது ------------

அ) கரந்தை ஆ) வெட்சி இ) உழிஞை

**விடை:ஆ**

3. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது -------------

அ) வஞ்சித்திணை ஆ) காஞ்சித்திணை இ)வாகைத்திணை

**விடை:அ**

4. பாடாண்திணை என்பது ——— கூறுவது.

அ) ஆண்மகனின் ஒழுகலாறுகள்

ஆ) போரின் தன்மைகள்

இ) பெண் மகளின் ஒழுகலாறுகள்

**விடை:அ**

5. ஒருதலைக் காமம் என்பது -------------

அ) அன்பின் ஐந்திணை

ஆ) கைக்கிளை இ)பெருந்திணை

**விடை:ஆ**

6. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது ---------- ஆகும்.

அ) நொச்சி ஆ) தும்பை இ) காஞ்சி

**விடை:அ**

## இயல் ஒன்பது
## செய்யுள் பகுதி
## கலித்தொகை

215) **ஆசிரியர் குறிப்பு:-**

நல்லந்துவனார் சங்க காலத்தவர். இவரைப் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. இவர், நெய்தல் கலியில் முப்பத்து மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். கலித் தொகையைத் தொகுத்தவரும் இவரே என்பர்.

216) **நூற்குறிப்பு:-**

எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்கள். எட்டுத் தொகையுள் ஒன்றான கலித்தொகை கலிப்பாக்களால் அமைந்தது. இது நாடகப் பாங்கில் அமைந்துள்ளது. இசையோடு பாடுவதற்கேற்றது. கலித்தொகையில் கடவுள் வாழ்த்தையும் சேர்ந்து நூற்றைம்பது பாடல்கள் உள்ளன. கலித்தொகை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐம்பெரும் பிரிவுகளை உடையது. கலிப்பா துள்ளல் ஓசையைக் கொண்டது. நமக்குப் பாடமாக அமைந்துள்ள பகுதி, நெற்தற் கலியாகும். இதனை இயற்றியவர் நல்லந்துவனார். இப்பாடல்களைப் படிக்கும்பொழுது, கருத்தாழமும் ஓசையின்பமும் நம் உள்ளத்தினைக் கொள்ளை கொள்ளும். எனவே இதனைத் தமிழ்ச் சான்றோர் "கற்றறிந் தார் ஏத்தும் கலி" எனச் சிறப்பித்துக் கூறுவர்.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

217) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

அ) கலித்தொகை ------------ நூல்களில் ஒன்று.

1.பத்துப்பாட்டு 2.எட்டுத்தொகை 3.பதினெண் கீழ்க்கணக்கு

**விடை:2**

ஆ) நெய்தல் கலியைப் பாடியவர் ---------

1.ஓரம்போகியார் 2.கபிலர் 3.நல்லந்துவனார்

**விடை:3**

இ) "போற்றாரைப் பொறுத்தல்" என்பது ----------- எனப்படும்.

1.பொறை 2.முறை 3.நிறை

**விடை:1**

218) **பொருத்துக:-**

1. பண்பு - அ) கூறியது மறா அமை
2. அன்பு - ஆ) பேதையார் சொல் நோன்றல்
3. அறிவு - இ) தன்கிளை செறா அமை
4. செறிவு - ஈ) பாடறிந்து ஒழுகல்

**விடைகள்: 1-ஈ 2-இ 3-ஆ 4-அ**

## நந்திக் கலம்பகம்
## நந்திமன்னன் வீரம்

219) **ஆசிரியர் குறிப்பு:-**

தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு இந்நூலை வழங்கியவரின் பெயரும் ஊரும் அறியப் பெறவில்லை.

220) **நூற் குறிப்பு:-**

நந்திவர்மனின் பெருமையைப் போற்றும் நூலாகா இது திகழ்கிறது. பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற கலம்பகம் ஆதலின், நந்திக் கலம்பகம் எனப் பெயர் பெற்றது. இந்நூலின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு கலம்பக நூல்களில் இதுவே முதல் நூல் என்பர்.

கலம்பகம் என்பது, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. பலவகைப் பொருள்களைப் பற்றிப் பலவகைப் பாடல்களைக் கலந்து இயற்றப்பெறும் நூல் கலம்பகம் எனப்படும். கலம் + பகம் = கலம்பகம். கலம் - பன்னிரண்டு: பகம் - ஆறு. பதினெட்டு உறுப்புகளைக் கொண்டதால் (புயவகுப்பு, அம்மானை, கார், ஊசல், இரங்கல், மறம், தழை, தவம், சித்து, பாண், கைக்கிளை, தூது, வண்டு, குறம், காலம், மாதங்கி, கிளி, சம்பிரதம்) கலம்பகம் என்னும் பெயர் வந்தது எனவும் கூறுவர்.

221) **கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1) கலம்பகம் ----------- வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

அ) தொண்ணூற்றாறு ஆ) பதினெட்டு இ) பத்து

**விடை:அ**

2) பணை என்னும் சொல்லின் பொருள் --------------

அ) அரசு ஆ) ஆல் இ) மூங்கில்

**விடை:இ**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

222) **ஆசிரியர் குறிப்பு:-**

கேரள மாநிலத்திலுள்ள திருவஞ்சைக் களத்தில் பிறந்தவர் குலசேகர ஆழ்வார். இராமபிரானிடம் பத்தி மிகுதியாக வாய்க்கப் பெற்ற காரணத்தால், இவர் குலசேகரப் பெருமாள் எனவும் அழைக்கப்பட்டார். இவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். இவர் அருளிய பெருமாள் திருமொழி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஒன்று. இதில் நூற்றைந்து பாசுரங்கள் உள்ளன. இவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர். குலசேகரர் தமிழில் பெருமாள் திருமொழியையும், வடமொழியில் முகுந்தமாலை என்னும் நூலையும் இயற்றியுள்ளார். குலசேகரர், திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால் அதற்குக் குலசேகரன் வீதி என்னும் பெயர் இன்றும் வழங்கி வருகிறது. இவரது காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு.

223) **நூற்குறிப்பு:-**

தமிழகத்தின் பழம்பெரும் சமயங்களுள் ஒன்று வைணவம்.வைணவம் திருமாலை முழு முதற் கடவுளாய்க் கொண்டு போற்றும் பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். நம் பாடப்பகுதி குலசேகர ஆழ்வார் பாடிய பெருமாள் திருமொழியின் முதலாயிரத்தில் உள்ளது.

224) **கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

அ) தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் ------------ போன்றிருந்தேனே

**குடி**

ஆ) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ------------ குலசேகரர் பாடியதாகும்.

**திருவாய்மொழி**

225) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:-

அ) பெருமாள் திருமொழிகளில் ------------ பாசுரங்கள் உள்ளன.

1.இருநூற்றைந்து 2.நூற்றைந்து 3.நூறு

**விடை:2**

ஆ) குலசேகராழ்வார் பாடல் ------------ தொகுப்பில் உள்ளது.

1.திருவியற்பா 2.முதலாயிரம் 3. பெரிய திருமொழி

**விடை:3**

## உரைநடை
## திருவருட் பிரகாச வள்ளலார்

226) சமரச சுத்த சன்மார்க்கப்பாதை அமைத்த வள்ளலார் யார்?

**இராமலிங்க அடிகள்**

227) எந்த நூற்றாண்டைத் தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என அறிஞர் போற்றுவர்?

**பத்தொன்பதாம் நூற்றாண்டைத்**

228) அக்காலத்தே புலவர் பெருமக்களாலும் சமூகச் சீர்திருத்தச் செம்மல்களாலும் போற்றப்படும் பெருஞ் சிறப்பினைப் பெற்றவர் யார்?

**வள்ளலார்**

229) இராமலிங்கர் எந்த மாவட்டம், எந்த வட்டத்தில் பிறந்தார்?

**கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூரில்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

230) இராமலிங்கர் எந்த ஆண்டு பிறந்தார்?
**05.10.1823**

231) இராமலிங்கர் பெற்றோர் யார்?
**இராமையா, சின்னம்மை**

232) இராமலிங்கர் பெற்றோருக்கு எத்தனாவது மகன்?
**ஐந்தாவது மகன்**

233) ஆலய அந்தணர் இராமலிங்கரை எவ்வாறு பாராட்டினார்?
**இறையருள் பெற்ற திருக்குழந்தை**

234) இராமலிங்கர் தந்தை எப்போது மறைந்தார்?
**இராமலிங்கர் பிறந்த ஆறாவது திங்களில்**

235) இராமலிங்கருக்கு ஐந்து வயதில் கல்வி கற்ப்பித்த ஆசிரியர் யார்?
**சபாபதியிடம்**

236) ஒன்பது வயதிலேயே இராமலிங்கர் எதில் திறன் பெற்றிருந்தார்?
**பாடல் புனையும் திறன்**

237) திகம்பர சாமியார் இராமலிங்கர் சென்றபோது எவ்வாறு கூறினார்?
**“இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார்“**

238) தருமமிகு சென்னையிலுள்ள கந்த கோட்டத்து இறைவனை வணங்கி மன முருகப்பாடி மகிழ்ந்தவர் யார்?
**இராமலிங்கர்**

239) இராமலிங்கர் பாடலின் தொகுப்பே?
**தெய்வ மணிமாலை**

240) இராமலிங்கர் -------------- என்னும் நூலையும் திருவொற்றியூர்ச் சிவபெருமான் மீது, ------------- என்னும் நூலையும் பாடினார்.
**வடிவுடை மாணிக்கமாலை, எழுத்தறியும் பெருமான் மாலை**

241) இராமலிங்கர் பாடல்கள் எவ்வகை யாது?
**இனியபாடல்கள், கல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் கருத்துநிறை பாடல்கள்**

242) எதை விரும்பிய வள்ளற் பெருமான்.
**ஒருமை வாழ்வு, ஒருமையரசு, ஒருமையுலகம்**

243) ஆணும் பெண்ணும் சமமென்று உரைத்தவர் யார்?
**இராமலிங்கர்**

244) சங்ககாலத்தில் ஒரு முல்லைக் கொடியின் துயர் நீக்க, எந்த வள்ளல் தன் தேரையே ஈந்தார்.
**பாரி வள்ளல்**

245) பாரி வள்ளலைப்போல வள்ளலார் கூறியது என்ன?
**“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்“**

246) வள்ளற்பெருமான் வடலூரில் ---------- நிறுவிச்சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.
**சத்திய தருமச்சாலை**

247) வள்ளலார் எவ்வாறு வாழ வேண்டு மென்றும் மன்பதைக்கு உணர்த்தினார்.
**மனிதநேயத்துடன்**

248) “உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்“ என்று கூறியவர் யார்?
**வள்ளலார்**

249) சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினை எந்த ஊரில் நிறுவினர்?
**வடலூரில்**

250) இராமலிங்கர் அருளிய பாடல்கள் எவ்வாறு நிறைந்தவை?
**அருட்கருணை**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

251) இராமலிங்கர் ஆறுதொகுதிகள் கொண்ட பாடல்களை எவ்வாறு மக்கள் போற்றுகின்றன?
**திருவருட்பா**

252) பாரதியார் இராமலிங்கரை எவ்வாறு போற்றினார்.
**"புதுநெறிகண்ட புலவர்"**

253) வள்ளலார் ---------- மிக்கவர்.
**மொழிப்பற்று**

254) அருட்பிரகாச வள்ளலார் எந்த ஆண்டு தைப்பூசத் திருநாளன்று இறவாநிலை எய்தினார்?
**1874**

255) **நிரப்புக:-**
அ) இராமலிங்கர் தமிழ்மொழியே ---------------- தரும் என்று கருதினார்?
**இறவாதநிலை**

256) உரிய விடையைத் தேர்ந்து எழுதுக:-
அ) "உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்" எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் ----------------
**பெரியபுராணம்**
ஆ) வள்ளலாரின் இயற்பெயர் --------
**இராமலிங்கர்**

257) வள்ளலாரின் பன்முக ஆற்றல்கள்:-
1. சிறந்த சொற்பொழிவாளர்
2. போதகாசிரியர்
3. உரையாசிரியர்
4. சித்தமருத்துவர்
5. பசிப்பிணி போக்கிய அருளாளர்
6. பதிப்பாசிரியர்
7. நூலாசிரியர்
8. இதழாசிரியர்
9. இறையன்பர்
10. ஞானாசிரியர்
11. அருளாசிரியர்

258) வள்ளலார் பதிப்பித்த நூல்கள்:
1. **சின்மய தீபிகை**
2. **ஒழிவிலொடுக்கம்**
3. **தொண்ட மண்டல சதகம்**

259) இயற்றிய உரைநடை நூல்கள்:
1. **மனுமுறை கண்ட வாசகம்**
2. **ஜீவகாருண்ய ஒழுக்கம் திருவருட்பா (ஆறு திருமுறைகள்)**

## அயோத்திதாசப் பண்டிதர் (துணைப்பாடம்)

260) நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் பிறந்து, மாபெரும் மாற்றங்கள் நிகழ்வதற்கு வித்திட்டவர் யார்?
**காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

261) காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர் மக்கள் எல்லாரும் எவ்வாறு போற்றிப் புகழ்ந்துள்ளனர்?
**தொன்னிந்தியச் சமூகச் சீர்த்திருத்தத்தின் தந்தை**

262) இவரது நற்கருத்துகள் எந்த நாடுகளில் பசுமரத் தாணியாய்ப் பதிந்துள்ளன.
**தமிழகம், மைசூர், ஆந்திரம், திருவிதாங்கூர், பர்மா, மலேசியா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, இலங்கை.**

263) அயோத்திதாசப் பண்டிதர் எந்த நகரில் பிறந்தார்?
**சென்னை ஆயிரம் விளக்கில் உள்ள, மக்கிமா நகரில்**

264) அயோத்திதாசப் பண்டிதர் எந்த ஆண்டு, நாள் பிறந்தார்?
**1845 ஆம் ஆண்டு மே திங்கள் இருபதாம் நாள்.**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

265) அயோத்திதாசப் பண்டிதர் தந்தை பெயர்.

**கந்தசாமி**

266) அயோத்திதாசப் பண்டிதர் பெற்றோர் இட்ட பெயர் என்ன?

**காத்தவராயன்**

267) பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் போது அவர் பிஞ்சு நெஞ்சில் நஞ்சாய் எந்த கொடுமை இறங்கியது?

**தீண்டாமைக் கொடுமை**

268) வீ.அயோத்திதாசப் பண்டிதர் என்பவரிடம் யார் கல்வி கற்றனர்?

**காத்தவராயன்**

269) காத்தவராயன் எதை பயின்றார்?

**சித்த மருத்துவம்**

270) காத்தவராயன் படைத்த கவிதையைப் பிற்காலத்தில், தாம் தொடங்கிய எந்த இதழில் வெளியிட்டார்.

**ஒரு பைசாத் தமிழன்**

271) காத்தவராயன் இயற்பெயரை விடுத்து யாருடைய பெயரை சூட்டிக் கொண்டார்?

**ஆசிரியர் அயோத்திதாசப் பண்டிதர்**

272) காத்தவராயன் நீலகிரி மலைப் பகுதியில் வாழும் தோடர் இனப் பிரிவில் எந்த திருமணம் செய்து கொண்டார்?

**கலப்பு திருமணம்**

273) எத்தனை ஆண்டுகள் அயோத்திதாசப் பண்டிதர் இரங்கூன் சென்று வாழ்ந்தார்.

**பத்து ஆண்டுகள்**

274) அயோத்திதாசர் எந்த மதக் கருத்துகளை ஆழ்ந்து கற்றவர்?

**இந்துமதம்**

275) புத்தமதக் கருத்துகளை எடுத்துரைத்தவர் யார்?

**அயோத்திதாசர்**

276) அயோத்திதாசர் பிறந்த மகன் --------- பெயர் சூட்டி மகிழ்ந்தார்?

**பட்டாபிராமன், மாதவராம், சானகிராமன், இராசாராம்**

277) அயோத்திதாசரியுடய மகளுக்கு என்ன பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

**அம்பிகாதேவி என்றும், மாயாதேவி**

278) சித்த மருத்துவத்தில் கைதேர்ந்ததால், அயோத்தி தாசரை எவ்வாறு அழைக்கப் பெற்றார்?

**மருத்துவர் என்னும் பண்டிதர் என்றும்**

279) தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி கற்க அனுமதி மறுக்கப்பட்ட சூழலில் எந்த சபை ஏற்படுத்தினார்?

**பிரம்ம ஞானசபை**

280) சென்னையில் முக்கியமான ஐந்து இடங்களில் ஆல்காட் (1832 - 1907) ------------- எனத் தலித்துகளுக்கு இலவசப் பள்ளிகளை நிறுவினார்?

**பஞ்சமர் பள்ளிகள்**

281) ஒரு பைசாத்தமிழன் என்ற இதழ் எந்த ஆண்டு முதல் சென்னை இராயப்பேட்டையில் இருந்து புதன் தோறும் நான்கு பக்கங்களுடன் வெளிவந்தது.

**19.06.1907**

282) மருத்துவ ஆராய்ச்சியின்படி, எள் செடியின் விதையிலிருந்து நெய் கண்டு பிடித்த திருநாளே தீபாவளி என்று புதியதோர் விளக்கம் தந்தவர் யார்?

**அயோத்திதாசர் பண்டிதர்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

283) எந்த நாட்டில் இன்றும் நுகர்பொருள் கண்டுபிடிப்புத் திருநாளாகத்தான் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள்?
**சப்பான் நாட்டில்**

284) அயோத்திதாசப் பண்டிதர் எந்த நூலை இருபத்தெட்டுக் காதைகள் கொண்ட பெரு நூலாக எழுதினார்?
**புத்தரது ஆதிவேதம்**

285) புத்தரது ஆதிவேததம் சான்றாக முதலிய நூல்களைத் துணை நூல்களாகக் கொண்டார்?
**பெருங்குறவஞ்சி, வீரசோழியம், நன்னூல் விளக்கம், நாயனார் திரிகுறள், சித்தர் பாடல்கள், வைராக்கிய சதகம், மச்ச முனிவர் ஞானம்.**

286) அயோத்திதாசப் பண்டிதர் எந்த மொழிகளை துணையுடன் எழுதியுள்ளார்.
**ஆதிவேதத்தைப் பாலி, ஆங்கிலம்**

287) வீரமாமுனிவரைப் போல் எழுத்துச் சீர்த்திருத்தமும் செய்துள்ளவர் யார்?
**அயோத்திதாசப் பண்டிதர்**

288) நற்சான்றோர் எந்த ஆண்டு, எந்த நாள் பொன்னுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார்?
**1914 மே மாதம் ஐந்தாம் நாள்**

## இலக்கணம் பா வகைகள்

289) பா எத்தனை வகைப்படும் அவை யாவை?
**பா நான்கு வகைப்படும்.**
அவை: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா

290) வெண்பாவின் பொது இலக்கணம்?
**1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.**
**2. இரண்டடி முதல் பன்னிரண்டு அடிவரை வரும்.**

291) வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
**வெண்பா ஆறு வகைப்படும்.**
**குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, ப∴றொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்பன**

292) ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத் தானும் வருவது (குறள் - இரண்டடி)
**குறள் வெண்பா**

293) முதல் இரண்டடி, ஒரு விகற்பமாயும், கடைசி இரண்டடி ஒரு விகற்பமாயும், நான்கடிகளும் ஒரு விகற்பமாயும் வருவது எது?
**நேரிசை வெண்பா**

294) வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடி முதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது?
**ப∴றொடை வெண்பா**

295) ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத் தானும் மூன்றடிகளாய் வருவது?
**நேரிசைச் சிந்தியல் வெண்பா**

296) வெண்பாவின் மூன்றடி கொண்டதாய்த் தனிச் சொல்லின்றி ஒரு விகற்பத் தானும் பல விகற்பத்தானும் வருவது?
**இன்னிசைச் சிந்தியல் வெண்பா**

297) ஆசிரியப்பாவின் வகைகள்? அவை யாவை?
**ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

**நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா**

298) ஈற்றயலடி முச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும் வருவது?

**நேரிசை ஆசிரியப்பா**

299) முதலடியும் கடைசியடியும் நாற்சீர் அடிகளாகவும், இடையில் உள்ள அடிகள் இருசீர் (குறளடி) அடிகளாயும் முச்சீர் (சீந்தடி) அடிகளாயும் வருவது?

**இணைக்குறள் ஆசிரியப்பா**

300) எல்லா அடிகளும் நாற்சீர் அடிகளாய் வருவது.

**நிலைமண்டில ஆசிரியப்பா**

301) எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி மாற்றிப் படித்தாலும் ஓசையும் பொருளும் மாறாது வருவது?

**அடிமறி மண்டில ஆசிரியப்பா**

302) கோடிட்ட இடங்களை நிரப்புக:-

1) வெண்பாவின் ஓசை ---------- ஆகும்.

**செப்பலோசை**

2) ஆசிரியப்பாவின் வேறு பெயர் ------------- ஆகும்.

**அகவற்பா**

3) ஆசிரியப்பாவின் ஓசை ------------- ஆகும்.

**அகவலோசை**

303)

| வ.எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1 | இல்/லா/ரை | நேர்நேர்நேர் | தேமாங்காய் |
| 2 | எல்/லா/ரும் | நேர்நேர்நேர் | தேமாங்காய் |
| 3 | எள்/ளுவர் | நேர்நிரை | கூவிளம் |
| 4 | செல்/வரை | நேர்நிரை | கூவிளம் |
| 5 | எல்/லா/ருஞ் | நேர்நேர்நேர் | தேமாங்காய் |
| 6 | செய்/வர் | நேர்நேர் | தேமா |
| 7 | சிறப்/பு | நிரைநேர் | நிரைபு பிறப்பு |

## மொழித்திறன் பயிற்சி:

304) மரபுச்சொற்கள்:-

ஒலிமரபு

ஆடுகத்தும்
ஆந்தை அலறும்
எருது எக்காளமிடும்
காகம் கரையும்
நாய் குரைத்தது
கிளி பேசும்
குதிரை கனைக்கும்
குயில் கூவும்
குரங்கு அலப்பும்
கூகை குழறும்
சிங்கம் முழங்கும்
கோழி கொக்கரிக்கும்
நரி ஊளையிடும்
சேவல் கூவும்
புலி உறுமும்
புறா குனுகும்
பூனை சீறும்
மயில் அகவும்
யானை பிளிறும்
வண்டு குரலும்
எலி கீச்சிடும்





join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

305) **வினை மரபு:-**

அம்பு எய்தார்
தண்ணீர் குடித்தான்
ஆடை நெய்தார்
பால் பருகினாள்
உமி கருக்கினாள்
பூப் பறித்தாள்
ஓவியம் புனைந்தான்
மரம் வெட்டினான்
கூடை முடைந்தார்
மாத்திரை விழுங்கினான்
சுவர் எழுப்பினான்
முறுக்குத் தின்றான்
செய்யுள் இயற்றினான்
சோறு உண்டான்

306)

| எண் | பிறமொழிச்சொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| 1. | அங்கத்தினர் | - | உறுப்பினர் |
| 2. | அதிகாரி | - | அலுவலர் |
| 3. | அதிபர் | - | தலைவர் |
| 4. | அந்நியர் | - | அயலார் |
| 5. | அபிஷேகம் | - | நீராட்டு |
| 6. | அபூர்வம் | - | புதுமை |
| 7. | அலங்காரம் | - | ஒப்பனை |
| 8. | அனுமதி | - | இசைவு |
| 9. | ஆபத்து | - | இடர் |
| 10. | ஆராதனை | - | வழிபாடு |
| 11. | ஆசீர்வாதம் | - | வாழ்த்து |
| 12. | இலஞ்சம் | - | கையூட்டு |
| 13. | இலாபம் | - | வருவாய் |
| 14. | உத்தரவு | - | ஆணை |
| 15. | உத்தியோகம் | - | பணி |
| 16. | உபயோகம் | - | பயன் |
| 17. | கிராமம் | - | சிற்றூர் |
| 18. | குமாரன் | - | மகன் |
| 19. | சாவி | - | திறவுகோல் |
| 20. | நஷ்டம் | - | இழப்பு |
| 21. | நாஷ்டா | - | சிற்றுண்டி |
| 22. | பாக்கி | - | நிலுவை |
| 23. | கஜானா | - | கருவூலம் |
| 24. | விஞ்ஞானம் | - | அறிவியல் |
| 25. | ஜனங்கள் | - | மக்கள் |
| 26. | நிபுணர் | - | வல்லுநர் |
| 27. | ஆஸ்பிடல் | - | மருத்துவமனை |
| 28. | டீ ஸ்டால் | - | தேநீர்க்கடை |
| 29. | பஸ் ஸ்டாண்ட் | - | பேருந்து நிலையம் |
| 30. | போஸ்ட் ஆபீஸ் | - | அஞ்சலகம் |

307) **குறிப்பு:-**

சிலி நாட்டில் ஒரு சுரங்கம். அது பூமிக்கடியில் ஈராயிரம் அடி ஆழம் உடையது. தாமிரமும் தங்கமும் எடுப்பதற்காக வெட்டப்பட்ட சுரங்கம்.

308) இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக:-

1. Manners Make the Man
ஒழுக்கம் உயர்வு தரும்
2. All is well that ends well
நல்ல தொடக்கம் நல்ல முடிவைத் தரும்.
3. Misfortunes never come single.
பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்.
4. Do well what you have to do
செய்வன திருந்தச்செய்.
5. Every tide has its ebb
ஏற்றம் உண்டானால் இறக்கம் உண்டு.



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## இயல் பத்து - செய்யுள்
## நிற்க நேரமில்லை

309) சீக்கிரம் செல்லுக நேர்வழியில் - என்னும் பாடலை இயற்றியவர் யார்?
**சாலை. இளந்திரையன்**

310) சொற்பொருள்:-
**அ) செத்தை - குப்பை கூளம்**
**ஆ) இளைப்பாறுதல் - ஓய்வெடுத்தல்**

311) **பிரித்தறிதல்:-**
அ) கண்ணிரண்டு - கண் + இரண்டு
ஆ) ஓரிரவு - ஓர் + இரவு

312) **ஆசிரியர் குறிப்பு:-**
சாலை. இளந்திரையனின் பெற்றோர் இராமையா, அன்னலட்சுமி. இவர் பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாலைநயினார் பள்ளிவாசல். தில்லிப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை தலைவரானார். உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமானவர் சாலை.இளந்திரையன். 1991 இல் தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றார். தம் வாழ்நாள் முழுவதும் தமிழின முன்னேற்றத்திற்கான படைப்புகளை வழங்கி எழுச்சியூட்டினார். இவர் வாழ்ந்த காலம் 06.09.1930 - 04.10.1998

313) **நூற்குறிப்பு:-**
பாடப்பகுதியில் வந்துள்ள கவிதை, "பூத்தது மானுடம்" என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ளது. சாலையரின் படைப்புகளான "புரட்சி முழக்கம்" "உரைவீச்சு" ஆகிய நூல்கள் தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசுகள் பெற்றுள்ளன.

## உரைநடை
## பல்துறை வேலைவாய்ப்புகள்

314) "வினையே ஆடவர்க்குயிர்" என்பது?
**குறுந்தொகை**

315) "முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை" என்பது?
**தொல்காப்பியம்**

316) பெண்கள் ——— செல்லக் கூடாதெனவும் கூறி வந்தனர்.
**கடல் கடந்து**

317) நாள்தோறும் ---------- உருவாகின்றன.
**புதுப்புதுத் துறைகள்**

318) பணிவாய்ப்புக்கு உரிய கல்வித் தகுதிகளை பலவாகப் பகுக்கலாம் கீழ்காண்போம்.
**தொழிற்கல்வி, தொழில் நுட்பக்கல்வி, கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி**

319) தொழிற்கல்வித் துறைகள் யாவை?
**மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம்**

320) மேனிலைக்கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களின் பயிற்சி?
**இடைநிலையாசிரியர் பயிற்சி, செவிலியர் பயிற்சி, கூட்டுறவுப் பயிற்சி மூலம் வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

321) தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் எவ்வளவு விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது?

**இருபது விழுக்காடு**

322) பட்டம் பெற்றவர்கள் எந்த துறைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுப் பல்வேறு வேலை வாய்ப்புகளைப் பெறலாம்?

**தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், நடுவணரசுத் தேர்வாணையம், வங்கித்துறை, ஆயுள் காப்பீட்டுத் துறை, தொடர் வண்டித்துறை.**

323) அரசுப்பணிக்காகக் காத்திராமல் அவரவர் ------------ தொழில் தொடங்கிப் பலரும் வேலை வாய்ப்பைப் பெருக்குதல் வேண்டும்.

**சுய தொழில்**

324) சுயதொழில் தொடங்குவதற்கு என்ன உதவிகள் அரசு அளிக்கிறது?

**வழிகாட்டுதல், பயிற்சிகள், கடனுதவிகள்**

325) இராணுவம், காவல்துறையில் சேர முதலில் ----------- தேர்வு நடைபெறும்?

**உடற்கூறு**

326) --------------, ------------- என்னும் திருமூலர் வாக்குபடி முறையாக இராணுவம், காவல்துறையில் உடற்பயிற்சி செய்தவர்கள் இத்தேர்வில் வெற்றி பெற இயலும்?

**உடம்பை வளர்த்தேன்: உயிர் வளர்த்தேன்**

327) எந்த பணிகளுக்கும் உடற்கூறு தகுதியுடையவர்கள் மட்டுமே சேர இயலும்?

**ஓட்டுநர், நடத்துநர்**

328) “விரல்கள் பத்தும் மூலதனம்“ என்னும் பாடலின் ஆசிரியர் --------------

**தாராபாரதி**

329) பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி எது?

**பன்னிரண்டாம் வகுப்பு**

## துணைப்பாடம் - நூலகம்

330) பழங்காலத்தில் மக்கள் தமது எண்ணங்களையும் செய்திகளையும் வெளிப்படுத்துவதற்குக் எந்த பலவகைப் பொருட்களைப் பயன்படுத்தினர்?

**கற்பாறைகள், களிமண் பலகைகள், மரப்பட்டைகள், தோல்கள், துணிகள், பனை ஓலைகள்**

331) பனை ஓலைகளைப் பதப்படுத்தி -------------- ஓலைச் சுவடிகளாக்கினர்.

**எழுதத்தக்க**

332) உலக இலக்கியத் துறையில் நிகழ்ந்த ஒரு மாபெரும் புரட்சி -------------- கண்டுபிடிக்கப்பட்டது.

**காகிதம்**

333) உலகநாடுகள் அனைத்திலும் கடந்த சில நூற்றாண்டுகளாக --------------, ------------ காகிதங்களையே பயன்படுத்தத் தொடங்கினர்?

**எழுதவும், அச்சிடவும்**

334) பண்டையக்காலத்தில் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை எவ்வளவாக இருந்தது?

**குறைவாகவே**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

335) அரண்மனைகளிலும் மாளிகைகளிலும் மடங்குகளிலும் கோவில்களிலும் படிக்கும் நோக்கின்றிப் பெருமை சேர்க்கும் நோக்கோடு எதை அடுக்கி வைக்கப்பட்டிருந்தன?

**நூல்கள்**

336) கல்வி எதனை பகிர்ந்து கொள்ளத் தூண்டியது?

**மக்களைத் தத்தம் எண்ணங்களையும், விளைந்த அறிவையும்.**

337) நூல் பொது நூலகத்தில் வைக்கப் பட்டால் ----------- அது பலர்க்கும் பயன்படும்.

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்ததைப் போன்று**

338) இந்தியா உள்பட உலகநாடுகள் அனைத்திலும் மக்களுக்கான என்ன திறக்கப்பட்டன?

**பொது நூலகங்கள்**

339) நூலகத்தின் பல்வேறு பெயர்கள்?

**புத்தகச்சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசகசாலை, படிப்பகம், நூல் நிலையம், பண்டாரம்.**

340) நூலகம் என்ற சொல்லுக்கு இணையாக ஆங்கில சொல் தருக?

**“லைப்ரரி“**

341) இலத்தீன் மொழியில் “லிப்ரா“ என்னும் சொல்லிற்குப் என்ன பெயர்?

**புத்தகம்**

342)

அ) ஒரு மனிதன் ஆண்டுக்கு 2000 பக்கங்களாவது படித்தால் தான் அன்றாட உலக நடப்புகளை அறிந்த மனிதனாகக் (Informative Man) கருதப்படுவான் என “யுனெஸ் கோ” கூறியுள்ளது.

ஆ) கிரீஸ் நகர அரசுகளே முதன் முதலாக மக்களுக்கான நூல் நிலையங்களை அமைத்தன.

இ) இந்தியாவில் உள்ள நூலகங் களில் கல்கத்தா தேசிய நூலகம் முதன்மை யானது. இதில், பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.

343) நூலகமில்லா ஊருக்கு ------------- என்னும் புது மொழியும் உண்மையை விளம்புகிறது என்பதனை அறிஞர் ஏற்றுக் கொள்வர்?

**அறிவு பாழ்**

344) இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழக அரசு தான் எந்த ஆண்டு சென்னைப் பொது நூலகச் சட்டத்தை இயற்றியது?

**1948**

345) பள்ளி என்பது எதை கொண்டு அறிவை விதைக்கும் களம்.

**பாடநூல்களைக்**

346) --------- அறிவை வளர்த்துச் செழுமைப் படுத்தும் மற்றொரு களமாகும்?

**நூலகமே**

347) பள்ளியில் மாணவர்கள் ஓரிடம், நூலகம் வேறிடம் என்ற நிலையை மாற்ற, நம் பள்ளிக் கல்வித்துறை எந்த வகுப்பறை நூலகத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது?

**“புத்தகப் பூங்கொத்து”**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

348) வேறு சில வடிவங்களிலும் நூல்கள் உருமாற்றம் பெற்று நூலகப் பயன்பாட்டில் உள்ளன?

**இணையத்தள நூலகம், குறுவட்டுகள், மின்னணு ஒளிவட்டு, நுண் சுருள்**

349) நூலகத்தில் உள்ள நூல்களைக் ---------------, ------------- பாதுகாத்தல் நமது கடமையாகும்.

**கிழியாமலும், சிதைவுறாமலும்**

350)

| |
|---|
| அ) பாபிலோனியாவில் உள்ள நிப்பூர் என்ற ஊரில் கி.மு.2000 ஆண்டிற்கு முந்தைய சுமார் 2500 களிமண் பலகைகளில் எழுதப்பட்டிருந்த நூல்களின் தொகுப்பு கண்டெடுக்கப் பட்டது.<br>ஆ) நூலகப் பயன்பாட்டிற்கான விதிகளை உருவாக்கித் தந்த சீர்காழி சீ.இரா.அரங்கநாதன் இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப் படுகிறார். |

351) தமிழகத்திலுள்ள மிகப் பழமையான நூலகங்கள்.

1. சரசுவதி மகால் நூலகம், தஞ்சை. (1820)
2. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் சென்னை.
3. கன்னிமாரா நூலகம், சென்னை (1869)
4. சென்னைப் பல்கலைக் கழக நூலகம் (1907)
5. அண்ணாமலை பல்கலைக்கழக நூலகம். சிதம்பரம்(1929)
6. டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை (1947)
7. மறைமலை அடிகளார் நூலகம், சென்னை (1958)
8. மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகம் (1966)
9. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன நூலகம், சென்னை (1970)
10. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் (1981)

## இலக்கணம் அணி

352) அணி என்னும் சொல்லுக்கு என்ன பொருள்?

**அழகு**

353) ஒரு பாடலைச் சொல்லாலும் பொருளாலும் அழகு பெறச் செய்வது எது?

**அணி**

354) இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது, கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது.

**தற்குறிப்பேற்ற அணி**

355) தற்குறிப்பேற்ற அணியை பிரித்தெழுதுக:

**தன் + குறிப்பு + ஏற்றம் + அணி**

356) புகழ்வதுபோலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் ----------- அணி எனப்படும்.

**வஞ்சப்புகழ்ச்சி அணி**

357) ஒரு சொல் இரு பொருள்பட அமைந்து வருவது

**இரட்டுற மொழிதல்**

358) இரட்டுறமொழிதல் அணியை எவ்வாறு வழங்குவர்?

**சிலேடை**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

359) சிலேடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
**சிலேடை இருவகைப்படும்**
**செம்மொழிச் சிலேடை**
**பிரிமொழிச்சிலேடை**

360) ஒரு செய்யுளில் ஒரு சொல் பிரிவு படாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளை தருவது.
**செம்மொழிச் சிலேடை**

361) ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அதுவே பிரிந்து நின்று வேறொரு பொருளையும் தருமாறு அமைத்துப்பாடுவது.
**பிரிமொழிச்சிலேடை**

362) **பொருள்:-**
அ) செய் - வயல், வீடு
ஆ) பலகை - பல வகைகள்
இ) தாள் - முயற்சி
ஈ) துய்ய - தங்க, அழகான

363) பின்வரு நிலையணி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
**பின்வருநிலையணி மூவகைப்படும்.**
அவை:-
1) சொல் பின்வருநிலையணி
2) பொருள் பின்வருநிலையணி
3) சொற்பொருள் பின்வருநிலையணி

364) செய்யுளில் முன்னர் வந்தசொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது.
**சொல்பின்வருநிலை அணி**

365) செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது.
**பொருள் பின்வருநிலைஅணி**

366) முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது.
**சொற்பொருள் பின்வருநிலை அணி**

367) உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது ----------- ஆகும்.
**பிறிது மொழிதல் அணி**

368) B.A.,- Bachelor of Arts - இளங்கலை
M.A.,- Master of Arts - முதுகலை
B.SC., - Bachelor of science -இளம் அறிவியல்
M.SC., - Master of science - முது அறிவியல்
B.COM., - Bachelor of commerce- இளம் வணிகவியல்
M.COM., - Master of commerce -முது வணிகவியல்
B.Lit., - Bachelor of literature - இளங்கலை இலக்கியம்
B.Ed., - Bachelor of Education- இளம் கல்வியியல்
M.Ed., - Master of Education -முது கல்வியியல்
Ph.D., - Doctor of philosophy - முனைவர்
I.A.S.,- Indian Administrative service - இந்திய ஆட்சிப்பணி
I.P.S. - Indian police service - இந்தியக் காவல்பணி
I.F.S., - Indian forest service -இந்திய வனப்பணி
I.R.S., - Indian Revenue service - இந்திய வருவாய்ப்பணி
B.E.,- Bachelor of Enginering -இளம் பொறியியல்
M.E.,- Master of Enginering -முது பொறியியல்
B.Tech - Bachelor of Techology - இளம் தொழில் நுட்பவியல்
M.Tech - Master of Technology - முது தொழில் நுட்பவியல்
M.Phil., - Master of Philosophy - ஆய்வியல் நிறைஞர்
C.A.,- Chartered Accountant - கணக்காயர்


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## மொழியாக்கம்

369) இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக:-

1. small rudders guide great ships
   சிறு துரும்பும் பல்குத்த உதவும்.
2. you must walk before run
   சிந்தித்துச் செயல்படு
3. Distance lends enchantment to the view
   இக்கரைக்கு அக்கரை பச்சை
4. Measure is a treasure
   அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு
5. Make hay while the sun shines
   காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

## 11 ஆம் வகுப்பு (தமிழ்) உரைநடைப் பகுதி

**1. கல்வியே அழியாச் செல்வம் - மறைமலையடிகள்**

**விளக்கம்:-**

வெள்ளத்தால் அழியாததாய் வெந்தழலால் வேகாததாய் அரசர்களாலுங் கைப்பற்றப்படாததாய்க் கொடுக்க கொடுக்க குறையாததாய்க் கள்வர்களுக்கு அஞ்ச வேண்டுவது இல்லாததாய் நமது அறிவினுள்ளே இருத்தலாற் கல்விப் பொருளைப் பெறுவதற்கு மிகவும் முயற்சியுடையவர்களாய் இருத்தல் வேண்டும் என்று கல்வியே அழியா செல்வம் என்பதனை மறைமலை அடிகளார் எடுத்துரைக்கிறார்.

வெள்ளத்தால் அழியாது வெந் தழலால்
வேகாது வேந்த ராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்

2. தெய்வச் சிதம்பரத் தேவா உன்
சித்தந் திரும்பி விட்டாற்
பொய் வைத்த சொப்பனமாம் மன்னர்
வாழ்வும் புவியு மெங்கே
மெய் வைத்த செல்வமெங்கே
மண்ட லீகர்தம் மேடை யெங்கே
கை வைத்த நாடக சாலை யெங்கே
யிது கண் மயக்கே -

இந்தப் பாடலை அருளிச் செய்தவர் பட்டினத்துப் பிள்ளையார்

3) கல்வியின் சிறப்பை எடுத்து உரைத்தவர்கள்?

**ஔவைப் பிராட்டியார், திருவள்ளுவர்**

4) “கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை“ என்று கூறியவர் யார்?

**திருவள்ளுவர்**

5) “மன்னனும் மாசறக் கற்னொனுஞ் சீர் தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத் தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு” என்று பாடியவர் யார்?

**ஔவைப் பிராட்டியார்**

6) “விலக்கொடு மக்கள் அனையர்
இலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்”
கண்ணுடைய ரென்பர் கற்றோர்
முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்
என்று திருவாய் மலர்ந்தருளியவர் யார்?

**திருவள்ளுவ நாயனார்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

7) முற்காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கிய பெண்மணிகள் யாவர்?
**ஔவையார், பூதப் பாண்டியன் மனைவி, பெருந் தேவியார், காரைக் காலம்மையார், மங்கையர்க் கரசியார்**

8) பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கியுள்ளார்கள் என்பது யார் கூற்று மூலம் தெரிய வந்துள்ளது?
**கம்பர்**

9) பெருத்த டங்கட் பிறைநுதலார்க் கெலாம் பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும் விருந்து மன்றி விளைவன யாவையே என்று கூறியவர்?
**கம்பர்**

10) அழியா செல்வம் எது ------------
**கல்வி**

11) அழியாச் செல்வமாகிய கல்வியை நாம் எவ்வாறு பயன்படுத்துவது முறையாகும் என்பதை எதன் மூலம் அறியலாம்.
**“கற்றறிவார் கண்டது அடக்கம் அடங்காதார் பொச்சாந்துந் தம்மை புகழ்ந்துரைப் பார்”**

## 2. வீரச்சுவை:- ந.மு.வேங்கடசாமி நாட்டார்

12) சுவை என்னும் தமிழ்ச் சொல்லும், ----------- என்னும் வடசொல்லும் ஒரே பொருள் உடையன.
**ரஸம்**

13) நாவினால் உணரப்படும் சுவை எத்தனை வகைப்படும்?
**ஆறு வகைப்படும்**

14) செவியால் நுகரப்படுபவை எவை?
**குண, அலங்காரங்களாகிய சொற் சுவைகள்**

15) பொருட் சுவை எத்தனை வகைப்படும்?
**ஒன்பது வகைப்படும்**

16) எது அப்பொழுதே அகன்று விடும்?
**நாவாற் சுவைத்து உண்டவை**

17) எப்பொழுது நிலைபெற்று இன்பம் பயப்பது எது?
**செவியாற் சுவைத்தது**

18) ஒன்பது வகையான பொருட்சுவையை கூறு:
**நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமனிலை என்பன**

19) விழியாலும், சுவையாலும் நுகரப் படுவைகள் எவை?
**பொருட் சுவைகள்**

20) ஒன்பது சுவையுள் சமனிலையாவது எது?
**சாந்தம்**

21) சாந்தம் என்பது யாது?
**ஐம்பொறியும் அடங்கப் பெற்றுப் பிறர் வையினும், வாழ்த்தினும் வாளாற் போழிலும், தாளில் வணங்கினும், மனந்தரியாது அவற்றைச் சமமாகக் கொண்டு நிற்கும் நிலைமையே சாந்தம் எனப்படும்.**

22) சுவை என்பது -------- என்று கூறப்படும்.
**மெய்பாடு**

23) தொல்காப்பியர் --------- என்பதனை பெருமிதம் என்னுஞ் சொல்லாற் குறிக்கின்றனர்?
**வீரம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

24) எந்த சொல்லால் வீரம் குறிக்கப் படுகிறது?

**யாவரொடும் ஒப்ப நில்லாது மேம்பட்டு நிற்றலின் பெருமிதம் என்னும் சொல்லால் வீரம் குறிக்கப்படுகிறது.**

25) பெருமிதம் பிறக்கும் நான்கு செயல்கள் யாவை?

**கல்வி, தறுகண், இசை, கொடை**

26) கொடை வீரத்தையும், படை வீரத்தை யும் எடுத்து காட்டும் பாட்டு

**மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி ஈயென இரக்குவ ராயின், சீருடை முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம் இன்னுயி ராயினும் கொடுக்குவென். என்று நலங்கிள்ளி என்ற சோழ மன்னன் பகைவருடன் போர் தொடங்கு முன் கூறுதல்.**

27) பாரியின் ஆருயிர் நண்பர் யார்?

**கபிலர்**

28) பறம்நாடு எத்தனை ஊர்களை உடையது?

**முந்நூறு ஊர்களை உடையது**

29) முந்நூறு ஊர்களையும் யார் பெற்றனர்?

**பரிசிலர் பெற்றுவிட்டனர்**

30) உலகத்து வேறு எம்மொழியிலும் காணப்படாதது எது?

**பொருளிலக்கணம்**

31) பொருளிலக்கணம் எத்தனை பிரிவுகளை உடையது?

**இரு பிரிவுகளை உடையது.**

**1. அகப் பொருள், 2. புறப் பொருள்**

32) அவ்விரு வகை இலக்கிய இலக்கணங் களாலும் உணர்த்தப்படுவன யாவை?

**அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களுக்கு ஏதுவாகிய காதலொழுக்கம், வீரவொழுக்கம்**

33) வீரருக்கு எது தோல்வியாக அமையும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

**பகைவரை வெகுண்டு நோக்கிய கண் அவர் வேல் கொண்டு எறியுமிடத்து இமைத்து விடுமாயினும் வீரர்க்கு அது வே தோல்வியாகும்.**

**கூற்றுடன்று மேல்வரினும் கூடி யெதிர் நிற்கும்**

**ஆற்ற லதுவே படை என்கிறார் வள்ளுவர்**

34) வாளோடு வடக்கிருந்து உயிர் நீத்தவன் யார்?

**கரிகாலனோடு போர் புரிந்த பெருஞ் சேரலாதன் என்னும் சேர மன்னன்**

35) தமிழ் மக்களின் இணையற்ற வீரவுணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு எந்த நூலில் உள்ளன?

**புறநானூறு**

36) பகைவர் மேற் செய்யும் வண்கண்மை யைப் ------------ என்று சொல்வர்.

**பேராண்மை**

37) பேராண்மை யென்ப தறுகண் ஒன்றுற்றக் கால்

ஊராண்மை மற்றதன் எஃகு

என்ற குறள் இராவணன் போரில் தோல்வியுற்று இருக்கும் போது இராமன் இன்று போய் நாளை வருவாய் என அருள் புரிந்தனன் என்னும் செய்தியை கம்பநாடார் தெரிவிக்கும்

## 3. காளத்திவேடனும் கங்கை வேடனும்-ரா.பி.சேதுப்பிள்ளை

38) யாரால் வேடர் குலம் பெருமையுற்றது?

**காளத்தி வேடன் கண்ணப்பன் மற்றும் கங்கை வேடன் குகன்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

39) காளத்தி வேடன் யார்?
**கண்ணப்பன்**

40) கங்கை வேடன் யார்?
**குகன்**

41) தேவாரத்திலும், திருவாசகத்திலும் யாருடைய பெருமை பேசப்படுகிறது?
**கண்ணப்பன்**

42) சைவ சமயத்தை நிலை நிறுத்திய நால்வருக்கும் முந்தியவன் யார்?
**கண்ணப்பன்**

43) காளத்தி நாதனை வணங்கியவர்?
**திருஞான சம்பந்தர்**

44) எந்த வேடனை கருவாகக் கொண்டு கங்கை வேடனாகிய குகனை கம்பர் வடித்துள்ளார்?
**காளத்தி வேடனை**

45) கோசலை நாட்டு இளவரசன் யார்?
**இராமன்**

46) வடமொழி காவியத்தில் இராமனை காண குகன் வருவது எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
**ஓர் அரசன் மற்றோர் அரசனை காண வருகின்ற தன்மையில்**

47) கம்பர் குகனை எவ்வாறு அமைத்திருக் கிறார்?
**ஆண்டவனைக் காணச் செல்லும் அடியவனாக குகன் கோலத்தைத் திருத்தி அமைத்துள்ளார்.**
**தேவா நின்கழல் சேவிக்க வந்தனென் நாவாய் வேட்டுவன் நாயடியேன்**

48) குகன் எடுத்து சென்ற பொருள்?
**தேனும், மீனும்**

49) இறைவனிடம் பயன் கருதா பக்தி பூண்டவர்கள்?
**குகன் மற்றும் கண்ணப்பன்**

50) கங்கை கரையிலே இராமனை சேர்ந்தவன் யார்?
**குகன்**

51) கிஷ்கிந்தையில் இராமனை சேர்ந்தவன் யார்?
**சுக்ரீவன்**

52) இலங்கையில் இராமனை சேர்ந்தவன் யார்?
**விபீஷணன்**

53) கைம்மாறு கருதாத அன்பின் நீர்மையை நன்கு விளக்கிக் காட்டியவன் யார்?
**குகன்**

54) விபீஷணன் இராமனை அடைந்து எதைப் பெற்றார்?
**இலங்கையரசைப் பெற்றார்**

55) சுக்ரீவன் இராமனை அடைந்து எதைப் பெற்றார்?
**கிஷ்கிந்தை**

56) சீதைக்காக காட்டில் இராவணனுடன் போர் புரிந்த கழுகின் வேந்தன் யார்?
**சடாயு**

57) "தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு" என்று சொல்லிய சொல்லின் செல்வன் யார்?
**அனுமான்**

58) பரதனை எதிர்த்து போரிட்டவன் யார்?
**குகன்**

59) குகனைப் போலவும், சடாயு போலவும் இராமனுக்காக உயிர் துறக்கவும் இயலவில்லை என வருந்தியவன்?
**சுக்ரீவன்**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

60) அன்பர்களுக்கு கலங்கரை விளக்கமாக அமைந்தவர்கள் யார்?
காளத்தி வேடனும்
கங்கை வேடனும்

61) ல - ள- ழ ஒலி வேறுபாடு
அலகு - பறவையின் மூக்கு
அளகு - பெண் மயில்
அழகு - கவின், வனப்பு, எழில்
அலை - கடல் அலை
அளை - புற்று
அழை - கூப்பிடு
இலை - மரம், செடி, கொடிகளின் இலை
இளை - (உடல்) இளைத்தல்
இழை - நூல்
கலை - கவின் கலைகள்
களை - நீக்கு, பயிர்களை
கழை - மூங்கில்
தலை - ஓர் உறுப்பு
தளை - விலங்கு
தழை - தழைத்தல்
வலி - வலிமை, வலித்தல்
வளி - காற்று
வழி - பாதை

## 4. குடிமக்கள் காப்பியம் - தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

62) முடி மக்கள் கதைகள் யாவை?
விக்கிரமாதித்தன் கதை
மதனகாமராசன் கதை
திருவிளையாடல்கள்
நளன் கதை
அரிசந்திரன் கதை
துரியோதனன் கதை
இராமர் கதை

63) வடமொழியின் “ஆதி காவியம்“ என்று புகழப் பெறுவது?
வான்மீகியின் இராமாயணமே

64) கிரேக்கர்கள் பழங்காப்பியம் என பாராட்டுவது?
ஹோமர் பாடிய இலியட் என்பதையாகும்

65) மெனலஸ் என்ற அரசர் பெருமானின் அழகிய மனைவியின் பெயா?
ஹெலன்

66) ஹெலனை சிறை எடுத்தவன் யார்?
பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன்

67) இலத்தீன் மொழியில் பழங்காப்பியம் எது?
வர்ஜில் என்ற பாவாணர் பாடிய ஈனிட்

68) ஈனிட் யாருடைய வரலாற்றினை கூறுகிறது?
ஈனியஸ் என்ற அரசர் பெருமானின் வரலாற்றினை

69) தமிழிலக்கிய வரலாற்றில் முதல் முதலாக காப்பியம் எனச் சிறப்புறத் தோன்றியது எது?
சிலப்பதிகாரம்

70) குடிமக்கள் கதையாக விளங்குவது எது?
சிலப்பதிகாரம்
கோவலன் குடிமக்களுள் ஒருவன்
மாதவி - பரத்தையரில் ஒருத்தி
இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரச் சித்திரம்

71) குடிமக்கள் வரலாறே ஆதி காப்பியமாக எந்த நாட்டில் அமைந்து விளங்குகிறது?
தமிழ் நாட்டில்

72) சங்க காலமே ------------ காலம் ஆகும்.
புரட்சி



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

73) கோவலன் கண்ணகியின் காதல் வாழ்வை காட்டுவது?
**புகார் காண்டம்**

74) கணவனை இழந்த கண்ணகியே அவலச் சுவையின் ஆழத்தை எடுத்துக் காட்டுவது?
**மதுரைக் காண்டம்**

75) கண்ணகிக்காக எடுத்த கல்லினை வடஅரசர் தலை மீது ஏற்றி வந்த செங்குட்டுவனது வீரத்தை பாடுவது?
**வஞ்சி காண்டம்**

76) ர - ற- ஒலி வேறுபாடு
அரி - திருமால், சிங்கம், காய்களை அரி
அறி - அறிந்து கொள்
அலரி - அலரிப்பூ
அலறி - அழுது
இரத்தல் - பிச்சையெடுத்தல்
இறத்தல் - சாதல்
உரவு - வலிமை
உறவு - சுற்றம்
உரை - சொல்
உறை - தலையணை உறை
எரி - தீ
எறி - வீசு
கரி - யானை
கறி - காய்கறி, மிளகு
குரங்கு - வானரம்
குறங்கு - தொடை
கூரை - வீட்டுக் கூரை
கூறை - துணி
சீரிய - சிறந்த
சீறிய - சினந்த
பரவை - கடல்
பறவை - பறப்பவையாகிய உயிரினம்
மரை - மான், தாமரை
மறை - வேதம்

77) கண்ணகிக்காக பத்தினி கோட்டவன் எடுத்தவன் யார்?
**கயவாகு மன்னன்**

78) முடிமக்கள் வாழ்வில் காணும் சிறப்புக்கள் எல்லாம் குடிமக்கள் வாழ்வில் கண்டால் ---------- இனிக்கும்.
**காப்பியம்**

79) சிலப்பதிகாரம் ------------ காப்பியம் ஆகும்.
**முத்தமிழ்**

## 5. ஓய்வு - பேறறிஞர் அண்ணா

80) யாருக்கு ஓய்வு நேரம் வேண்டும்?
**பாடுபடுபவனுக்கு ஓய்வு நேரம் வேண்டும்**

81) வேலையே இல்லை, நாளெல்லாம் வாளாவிருக்கிறான்?
**ஓய்வு அல்ல அது கொடுமை**

82) வேலை இருக்கிறது - வேலை செய்யாமல் வாளாவிருக்கிறான் அதற்கு ----------- என்று பெயர்.
**சோம்பல்**

83) வேலை இருக்கிறது - வேலை செய்த அலுப்பினால் வேலை நேரம் முடிந்ததும் கட்டை போல கீழே விழுகிறான் தூங்கி விடுகிறான் அதற்குப் பெயர் -
**சோர்வு**

84) ஒரு வேலையும் செய்ய வேண்டிய நிலையில் இல்லை எப்போதும் சும்மா இருக்கிறான். அதற்குப் பெயர்?
**ஓய்யாரம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

85) ரோம் நாட்டவர் ஓய்வு நேரத்தை எவ்வாறு செலவிட்டனர்?
**மற்போர், வாட்போர், மிருகங்களுடன் போரிட்டு அவைகளை வெல்வது ஆகியவற்றை ஓய்வாக கருதினர்**

86) கிரேக்கர்கள் ஓய்வு நேரத்தை எவ்வாறு செலவிட்டனர்?
**காப்பியம் என்ற தரம் பெற்ற புதிய நாடகங்களை காண்பது**

87) ஸ்பெயின் நாட்டவரின் ஓய்வு நேரம்?
**முரட்டுக் காளையுடன் போரிடுவது**

88) பழந்தமிழர் தமது ஓய்வு நேரத்தை எவ்வாறு செலவிட்டனர்?
**ஏறுதழுவுதல், மற்போர்**

89) இங்கிலாந்து நாட்டவரின் ஓய்வு நேரம் எவ்வாறு செலவிடப்பட்டது?
**கோழிச் சண்டை, கரடிச் சண்டை**

90) எழுச்சி தரத்தக்க பொழுது போக்காகக் எதை கொண்டுள்ளது அமெரிக்கா?
**குத்துச் சண்டைக்காக பெரும் பணம் செலவிடப்பட்டு வருகிறது**

91) அண்ணா ஒரு சீரிய சிந்தனையாளர் என்பதனை எந்த கட்டுரை தெளிவுப்படுத்துகிறது?
**ஓய்வு**

## 6. சமயங்களின் பொது நீதி - குன்றக்குடி அடிகளார்

92) சமயம் என்பது யாது?
**மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளை நிலமாகத் தகுதிப்படுத்திப் பக்குவப்படுத்தும் தத்துவத்திற்கு வாழ்க்கை முறைக்கு சமயம் என்று பெயர்**

93) மனித வாழ்க்கையை பக்குவப் படுத்துவது எதனின் நோக்கம்?
**சமயத்தின் நோக்கம்**

94) சமய நியதி மற்றும் நீதி எது?
**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

95) பாசப் பழிமுதல் பறிப்பார் போல என்று கூறியவர்?
**சேக்கிழார்**

96) துன்ப நோய்க்கு மருந்தாக அமைவது?
**அன்பு**

97) அன்பு விதையை விதைப் பேனாக என்றும் மக்கள் என்னிடம் அன்பு செலுத்துவதற்கு முன் நான் அவர்களிடம் அன்பு காட்டுவேன் என்று சொன்னவர் யார்?
**அர்ச் ∴பிரான்ஸிஸ் என்ற பெரியார்**

98) முகமது சாகேபின் அருள் வாக்கு எது?
**“பிறர் அன்பு பாராட்டாமலும் பிறர் அன்புக்கு பாத்திரமாகாமலும் இருப்பவனிடம் நற்குணங்கள் இரா”**

99) புனித குர் - ஆனின் உபதேசம் யாது?
**மாந்தர் குலம் ஒன்றே என்பதும் அவர்கள் அனைவரும் ஒரு குலமாக வாழக் கடமைபட்டிருக்கின்றனர் என்பதே புனித குர் - ஆனின் உபதேசம்**

100) சீன தேசத்தில் தோன்றிய ஞானி யார்?
**கன்பூஷீயஸ்**

101) உனக்குப் பிடிக்காத ஒன்றை நீ பிறருக்குப் பிடிக்குமென்று நினைந்து செய்யாதே என்று கூறியவர் யார்?
**கன்பூஷீயஸ்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

102) இவர் வற்புறுத்திய நற்குணங்கள் எத்தனை?

**ஐந்து**

103) சுன்ஜீ என்பது எத்தனையாவது நற்குணம்?

**ஐந்தாவது**

104) சித்தார்த்தரைப் புத்தராக்கியது எது?

**அன்புதான்**

105) இந்து வேதங்களுள் மிகவும் பழமையான வேதம்?

**ரிக் வேதம்**

106) தமிழ் மறை தந்தவர் ----------

**திருமூலர்**

107) திருமந்திரம் வகுத்து உரைக்கும் செய்திகள்

**சமய வாழ்க்கை நியதிகள் ஒழுக்கங்கள்**

108) திருமூலர் எடுத்துக் காட்டும் சமய வழிப்பட்ட கடமைகள் எத்தனை?

**நான்கு**

109) சைவ உலகத்தின் செஞ்ஞாயிறு?

**அப்பரடிகள்**

110) ந, ண, -ன ஒலி வேறுபாடு

அணல் - தாடி

அனல் - நெருப்பு

ஆணி - இரும்பால் ஆன ஆணி

ஆனி - தமிழ் மாதம்

ஊண் - உணவு

ஊன் - இறைச்சி

கணம் - கூட்டம்

கனம் - பாரம்

பேண் - காப்பாற்று

பேன் - தலையில் வாழும் பேன்

மணம் - நறுமணம்

மனம் - உள்ளம்

மணை - உட்காரும் பலகை

மனை - வீடு

மான் - புள்ளிமான்

முந்நாள் - மூன்று நாள்

முன்னாள் - முந்தைய நாள்

தேநீர் - தேயிலை நீர்

தேனீர் - தேன் போல இனிய நீர்

திணை - ஒழுக்கம், நிலம்

தினை - தானியவகை

கனை - குதிரை கனைக்கிறது

கணை - அம்பு

111) மரம் - மறம்

**மனிதர்க்கு உரியது மறம் (வீரம்) அன்றேல் அவர் மரம்!**

112) ஊன் - ஊண்

**ஊண் - உயிரிகளின் உணவு**

**ஊன் - உயிரிகளின் உடல் பகுதி**

113) கல் - மலையில் இருப்பது கல்

கள் - பனையில் இருப்பது கள்

114) பரவை - பரந்து இருப்பதால் கடலைப் பரவை என்றனர்.

**பறவை - பறந்து வருவதால் புள் இனத்தைப் பறவை என்றனர்**

115) இரத்தல் - இறத்தல்

**பண்டைய புலவோர் இரத்தலினும் இறத்தல் (உயிர் விடுதல்) நன்றென வாழ்ந்தனர்.**

116) பரி - பறி

**அக்காலக் கள்வர்கள் பரி (குதிரை யில்) வந்து (வழிப்பறி) பறித்தல் செய்தனர்.**



join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

117) கரி - கறி

**கரி அடுப்பில் கறி சமைப்போரும் உண்டு**

118) அரி - திருமால்

அறி - நினை

119) பனி - பனிக்காலம்

பணி - வேலை

120) களி - கலி

**நளனைப் பிடித்திருந்த கலி நீங்கியது (சனி)**

**நளனும் களிப்படைந்தான் (மகிழ்வு)**

121) விலை - விலை குறைந்தது

விளை - விளைச்சல் மிகுந்தது

122) ஒலி - செவியால் கேட்பது

ஒளி - கண்ணால் பார்ப்பது

123) விளி - அழைப்பு

விழி - கண்விழி

124) ஒரு - ஒரு ரூபாய்

ஒறுப்பு - தண்டனை

125) மனம் - மணம்

**மலரின் மணத்தில் மனத்தைப் பறிகொடுத்தேன்**

## 7.கல்வெட்டுகள் - தி.பை.சதாசிவப் பண்டாரத்தார்

126) சிற்றுளி கொண்டு கல்தச்சர்களால் பொறிக்கப்பட்டது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

**கல்வெட்டுகள் எனவும் சிலாசாசனங்கள் எனவும் அழைக்கப்படுகிறது.**

127) கல்வெட்டுகள் நம் தாய் மொழியாகிய தமிழில் எழுதப் பெற்றவைகளே என்பதை அறிவுறுத்தியவர்கள் யார்?

**மேல் நாட்டு பேரறிஞர்கள் ராபர்ட் சிவெல், டாக்டர் கீலஹார்ன், டாக்டர் பர்னல், டாக்டர் பூலர், டாக்டர் ஷீல்ட்ஷ்**

128) நடுகல் விழா பற்றி கூறும் நூல்?

**புறநானூறு**

129) நடுகல்லின் மேல் போர்க்களத்தில் இறந்த வீரனின் பெயரும் பெருமையும் வரையப்படும் வழக்கம் இருந்தது என்பதை குறிக்கும் நூல்கள் யாவை?

**அகநானூறு, புறநானூறு, மலைப் படுகடாம்**

130) இறந்த வீரர்களின் நடுகற்களின் மேல் பொறிக்கப்பட்ட அவர்களுடைய பெயரும் பீடுமே நம் நாட்டில் முதலில் தோன்றிய ----------- ஆகும்.

**தமிழ்க் கல்வெட்டுகள்**

131) கடைச் சங்கத்திலும் நடுகல் வழக்கம் இருந்ததை விளக்கும் நூல்?

**திருவாரூர் மும்மணிக் கோவை**

132) சேரமான் பெருமாள் நாயனார் இயற்றியது?

**திருவாரூர் மும்மணிக் கோவை**

**“பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி நட்டகல்லும் மூதூர் நத்தமும்“**

133) அக்காலக் கல்வெட்டுகள் இக்காலத்தில் எங்கு காணப்படுகிறது?

**செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்றிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆணை மலையிலும், திருச்சிராப்பள்ளி குன்றிலும்**

134) கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டின் ஆட்சி புரிந்தவர்கள் யார்?

**பல்லவர்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

135) யார் முதலில் கருங்கற் கோயில்கள் அமைத்தனர்?

**பல்லவ அரசர்கள்**

136) மெய்க்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரும் முறை யாரால் அறிமுகப்படுத்தப் பட்டது?

**முதல் இராசராச சோழனால் கி.பி.893 ஆம் ஆண்டு**

137) மெய்க்கீர்த்திகளோடு அமைந்த கல்வெட்டுகள் எல்லாம் எந்த ஆராய்ச்சிக்கு சிறந்த ஆதரங்களாக இருக்கின்றன?

**வரலாற்று ஆராய்ச்சிக்கு**

138) கல்வெட்டுகளில் குறிக்கப்படும் மங்கல வார்த்தை?

**ஸ்வஸ்தி ஸ்ரீ**

## 8. தமிழக மகளிர் - அ.காமாட்சி குமாரசாமி

139) மனைக்கு விளக்காக விளங்குபவள் ------------

**பெண்**

140) வீட்டு வாழ்க்கையிலும் நாட்டு வாழ்க் கையிலும் சிறந்து விளங்கியவர்கள்?

**ஔவையார், கோப்பெருந்தேவி, பூதப்பாண்டியன் மனைவி, கண்ணகி, மணிமேகலை**

141) தமிழக மகளிர் தம் கணவன்மாருக்குப் பெருமை தேடிதந்ததையும், வீட்டிலும் நாட்டிலும் புகழுடன் பொலியும் மகளிர் தமக்கு மனைவியராய் வாய்ப்பதயே பெரும் பேறாக கருதினர் ஆடவர் என்று கூறும் நூல் எது?

**குறுந்தொகை பாடல்** (14)

142) துறவுக்கும் தொண்டுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுடன் விளங்குவது யார்?

**மணிமேகலை**

143) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே என்று உணவுக் கொடை புரிந்தவர்?

**மணிமேகலை**

144) தந்தை கொடுத்தனுப்பிய கொழுஞ் சோற்றையும் கொள்ள விரும்பாது, தற்கொண்டான் வளத்திற்கேற்ப, நாளுக்கு ஒரு வேளை உணவே உண்ணும் நிலையை எந்தப் பாடல் காட்டுகிறது?

**நற்றிணை** 10

145) நாடுவிட்டு நாடு சென்று நயம்படத் தூதுரைத்தவர்

**ஔவையார்**

146) வீட்டிலும் மாலையில் மல்லிகை மலர்ந்ததும் விளக்கினையே நெல்லும் மலருந்தூவி வழிப்பட்டனர் பெண்கள் என்பதனை எந்த நூல் கூறுகிறது?

**நெடுநல்வாடை**

147) சங்க காலத்தில் குடிசைக் கைத் தொழில்கள் எனப் பெரிதும் பேசப்படும் நூல் நூற்பு, ஓலை வேலை முதலியன நடைபெற்றன என்பதை விளக்கும் சொற்றொடர்கள் யாது?

**பருத்திப் பெண்டிர், இரும் பனங்குடை என்னும் சொற்றொடர்கள்**

148) மாதவியின் ஆடல் பாடல் திறமைகளை கூறும் பாட்டு?

**அகநானூற்று பாடல்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

149) விருந்தோம்பலின் பெருந்தன்மையை விளக்குபவர் யார்?

**ஒல்காப் புகழ் தொல்காப்பியர்**

150) அக்காலத்தில் விருந்து என்ற சொல் ------- எனப் பொருள் பட்டது.

**புதுமை**

## 12 ஆம் வகுப்பு
## உரைநடைப்பகுதி:-
### 1. உயர்தனிச் செம்மொழி
### பரிதிமாற் கலைஞர்
### வி.கோ.சூரியநாராயண சாத்திரியார்

1) தமிழ் மொழி எத்தனை பிரிவு களுடையது?

**இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளையுடையது**

2) இயற்றமிழென்பது யாது?

**பொதுமையின் இருவகை வழக்கினும் இயங்குகின்ற வசனமுஞ் செய்யுளு மாகும்**

3) இசைத் தமிழென்பது யாது?

**பண்ணொடு கலந்துந் தாளத்தொடு கூடியது, இதன்கண், கீர்த்தனங் களும் வரிப்பாட்டுகளும், சிந்து, ஆனந்தக்களிப்பு, கும்மி, தெம்பாங்கு முதலியவை அடங்கும்**

4) எவையெல்லாம் இசை தமிழாகும்?

**இசை நுணுக்கம், தாள வகையோத்து இடைக்காலத்தில் தோன்றிய தேவாரம் இக்காலத்து வெளிப்பட்டுலவுகின்ற கந்த புராணக் கீர்த்தனை, பெரிய புராண கீர்த்தனை, சங்கீத சந்திரிகை**

5) நாடகத் தமிழுக்கு முன்னோடியாக அமைந்தது?

**இசைத் தமிழ்**

6) நாடகத் தமிழுக்கு சிறப்பு விளக்கம் தந்தது எது?

**இசைத்தமிழ்**

7) நாடகத் தமிழுக்கு இன்றியமையாது எது?

**இசைத் தமிழ்**

8) நாடகத் தமிழ் யாருக்காக வகுக்கப் பட்டது?

**கையில் நூலெடுத்துப் படித்தற் குரிய அவகாசமில்லாத வேலைக் காரர்களுக்கும் படிக்கத் தெரியாத வர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கோடு புகுத்தப்பட்டது.**

9) உலகத்தின் இயல்பினை உள்ளதை யுள்ளவாறே புனைந்து காட்டுவது எது?

**நாடகத் தமிழ்**

10) சாஸ்திரக் கல்வியுடையார்க்குப் ------ இன்றியமையாதே

**பாஷையறிவும்**

11) தமிழின் வழிமொழிகள் எது?

**தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு**

12) உண்ணாட்டு மொழிகள் யாவை?

**தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு**

13) தனிமொழி என்பது யாது?

**தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றி தனித்து இயங்குவல்லதே தனிமொழி எனப்படும்**

14) தென்னாட்டுயர் தனிச் செம்மொழி எது?

**தமிழ்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

15) திசைச் சொற்கள் சார்ந்த மொழிகள்

1. குல்லா - பார்ஸி
2. ரிக்ஷா - ஜப்பானி
3. பஜார் - பார்ஸி
4. அலமாரி - போர்ச்சுகீசியம்
5. எக்கச்சக்கம் - தெலுங்கு
6. நபர் - அரபி
7. பேனா - போர்சுகீசியம்
8. இனாம் - உருது
9. ரூபாய் - இந்துஸ்தானி
10. ஜாஸ்தி - உருது
11. துட்டு - டச்சு
12. பீரோ - பிரெஞ்சு
13. கடுதாசி - போர்ச்சுகீசியம்

16) மரபுச் சொற்களை அறிக:

பலாப்பிஞ்சு - பலாமூசு
வாழைப்பிஞ்சு - வாழைக்கச்சல்
முருங்கைபிஞ்சு - முருங்கைச்சரடு
அவரைப்பிஞ்சு - அவரைப் பொட்டு
மாம்பிஞ்சு - மாவடு
இளந்தேங்காய் - வழுக்கை
முற்றிய தேங்காய் - நெற்று

## 2. சமரசம் - திரு.வி.கலியாண சுந்தரனார்

17) மனிதனை எது சமரச ஞானியாக்கு வதில்லை?

**அழுக்காறு, அவா, வெகுளி முதலியன**

18) அழுக்காறு என கவிஞர் குறிப்பிடுவது எது?

**நாடு, மொழி, சமயநெறி, சாதி**

19) நாடு என்னும் பற்றால் எதை இழக்கின்றனர்?

**சமரசம் (மற்ற நாடுகளை தாக்கு வதன் மூலம்)**

20) சமரசக் கோயிலை வடலூரில் அமைத்தவர்?

**இராமலிங்க சுவாமிகள்**

21) அருட் பெருஞ் சோதியை அருளிச் செய்தவர்?

**இராமலிங்க சுவாமிகள்**

22) எது உள்ளவரை சமரசம் ஞானம் பெற முடியாது?

**வேற்றுமை உணர்வு உள்ளவரை**

23) நிறுத்தற் குறிகள்:-

1. கால் புள்ளி (,)
2. அரைப் புள்ளி ;()
3. முக்கால் புள்ளி (:)
4. முற்றுப் புள்ளி (.)
5. முப்புள்ளி (…)
6. கேள்விக் குறி (?)
7. உணர்ச்சி குறி (!)
8. இரட்டை மேற்கோள்குறி (“ ”)
9. ஒற்றை மேற்கோள் குறி (‘ ’)
10. தனி மேற்கோள் குறி (‘)
11. மேற்படி குறி (“)
12. பிறை அடைப்பு ( )
13. சதுர அடைப்பு [ ]
14. இணைப்புக் கோடு (-)
15. சாய் கோடு (/)
16. அடிக்கோடு (-)
17. உடுக்குறி (*)

## 3.கவிதை பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை

24) வசனத்திற்கும், கவிதைக்கும் இலக்கணம் வகுத்தவர்?

**கோலரிட்ஜ்**

25) “சொற்களை சிறந்த முறையில் வைப்பது” எது?

**வசனம்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

26) சிறந்த சொற்களை சிறந்த முறையில் வைப்பது எது?
**கவிதை**

27) கவிதையைப் பற்றி வோர்ட்ஸ் வொர்த்தின் கருத்து?
**ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவது கவிதை**

28) கீட்ஸ் என்ற கவிஞர் கவிதையை பற்றி கூறுவது?
**கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளிமழையே கவிதை என்றனர்**

29) ஜான் ரஸ்கின் கவிதையை பற்றி கூறுவது?
**சீரிய உணர்ச்சிக்குரிய காரணங் களைப் பாவனா சக்தியால் குறிப்படுவது கவிதையாகும்**

30) நூதன ஆங்கில பேரகராதி கவிதையை பற்றி என்ன கூறுகிறது?
**செய்யுள் நெறியில் இயற்றப்படுவதே கவிதை என்று கூறுகிறது**

31) கவிதையின் முதலாவது இயல்பு எது?
**முதலாவது இயல்பு செய்யுள் வடிவில் அமைந்திருத்தல்**

32) கவிதையின் இரண்டாவது இயல்பு எது?
**உலக உண்மையை காட்டிலும் பாவனா சக்தியின் இயல்புகளையே மேற் கொள்ள வேண்டும்**

33) இராபர்ட் பட்டன் என்பவர் கூறுவது யாது?
**எல்லாக் கவிஞர்களும் பைத்தியக் காரர்களே**

## 4. மக்கள் வாழ்க்கை

34) அக்கால மக்களின் நல்லியல்பு களாகவும் சிறந்த கொள்கைகளாவும் விளங்கியவன யாவை?
**இனிமையாக பேசுதல், நடுவு நிலைமையாக இருத்தல், இயன்ற வரைப் பிறர்க்கு உதவுதல், பிறர் செய்த உதவியை எக்காரணங் கொண்டும் என்றும் மறவாதிருத்தல்**

35) அக்கால மக்களின் தொழில் வகைகள்?
**உழவு, வாணிகம், நெசவு**

36) அக்கால மக்களின் ஒற்றுமையில் தீர்மான கொள்கை எது?
**“யாதும் ஊரே யாவரும் கேளிர்”**

37) தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும் அதனை மறாவல் உண்பார்? அதை எந்த நூல் விளக்குகிறது?
**நற்றிணை**
**“முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநா கரிசுர்”**

38) உயிர் நேயம் என்பது இல்லாத வரை என்று சொல்வதற்கு வழியில்லை?
**நாகரிகர்**

39) கற்றவர்கள் எந்த வேற்றுமையுங் கருதாமல் மதிக்கப்பட்டு வந்தனர் என்பதை கூறும் நூல்?
**புறநானூறு**

40) அக்கால மக்கள் ------- யை இழிவாக கருதினர்.
**இரத்தல்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

41) எந்த நூலின் மூலம் அக்கால மக்கள் பிறர் பொருளை விரும்புவது இல்லை என்பதை உணரலாம்?

**குறுந்தொகை**

42) உலகம் நாடாகவாவது இருக்கட்டும்: காடாகவாவது இருக்கட்டும் எங்கே நல்லவர்களிருக்கின்றார்களோ அங்கே அதுவும் நல்லதாக இருக்கும் என்ற கருத்து இருக்கும் பாடல் எது?

**புறநானூறு**

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவ ராடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே**

43) ஒற்றைப் பிறைக்கோடு வரும் இடங்கள்:-

1. மொழி பெயர்ப்பு:
தொலைக்காட்சி (Television) என்பது இந்நாளில் ஊடகங்களில் (Media) முதன்மை பெற்று விளங்குகிறது
2. பொருள் கூறல்: நிலைமொழி (அதாவது முதலில் நிற்கின்ற மொழி)
3. சொல்வரு விருத்தல்:-
மலரடி (தாமரை) மலர் போன்ற பாதம்

44) இரட்டைப் பிறைக் கோடு வரும் இடங்கள்:-

1. பலவரிகளுக்குப் பொதுவான செய்தி
கண்ணனது கரு நிறம்
கண்ணனது அழகு - ஆறாம் வேற்றுமைத் தற்கிழமை
2. காலஇடக் குறிப்பு:
இடம்: தஞ்சாவூர்
நாள்: 10.02.2004 பகர அடைப்பு வருமிடம் வரிக்கு மிஞ்சிய பகுதி

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்

பேசு என்பது ஏவல் வினைமுற்று பேசுக என்பது வியங்கோள் வினைமுற்று. ஆங்கிலத்தில் அருள் கூர்ந்து, தயவு செய்து பேசுக என்னும் பொருளில் வரும் Please speak என்று சொல்வதைப் பேசுக என்று கூறினாற் போதும் அதே பொருளைத் தரும்

Please speak - பேசுக
Please bring - கொணர்க
Please type - தட்டச்சு செய்க

45) தமிழிசையில் இருந்த நான்கு இசை முறைகள் யாவை?

**ஆயபாலை, வட்டபாலை, திரிகோண பாலை, சதுர பாலை**

46) ஏட்டு சுவடிகளில் --------- செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளது?

**சித்த மருத்துவம்**

## 5.ஆவுந் தமிழரும்

47) மொழி ஞாயிறு என்று அழைக்கப் பட்டவர் யார்?

**தேவநேயப் பாவாணர்**

48) தமிழ் நாட்டில் தலை சிறப்பாக போற்றப்பட்டது எது?

**“ஆ”**

49) மக்கள் நாகரிகத்துக்கு உரிய நான்கு நிலைகள் யாவை?

**குறிஞ்சி, முல்லை, மருதம், நகரம்**

50) எந்த நிலையுடையவருக்கே “ஆ” தொடர்பு இருந்திருக்க கூடும்?

**குறிஞ்சி நிலை**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

51) “ஆ” வானது முதன் முதலில் யார் நிலத்திற்கே உரிய விலங்கு?
**குறிஞ்சி**

52) ஆட்டையும் மாட்டையும் பெருவாரியாய் வளர்த்து அவற்றின் ஊனையும் பாலையும் உண்டு வாழ்ந்தவர்கள்
**முல்லை நிலத்தில் இருந்த ஆயர்கள்**

53) ஆயர்கள் எதை சிறப்பாக வளர்ந்தனர்?
**மாட்டை சிறப்பாக வளர்ந்தனர்**

54) தற்காலத்தில் “ஆ” என்னும் பெயர் எந்த பாலை குறித்தது?
**பெண் பாலை குறித்தது**

55) ---- என்பது விலங்குப் பொது பெயர், குதிரைப் பெயர்
**மா**

56) --- என்னும் பெயரே ஆ என்று திரிந்திருக்கலாம்
**மா**

57) மாடு எவ்வாறு முக்காரமிடும் -----------
**மாஅஅ**

58) முல்லை நிலத்தில் தோன்றியது?
**உழவு**

59) உழவு எந்த நிலத்தில் சிறப்படைந்தது?
**மருத நிலத்தில்**

60) “பகடு நடந்த கூழ்” என்று கூறுவது எது?
**நாலடியார்**

61) மாட்டிலிருந்து பெறப்படும் பொருள்கள் யாவை?
**ஊனும் பாலும், தோல், கொம்பு, உரசனை (ரோசனை), வால்மயிர், சாணம்**

62) வீட்டைத் துப்புரவு செய்யவும் அடுப்பெரிக்கவும் பயிருக்குரமிடவும் -------- உதவுகிறது.
**சாணம்**

63) சிறந்த உணவும் மருந்தும் எது?
**தயிரும் மோரும் வெண்ணெயும் நெய்யும் பாலிருந்து எடுக்கப்படுவன**

64) முன்னைத் தமிழர் எதை செல்வமாக கருதி வந்தனர்?
**மாட்டினத்தைச் செல்வமாக கருதி வந்தனர்**

65) பால் முதல் நெய்யீறாகவுள்ள ஐந்தும் ----------- எனப்படும்.
**ஐயமுதம் (பஞ்சாமிருதம்)**

66) திணை வழுவுக்கு எடுத்துக்காட்டு தருக:-
**“என் அம்மை வந்தாள் அவளுக்குப் புல்லிடு”**
**என் அப்பன் வந்தான் அவனுக்குத் தண்ணீர் காட்டு**

67) ஆவுக்கும் ஆ வேற்றுக்கும் மக்கள் இட்ட பெயர்கள் யாவை?
**சாத்தன் சாத்தி, கொற்றன் கொற்றி, முடவன் முடத்தி, கொடும்புற மருதன், கொடும்புற மருதி**

68) மாடுபோலுழைத்தல் என்னும் சொல் வழக்கு எதனால் எழுந்தது?
**காளை மக்கட்காக மிக உழைத்தலினால்**

69) காளை விடலை என்னும் பெயர்கள் யாருக்கு உவமையாகு பெயராக வழங்கி வந்தன?
**மறவர்க்கும், குறும்பரசர்க்கும் வழங்கி வந்தன**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

70) இளைஞரின் வலிமையை அறிவதற்கு --------அளவையாகக் கொள்ளப்பட்டது.
**ஏறு தழுவல்**

71) ஆழமான ஆற்றை எதைப் பற்றி கடந்தனர்?
**ஆவின் வாலையும், ஆ வேறுவின் வாலையும்**

72) ஆவேறு என்பது ------- குறிக்கும்.
**காளையை**

73) வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் என்றவர் -------------
**திருஞானசம்பந்தர்**

74) ஆ விற்கு --------- என்றும் பெயர்.
**கோ**

75) என் தா என்னும் வினை இந்தியில் ----------- என்றும் அழைக்கப்படுகிறது.
**தேவ்**

76) தா - என்னும் வினை இலத்தீனில் ---------- என்று வழங்கப்படுகிறது.
**தோ**

77) கோவன் என்பது யாரை குறிக்கும்?
**அரசனை குறிக்கும்**

78) கிறித்தவரின் சமய ஆசிரியர் ஆங்கிலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
**மேய்ப்பர் என்று அழைக்கப்பட்டார்**

79) கோவன் -- சிவன்
**(ஆயன் ஆநிரையை காப்பது போல் கடவுள் மக்களை காத்து வருதல்)**

80) ஆமா என்னும் தமிழ் சொல் ----------- குறிக்கும்.
**காட்டுப் பசுவை**

81) கோ என்னும் குறைச் சொல் யாரை குறிக்கும்?
**அரசனையும், தந்தையையும் குறிக்கும்**

82) ”நின்கோ வரினு மிங்கே” என்னுமிடத்தில் “கோ“ என்பது யாரை குறிக்கும்?
**தந்தையைக் குறிக்கும்**

83) மிளகு நீரைச் (சாற்ற முது) சாத்தமுது என்பது யாருடைய மரபு?
**வைணவர் மரபு**

84) தீமிதியல் திருவிழாவில் தீக்குழியைப் ------- தீமிதியலை ----- என்றும் சொல்லுதல் மரபு
**பூக்குழியென்றும், பூமிதியல்**

85) திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிகளுக்கு கீற்று வேயவதனை கொட்டகை என்பது ------------- மரபு
**செட்டி நாட்டு**

86) ஆசிரியரை ஐயர் என்றே அழைப்பது -------- மரபு
**வேலூர் ஆம்பூர் வட்டத்தார்**

87) அமிழ்தத்தை உப்புச்சாறு என்று கூறுவது -------------- மரபு
**சீரங்கம் கோவில்**

88) “கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை” என்னும் குறள் கூறும் கருத்து
பண்டையுலகம் முழுமையும் மாடே, மக்கள் செல்வமாயிந்தது அதனால் செல்வம் மாடெனப்பட்டது

89) உணவை விளைவிப்பதும் தானும் உணவளிப்பதும் எது?
**மாடு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

## 6. நீதி நூல்களில் இலக்கிய நயம்

90) நீதிகளைக் கூற எழுந்தவை?
**நீதிநூல்கள்**

91) இவ்வாறு நடக்க வேண்டும் என்று விதித்தும், இவ்வாறு நடக்கக் கூடாது என்று விலக்கியும் செல்வது ------என்ற நூல்களின் இயல்பு.
**நீதி நூல்களின் இயல்பு**

92) வாழ்க்கையைச் சீர்படுத்த அமைந்த நூல் --------
**நீதி நூல்கள்**

93) தமிழில் அறநூல்களில் முதன்மை யானது?
**திருக்குறள்**

94) இடைக்காடனார் குறளைப் பற்றி கூறிய கருத்து யாது?
**“கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்”**

95) சிறந்த நயங்களைத் தன்பால் அடக்கிக் கொண்டிருப்பது எது?
**திருக்குறள்**

96) திருவள்ளுவர் தான் கண்ட பெரிய கனவின் வழியாக மக்களுக்கு குறுகிய அடிகளில் எந்த குறளை அருளச் செய்தார்.
**“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்”**

97) இரத்தல் கொடியது என்ற நீதியை காட்ட விரும்பும் நூல்?
**திருக்குறள்**

98) கீழ்மக்களை -------- ஆகிய பறைக்கு ஒப்பாகச் சொன்னார்
**தம்பட்டம்**

99) கயவரிடம் இரகசியம் கூறக் கூடாது என்ற நீதியை விளக்கும் குறள்?
**அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட**
**மறைபிறர்க்கு உயத்துரைக்க லான்**

100) இரண்டடியில் நீதியை கூறும் நூல்?
**திருக்குறள்**

101) நான்கு அடியில் நீதியை கூறும் நூல் ---------
**நாலடியார்**

102) செல்வம் நிலைபேறுடையதன்று அழிந்து போகுந் தன்மையது என்ற கருத்தை விளக்கும் பாட்டு --------
**நாலடிப் பாட்டு**

103) வயிற்றை வளர்ப்பதற்காக ------- பேசி திரிய வேண்டாம்
**இச்சகம்**

104) வயிற்றை வளர்ப்பதற்காக இச்சகம் பேசி திரிய வேண்டாம் என்பதை விளக்கும் பாடல் எது?
**“போற்றியே போற்றியே யென்று புதுச்செல்வம்**
**தோற்றியார் கண்ணெலாம் தொண்டே போல் - ஆற்றல்**
**பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்**
**வயிற்றுப் பெருமான் பொருட்டு**

105) லளழ வேறுபாடு
அலை - கடல் அலை அலைந்து திரிதல்
அழை - கூப்பிடு
அளை - தயிர், பிசை


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

106) இலை - மரம், செடி கொடிகளின் இலை

இழை - செய், நூல் இழை

இளை - மெலிந்து போதல்

107) உலை - சமைக்க உலை வைத்தல், உலைக்களம்

உழை - பாடுபடுதல், உழைப்பு

உளை - பிடரிமயிர், சேறு

108) ஒலி - ஓசை

ஒழி - அழித்துவிடு, தொலைத்து விடு

ஒளி - வெளிச்சம், பதுங்கிகொள்

109) கலை - வித்தை, கலைந்துபோதல்

கழை - மூங்கில்

களை - வயலில் களையெடுத்தல் முகத்தின் ஒளி

110) கிலி - அச்சம், பலம்

கிழி - துண்டாக் கிழித்தல், கோடு கிழித்தல்

கிளி - ஒரு பறவை

111) தலை - முதன்மை, சிரசு

தழை - புல், இலை

தளை - கட்டுதல்

112) தாலி - கணவன் மனைவிக்குக் கட்டும் சின்னம்

தாழி - குடம் வாயகன்ற பாண்டம்

தாளி - ஒரு வகைப் பானை, குழம்பு தாளித்தல்

113) வலை - மீன் பிடிவலை

வழை - ஒருவகை மரம், சுரபுன்னை மரம்

வளை - பொந்து, வளையல், வளைவு

114) வால் - விலங்கின் வால்பகுதி வெண்மை

வாழ் - உயிர் வாழ், பிழைத்திரு

வாள் - வெட்டும் கருவி, ஒளி பொருந்திய

115) வாலை - இளம் பெண்

வாழை - மரவகை

வாளை - மீன்வகை

## 7. மனிதர் வாழ்க - டாக்டர் மு.வரதராசனன்

116) சிறுவன் எதைப் போற்றுகின்றான்

**பலகையும், பல்ப்பத்தையும்**

117) பழங்காலத்தில் நடந்த தேர்தல் முறை யாது?

**கையை உயர்த்துவதன் மூலம், குட ஓலை மூலம் தேர்தல் நடைபெற்றது**

118) யார் வாழ்வதற்காகவே மக்கள் கருவியாக பயன்பட வேண்டியுள்ளது?

**கட்சிகள்**

119) கட்சிகளை காப்பாற்ற பயன்படுவது

**மேடைகளும், பத்திரிக்கைகளும்**

120) மக்கள் பழங்காலத்தில் ------- , ------- கண்டு மயங்கினார்கள்

**படைகளையும், படைகருவிகளையும்**

121) இன்றைய மக்கள் ----- , ------- கேட்டு மயங்கிறார்கள்

**பத்திரிக்கைகளையும், மேடைப் பேச்சுகளையும்**

122) எத்தெளிவு ஏற்படும் காலம் வந்து கொண்டிருக்கிறது?

**எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்ற காலம் வந்து**

123) கிராம மக்கள் எதை நம்பி வாழத் தொடங்குவார்கள்?

**கூட்டுறவையும், உழைப்பையும் நம்பி வாழத் தொடங்குவார்கள்**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

124) மனித வாழ்வில் உண்மையான அடிப்படையாக உள்ளவை?
**உழைப்பு மற்றொன்று கூட்டுறவு**

125) கூட்டுறவுக்கு இடையுறுகாக இருப்பவை வெல்ல ----- வேண்டும்?
**அறப்படை வேண்டும்**

126) உழைப்புக்குப் பஞ்சம் வந்தால் அதவெல்ல ----- வேண்டும்
**உழுநிலம்**

127) ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைவதற்கு எது வழி
**சுரண்டுவோரும், சுரண்டப்படுவோரும் இல்லாத சாதி சமயம் கட்சி இவயே ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் உருவாவதற்கு வழியாகும்**

128) அலவலுகக் கலைச் சொல் - அவற்றின் தமிழாக்கம்:
1. ரெக்கார்ட் - ஆவணம்
2. செகரட்டரி - செயலர்
3. மேனேஜர் - மேலாளர்
4. பைல் - கோப்பு
5. புரோநோட் - ஒப்புச்சீட்டு
6. பால்கனி - முகப்பு மாடம்
7. பாஸ்போர்ட் - கடவுச்சீட்டு
8. டிசைன் - வடிவமைப்பு
9. விசா - நுழைவு இசைவு
10. டெலிகேட் - பேராளர்
11. ஸ்பெஷல் பஸ் - தனிப் பேருந்து
12. புரபோசல் - கருத்துரு
13. ஆட்டோகிராப் - வாழ் தொப்பம்
14. விசிட்டிங் கார்டு - காண்புச்சீட்டு
15. பிரீப் கேஸ் - குறும் பெட்டி
16. லம்சம் - திரட்சித் தொகை
17.மெயின் ரோடு - முதன்மைச் சாலை
18. புரோட்டோகால் - மரபுத்தகவு
19.செக் - காசோலை
20. ரசீது - பற்றுச்சீட்டு
21. சாம்பியன் - வாகை சூடி

## 8. தமிழ்நாட்டுக் கலைச் செல்வங்கள்

129) "ஆயகலைகள் அறுபத்து நான்கு" என்ற முது மொழிக் கேற்ப பல வகையான கலைகளை பாங்குற அமைத்தவர்?
**தமிழர்கள்**

130) மிகமிகப் பழங்காலம் முதலே தமிழகத்தில் சிறப்புப் பெற்று விளங்கும் கலைகள் யாவை?
**கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை**

131) பூம்புகாரில் நடைபெற்ற அகழ்வாய்வில் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள்?
**புத்த விகாரம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் முகத்து வாரக் கட்டடமும் கண்டு பிடிக்கப் பட்டன**

132) கி.பி.11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடப் பகுதிகள் எந்த அகழ் வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன?
**கொற்கையில் நடந்த அகழ்வாய்வில்**

133) தமிழ் நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையில் கண்டு பிடிக்கப் பட்டது எது.
**முதலாம் இராசேந்திர சோழன் எடுபித்து வாழ்ந்த அரண்னை பகுதி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

134) தமிழ் நாட்டில் காணப்பெறும் குடைவரைக் கோயில்களுள் மிகவும் பழமையானது?
**இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த பிள்ளையார் பட்டி என்னும் ஊரின் குடைவரைக் கோயில் (இது பாண்டியர்களது படைப்பாகும்)**

135) எந்த நூற்றாண்டோடு குடைவரைக் கோயில்கள் அமைக்கும் பணி நின்று விட்டது?
**கி.பி.9 ஆம் நூற்றாண்டு**

136) குடைவரைக் கோயில்களை அமைத்தவர்கள் யார்?
**பல்லவர்கள், பாண்டியர்கள், அதியர், முத்தரையர்**

137) தனித்தனி குன்றுகளைச் செதுக்கி கோயிலாக்கும் முறை யாருடைய காலத்தில் இருந்தது?
**பல்லவர், பாண்டியர்**

138) தனித்தனி குன்றுகளை செதுக்கி கொயிலாக்கும் முறை எந்த நூற்றாண்டோடு நின்று விட்டது?
**கி.பி.8 ஆம் நூற்றாண்டு**

139) தனித்தனி குன்றுகளைச் செதுக்கி கோயிலாக்கும் முறைக்கு எடுத்துக் காட்டாக அமைந்த கோயில்?
**மாமல்லபுரத்தில் உள்ள ஐந்து ரதங்களும், கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயிலும்**

140) கற்களை ஒன்றோடு ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோயிற் பணி யாருடைய காலத்திலும் இந்நாளிலும் தொடர்ந்து நிலவி வருகிறது?
**பல்லவர், பாண்டியர்**

141) பல்லவர் காலத்து சிறந்தவைகளாக கருதப்பட்டது எது?
**மாமல்லபுரத்து கடற்கரைக் கோயில், காஞ்சிபுரத்து கைலாயநாதர் கோயில்**

142) பாண்டியர் காலத்தில் சிறந்தது?
**திருப்பத்துார் திருத் தளிநாதர்**

143) சோழர் காலத்து சிறந்தவைகள்?
**நார்த்தாமலை விசயாலய சோழீச் சுரம், தஞ்சை இராசராசேச்சுரம், என்னும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கங்கை கொண்ட சோழ புரத்துக் கங்கை கொண்ட சோழீச் சுரம், தாராசுரம், ஐராவதேசுவரர் கோயில், திரிபுவனம் திரிபுவன விரேச்சுரம்**

144) கோயில்களில் கோபுரம் அமைத்தல் யாருடைய காலத்தில் தொடங்கியது?
**பல்லவர் காலத்தில்**

145) கோயில்களில் கோபுரம் அமைத்தல் உன்னதநிலை அடைந்த காலம்?
**விசயநகர மன்னர்கள் காலத்தில்**

146) பல்லவர் காலத்துச் சிற்பிகள் எதை செதுக்குவதில் சிறந்து விளங்கினர்?
**யானையின் உருவத்தை**

147) சிற்ப இயல் வல்லுநர்கள் யாரை பாராட்டிப் பேசுவர்?
**பல்லவர் காலத்து சிற்பிகளை பாராட்டிப் பேசுவர்**

148) பல்லவர் காலத்து சிற்பிகள் எதற்காக பாராட்டப் பெற்றனர்?
**கோயிலையே ஒரு சிற்பமாக வடித்தெடுத்ததால்**


Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

149) யாருடைய காலத்தில் மனிதத் தன்மைக்கும் உடற் கூறுகளுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டன?
**விசயநகர நாயக்கர் காலங்களில்**

150) விசயநகர நாயக்கர் காலங்களில் யாருடைய கலாச்சாரத் தாக்கம் ஏற்பட்டது?
**முகம்மதியர்**

151) -------- ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் நாட்டில் செப்புப்படிமக் கலை மிக உன்னத நிலையில் வளர்ச்சி அடைந்துள்ளது
**சுமார் 2800**

152) செப்புப்படிமக் கலைக்கு சான்று யாது?
**ஆதிச்ச நல்லூரில் (திருநெல்வேலி மாவட்டம்) கிடைத்துள்ள தெய்வச் செப்புத் திருமேனி**

153) பல்லவர் கால செப்புத் திருமேனிகளுக்கு எடுத்துக்காட்டு?
**கூரம், நடராசர், கொடுமுடி, திரிபுராந்தகர், திரிபுரசுந்தரி**

154) செப்புத் திருமேனிகளின் பொற் காலம் என்பது யாருடைய காலம்?
**சோழர் காலம்**

155) செப்புத் திருமேனிகள் செய்தளிப் பதைத் தாம் இம்மண்ணுலகில் பிறந்த தன் கடமை என்று எண்ணியவர்கள்?
**செம்பியன் மாதேவி**

156) சோழர் காலத்து செப்புத் திருமேனிகள் எவ்வாறு செய்யப்பட்டன?
**ஆகம நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது போன்று அதற்கேற்பச் செய்ய பெற்றவை**

157) செப்புப் படிமக் கலை யாருடைய காலத்தில் சிறப்பிழந்து காணப் படுகிறது?
**விசயநகர நாயக்கர் காலத்தில்**

158) ஓவியத்தை வெறுந் தொழிலாகக் கருதாது ஒரு ------ சாதனமாகவே கருதினர்.
**யோக**

159) எந்த நூற்றாண்டின் தொடக்கத்தி லிருந்து ஓவியங்கள் காணப்படுகின்றன?
**ஏறக்குறைய கி.பி 7 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து**

160) ஓவியக் கலைக்கு அரும் பணியற்றிய மன்னர்கள்?
**பல்லவ மன்னர்கள் மற்றும் சோழ மன்னர்கள்**

161) பல்லவ மன்னர்களில் யார் சிறந்த ஓவியனாக விளங்கினர்?
**மகேந்திரவர்மன்**

162) ஓவிய கலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் கோயில்கள்?
**மாமண்டூர்க் குகைகளின் வெளி மண்டபத்திலும், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், பனமலை கோயில், தஞ்சைப் பெருவுடையார் கோயில்**

163) எந்த கோயிலில் காணப்படும் ஓவியம் மிகவும் சிறப்பு வாய்ந்தது?
**பனமலையில் உள்ள மண்டபத்தில் காணப்படும் எழிலார்ந்த ஆடல் மகளின் ஓவியம்**

164) மரச்சிற்பக்கலை எந்த நூற்றாண்டி லிருந்து காணப்படுகிறது?
**கி.பி.16 ஆம் நூற்றாண்டு**



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

165) தந்தச் சிற்பக் கலை யாருடைய காலத்தில் தான் சிறப்புப் பெற்றிருக்கிறது?
**நாயக்க மன்னர்கள்**

166) இவர்களுடைய காலத்தில் தந்தத்தால் செய்யப்பட்ட பொருள்கள் யாவை?
**கடவுளர் உருவங்களும், அரச அரசியர் உருவங்களும் பெட்டி, பல்லவர்க்குத் தண்டு போன்ற பொருள்களும் தந்தத்தால் செய்யப்பட்டிருகின்றன**

167) எந்த ஊரில் நாயக்க மன்னர் அவரது பட்டத்தரசி ஆகியோரது உருவங்கள், நான்கடி உயரத்தில் தந்தத்தில் கம்பீரமாக காட்சியளிக்கின்றன?
**திருவரங்கத்தில்**

168) சிறிய அளவில் உள்ள தந்த சிற்பங்கள் எங்கு காணப்படுகின்றன?
**அழகர் கோயிலில் காணப்படுகின்றன**

169) வல்லினம் மிகும் இடங்களுக்குரிய விதி

1. ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சத்தின் பின் ஒற்று மிகும்.

2. அந்த, இந்த என்னும் சுட்டுத்திரிபு அடுத்தும் எந்த என்னும் வினாத்திரிபு அடுத்தும் ஒற்று மிகும்.

(எ.கா) அந்தச்சிலை, எந்தக்காலம்

3.செய்வென் எச்சத்தின் பின் ஒற்று மிகும்

(எ.கா) ஓடக் கண்டார்

4.வன் தொடர்க் குற்றியலுகர ஈற்றுச் செய்தென் எச்சத்தின் பின் ஒற்று மிகும்

(எ.கா) கேட்டுக் கொண்டான்

இகர ஈற்றுச் செய்தென் எச்சத்தின் பின்னும் மிகும்

(எ.கா) எழுதிப்பார்

170) ண, ந, ன வேறுபாடு அறிக:-

அரண் - மதில், பாதுகாப்பு கோட்டை
அரன், சிவன்

171) அண்ணம் - மேல்வாய்
அன்னம் - ஒரு பறவை

172) ஆணி - கூரிய இரும்புத் துண்டு
ஆனி - ஒரு மாதம்

173) ஆணை - கட்டளை
ஆனை - யானை

174) உண்ணு - சாப்பிடு
உன்னு - நினைத்துப்பார்

175) ஊண் - உணவு
ஊன் - இறைச்சி

176) எண்ண - நினைக்க, எண்ணிப்பார்க்க
என்ன - கேள்வி

177) கணை - அம்பு
கனை - கனைத்தல்

178) கணம் - நேரம்
கனம் - பளு, சுமை

179) காண் - பார்
கான் - காடு

180) தணி - அடங்கு
தனி - தனித்திருத்தல்

181) துணி - சீலை
துனி - துன்பம், கோபம், அச்சம்

182) திணை - நிலம், ஒழுக்கம்
தினை - தானிய வகை

183) நாண் - கயிறு, நாணம்
நான் - தன்னைக் குறிப்பது, தன்மை இடப்பெயர்

184) திண்மை - வலிமை
தின்மை - தீமை

185) வண்மை - வளம், வழங்குதல்
வன்மை - வலிமை



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1

186) கடவுள் பெயர்கள் - வடமொழியில்
1.அங்கயற் கண்ணி - மீனாட்சி
2.அறம் வளர்த்தாள் - தர்மசம்வர்த்தினி
3. எரிசினக்கொற்றவை - ரௌத்திரதுர்க்கை
4. ஐயாறப்பர் - பஞ்சநதிசுவரர்
5. செம்பொன் பள்ளியார் - சொர்ணபுரீச்சுரர்
6. நீள் நெடுங்கண்ணி - விசாலாட்சி
7. யாழிலும் நன் மொழியாள் - வீணாமதுர பாஷிணி
8. தேன்மொழிப்பாவை - மதுர வசனி
9. பழமலைநாதர் - விருத்தகிரீச்சுரர்

**மொழிவளங் காட்டும் இலக்கியங்கள்:-**

187) தொல்காப்பியம்:- 3 அதிகாரம், 27 இயல்கள், 1610 நூற்பாக்கள்
188) வள்ளுவம்:- 3 பால்கள், 133 அதிகாரங்கள், 1330 குறட்பாக்கள்
189) சிலப்பதிகாரம்:- 3 காண்டம், 30 காதைகள், 5001 வரிகள்
190) மணிமேகலை:- 30 காதைகள், 4755 வரிகள்
191) சீவகசிந்தாமணி:- 13 இலம்பகங்கள், 3145 பாடல்கள்
192) பெரியபுராணம்:- 2 காண்டம், 13 சருக்கங்கள், 4286 பாடல்கள்
193) கம்பராமாயணம்:- 6 காண்டங்கள், 118 படலங்கள், 10589 பாடல்கள்
194) நல்லாபிள்ளை பாரதம்:- 18 பருவங்கள், 11000 பாடல்கள்
195) கந்த புராணம்:- ஆறு காண்டங்கள், 135 படலம், 10345 பாடல்கள்
196) திருவிளையாடற் புராணம்:- மூன்று காண்டம், 3363 பாடல்கள்
197) தேம்பாவணி:- 3 காண்டம், 36 படலங்கள் 3615 பாடல்கள்
198) சீறாப்புராணம்:- 3 காண்டங்கள், 92 படலங்கள், 5027 பாடல்கள்
199) இரட்சணிய யாத்திரிகம்:- 5 பருவங்கள், 47 படலங்கள், 3776 பாடல்கள்
200) இராவண காவியம்:- 5 காண்டம், 57 படலங்கள், 3100 விருத்தங்கள்
201) ஏசு காவியம்:- ஐந்து பாகம், 149 அதிகாரம், 810 விருத்தங்களும், 2346 அகவலடிகளும் கொண்டது
202) எந்த மொழியிலும் காணக்கிடைக்காத அளவு பக்தி பாசுரங்கள் நிரம்பிய மொழி?

**தமிழ்**

203) சைவமும் வைணவமும் வழிபடும் மந்திரம்

1. **பன்னிருதிரு முறை**
2. **நாலாயிர திவ்வியப்பிரபந்தம்**

204) குறிப்பாக எழுதப்படும் சொற்களுக்கு விரிவான சொல்

த.நா.மி.வா - தமிழ்நாடு மின்சார வாரியம்
த.நா.கு.வ.வா -தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம்
அ.ஃ.மி சௌந்தரவல்லித் தாயார் - அருள்மிகு சௌந்தரவல்லி தாயார்
அ.நி.கு.எண் - அஞ்சல் (பின்கோடு) நிலையக் குறியீட்டு எண்
தொ.பே.எண் - தொலை பேசி எண்
ஆ.கா.க - ஆயள் காப்பீட்டு கழகம்
இ.ஆ.ப - இந்திய ஆட்சிப் பணி
எஸ்.எஸ்.ஏ - (சர்வசிக்ஷா அபியான்) அனைவருக்கும் கல்வி இயக்கம்
இ.எஸ்.ஏ - தொழிலாளர் ஈட்டுறுதி கழகம்
டயட் - மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
டிபி.இ.பி - மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்
பெ.ஆ.க - பெற்றோர் ஆசிரியர் கழகம்
டிட்டி ஈ ஆர்ட்டி - ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கம் (DTERT)



Arivukkadal Pathippagam 9842649140
join telegram@tamizhanexammaterials1
@tamizhanexammaterials1